14

# வாய்மொழியும் வாசகமும்

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

# வாய்மொழியும் வாசகமும்

(ஆசிரியரின் 78-ஆம் அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' 'தமிழ்ச்செம்மல்,

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்**

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.

முன்னாள் : தமிழ்ப்பேராசிரியர் - துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி - 2

இந்நாள் : தகுநிலைப் பேராசிரியர் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம் மெரீனா வளாகம், சென்னை-5

உமா பதிப்பகம்

58, ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை-600 001

முதற்பதிப்பு : திசம்பர், 1993

(C) டாக்டர் எஸ். இராமலிங்கம் டி.லிட்
'வேங்கடம்'
AD-13, அண்ணாநகர்,
சென்னை-40, தொ. பே. 6211583

பக்கம் 24 + 216 = 240

விலை : ரூ. 30.00

VAAYMOZHIUM VAASAKAMUM

அச்சிட்டோர் : சரவணா கலர் பிரிண்டர்ஸ்
19, பார்த்தசாரதி நாயுடு தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை — 600 005

# வாய்மொழியும்
# வாசகமும்

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே.

—தாயுமானவர் - பராபரம்-155



பேராசிரியர் டாக்டர் **சை. வே. சிட்டிபாபு**

முன்னாள் மதுரை-காமராசர், அண்ணாமலைப்
பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்
பிறப்பு: நவம்பர் 7, 1920

மதுரை-காமராசர், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் துணைவேந்தரும், இந்நாள் அரசின் உயர்மட்டக் கல்விக் குழுவின் துணைத் தலைவருமான பேராசிரியர்

டாக்டர் சை. வே. சிட்டிபாபு

அவர்கட்கு

# அன்புப் படையல்

விழைவினை வழங்கும் தூயகாந் தாரம்
விரவிய சொல்லினர்; அன்பால்
குழைவினைப் பெற்ற வுளத்தினர்; இயங்கும்
குளிர்மலர்க் காவொப்பார்; சால்பாம்
மழையினால் எல்லாப் பயிர்களை வளர்க்கும்
மாண்பினர்; நற்றுணை வேந்தர்;
பழகுதொ றினிக்கும் சிட்டிபா பென்னும்
பண்பினர்க் குரியதிந் நூலே.

# சிறப்புப் பாயிரப் பாமாலை

புலவர் பேராசிரியர் டாக்டர் மா. வே. பசுபதி
*எம். ஏ., டி. லிட், அவர்கள்*
*(முதல்வர், ஸ்ரீ கா. சு. சு. கலைக் கல்லூரி
திருப்பனந்தாள்—தஞ்சை மாவட்டம்)*

தமிழ்நலம் முற்றக் கற்றுத்
தனிவளம் செறிய நூல்கள்
அமிழ்தெனப் படைத்த செம்மல்
அருமைஎம் வேங்க டத்தான்
இமிழ்திரைப் பாற்க டல்போல்
இயல்துறை தன்நி னைவுக்
குமிழிகள் பலப டைத்த
குணாதிபன் வாழ்க வாழ்க! 1

அகவையை எட்டும் பன்னூல்
அமைத்தவர்; புதுமை கொஞ்சும்
தகவலை நிறைந்த ளிக்கும்
தனிப்பெரு மனிதர்; நெஞ்சிற்
புகவரி தாகும் நுண்மைப்
புலமையை எளிமை யாக்கிச்
சுகமுற வரையும் சுப்பு
ரெட்டியார் பணிகள் வாழ்க! 2

இமயமே என்ன ஓங்கி
இணையிலாப் பெருமை செய்யும்
சமயமே வரவா தாரம்;
சரித்திரம் தன்னை நோக்கி

அமைவன கூற லன்றி
    அறிவியல் தன்னை நோக்கிச்
சமயத்தின் சிறப்பைச் சாற்றும்
    சால்புநூல் இதுவொன் றென்பேன். 3

வாசகன் வரைந்த தெய்வ
    வாசகம் அனைத்தும் ஞான
வாசகம் ஒன்று மட்டும்
    வழிவழிச் செய்தி சொன்னோம்
வாசகத் தறிவி யல்கள்
    வாசனை வீசு மாறு
தேசுறக் காட்டும் இந்தத்
    தமிழினை உலகம் போற்றும். 4

ஆழ்வார்கள் அருளிப் பாட்டில்
    அமைந்துள அழகுப் பாட்டில்
வீழ்வாரும் உய்யும் தெய்வ
    விளக்கெனும் வாய்மொ ழிக்குள்
ஏழ்கட லுலகை ஈர்க்கும்
    ஏற்றமார் அறிவி யல்கள்
ஊழிழ்த்துவே ரூன்றல் காட்டும்
    உயர்நூலொன் றிதுவே யன்றோ ? 5

காதலித் திறமை இன்பக்
    கவினெலாம் கண்டார் செய்தி
சீதமார் தமிழில் சிந்தைச்
    செல்வமாய் விளக்கிச் சொல்லும்
மேதகு புகழ்மை யாளர்
    மிகுதமிழ் சுப்பு ரெட்டி
சாதனை வரிக ளெல்லாம்
    சரித்திர மாக வாழும். 6

ஈடுகள் அனைத்தும் தேர்ந்த
ஈடிலாப் புலமை யாளர்
ஈடுகள் தமக்கோர் ஈடாய்
இயற்றிய தமிழ்நூற் கோவை
பாடுவோர் மனத்தில் என்றும்
பசுமரத் தாணி யாகும்;
தேடுநற் புலவோ ருக்குச்
செப்புதல் அற்பு தங்கள். 7

சூட்சுமச் சொற்க ளுக்கும்
சுவைநலப் பொருள்கள் சொல்லித்
தேட்டமார் கவிமேற் கோள்கள்
திகழ்வுறப் பலவாய் வைத்தே
ஆட்கொளும் இறைமைத் தன்மை
அவையெலாம் வியக்கக் காட்டும்
ஈட்டமே இந்நூ லாகும்;
எழிற்புது வரவே யாகும். 8

வள்ளுவர் வாய்மொ ழிக்குள்
வளர்பல சமயக் கொள்கை
உள்ளவா(று) எடுத்துக் கூறும்
உயர்ந்தநூல் ஒருமைப் பாடும்
தெள்ளிய கீதைக் குள்ளே
திகழ்ந்திடும் நுணுக்கச் செய்தி
கொள்ளெனக் கொடுக்கும் பாங்கும்
குவிகரம் கொண்டே ஏற்போம். 9

சரணலால் சரணொன் றின்மை
சாதனை யெனவாழ்ந் துள்ளோர்
தரமெலாம் மந்தி ரத்துத்
திறத்தினால் எடுத்து ரைத்த

பரமகிழ் தேற்க வல்ல
    பதத்தினை மெச்சு கின்றேன்;
வரதனம் முருகு பற்றி
    வரைந்ததும் முருகே யன்றோ? 10

மன்னிய செழுந்த மிழ்க்கு
    மகிமைகள் காட்டும் இந்நூல்
பன்னிய தெய்வ மேன்மைப்
    பத்திமை மிகுக்கும் இந்நூல்
தென்னிலம் யாவினுள்ளும்
    திகழ்ந்தொளி பரப்பு மாக!
இந்நிலை செய்த சுப்பு
    ரெட்டியார் ஏற்றம் வாழ்க! 11

*திருப்பனந்தாள்—612504*
*தஞ்சை மாவட்டம்*
*29-12-1993*

மா. வே. பசுபதி

# அணிந்துரை

பேராசிரியர் டாக்டர். அ. அ. மணவாளன்
(தமிழ்மொழித் துறை சென்னைப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரை அறியாத தமிழறிஞர்களோ, தமிழ்க்கல்வி நிறுவனங்களோ, தமிழ் நாட்டுச் சமயப் பெரியார்களோ, சமயக் கல்வி தழைக்கப் பாடுபடும் சமய அமைப்புகளோ தமிழ்நாட்டில் இல்லை என்று கூறினால் அது மிகையன்று. தமிழ் வரம்பறுத்த வடவேங்கடத்தின் திருவடி நீழலில் அமைந்துள்ள திருவேங்கடவன் பல்கலைக் கழகம் அவரைத் தமிழ்ப் பேராசிரியராக, தமிழறிஞராக, வைணவச் செம்மலாகப் போற்றிப் புரந்து வந்துள்ளது; இன்றும் புரந்து வருகின்றது. தமிழ் இலக்கியம், கல்வியியல், அறிவியல், சமயங்கள் எனப் பல்வேறு துறைகளிலும் அநுபவமும், பயிற்சியும், புலமையும் பெற்ற பேராசிரியர் தம் அகவையினும் மிக்குப் பல நூல்களைப் படைத்துள்ளார். அவர்தம் வயதைக் கூட்ட இடையறாது முயலும் காலதேவனுக்கும் தம் படைப்புகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதில் கருமமே கண்ணாயிருக்கும் ரெட்டியார் அவர்களுக்கும் இடையில் நடந்து வரும் போட்டியில் பேராசிரியர் தான் இதுவரை வெற்றி பெற்றுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துக் காலதேவனின் முயற்சியை முறியடித்துள்ளார்; இனியும் அவனைவென்று ஒரு நூறு நூல்களைப் படைத்துப் புகழ்பெறுவார் என்பதில் ஐயமில்லை; திருவேங்கடவன் திருவருள் முன்னின்று இதனைக் கூட்டுவிக்குமாக என்று அவன்தாள் இறைஞ்சி வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

இவ்வாறாகப் பாரோர் புகழும் பேராசிரியர் அவர்கள் தம்முடைய ‘வாய்மொழியும் வாசகமும்’ என்னும் இப்புதிய

நூலுக்கு ஓர் அணிந்துரை வேண்டும் என்று என்னைப் பணித்தபோது எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் முறையே தோன்றின. வியப்பிற்குக் காரணம், ரெட்டியார் நூலுக்கு அறிமுகமோ அணிந்துரையோ தேவையற்றது; அப்படியிருக்க அணிந்துரையெழுத என்னைப் பணிப்பானேன் என்ற சிந்தனை. ஆண்டுகள் பல கடந்தும் நூல்கள் சிலவும் படைக்காமல் காலம் கழித்து வரும் என்னைத் தாம் எழுதும் நூல்களையாவது படித்து ஊக்கப்பட்டு நானும் சில நூல்களையாவது எழுதிச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்னும் கருத்தால் எளிவந்து ஆட்கொள்ளக் கருதும் சௌலப்பியம் என்று நான் உணர்ந்தமையே என் மகிழ்ச்சிக்குக் காரணம். அதனால் ஒருவாறு ஒருப்பட்டு இவ் அணிந்துரையை எழுதுகின்றேன்.

வாய்மொழியும் வாசகமும் என்னும் இந்நூல் பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாக விளங்குகிறது. பல்வேறு நிகழ்ச்சிகளுக்காகப் பல காலங்களில் படைக்கப் பெற்ற கட்டுரைகளை அவற்றின் பொருளொற்றுமை கருதித் தொகுத்து இப்போது ஒரு நூலாகப் பேராசிரியர் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார். இவற்றுள் "சமயமும் அறிவியலும்", (பக் 1-42), "திருமங்கையாழ்வார்" (43-84), "வாய்மொழியும் வாசகமும்", (பக் 85-106), "சரணாகதிநெறி" (158-194) ஆகிய நான்கும் மிக நீண்ட கட்டுரைகள். "நம்மாழ்வாரின் இறையநுபவம்" (107-108), "புலவர்க்கு அறிவுரை" (119-135), "கீதை—மறைமுடியின் சாரம்" (144-157) ஆகிய மூன்றும் இடை நிகர்த்த அளவுடையன. "திருக்குறள் சமயவியல் சிந்தனைகள்" (136-143), "தமிழ் முருகன்" (195-201), "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" (202-207) ஆகிய மூன்றும் வாமனவடிவின.

இந்நூலின் முதற்கண் அமைந்துள்ள "சமயமும் அறிவியலும்" என்னும் கட்டுரை ஒவ்வாதன போலவும் முரண்படுவனபோலவும் தோற்றமளிக்கும் இருபெரும்

மானுட வாழ்வுத் துறைகள் எவ்வாறு ஒரே கருத்துடையன வாய்க் காணப்படுகின்றன என்பதை மிக ஆழமாகவும் அழகாகவும் விளக்குகின்றது. உலகமும் இறைவனும் உள்பொருள்கள்; இவற்றுள் இறைவனே முதற் காரணம்; உலகத் தோற்றமும் ஒடுக்கமும் அவனை முன்னிட்டே நிகழ்கின்றன; இத்தகைய தோற்ற மறைவுகள் வடிவ மாற்றங்களேயன்றி வேறல்ல என்றும் சமய உண்மைகளை வேதியியல் முதலான அறிவியல் துறைக் கோட்பாடுகளைக் கொண்டு ஆசிரியர் இனிது விளக்குகின்றார்; மேலும் அண்டங்களின் அமைப்பை விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரே தன்மையில் விளக்கும் பாங்கினை மணிவாசகப் பெருமான், பரஞ்சோதிமுனிவர், பாரதியார் ஆகிய கவிஞர்களின் பாடல்களைக் கொண்டும், அறிவியலாரின் கொள்கைகளைக் கொண்டும் விளக்குகின்றார். அண்டங் களின் சுழற்சி குறித்தும் அதனால் விளையும் பௌதிக மாற்றங்கள் குறித்தும் அறிவியல் கண்ட செய்திகளை அரங்கனின் திருக்கோல அழகினைப் பரவும் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் திருவரங்கத்து மாலையைக் கொண்டு விளக்கும் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலமும் உள்ளொளி விளக்கமும் பெரிதும் வியந்து பாராட்டுதற்குரியன. இவ்வாறே சமய கோட்பாடுகளாகிய சற்காரிய வாதம், விசிட்டாத்துவிதம் என்பனவும், தமிழர்தம் திருநாளாம் பொங்கல் விழாவின் அடிப்படைத் தத்துவமும், அறிவியல் உண்மைகளோடு பொருத்தி விளக்கும் இக்கட்டுரை, இந்நூலின் முதலாவதாக மட்டுமின்றி முதன்மையானதாகவும் அமைந்து நம்மை மகிழ்விக்கின்றது.

தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி நாயனாரைப் போன்று பரமபத நாதனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றவர் கலியன் என்று புகழ்பெற்ற திருமங்கையாழ்வார். இவரைப் பற்றிய இரண்டாவது கட்டுரை இவ் ஆழ்வாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கக் கூறி இறைவன் இவரை ஆட்கொண்ட வரலாற்றையும் அதனால் ஞானக் கண்

திறக்கப் பெற்ற கலியனாழ்வார் மேற்கொண்ட திருத்தல பயணங்களையும், அவரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற அர்ச்சாவதாரங்களையும் விளக்கமாக எடுத்துரைக் கிறது. பின்னர்க் கலியனின் அருளிச் செயல்களில் காணப் பெறும் சரீர-சரீரி பாவனை, தத்துவத்திரயசாரம், பிரபத்தி நெறி போன்ற வைணவக் கோட்பாடுகளையும், இவரால் அறிமுகப்படுத்தப் பெற்ற பல்வேறு புதிய இலக்கிய உத்திகளையும், புதிய இலக்கிய வகைமை களையும் இக்கட்டுரை மிக அழகாக விளக்கிச் செல்கின்றது. திருமங்கையாழ்வார் என்னும் அருளாளரை முழுவதுவமாக அறிந்து அநுபவித்துச் சேவிக்க இந்தக் கட்டுரை பெரிதும் பயன்படுதலை ஒவ்வொரு வாசகரும் நன்கு உணர்வர்.

இறைவன், இறையநுபவம் என்னும் நிலைகளை மணிவாசகப் பெருமானும் நம்மாழ்வாரும் உணர்ந்து, துய்த்து பிறர்க்கெடுத்து உணர்ந்துள்ள திறம் ஒரே தன்மையவாய் அமைந்துள்ள பாங்கினை 'வாய்மொழியும் வாசகமும்' என்னும் கட்டுரை ஒப்பிட்டாய்ந்து கூறுகின்றது. பேராசிரியரின் சமயக் காழ்ப்பற்ற ஆளுமைக்குச் சான்று பகரும் இக்கட்டுரையைப் போலவே 'தமிழ் முருகன்' என்னும் கட்டுரையும் முருகப் பெருமானின் தனிப்பெருஞ் சிறப்புகளைத் தெள்ளிதின் விளக்குகின்றது.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அருளாளர் நாத முனியடிகள் அடைவுபடுத்தி நாலாயிரம் என அழைத்த சீர்மையினை 'நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்' என்னும் கட்டுரை விளக்குகின்றது. ஆராக்காதல் குருகூர்ச் சடகோபன் எம்பெருமான்மீது கொண்டிருந்த தீராக் காதற் பெருமையினை, ஆழ்வார்தம் ஆன்மாநுபவத்தை 'நம்மாழ்வாரின் இறையநுபவம்' என்னும் கட்டுரை விளக்குகின்றது. 'புலவர்க்கு அறிவுரை' என்னும் ஒப்பியலாய்வு 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' என்னும் சங்கப் புலவர்தம் கோட்பாட்டைப் பின்பற்றி நம்மாழ்வாரும் சுந்தர மூர்த்தி நாயன்மாரும் ''பொருள்

நோக்கம் கொண்டு புல்லியரைப் பாடாதீர்; புலவீர்காள், அருள் நோக்கம் பற்றி அரி அரனைப்பாடி உய்ம்மின்" என்று அறிவுறுத்தும் பாங்கினை அழகாக எடுத்துரைக்கின்றது. தமிழர்தம் திருமறையாம் திருக்குறள் சமயப் பொதுமை யுடையது என்பதை மற்றொரு கட்டுரை காட்டுகின்றது.

வைணவக் கோட்பாட்டின் கௌஸ்துபமாகிய சரணாகதித் தத்துவத்தை வேதங்களின் சாரமாகிய கீதையைக் கொண்டும் தமிழ் வேதம் தந்தருளிய மாறன் திருவாய்மொழி கொண்டும் விளக்கியுரைப்பன இரண்டு கட்டுரைகள். கீதை சுருதியாகவும் சுமிருதியாகவும் அமைந்து துவைதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னும் மூவகைத் தத்துவக் கோட்பாடுகளுக்கும் உயிரூற்றாக அமைந்துள்ள திறத்தைக் 'கீதை-மறைமுடியின் சாரம்' என்னும் அரிய கட்டுரை தெளிவிக்கின்றது. 'சரணாகதி நெறி' என்னும் கட்டுரை வைணவர்க்கோர் ஔடதம் எனலாகும் தன்மை பெற்ற ஆன்மநேயக் கைவிளக்கு எனப் புகழத்தக்கது. சரணாகதி என்னும் பிரபத்தி நெறி வைணவத்தில் மட்டுமின்றிச் சைவத்திலும் விவிலியத்திலும் அமைந்துள்ள நுட்பத்தினை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது. பல்வேறு தோத்திர, சாத்திர, வியாக்கியானங்களில் பொதிந்து கிடக்கும் தத்துவப் பேருண்மைகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துச் சரணாகதி நெறியின் அருமையையும் எளிமையையும் ஒக்க விளக்கும் இக் கட்டுரை பேராசிரியரின் ஆசாரிய சௌலப் பியத்துக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாக விளங்கு கின்றது.

வாய்மொழியும் வாசகமும் என்னும் இந்நூல் பல உதிரிக் கட்டுரைகளின் தொகுப்பாகத் தோற்றமளிப்பினும் இறையுண்மை, இறைத்தன்மை, இறையநுபவம் என்னும் முப்பெரும் உண்மைகளை அருளாளர்களின் திருவாக்கு, ஆசாரியர்களின் மெய்யுணர்வு, அறிவியலாரின் ஆய்வு நோக்கு என்னும் முத்திறக் கோணங்களின் வழி ஆய்ந்து தெளிவிக்கும் நோக்கத்தை அடிநாதமாகக் கொண்டு

இக்கட்டுரைகள் விளங்குவதைக் காணலாம். பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும், சமயப் பொது நோக்கும், அறிவியல்சார் ஆய்வுப் பயிற்சியும் இந்நூலுக்கு அகலமும் ஆழமும் நுட்பமும் தந்து இதனை வளப்படுத்தி யுள்ளன. நம் தமிழ்ப் பண்பாட்டு மரபு ஒன்றுபட்டுள்ள சிறப்பினை இன்றைய கருத்தோட்டத்துக்கு ஏற்ப விளக்கித் தெளிவிக்கும் இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ்ந்து வரவேற்றுப் பயனடையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை-600 005.
13—12—1993

அ. அ. மணவாளன்

# நூல்முகம்

நோற்றேன் பல்பிறவி;
நுன்னைக்காண்பதோ ராசையினால்
ஏற்றேன்; இப்பிறப்பே
இடருற்றனன்—எம்பெருமான்!
கோற்றேன் பாய்ந்தொழுகும்
குளிர்சோலைசூழ் வேங்கடவா!—
ஆற்றேன், வந்தடைந்தேன்;
அடியேனையாட் கொண்டருளே[1]
—திருமங்கையாழ்வார்

திருப்பதிப் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்றுச் (அக்டோபர் 24, 1977) சென்னையில் குடியேறின பின் 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது'[2] என்ற பக்திசாரர் வாக்குப்படி இலக்கியங்களைப் படித்தல், சிந்தித்தல் அநுபவத்தல் என்ற பயனுடைய பாங்கில் காலங்கழித்த போது பல்வேறு இடங்களில் (வானொலி உட்பட) உரையாற்றவும், சில நண்பர்களின் மணிவிழா மலர்கள், பெரியோர் களின் நூற்றாண்டு விழா நினைவு மலர்கள் சில இதழ்களின் சிறப்பு மலர்கள் ஆகியவற்றில் கட்டுரைகள் வரையவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. அந்த உரைகள், கட்டுரைகளின் தொகுப்பே இந்த இனிய நூலாக வடிவம் பெறுகின்றது.[3]

---

1. பெரி திரு. 1.9: 8
2. நான். திருவந் : 63
3. இவற்றின் விவரம் அந்தந்தக் கட்டுரைகளின்கீழ் அடிக்குறிப்பாகக் காட்டப் பெற்றுள்ளது.

இந்தத் தொகுப்பு நூலை அன்புடன் ஏற்று வெளியிட முன் வந்தவர் சென்னை உமா பதிப்பக (58, ஐயப்பசெட்டி தெரு, மண்ணடி, சென்னை-600 001) உரிமையாளர் திரு. இராம இலட்சுமணன் அவர்கள். இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவியவர் சரவணா வண்ண அச்சக (19, பார்த்தசாரதி நாயுடு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5) உரிமையாளர் அவர்கள், இவர்கள் இருவருக்கும் என் இதயம் கனிந்த நன்றி.

இந்த நூலுக்குச் 'சிறப்புப் பாயிரம் பாமாலை' வழங்கிச் சிறப்பித்தவர் என் நெடுநாள் நண்பர் திரு. K.M. வேங்கட ராமய்யாவின் அருமைப் புதல்வர் பேராசிரியர் டாக்டர் மர. வே. பசுபதியவர்கள் தற்சமயம் திருப்பனந்தாள் ஆதினம் கலைக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வ ராகவும் பணியாற்றி வருபவர். நினைப்பிற்கெட்டாத நெடுங்காலமாகத் தமிழகத்தைத் தம் பிறப்பிடமாகக் கொண்டவராதலாலும் தமிழ்மொழி, இலக்கியங்களை ஆர்வமாக ஆழ்ந்து கற்றவராதலாலும் இந்தத் தெலுங்குச் சான்றோர் தமிழ்ப் புலமை மிக்கவராகத் திகழ்பவர்.

வித்துவான், பண்டிதம் (புலவர்), எம். ஏ., முதலிய பல பட்டங்களையும், வித்யா ரத்னம், தமிழருவி முதலிய பல விருதுகளையும் பெற்றுத் திகழ்பவர். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்ற பொன்மொழியை உணர்ந்த வராதலால் அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவர். எவருடனும் இன்முகத்துடன் உரையாடி மகிழ்விப்பவர். 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற வாய்மொழிக்கு இலக்கியமாகத் திகழ்பவர்.

வளம் மிக்க கவிதை படைக்கும் இச்சான்றோர் உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கு உட்பட 500க்கு மேற் பட்ட கவியரங்குகளில் பங்கு கொண்டு வளம் மிக்க தம் கவிதைகளால் கேட்போர் அனைவரையும் கவிதை யநுபவத்தில் ஆழங்கால்படச் செய்பவர். பேச்சாற்றல்

மிக்க இவர் பட்டி மண்டபம், வழக்காடு மன்றம், சிந்தனை மேடை, கருத்தரங்கு முதலிய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு கேட்போர் அனைவரையும் மகிழ்விப்பவர்: என்பால் அளவற்ற அன்பு கொண்டவர்.

எழுத்தாற்றல் மிக்க இப்பெருமகனார் ஆனந்த விகடன், கல்கி போன்ற தமிழக முன்னணி இதழ்களிலும், தமிழ்நேசன், மலைமகள் முதலிய அயல் நாட்டு இதழ்களிலும், பல நினைவு மலர்களிலும் நவீன முறையில் தம் எழுத்தோவியங்களை வெளியிட்டு வாசகர்களின் இதயத்தைக் கொள்ளை கொண்டவர். பல்லாண்டுகளாக 'ஸ்ரீ குமர குருபரர்' என்ற திங்கள் இதழ்களின் ஆசிரியராகப் பணிபுரிபவர். 'இதுதான் உலகம்', 'நீதித் தெளிவு' முதலிய 27 கவிதை நூல்களையும் 'யாப்பருங் கலக் காரிகை' முதலிய நான்கு உரை நூல்களையும், வெளியிட்டவர். திருச்சி, கோவை, சென்னை, பாண்டி ஆகிய வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர். இத்தகைய வல்லவர்—நல்லவர்—இந்நூலுக்கு 'சிறப்புப் பாயிரப் பாமாலை, வழங்கிச் சிறப்பித்தது இந்நூலின் பேறு; என் பேறுமாகும். இந்த இனியவருக்கு என் இதயம் கனிந்த நன்றி உரித்தாகின்றது.

இந்த நூலுக்கு அரியதோர் **அணிந்துரை** நல்க ஒப்புக் கொண்டவர் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறைப் பேராசிரியர் டாக்டர் **அ. அ. மணவாளன்** அவர்கள். கருவிலே திருவுடைய இப்பெரு மகனார் வழிவழி வைணவக் குடும்பத்தைச் சார்ந்தவர். என் உடன் பிறவாச் சோதரர் போன்றவர். சத்துவகுணம் மிக்க இப்பெருமகனர், அடியேனைப் போலத் தெலுங்கைத்தாய் மொழியாக்க கொண்டு வீட்டில் தெலுங்கு பேசுபவர். எங்கட்குத் தெலுங்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் நினைப்பிற் கெட்டாத நெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர்களாதலின் தமிழையே தாய்மொழியாகக்

கொண்டு அதனை முறையாகக் கற்றுப் புலமை எய்தினோம். எம்போன்ற 'தெலுங்கர்கள்' தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு பெரிது; மிகப் பெரிது.

இப்பெருமகனாரின் தனிச் சிறப்பு தமிழ் எம். ஏ., பண்டிதம், வித்துவான் முதலிய தமிழ்ப் பட்டங்களைப் பெற்றதுடன், எம். ஏ, (ஆங்கிலம்), விசாரத் (இந்தி), மொழியியல் பட்டங்களையும் பெற்றுத் திகழ்கின்றவர். சரளமாக ஆங்கிலத்தைப் பேச்சிலும் எழுத்திலும் கையாளும் தனித்தமிழ்ப் பேராசிரியர். பிறமொழிகளின் மீது அன்பு கொண்டவர்; காழ்ப்பில்லாதவர். தமிழ் மொழியின்மீது ஆராக் காதலுடன் அதனைப் போற்றி வளர்ப்பவர்; மொழி வெறியர் அல்லர். இந்த உயர் பண்புகளை இவரிடம் பழகுவோர் நன்கு அறிவர்; இவர் தம் எம். ஏ. மாணவர்கள், ஆய்வு மாணவர்கள் பறைசாற்றுவதன்மூலம் இவற்றை அறியலாம். பல மட்டங்களில் உயர்நிலைப் பள்ளி உட்பட கற்பிக்கும் வாய்ப்புகள் பெற்றவராதலால் மாணவர்களின் இதயப் பாங்கை நன்கு அறிந்தவர். ஆய்வில் கண்டிப்பானவர்; ஆய்வு மாணவர்களிடம் கடுமையான உழைப்பை எதிர் பார்ப்பவர்; வற்புறுத்தி உழைக்கச் செய்பவர். ஆய்வு மாணவர் படிக்கும்போது சிறிது முணுமுணுத்தாலும், படிப்பை முடித்து வெளியேறியபின் இவர் தம் பெருமையைப் போற்றுவதை அறிவேன். சற்றேறக் குறைய நாற்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவர்வழி நின்று எம்.ஃபில் பி எச். டி. பட்டம் பெற்றவர்கள்.

இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கைகள், ஒப்பிலக்கியம், மொழி பெயர்ப்பு, அகராதித்துறை இவற்றில் நாட்டம் கொண்டு உழைத்துத் தனித்திறமை யுடன் திகழ்பவர். ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் அறுபதிற்கு மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள் எழுதி வெளியிட்டுப் பெருமை பெற்றவர்; தமிழ்ப் பல்கலைக் கழகம், சாகித்திய அகாடமி ஆசிய ஆய்வுக் கழகம்

ஆகியவை வெளியிட்டுள்ள கலைக் களஞ்சியங்களில் நாற்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை வழங்கியவர்,

அமெரிக்கா (ஆறு பல்கலைக்கழகங்கள்), இங்கிலாந்து (இலண்டன்) இவற்றுடன் தொடர்புள்ளவர். இங்கெல்லாம் ஒப்பிலக்கியம் பற்றி பல விரிவுரைகளை நிகழ்த்தி அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர். Indo-US Cultural Exchange Fulbright Fellowship Programme (1988-89) என்ற அரியதோர் திட்டத்தில் பங்கு பெற்றவர். பொதுவாக மாணவர்களின் நலமே தம் நலமாகக் கொண்டு பணியாற்றுபவர். தாம் வாழ்க்கையில் சந்திக்கும் இக்கட்டுகளையும், தொல்லைகளையும் பொறுமையுடன் தாங்குபவர். எவரையும் குறை கூறாது, பழி சுமத்தாது, அனைத்தும் தம் நுகர்வினையின் விளைவு எனச் சிரித்து மகிழ்பவர். "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவத்தைக் கடைப்பிடிப்பவர். "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்ற வள்ளுவத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர். எதனையும் இறைவன் விட்ட வழியாகக் கொள்பவர், இவற்றால் பல நன்மாணாக்கர்களின் வீர வழிபாட்டிற்கு உரியவராகத் திகழ்வதில் வியப்பொன்றும் இல்லை. இத்தகைய நல்லுள்ளம் படைத்த நண்பரின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறு; அடியேனின் பேறுமாகும் இதனை வழங்கிய என் சோதரருக்கு என் உளங் கனிந்த நன்றி என்றும் உரியது.

பேராசியர் டாக்டர் **சை. வே. சிட்டிபாபு** அவர்கள் (பிறப்பு 7-11-1920) பள்ளி, கல்லூரிகளில் நற்கல்வி பெற்று, சிறந்த முறைகளில் தேர்ச்சியடைந்து முன்னணியில் நின்றவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியேற்று (1942) தம்முடைய கடுமையான உழைப்பாலும் நேர்மையான பணியாலும் நல்லோர் பலருடைய கவனத்தைக் கவர்ந்தவர். இதன் பயனாக அரசுக் கல்வித்

துறையில் பேராசிரியராகப் (1947) புகுந்தார். அங்கும் நேரிய உழைப்பால் முதல்வர், மண்டலக் கல்வி ஆய்வாளர், துணைக் கல்வி இயக்குநர், இணைக்கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் என்று பல கல்வி நிறுவனங்களில் பணியாற்றி அங்கங்கெல்லாம் தம் புகழ் நிறுவியவர். இப்பணிகட்கிடையில் இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கத் தலைவராகவும், தமிழ்நாடு சாரண இயக்கத் தலைவராகவும் பணியாற்றினார். தம் பணிக் காலத்தில் உலகெங்கும் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகள், உயர் மட்டக் குழுக்கள், பல்கலைக் கழக மானியக்குழு இவற்றில் பங்கு பெற்றவர். பல ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியவர். தம் வாழ்நாளில் பல்வேறு விருதுகளைப் பெற்றவர். **'சொற்கலைச் செல்வர்'** (அனைத்திந்திய பல்கலைக் கழக ஆசிரியர் கழகம் வழங்கியது) என்ற விருது மகுடமாகத் திகழ்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் உரையாற்றுவதில் வல்லவர் என்பதைப பறைசாற்றுகின்றது. தற்சமயம் உயர்நிலைக் கல்விச் சீர்திருத்தக் குழுவின் துணைத்தலைவராக இருந்து வருகின்றார். S. I. V. கல்வி அறத்தின் தலைவராகவும் இருந்து பணியாற்றி வருகின்றார்.

இந்த இனிய அறிஞரை 1975 முதல் நன்கு அறிவேன். நெருங்கிய பழக்கமும் உண்டு. என்னுடைய வளர்ச்சியையும் வளமையையும் அவர் நன்கு அறிந்தவர். அடியேனும் அவருடைய பணியையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்தவன். அண்டினவர்கட்கெல்லாம் நேர்மை தவறாது உதவுபவர்; கண்ணோட்டம் மிக்க சிறந்த பண்பாளர். இவர் என் நூலில் ஏதோ ஒரு வகையில் இடம் பெற வேண்டும் என்பது என் நெடுநாளைய அவா. இந்த நூலை அவருக்கு அன்புப் படையலாக்கிப் பெருமிதம்

கொள்ளுகின்றேன். இதனால் என் அவாவும் நிறைவு பெறுகின்றது. இவரது நல்லெண்ணத்தால், ஆசித்தால், இந்நூல் தமிழகத்தில் வாசகர்களிடையே சிறந்த புகழுடன் உலவும் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்த நூல் சிறந்த முறையில் வெளி வருவதற்கு எனக்கு என்றென்றும் தோன்றாத் துணையாக நின்று கருணை மழை பொழியும் வேங்கடவாணனின் திருவடிகளை சரண் அடைகின்றேன்.

**வந்தாய்; என்மனம் புகுந்தாய்; மன்னி நின்றாம்**
**நந்தாத கொழுஞ் சுடரே! எங்கள் நம்பீ!**
**சிந்தா மணியே! திருவேங் கடமிமேய**
**எந்தாய்! இனியான் உன்னை என்றும் விடேனே.[4]**

—திருமங்கையாழ்வார்

'வேங்கடம்'
AD-13, அண்ணா நகர்,
சென்னை-600040

ந. சுப்பு ரெட்டியார்

4. பெரி-திரு. 1.10:9

தயவுசெய்து பிழைகளைத் திருத்திக் கொண்டு படிக்கவும்.

# பிழை - திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 8 | நிலைத்தான் | நிலைதான் |
| | 15 | சாணியிலும் | சாணிலும் |
| | 21 | தத்துமையம் | தத்துவமையம் |
| 2 | 5 | கூட | கூடச் |
| 4 | 22 | ர்நீலம் | நீர்நிலம் |
| | 24 | வைய | அவைய |
| 9 | 6 | உன்னற | உன்னற் |
| 38 | 8 | அடியார் | அடியான் |
| 46 | 3 | அந்தய் | அந்தப் |
| 47 | 21 | உடளே | உடனே |
| 50 | 29 | கோயிலுள்ளவை | கோயிலிலுள்ளவை |
| 54 | 13 | திருவெழுக் | திருவெழு |
| 55 | 29 | அமைத்து | அமைத்துப் |
| 56 | 2 | போன்றவற்றை | யோன்றவற்றைக் |
| 64 | 30 | சரீர-சரீர | சரீர-சரீரி |
| 74 | 15 | பிரபத்திநெறி | பிரபத்திநெறி |
| 145 | 14 | பர்வதத்தில் | பர்வத்தில் |
| 150 | 28 | பாணி | பானி |
| 188 | 9 | இவன் | இவர் |
| 200 | 26 | சடம்பம் பூ | கடப்பம் பூ |

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | அன்புப் படையல் | (iii) |
| | சிறப்புப் பாயிரப் பாமாலை | (iv) |
| | அணிந்துரை | (viii) |
| | நூல்முகம் | (xiv) |
| 1. | சமயமும் அறிவியலும் | 1 |
| 2. | திருமங்கையாழ்வார் | 43 |
| 3. | வாய்மொழியும் வாசகமும் | 85 |
| 4. | நம்மாழ்வாரின் இறையநுபவம் | 107 |
| 5. | புலவர்க்கு அறிவுரை | 119 |
| 6. | திருக்குறள் சமயவியல் சிந்தனைகள் | 136 |
| 7. | கீதை—மறை முடியின்சாரம் | 144 |
| 8. | சரணாகதி நெறி | 158 |
| 9. | தமிழ் முருகன் | 195 |
| 10. | நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் | 202 |


## பின்னிணைப்பு


| | |
|---|---|
| பயன்பட்ட நூல்கள் | 209 |

# வாய்மொழியும் வாசகமும்

# 1. சமயமும் அறிவியலும் [1]

சமயம் என்பது இன்று, நேற்று தோன்றியதல்ல. நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாகவே அது நிலவி வருகின்றது; உலவி வருகின்றது என்றும் சொல்லலாம். சமயத்தையும் மனிதனையும் தனித்தனியே பிரித்தற்கியலாது. மக்களும் சமயத்தை விட்டுத் தனித்து வாழ இயலாத நிலையிலுள்ளனர். பகலவனையும் கதிர்களையும் தனித் தனியாகப் பிரித்தற்கியலுமா? இயலாது. அது போன்ற நிலைத்தான் இங்கும். சமயம் மக்களின் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்கின்றது. நம்மாழ்வார் இறைவனைப்பற்றிக் கூறும்போது 'உடல்மிசை உயிரெனக் கரந்தோங்கும் பரந்துளன்' (திருவாய். 1.1:7) என்றும் 'பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்' (ஷை 1.1:10) என்றும் கூறுவார். இறைவனின் இருப்பைக் கூறும் கம்பநாடன் பிரகலாதன் வாய்மொழியாக,

> சாணியிலும் உளன்ஓர் தன்மை
> அணுவினைச் சதகூறு இட்ட
> கோணிலும் உளன்மா மேருக்
> குன்றினும் உளன்இந் நின்ற
> தூணிலும் உளன்நீ சொன்ன
> சொல்லினும் உளன்
>
> —இரணியன்வதை. 124

---

1. தமிழ்ப் பல்கலைக் கழகம் - காஞ்சி தத்துமையத்தின் ஆதரவில் மாதாந்திரச் சொற்பொழிவாக 15—10—90 அன்று பச்சையப்பன் மேனிலைப் பள்ளிக் கருத்தரங்குக்கூடத்தில் நடைபெற்ற சொற்பொழிவு.

என்று பாடலிட்டுக் காட்டுவான். அந்த இறைநிலையைப் போன்றது மக்களோடு சமயம் ஒட்டி உறையும் நிலை. இது நிற்க.

**அன்றாடக்கடன்கள் :** மக்கள் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளில் கூட சமயம் தலை காட்டுகின்றது. 'கூழானாலும் குளித்துக்குடி' 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'நோன்பு என்பது கொன்று தின்னாமை' என்பன போன்ற முதுமொழிகளைச் சிந்தித்தால் சமயம் அறிவியலோடு தொடர்பு கொண்டுள்ளதை அறியலாம். காலைக் கடன்களைக் கழித்து, நீராடிய பிறகு நம் உடல் உள்ளும் புறம்பும் ஓரளவு தூய்மையாகின்றது. இதனை நாம் அநுபவத்தில் உணர்கின்றோம். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது திருக்கோயிலுக்கு நடந்து செல்லும்போது ஒரளவு உடற்பயிற்சி நம்மை அறியாமல் நடைபெறுகின்றது. தெய்வசிந்தனையுடன் அருட் செல்வர்களின் பாடல்களை நாவினால் நவிற்றிக் கொண்டு செல்லும்போது மனம் தூய்மையடைகின்றது; மனத்தின் கண் படிந்துள்ள மாசு நீங்குகின்றது. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' (குறள்-34) என்பது வள்ளுவன் வாய்மொழி. 'நோன்பு என்பது கொன்று தின்னாமை' என்பது சமண சமய நெறி. 'கொல்லாமை' என்ற இந்நெறியைச் சைவசமய நெறியாகவும் கொள்ளலாம்; வைணவ நெறியாகவும் ஏற்கலாம். வைணவ அடியார்களில் ஒருவனாகிய பெரிய திருவடி புலால் உண்பவன்; சிறிய திருவடி மரக்கறியை மட்டிலுமே உண்பவன். இதுபற்றியே வைணவர்களில் சிலர் இவர்களைப் பின் பற்றுகின்றார்களோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. சைவர்களில் சிலர் புலால் உண்டு சிவநெறியையே குலைப்பது எனக்கு வியப்பினைத் தருகின்றது.

**சமயமும் அறிவியலும் :** இந்த நிலையில் சமயத்தையும் அறிவியலையும் பற்றிச் சிந்திக்கின்றோம்.

சமயம் என்பது உடல் ஓம்புதலுடன் உயிர் உய்வதற்கும் உள்ள நெறியைச் காட்டுகின்றது. அறிவியல் பூத உடலை ஓம்பும் நெறியுடன் அகிலத்தின் நிலைமையையும் ஆய்ந்த உண்மைகளைக் காட்டுகின்றது. இதனால் ஆண்டவனின் படைப்பின் வியப்பையும் விந்தையையும் தெரிவிக்கின்றது.'இறைவனின் படைப்பைச் கூர்ந்து அறியும் அறிவியலறிஞன் இறைவனை நெருங்கி ஆராய்பவனாகின்றான்' என்று எங்கோ ஐன்ஸ்டைன் என்ற அறிவியல் மேதை கூறியது இப்போது நினைவிற்கு வருகின்றது. எனவே, சமயமும் அறிவியலும் இணைந்து நிற்பதைச் சில நிகழ்ச்சிகளால் அறிந்து தெளிவோம்.

**அணு-அண்ட அமைப்பு :** 'எல்லாச் சாலைகளும் உரோமாபுரியை நோக்கிச்செல்லுகின்றன' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இதனை நம் நாட்டுப் பழமொழி 'ஆறுகள் யாவும் ஆழ் கடலை நோக்கிச் செல்லுகின்றன' என்று கூறும். இக்கருத்தைக் குலசேகரப் பெருமாள்.

> **தொக்கு இலங்கி யாறு எல்லாம்**
> **பரந்து ஓடித் தொடுகடலே**
> **புக்கு அன்றிப் புறம்நிற்க**
> **மாட்டாத (பெரு. திரு 5:3)**

என்று பாசுரமிட்டுக் காட்டுவர். இங்கு 'சாலை' 'ஆறு' 'உரோமாபுரி' 'கடல்' இவை குறியீடுகளாக நின்று ஒரு பேருண்மையை விளக்குகின்றன. இவைபோலவே சமயமும் அறிவியலும் ஒரு முறையில் இறைவனையே நோக்கிச் செல்லுவனபோல் அமைகின்றன. அணு-அண்ட அமைப்பு இம்முறையில் அமைந்து இறைதத்துவமாக-நடராசதத்துவமாக-விளக்கம் தருகின்றது.

**பண்டையோர் அநுபவ அறிவு :** மேல்நாட்டிலும் சரி, நமது நாட்டிலும் சரி அநுபவ அறிவுதான் அறிவியல் அறிவாகப் பரிணமிக்கின்றது. ஆதியில் இயற்கையை

ஆராய்ந்த மனிதன் சில உண்மைகளைக் கண்டான். ஒன்றாய் இருந்த விதை பின் வேராய், அடிமரமாய், கிளையாய், கொம்பாய், கவடாய், இலையாய், பூவாய், காயாய் என்று பலவகையாக மாறுவது போலவே, வித்தென அருவமாய் நின்றவை மரம் என உருமாறியது என்று அவன் கருதினான். இக்கொள்கையைப் பரிணாம வாதம்- கூர்தல் அறம் - என்று வழங்கினர். உலகில் எதனை அடிப்படை என்பது? மண் என்றனர்சிலர்; நீர் என்றனர் பிறர்; தீ என்றனர் ஒருசாரார். காற்று என்றனர் பிறிதொருசாரார். வேறு சிலர் வான் என்றனர். இந்த வாதத்தில் கலந்து கொள்ள விரும்பாத சிலர் தென்காசி வழக்காக ஐந்தும் அடிப்படை என்றனர். இத்தகைய கொள்கையை வற்புறுத்தியவர் அரிஸ்ட்டாட்டில் என்ற மேனாட்டு அறிஞர். நம் நாட்டு அறிஞர் தொல்காப்பியர்,

> **நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம்[2]**

என்று கூறினார். இவற்றைப் பஞ்ச பூதங்கள் என்று வழங்கினர் பின்வந்தவர்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனையே ஐம்பெரும் பூதங்களில் காண்கின்றனர்.

> **திடவிசும்பு எரிவளி**
> **ர்நிலம் இவைமிசை**
> **படர்பொருள் முழுவதுமாய்**
> **அவைய வைதொறும்**
> **உடன்மிசை உயிரெனக்**
> **கரந் தெங்கும் பரந்துளன்[3]**

என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி.

---

2. தொல். பொருள். மரபு-91
3. திருவாய் 1.1:7

**திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும்**
**செழுநிலத்து உயிர்களும் மற்றும்**
**படர்பொருள் களும்ஆய் நின்றவன்** [4]

என்பர் திருமங்கை மன்னன்.

**மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு**
**வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச்செந்தீ**
**தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலின் நான்காய்;**
**தரணிதலத் தஞ்சாகி** [5]

என்று கூறுவர் திருநாவுக்கரசர் பெருமான். மணிவாசகப் பெருமானும்,

**நிலம்நீர் நெருப்புயிர்**
**நீள்விசும்பு நிலாப்பகலோன்**
**புலனாய மைந்தனோ**
**டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்** [6]

என்று இவற்றோடு வேறு சிலவற்றையும் சேர்த்துப் பேசுவர். கம்ப நாடனும்.

**............பூதம் ஐந்தும்**
**விலங்கிய விகாரப் பாட்டின்**
**வேறுபாடு உற்ற வீக்கம்** [7]

என்று கூறுவான். அரிஸ்டாட்டிலின் கொள்கைப்படி நாலோ ஐந்தோ தனிப்பொருள்கள்; தனிமங்கள் (Elements). மற்றயாவும் தனிமங்கள் பலவகையாகச் சேர்வதால் உண்டாகும் சேர்க்கைப் பொருள்கள்

4. பெரி. திரு. 4.3:3
5. அப்பர்தேவாரம் 6.54:5
6. திருவா. திருத்தோணோக்கம்.5
7. கம்ப. சுந்தர. காப்பு

(Compounds). இப்படிக் கலப்பதனைப் 'பஞ்சீ கரணம்' என்று வேதாந்த நூல்கள் விளம்பும். இவ்வாறு கலக்கும் பொருள்களை அறிவியலார் தனிமங்கள் என்று பேசுவர். இவற்றோடு பிறவற்றையும் சேர்த்து வைணவம் 26 தத்துவங்களாகவும் சைவம் 36, 96 தத்துவங்களாவும் விளக்கும். அவற்றுள் புகுவது மற்றொன்று விரித்தலாய் முடியுமாதலால் இவற்றோடு நிறுத்துவேன்.

பொருள்களை ஆக்கும் அடிப்படையான துகளே அணு வாகும் என்பதை நாம் அறிவோம். இந்த உலகமும் இதனை யொத்த வேறு அண்டங்களும் அணுவினால் ஆகியவையே. பூக்கள் சேர்ந்து பூமாலை யாதல்போல் அணுக்கள் சேர்ந்து அண்டங்களாகின்றன. இவை யெல்லாம் கதிரவமண்டலத்தில் அடங்கியவை. கதிரவமண்டலத்தில் கதிரவனுக்கு மிக அண்மையிலிருப்பது புதன்; தொடர்ந்து சுக்கிரன், பூமி, செவ்வாய், குட்டிக் கோள்கள் (Asteroids), வியாழன், சனி, யுரேன்ஸ் (நிருதி) நெப்டியூன் (வருணன்) புளுட்டோ (குபேரன்) என்றவரிசையில் அமைந்துள்ளன. இப்படியே எண்ணற்ற கதிரவ மண்டலங்கள் விண்வெளியில் அமைந்து உலவிக் கொண்டுள்ளன. இவை தவிர பல்லாயிரக்கணக்கான நட்சத்திரக் கூட்டங்கள் வான வெளியில் கண் சிமிட்டிக்கொண்டுள்ளன. இவற்றுள் சூரியன் சந்திரன் (துணைக்கோள்), புதன், வியாழன் (குரு-பிரகஸ்பதி), வெள்ளி, சனி, இராகு, கேது இவற்றின் அடிப்படையில் சோதிட சாத்திரம் (Astrology) உருவாகியுள்ளது. அறிவியல் அடிப்படையில் அண்ட கோளங்களிலுள்ள அனைத்தின் அடிப்படையில் வான சாத்திரம் (Astronomy) அமைந்துள்ளது. சோதிடசாத்திரம் சமயத்தில் புகுந்து விட்டதால் திருக்கோயில்களில் 'நவக்கிரகங்கள்' என்ற பெயரில் இடம் பெற்று வழிபாடும் பெற்று வருகின்றன. இந்த அண்டங்களையெல்லாம் வைணவ தத்துவம் **'அசித்து'** என்ற தத்துவத்திலும் சைவ சித்தாந்தம் **'பாசம்'** என்ற தத்துவத்தினும் அடக்கி விளக்கும். மேலும் அசித்து எம்பெருமானுக்கு உடலாக

இருக்கும். இதனைச் சரீர-சரீரிபாவனை என்று வைணவம் பேசும். இத்துடன் இது நிற்க.

உலகத்தோற்றத்தில் - உலகம் உண்டாதலாகிய காரியத்தில் - இறைவனே முதற் காரணம், நிமித்த காரணம், துணைக் காரணம் என்ற மூவகைக் காரணங்களாக உள்ளான் என்ற வைணவ தத்துவத்தைக் கொண்டு அண்டங்கள் உண்டாதலை விளக்கலாம். அசித்து சூக்குமமாக இருக்கும் நிலையில் - அஃதாவது உலக உற்பத்திக்கு முன்னர் - அதனுள் இறைவன் அந்தர்யாமியாக சங்கற்பத்தோடு நின்று இருக்கும் நிலையில் இறைவன் உலகிற்கு முதற் காரணமாகின்றான். இங்ஙனம் நுண்ணிய நிலையில் இருக்கும் அசித்தை வெளிப்படுத்தி 'உலகப்படைப்பு செய்வோம்' என்று இறைவன் எண்ணுகின்ற நிலையில் இறைவன் உலகிற்கு நிமித்த காரணமாகின்றான். இறைவனுடைய ஞானம், சக்தி முதலியவையே துணைக் காரணமாகின்றன. ஆக, இம்முறையில் இறைவன் மூன்று காரணங்களுமாக உள்ளான் என்று மெய்விளக்க அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். இக்கருத்தினை ஆழ்வார் பலஇடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.[8]

மேற்குறிப்பிட்ட மூன்று காரணங்களுள் இறைவன் உலகிற்கு முதற் காரணம் என்பது மிகவும் முக்கியமானது. காரணப் பொருள் பின் காரியப் பொருளாக மாறுவது முதற் காரணம் என்பது பொது விதி. இங்கு இறைவனே இவ்வுலகப் பொருளாக மாறினான் என்றால், அங்ஙனம் அன்று. இவ்வுலகப் பொருள்கட்கு அவற்றின் நுண்ணிய நிலை முதற் காரணம். பருப் பொருளாக மாறிய நிலைமை காரியம்; 'இல்லது வாராது; உள்ளது சிதையாது' என்பது தத்துவம். வேதியியல் உண்மையும் இதுவேயாகும். இறைவன் நுண்ணிய நிலையிலுள்ள அசித்தின் உள்ளேயும் அந்தர்

8. திருவாய் 1,5:2; 1.5:4. வேறு பாசுரங்களிலும் இதனைக் கண்டு தெளியலாம்.

யாமியாக உள்ளான்; பருப்பொருளாகவுள்ள நிலையிலேயும் அந்தர்யாமியாக உள்ளான். நுண்மையான அசித்தில் இறைவன் அந்தர்யாமியாக இருக்கும் நிலை முதற்காரண நிலையாகும். பருப்பொருளாக உள்ள அசித்தில் இறைவன் அந்தர்யாமியாக உள்ள நிலையே காரிய நிலையாகும். அதனால் இறைவன் முதற் காரணமாகவுள்ள நிலையிலும், காரியமாகவுள்ள நிலையிலும் சிறிதும் வேறு படுவதில்லை. இதனால் இறைவன் விகாரமற்றவன் - நிர்விகாரன் - என்று சொல்லுவதில் தவறில்லை. இக்கருத்தை 'வித்தாய் முதலிற் சிதையாமே' (திருவாய் 1.5:2) என்ற ஆழ்வார் பாசுரத்தின் தொடர் அழகுடன் விளக்குவதைக் கண்டு தெளியலாம். உலகத்துப் பொருள்கள் போலன்றி இறைவன் தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்து கொண்டே எல்லாப் பொருள்கட்கும் வித்தாக (முதற் காரணமாக) உள்ளான் என்பது கருத்தாகும். இங்ஙனம் இருத்தல் இவனுடைய ஆச்சரிய சக்தியாகும். இதனையே திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும்,

> **சின்னூல் பலபலவாயால் இழைத்துச்**
> **சிலம்பி பின்னும்**
> **அந்நூல் அருந்தி விடுவதுபோல்**
> **அரங்கர் அண்டம்**
> **பன்னூறு கோடி படைத்துஅவை**
> **யாவும் பழம்படியே**
> **மன்னூழி தன்னில் விழுங்குவர்**
> **போதமனம் மகிழ்ந்தே [9]**

என்ற அழகான உவமை கலந்த பாடலால் விளக்குவர். ஒரு சிறிய சிலந்திப் பூச்சி தன்னிடத்திலிருந்து நூலை உண்டாக்கித் தான் அதனை விழுங்குகின்றது. நூல் உண்டாதற்கு முதற் காரணமாகவுள்ள அப்பூச்சி தன் நிலையில்

9. திருவரங்க மாலை-18

அழிவதில்லை. ஒரு சிலந்திக்கு இது கூடுமேல், தன் நிலையில் சிதைவின்றித் தான் உலகிற்கு முதற் காரணமாதல் எல்லாம் வல்ல இறைவனுக்கு அரியதாகுமோ?

**'ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் சர்வ சக்திக்குக் கூடாதொழியாதிதே**[10]

என்ற தத்துவத்திரய வாக்கியமும் ஈண்டுநோக்கி உன்னற்பாலதாகும்.

உலகத்தோற்றத்தைப் பற்றிச் சைவசித்தாந்தம் சற்காரிய வாதத்தின்[11] அடிப்படையில் விளக்கும். ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இருந்தேயாக வேண்டும் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இதற்கு மேலும் ஒருபடி சென்று காரண நிலையிலும் காரியம் உண்டு என்பதை மெய்ப்பிக்கலாம். காரியம் எங்கிருந்தோ திடீரென்று புதிதாய்த் தோன்றுவது அல்ல. அஃது உற்பத்திக்கு முன்னரும் உள்ளது. இதுவே **சற்காரியவாதம்**. இதனைத் தெளிவாக்குவேன். காணப்பட்ட உலகம் இதற்குமுன் ஒடுங்கிய நிலையில் காணப்படாத நுண் (சூக்கும) நிலையில் இருந்தது. பின்னர் காணப்படும் பரு (தூல) நிலையை அடைந்துள்ளது. இனி, முன்போலவே ஒடுங்கி நுண்ணிய நிலையை அடையும். ஆகவே, 'உலகம் என்றும் யாதேனும் ஒருநிலையில் உள்ளதேயன்றி இல்லாதுஒழிவதில்லை' என்பது புலனாகும்.

இதனை மேலும் தெளிவாக்குவேன். காணப்படாத நுண்ணிய நிலையில் இருந்த உலகம் காணப்படும் பரு

---

10. தத்து. ஈசுவரப். 29

11. 'காரியங்கள் பலவும் தோற்றத்திற்கு முன்னும் தத்தம் காரணங்களில் உள்ளனவே'. என்பது சற்காரிய வாதம். சத்-உள்ளது; சற்காரியம்-உள்ளதாகிய காரியம். 'இல்லது தோன்றும்' என்பவர் அசற்காரியவாதிகள்.

நிலையை அடையும் பொழுதுதான் பயன் உண்டு. ஆகையால் நுண்ணிலையில் உள்ளதாகிய உலகம் பரு நிலையில் தோன்ற வேண்டுவது இன்றியமையாததாயிற்று. இங்ஙனம் நுண்ணிலையில் இருந்த உலகத்தை இப்பரு நிலையில் கொணர்ந்தவன் இறைவனாதலின் 'இவ்வுலகத்தைப் படைத்தவன் ஒருவன் உளன்' என்பது பொருந்துவதாகின்றது. இதனால் நாம் தெளியும் பொருள் இது: 'தோற்றம்' என்பது 'காணப்படாத நுண்ணிலையின் நீங்கிக் காணப்படும் பரு நிலையை அடைவது'; 'நிலை' என்பது, 'காணப்படும் நிலையில் இருத்தல்' ஆகும்; 'அழிவு' என்பது காணப்பட்ட பரு நிலையின் நீங்கி முன் போலக் காணப்படாத நுண்ணிலையை அடைதல்' ஆகும். இதனைச் சுருக்கமாக **'இல்லது தோன்றாது; உள்ளது அழியாது'** என்று கூறலாம். இதுவே சற்காரிய வாதத்தின் சுருக்கமாகும.

சற்காரிய வாதத்தைச் சார்ந்து 'உள்ளது என்றும் அழிவதில்லை' என்பதும் சொல்லப்படும். 'ஒரு மெழுகு வத்தி எரிவதால் இழப்பு ஒன்றும் இல்லை,' Nothing is lost when a candle is burnt என்ற வேதியியல் உண்மையும் இதனை ஒத்ததாகும். இக் கூறிய கருத்தையும் தெளிவிப்பேன். உள்ளது எக்காலத்தும் உள்ளதே; அஃது என்றும் இல்லாதாதல் இல்லை. இங்ஙனமே, இல்லது எக்காலத்திலும் இல்லதே; அஃது என்றும் உளதாதல் இல்லை. ஆகவே 'தோற்றம்' என்பதும் 'அழிவு' என்பதும் அவற்றையுடைய பொருள்களின் நிலைமாற்றங்களேயன்றி வேறல்ல. தோன்றி அழியும் நிலை காரிய நிலை என்றும் தோற்றத்திற்கு முன்னும் பின்னும் உள்ள நிலை காரண நிலை என்றும் வழங்கப்படும். இதனால், தோன்றுதல் என்பது காரண நிலையிலிருந்து காரிய நிலையை அடைவதாகும்; அழிதலாவது, காரிய நிலையிலிருந்து மீண்டும் காரண நிலையை அடைவதாகும். எ-கு, 'குடம் தோன்றிற்று' என்பதில் அது 'மண்' என்னும் நிலையிலிருந்து

'குடம்' என்ற நிலையை அடைந்தது என்பதே பொருள். 'குடம் அழிந்தது' என்பதில் 'குடம்' என்ற நிலையிலிருந்து முன்போல 'மண்' என்னும் நிலையை அடைந்தது என்பதே பொருளாகும். இவ்வாறு நிலை வேறுபடினும், இரு நிலையிலும் பொருளின் தன்மை ஒன்றாகவே இருக்கும். இங்ஙனமே 'பொன்' என்றும் 'அணி' என்றும் வேறு வேறு பொருள்போல வழங்கினாலும் பொருள் தன்மையால் அவை ஒன்றேயாதல் தெளியப்படும்.

இதனை இன்னொரு விதமாகவும் விளக்கலாம். தோற்றமும் அழிவும் பொருள்களின் நிலை மாற்றங்கள் என்பது எப்படி? முன் சூக்குமமாய்-நுட்பமாய்-விளங்காது உள்ள பொருளே பின் தூலமாய்-பருமையாய்-விளங்கி நிற்கும். இரண்டு எடுத்துக்காட்டுகளால் இந்த உண்மை தெளியப்படும். எள்ளைப் பிழிந்தால் எண்ணெய் தோன்றும். மணலைப் பிழிந்தால் எண்ணெய் தோன்றுமா? தோன்றாது. ஏன் தோன்றாது? எள்ளில் எண்ணெய் சூக்குமமாய் உள்ளது. மணலில் எண்ணெய் எவ்வகையிலும் இல்லை. அதனால் எள்ளைப் பிழிந்தால் எண்ணெய் தோன்றுகின்றது; மணலைப் பிழிந்தால் எண்ணெய் தோன்றுவதில்லை. மற்றுமோர் எடுத்துக்காட்டு: முயற்குட்டி, பசுங்கன்று, யானைக் கன்று இவற்றின் தலையில் தொடக்கத்தில் கொம்பு இல்லை நாளடைவில் பசுங்கன்றின் தலையில் கொம்பு தோன்றுகின்றது. இதுபோலவே, யானைக் கன்றின் வாயிலிருந்தும் தந்தம் தோன்றுகின்றது. ஏன்? பசுங்கன்றின் தலையில் கொம்பு சூக்குமமாய் உள்ளது; அதனால் அது பின்பு தூலமாய்த் தோன்றுகின்றது. யானைக் கன்றின் வாயிலும் தந்தம் சூக்குமமாய் உள்ளது; அதனால் அது பின்பு தூலமாய்த் தோன்றுகின்றது. முயல் குட்டியின் தலையில் முன்பு கொம்பு எவ்வகையிலும் இல்லை; அதனால் அஃது எக்காலத்திலும் தோன்றுவதில்லை. இவற்றால் இல்லாதது எக்காலத்திலும் இல்லாததே என்பது தெளிவு. அதனால் உள்ளதுதான் தோன்றும், இல்லது

தோன்றாது என்பது மறக்க முடியாத உண்மையாகும். ஆகவே, தூலமாய்த் தோன்றும் பொருள்கள் யாவும் அவ்வாறு தோன்றுவதற்கு முன்னர் சூக்குமமாய் உள்ள பொருள்களே என்பது தெளிவாகின்றதல்லவா?

இவ்விடத்தில் இன்னொன்றும் கருதத் தக்கது. 'இல்லாமல் பிறவாது' 'சட்டியிலிருந்தாலன்றோ அகப்பையில் வரும்' என்பன போன்ற முதுமொழிகள் பலவும் சற்காரிய வாதத்தின் அடிப்படையிலே தோன்றியனபோல் தோன்றுகின்றது. இந்த வாதமுறை இல்லையாயின் மண்ணிலிருந்து ஆடையும், நூலிலிருந்து குடமும், நெல்லிலிருந்து கமுகும் தோன்றாமல் மண் முதலியவற்றிலிருந்து குடமும், ஆடையும், நெல்லுமே தோன்றுகின்ற வரையறை இல்லா தொழியும். இன்னும் சிலவற்றைச் சிந்திப்போம். நிலத்தைத் தோண்டினால் நீர் தோன்றுகின்றது; சில இடங்களில் பாறை தோன்றுகின்றது. கோலார் போன்ற இடங்களில் பொன் முதலிய விலையுள்ள பொருள்கள் தோன்றுகின்றன. தற்காலத்தில் பல ஆற்றுப் படுகைகளில் பெட்ரோலியம் தோன்றுகின்றது. காரணம், அப்பொருள்கள் ஆங்காங்கே இருப்பதேயாகும் என்பது தெளிவு. ஆகவே, 'உள்ளவையே தோன்றும்' என்ற சற்காரியவாதம் எளிதில் உடன் படக்கூடியது. இவற்றிலிருந்து இன்னோர் உண்மையையும் நாம் அறிகின்றோம். நிலத்தினுள் நீர் முதலியன பரு நிலையில் இருத்தலால் அவற்றது உண்மை எளிதில் புலனாகின்றது. ஆனால் மண் முதலியவற்றில் குடம் முதலியவை நுண்ணிய நிலையில் இருத்தலால் அவற்றின் உண்மை அரிதில்தான் உணர முடியும்; சிந்தித்துதான் தெளிதல் வேண்டும்.

இப்படித் தெளிவானாலும் 'இறைவன் உலகைப் படைக்கின்றான்; அழிக்கின்றான்' என்பதன் கருத்தும் சிந்தித்துதான் அறிய வேண்டியதாகின்றது. 'உலகம்' என்பது 'காரணப் பிரபஞ்சம்' 'காரியப் பிரபஞ்சம்' என இருவகைப்படும். 'காரணப் பிரபஞ்சம்' என்பது 'மண்'

'பொன்' போல்வது; 'காரியப்பிரபஞ்சம்' என்பது' 'குடம்' 'அணி' போல்வது. அது போலவே இறைவன் காரியப்பிரபஞ் சத்தைக்காரணப் பிரபஞ்சத்திலிருந்து தோற்றுவித்துப் பிறகு அதிலே ஒடுக்குகின்றான். ஆனால் காரணப் பிரபஞ் சத்தைத் தோற்றுவித்தல் இல்லை. ஆகவே இறைவன் 'படைக்கின்றான்' 'அழிக்கின்றான்' என்றால் அவ்வாறு செய்வது காரியப் பிரபஞ்சத்தைத்தான் எனவும், 'காரணப் பிரபஞ்சம்' 'அனாதி நித்தியம்' எனவும் பகுத்துணர்ந்து தெளிவுபெறல் வேண்டும். இங்ஙனமே வைணவத்திலும் இறைவன் நித்தியன்; அவன் திருமேனி நித்தியம்; அது நுண்ணிய நிலையை அடைதல் பிரளயம்; பரு நிலையை அடைதல், 'படைப்பு' என்பதாகச் சிந்தித்து உணர்தல் வேண்டும்.

மகாகவி பாரதியாரும் இவ்வுலகப் படைப்பையும் அதில் ஆருயிர்கள் துய்ப்பதையும்,

> எத்தனை கோடி
> இன்பம் வைத்தாய்—எங்கள்
> இறைவா! இறைவா! இறைவா![12]

என்று எக்களிப்புடன் போற்றுகின்றார். இதனை,

> சித்தினை அசித்துடன்
> இணைத்தாய்-அங்கு
> சேரும்ஐம் பூதத்து
> வியனுல கமைத்தாய்
> அத்தனை யுலகமும்
> வண்ணக் கலஞ்சிய
> மாகப் பலப்பலநல்
> அழகுகள் சமைத்தாய்

12. பா. க: இறைவா!

என்று விளக்கியுரைக்கின்றார். இதில் 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்ற முறையில் உலகத்தைக் காண்கின்றோம். பின்னர் சித்தாகிய உயிர்கள் 'கிருஷ்ணராஜசாகர்' 'மேட்டூர் அணை' போன்ற கைபுனைந்தியற்றியதால் கர்நாடக மாநிலத்தின் பல பகுதிகளும், தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளும் 'கைபுனைந் தியற்றிய கவின் பெறுவனப்பு' என்ற முறையில் வண்ணக் களஞ்சியமாக, பலப்பல அழகுகளுடன் பொலியச் செய்யப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். கிருஷ்ண ராஜ சாகரின் அருகில் தோற்றுவிக்கப்பெற்ற பிருந்தாவனம் 'கை புனைந்து இயற்றப் பெற்ற' ஓர் அற்புத வண்ணக் களஞ்சியம். மேட்டூர் அணையின் நீர் பாய்வதால் தஞ்சை மாவட்டம் 'நெற்களஞ்சியம்' என்று பெரும்பேர் பெற்றுத் திகழ்கின்றது.

இறுதியில் இந்த ஆருயிர் கட்கு,

**'முக்தியென் றொருநிலை**
**சமைத்தாய்அங்கு**
**முழுதினையும் உணரும்**
**உணர்வு அமைத்தாய்.**
**பக்தியென் றொருநிலை**
**வகுத்தாய்-எங்கள்**
**பரமா! பரமா! பரமா!**

என்று 'முக்தியை' அமைத்த பேருண்மையையும், அதனை அடைய 'பக்தி' 'பிரபத்தி' போன்ற வழிகளையும் வகுத்துக் காட்டிய அற்புதத்தையும் வியந்து போற்றுகின்றார். பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் பல்வேறு வண்ணக் களஞ்சியங்களை (கை புனைந் தியற்றாக கவின்பெறு வனப்பைக்) கண்டு, அநுபவித்து மகிழலாம்.

**அண்டமும் பிண்டமும்:** 'அண்டத்தில் போலத்தான் பிண்டத்திலே' என்பது நமது நாட்டில் வழங்கிவரும் பழமொழி. இந்தப் பழமொழியின் உண்மை அணு

ஆராய்ச்சியின் முடிபாக இருப்பதை அறிவியலறிஞர்கள் காட்டியுள்ளனர். இந்த உலகில் 92 வகையான அணுக்கள் உள்ளன என்றும், இந்த ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக உள்ளன என்றும். இவை யாவும் தம்மோடுதாமாகச் சேர்ந்து அணுத்திரளைகள் (Molecules) ஆகின்றன. என்றும், இப்படிப்பட்ட பொருள்கள் (Compounds) ஏழு லட்சத்திற்கு மேலும் உள்ளன என்றும் அவர்கள் விளக்கிக் கூறிக் கணக்கிட்டும் காட்டியுள்ளனர். இந்த அணுக்களின் திரட்சியே அண்டங்களாகின்றது என்பதனையும் அறிகின்றோம். அறிவியலறிஞர்கள் இன்று கண்டுள்ள மெய்ம்மையினையே மெய்யுணர்வு பெற்ற நம் நாட்டுப் பெரியோர்கள் அநுபவ உண்மையாகக் காட்டியுள்ளனர்.

**அண்டங்கள் எல்லாம் அணுவாக**
**அணுக்கள் எல்லாம்**
**அண்டங்க ளாகப் பெரிதாய்ச்**
**சிறிதாயி னானும்**
**அண்டங்கள் உள்ளும் புறம்பும்**
**கரியாயி னானும்**
**அண்டங்கள் ஈன்றாள் துணைஎன்பர்**
**அறிந்த நல்லோர்[13]**

என்று பரஞ்சோதி முனிவர் இந்த உண்மையினை இறையுண்மையுடன் இணைத்துக் காட்டுவர். அண்டங்களின் அமைப்பை மணிவாசகப் பெருமான்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளபெருந் தன்மை வளப்பருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன[14]

என்று இவற்றின் தொகை கணக்கிலடங்கா என்று எடுத்துக் காட்டுவர். மகாகவி பாரதியாரும்.

13. பரஞ். திருவிளையாடல்-பாயிரம்-6
14. திருவா. திருவண்டப் - அடி (1.4)

நக்க பிரான் அருளால்—இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்
தொக்கன அண்டங்கள் —வளர்
தொகைபல் கோடிபல் கோடிகளாம்!
இக்கணக் கெவரறிவார்?-புவி
எத்தனை யுளதேன்ப தியாரறிவார்?

நக்கபிரான் அறிவான்—மற்று
நானறி யேன்பிற நரரறியார்
தொக்கபேர் அண்டங்கள்—கொண்ட
தொகைக்கெல்லை இல்லையென்று
தக்கபல் சாத்திரங்கள் சொல்லுகின்ற—ஒளி
தருகின்ற வானமோர் கடல் போலாம்
இக்கட லதனகத்தே—எங்கும்
அக்கரை இக்கரை யொன்றிலையாம்

இக்கட லதனகத்தே—அங்கங்
கிடையிடைத் தோன்றுபுன் குமிழிகள்போல்
தொக்கன உலகங்கள்; திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதோர் வியப்புடைத்தாம்—இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி கண்டீர்[15]

என்று வியன்பெரு வையத்தின் காட்சியைக் காட்டுவர். இந்த இருவரின் கருத்துகளும் ஒருபுடையொத்துள்ள மையைக் கண்டு மகிழலாம்.

பிறிதோரிடத்தில் பாரதியார் இந்த அண்டங்களின் அமைப்பை,

விண்டு ரைக்க அறிய அரிதாய்
விரிந்தவான வெளியென நின்றனை,

15. பா. க: தோ. பா. கோமதியின் மகிமை 5, 6, 7

அண்ட கோடிகள் வானில் அமைத்தனை;
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை;
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
'கோல! மேநினைக் காளியென் றேத்துவேன்![16]

என்று விளக்குவதுடன் அவற்றினிடையேயுள்ள தொகை யளவுகளையும் கற்பனைமூலம் கணக்கிட்டுக் காட்டுவர். புறமுக ஆற்றல் (Centrifugal force) என்ற இறைவனது ஆணையால் இக்கோள்கள்-அண்டங்கள்-வழிவிலகாமல் சுற்றி வந்து கொண்டுள்ளன ஒவ்வொரு கோள்கட்கும் இடையிலும் பல்லாயிரக் கணக்கான மைல் இடைவெளிகள் உள்ளன. இந்த இடைவெளியில்தான் சில சமயம் வால் மீன்களையும் (Comets), வீழ்கொள்ளி அல்லது எரிமீன் களையும் (Meteors) காண்கின்றோம்.

இங்ஙனம் அண்டங்கள் விண்வெளியில் வெவ்வேறு வேகத்தில் சுழன்று கொண்டும் ஒன்றை யொன்று சுற்றிக் கொண்டும் உள்ள உண்மையை ஆண்டவனின் 'அலகிலா விளையாட்டாகக்' கொள்வர் திரிகூட ராசப்ப கவிராயர். சாட்டைத் துணையின்றியே இத்தனைஅண்டங் களையும் பம்பரம்போல் அண்டவெளியில் ஆட்டி வைக் கின்றான் என்று காட்டுவர்.

சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத்து
அண்ணலார்.[17]

என்று அழகாகக் குறிப்பிடுவதைக் கண்டு மகிழலாம்.

---

16. ஷை: ஷை: மகாசக்தி வாழ்த்து—1
17. குற்றா. குறவஞ்-107
வா. வா.—2

**திவ்விய கவிகாட்டும் காட்சி :** இந்த பூமியும் அதனைச் சுற்றி வேறு சிலவும் சுற்றிச் சுற்றி வருதலைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் ஒரு பாசுரத்தில் காட்டுவார்.

**ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி**
**நடாத்தும் அந்தக்**
**காலத்திகிரி முதலான யாவும்**
**கடல்க டைந்த**
**நீலத்திகிரி அனையார், அரங்கர்**
**நிறைந்த செங்கைக்**
**கோலத்திகிரி தலைநா ளினில்**
**கொண்ட கோலங்களே** [18]

என்பது பாசுரம். எந்தப் பொருளும் நன்றாக மென்று உமிழ் நீருடன் கலந்து சுவைக்கும்போதுதான் அதன் சுவையை நன்கு அறியலாம். அந்த முறையில் இந்தப் பாசுரத்தை மனத்தினால் மென்று உணர்வுடன் கலந்து அசை போட வேண்டும்.

முதலில் இப்பாசுரம் குறிக்கும் 'திகிரிகளை' இன்னவை என அறிந்து கொள்ள வேண்டும். **ஞாலத்திகிரி;** கதிரவன் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு வானவெளியில் நிலையாக நிற்கின்றான். நிற்கவில்லை, நடனம் ஆடுகின்றான் என்கின்றான் கம்பன்.

**எண்ணரிய மறையினொடும் கின்னரர்கள்**
**இசைபாட உலகம் ஏத்த**
**விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்**
**கரம்குவிப்ப வேலை என்னும்**

18. திருவரங்-மாலை-89

**மண்ணுமணி முழவதிர வானரங்கில்**
**நடம்புரிவான் இரவி யான**
**கண்ணுதல்வா னவன்கனகச் சடை விரிந்தால்**
**எனவிரிந்த கதிர்கள் எல்லாம**[19]

பாடலை மீண்டும் மீண்டும் படித்துச் சுவைத்துக் காட்சியை மனத்திரையில் பதியச் செய்து அநுபவித்து மகிழ வேண்டும்.

இங்ஙனம் தன்னைத்தானே சுற்றி வரும் கதிரவன் கவிஞர் கண்ணுக்கு உருளைபோல்-திகிரிபோல்-தென்படு கின்றான். இவனைச் சுற்றி வரும் பூமியும் ஓர் உருளைபோல் காணப்படுகிறது இதுவே 'ஞாலத்திகிரி' என்பது. **முதுநீர்த் திகிரி :** ஒவ்வோர் அண்டத்துடன் அவ்வண்டத்திலுள்ள பொருள்களும் உருமாறிச் சுழல்கின்றன. எ-டு பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலமும் பூமியுடன் சேர்ந்தே சுழலு கின்றது. பூமியிலுள்ள கடல் நீர், நீராவி, மேகம்-மலை-ஆறு என்று மாறிக் கடலுடன் கலக்கின்றது. மீண்டும் நீராவி-மேகம்-மழை-ஆறு-கடல் என்று சக்கரம் சுழலு கின்றது. இவ்வாறு கடல் நீர் சுற்றுவதை 'முதுநீர்த்திகிரி' என்கின்றார் (முதுநீர்-கடல் நீர்). இந்தச் சக்கரத்தைப் போலவே இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன் பனி, பின்பனி என்ற பருவச் சக்கரமும் பிறப்பு இறப்பு சக்கரமும் சுழன்று வருகின்றன. இவற்றை மனக் கண் ணால் காண வேண்டும். **காலத்திகிரி :** இது கண்ணுக்குத் தெரியாத சக்கரம்[20]. இதுவே ஞாலத்திகிரி, முது நீர்த்திகிரி முதலியவற்றை இயக்கும் ஓர் அற்புதத் திகிரி. இதன் திருவிளையாடலை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவேன். பெரிய ஆலமரம் ஒன்று; அடையாறு ஆலமரம் போன்றது. அதற்கு வயது நூற்றுக் கணக்கானது. நூற்றுக் கணக்

19. கம்ப. பால, மிதிலைக்-153

20. இதுவே வைணவதத்துவத்தின் 'அசித்து' என்பதன் ஒரு பகுதியான காலதத்துவம். இது 'சத்துவ சூனியம்' எனவும் வழங்கப் பெறும்.

கான ஆண்டுகட்கு முன்னர் தெண்ணீர்க் கயத்துட் சிறு மீன் சினையினும் மிகச் சிறிய ஆலம் விதையில் ஒளிந்து கொண்டிருந்தது. காலச் சக்கரம் சுழன்று சுழன்று விதையில் ஒளிந்து கொண்டிருந்த நுண்ணிய சிறிய ஆலமரத்தை மெல்ல மெல்ல இழுத்து வெளிக் கொணர்ந்து விட்டது. இந்த அகிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் காலச் சக்கரத்தின் சுழற்சியில் வெளி வந்தவையே, ஆகவே நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திர தாரராக இருப்பது 'காலம்' என்ற திகிரி எனலாம். **நீலத்திகிரி :** நீலமலை. இது திருமால் கடல் கடைந்த ஞான்று மத்தாகப் பயன் படுத்தப்பட்ட மந்தர மலை, இதனை யொத்தவர் திருஅரங்கத்தில் அறிதுயில் கொண்டிருக்கும் அரங்கர். **கோலத்திகிரி :** இஃது அரங்கர் கையிலிருக்கும் சுதர்சனம் என்னும் சக்கரம்; திருவாழி ஆழ்வான். இஃது அவன் கையை விட்டுப் பாய்ந்து மரம் நடுபவர் முதலில் போடும் கோலப்புள்ளிகள் போல உலகப் படைப்புக் காலத்தில் புள்ளிகள் போட்டது. அந்தக் கோலத்தில் காலத்திகிரி பய பக்தியோடு உருண்டுசென்றது. காலத்திகிரியினின்றும் பிறந்து, கடிகாரச் சக்கரங்கள் போல் அதோடு இணைந்து நிற்கும் ஞாலத்திகிரி, முதுநீர்த் திகிரி முதலியதிகிரிகளெல்லாம் நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இந்தத்திகிரித் தொடர்களைக் கற்பனையில் கண்டு உலகப்படைப்பைச் சிந்திக்கின்றார் அய்யங்கார், கூர்தல் அறக் கொள்கை அய்யங்கார் சிந்தையில் -சிந்தனையில்-ஓர் அற்புதக் கவிதையாக மலர்ந்து விட்டதைக் கண்டு வியப்பெய்துகின்றோம். பாசுரத்தை மீண்டும் ஒரு முறைபாடி கவிதையநுபவத்தில் திளைப்போம்.

**அணு, அண்ட அமைப்பு :** அணுவின் அமைப்பும் அண்டங்களின் அமைப்பும் ஒப்புடையனவாக உள்ளன என்று அறிவியலறிஞர்கள் ஆய்வுகளால் மெய்ப்பிதத்துள்ளனர். அறிவியலறிஞர்கள் ஆய்வுகள் மூலம் கண்டவற்றையே நம் நாட்டு ஞானச் செல்வர்கள் உள்ளுணர்வால்

அநுபவமாகக் கண்டுள்ளனர். அறிவியலறிஞர்களின் அணுவியலும் ஞானச் செல்வர்களின் அநுபவ இயலும் ஓரிடத்தில் சந்திப்பதை ஆய்ந்து பார்ப்போர் நன்கு அறிவர். அணுக்கோயிலின்முன் நிற்கும் விஞ்ஞானிகளும் அண்டக்கோயிலின்முன் நிற்கும் மெய்ஞ்ஞானிகளும் ஒரே உண்மையைத்தான் காண்கின்றனர் என்பதை நாம் அறியுங்கால் எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இறைவன் படைப்பை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

**அண்டங்களின் அமைப்பு :** முதலாவதாக அண்டங்களின் அமைப்பை நோக்குவோம். இந்த அகிலத்திலுள்ள (Universe) அண்டங்கள் யாவும் கதிரவமண்டலத்தில் அமைந்துள்ளன. வான் வெளியில் கோடானு கோடி அண்டங்கள் உள்ளன. கண்ணைச் சிமிட்டும் கோடானு கோடி விண்மீன்கள் உள்ளன. ஒவ்வொன்றும் நமது கதிரவனுக்கு ஒப்பானது. ஒவ்வொன்றுக்கும் பேருருவமும் சுய ஒளியும் உண்டு. அத்தனையும் அண்டங்களே. அளப்பரிய சேய்மையிலிருப்பதால் பேராற்றல் மிக்க ஒரு தொலை நோக்கியில் கூட அவை சிறு சிறு புள்ளிகள்போல் தோன்றுகின்றன. கதிரவன் மண்டலத்தில் நாம் காண்பதென்ன? நடுவில் கதிரவன். அக்கோளைச் சுற்றிப் பலப்பல மண்டலங்களில் புதன், வெள்ளி, பூமி செவ்வாய், வியாழன், யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ முதலிய கோள்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன.

இரண்டாவதாக, அணுவின் அமைப்பையும் நோக்குவோம். அணு மிகமிக நுண்ணிய துகள். பேராற்றல் வாய்ந்த நுண்பெருக்கியால் (Microscope) காண முயன்றாலும் அது நம் கண்ணுக்குப் புலனாகாது. அரைக்கோடி அணுக்களை அணிவகுத்து நிற்க வைத்தால் அவை நாம் எழுதும்போது இடும் ஒருசிறு முற்றுப் புள்ளியினுள் அடங்கிவிடும், இத்தகைய ஒரு சிறு அணுவின் நடுவிலிருப்பது உட்கரு (Nucleus). அதில் சிலபுரோட்டான்களும் சிலவகை

அணுக்களில் நியூட்ரான்களும் அடங்கியுள்ளன. உட்கருவைச் சுற்றியுள்ள பல வட்டங்களில் எலக்ட்ரான்கள் சுழன்று கொண்டுள்ளன. இந்த வட்டங்கள் வெவ்வேறு தூரங்களில் வெவ்வேறு தளங்களில் அமைந்துள்ளன. கதிரவ மண்டலத்தில் கதிரவனைச் சுற்றிப் பல வட்டங்களில் பல்வேறு தூரங்களில் கோள்கள் அமைந்திருப்பது போலவே, அணுவின் உட்கருவினைச் சுற்றிப் பல வட்டங்களில் பல்வேறு தூரங்களில் எலக்ட்ரான்கள் அமைந்துள்ளன. இவை இடைவிடாது உட்கருவினைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டுள்ளன. இதனைக் கருத்திற் கொண்டுதான் பாரதியாரும்,

> **இடையின்றி அணுக்களெல்லாம் சுழலுமென**
> **இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்** [21]

என்று கூறினார். அணுவின் உட்கருவிலுள்ள துகள்கள் மிக இறுக பிணைக்கப்பெற்றுள்ளன. நாம் இதுகாறும் அறிந்துள்ள ஆற்றல்கள் அனைத்திலும் இவை பிணைந்திருக்கும் ஆற்றல் மிகப் பெரிது. இந்த ஆற்றலை உட்கருவின் பிணைப்பாற்றல் (Binding energy of the nucleus) என வழங்குவர். அணுவின் உட்கருவிற்கும் எலக்ட்ரான்களுக்கும் இடையேயுள்ள மின்னாற்றலை விட இவ்வாற்றல் பத்து லட்சம் மடங்கு பெரியது; வன்மையும் வாய்ந்தது. இந்த ஆற்றல்தான் ஹிரோஷிமை அழித்தது, நாகசாகியை நாசமாக்கியது [22] இதுவே அணு குண்டின் செயற்படும் ஆற்றலாகும்.

**பொங்கல் திருநாள்:** இவ்விடத்தில் பொங்கல் திருநாளை நினைவூட்டி, அணுவின் தத்துவத்திற்கு மீண்டும் வருவோம். இந்திரனை மருதநில கடவுளாகத் தொல்காப்

---

21. பாஞ்சாலி சபதம் 206

22. ஹிரோ ஷீமா, நாகசாகி என்பவை ஜப்பானிலுள்ள நகரங்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் அமெரிக்க அணு குண்டுகளால் அழிக்கப்பெற்றன.

பியம் குறிப்பிடும். அவனுக்கு 'மேகநாதன்' என்ற பெயரும் உண்டு. அவனே மழைக் கடவுளாகவும் பிற்கால இலக்கியங்களில் குறிப்பிடப் பெறுகின்றான். உயிர்கட்கு இன்றியமையாத வெப்பத்தையும் ஒளியினையும் தருபவன் கதிரவன். ஆகவே அவனும் கடவுளாகின்றான்.

பிறந்தநாள் தொட்டுச் சிறந்த தீம்பால் தந்துதவும் பசுக்களுக்கும், உழவர்கட்கு உறுதுணையாயிருக்கும் எருதுகட்கும் மக்கள் வழிபாடு நடத்துகின்றனர். எனவே பொங்கல் திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப் பெறுகின்றது. அஃதாவது மழைவளம் தரும் வானுலக வேந்தனுக்கு முதல் நாள் போகிப் பண்டிகையும், உலகம் உவப்ப வலனேர்புதிரிதரும் பலர்புகழ் ஞாயிற்றுக் கடவுளுக்கு இரண்டாம் நாள் பொங்கல் பண்டிகையும், மூன்றாம் நாள் நன்றிக் கடனாக பசுக்களுக்கும் எருதுகட்கும் மாட்டுப் பொங்கல் விழாவும்[23] நான்காம் நாள் 'கனுப் பொங்கல்,' 'காணும் பொங்கல்' 'கன்னிப் பொங்கல்' என்ற பல பெயர்களில் விழாவும் பண்டிருந்தே நடைபெற்று வருகின்றன. இவை சமய நோக்கில் நடைபெறுகின்றன.

பாரதியாரும் ஞாயிறு வணக்கமாக,

**காதல் கொண்டனை போலும் மண்மீதே**
**கண்பிறழ் வின்றி நோக்குகின் றாயே:**
**மாதர்ப் பூமியும் நின்மிசைக் காதல்**
**மண்டி னாள், இதில் ஐயமொன் றில்லை;**
**சோதி கண்டு முகத்தில் இவட்கே**
**தோன்று கின்ற புதுநகை என்னே!**
**ஆதித் தாய்தந்தை நீவிர் உமக்கே!**
**ஆயி ரந்தரம் அஞ்சலி செய்வேன்.** [24]

23. இந்நாளைத் 'திருவள்ளுவர் திருநாளாகத்' தமிழக அரசு கொண்டாடுகின்றது.

24. பா. க: கோ பா: ஞாயிறு வணக்கம்-3

என்ற பாடலை அருளியுள்ளார். இதில் கவிஞனின் ஆழ்ந்த சிந்தனை நிழலிடுகின்றது. ஞானியர் காண்கின்ற ஆழ்ந்த நோக்கத்தைச் சில சமயம் கவிஞர்களும் காண்கின்றனர் என்பதற்கு இஃது ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். முதலில் பாடலின் பொருளை நோக்குவோம். கதிரவனைக் காதலனாகவும், பூமியைக் காதலியாகவும் காண்கின்றான் கவிஞன். இந்த இரண்டு பொருள்களும் 'காதலன்-காதலி தரிசனம் தந்து நிற்கின்றன கவிஞனுக்கு. ஆம், உண்மையும் அதுதானே. இந்த இரண்டும் இணங்கி இயைந்து இயங்குவதனால்தான், இவ்வுலகிலுள்ள நிலைத்திணையும் இயங்குதிணையும் தோன்றிநிலை பெற்றுள்ளன "செம்பொன்னை உருக்கி வார்த்தாலெனக் காட்சியளிக்கும் அந்திவான் செக்கரழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத்தண்புனல் மணற்களை அரித்தோடும் அருவியின் அழகும்" பச்சைப் பசேலெனப் பெருங்காட்சியளிக்கும் பொருள்களின் அழகும் அவற்றில் பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. கதிரவன்-பூமி இரண்டும் கலந்து வாழும் வாழ்க்கையில் நாம் காணும் காட்சிகள் இவை. இவற்றின் அறிவியல் உண்மைகளை விளக்குவோம்.

**நடராச தத்துவம்:** 'கதிரவனே ஆற்றல் மூலம் (The Sun is the ultimate source of energy) என்பது இன்றைய அறிவியல் உண்மை. ஆற்றல் முழுவதும் அணுவின் உட்கருவில் தேங்கிக் கிடக்கின்றது என்பது இன்றைய அணுவியல் மெய்ப்பித்த உண்மை. இந்த அகிலத்தைச் சிவமாகக் கொண்டால் கதிரவன் சக்தியாகின்றான். அங்ஙனமே அணுவின் உட்கருவும் சக்தியாகின்றது. ஒருவருடைய உயிர்ப்பு ஆற்றல் தடைபடாத அவருடைய இதயத்துடிப்பில் இருப்பதைப் போலவே, இந்த அகிலத்தின் ஆற்றல் கதிரவனிலும் அணுவின் ஆற்றல் அதன் உட்கருவிலும் அடங்கியுள்ளன. அண்டங்களின் தத்துவமும்

அணுவின் தத்துவமும் தில்லைத் திரு நடனத் தத்துவத்தில்- அம்பலவனின் ஆனந்தக் கூத்தில்-வைத்து விளக்கப் பெற்றுள்ளன; இவற்றை நம் முன்னோர்கள் அழகிய நடராசரின் திருவுருவத்தின்மூலம் நமக்கு என்றைக்கும் எடுத்துக் காட்டாக இருக்குமாறு செய்துள்ளனர், இத் திருஉருவத்தில் திருவாசி 'ஓம்' என்னும் பிரணவமாகும், இவரது சடைமுடி ஞானமே வடிவமானது. இவர் சடையை விரித்து நின்று ஆடுவது இவர் ஞானத்தை அள்ளி வழங்குகின்றனர் என்பதைக் குறிக்கும். வீசிய கரம் மாயையை உதறித்தள்ளுவதையும், ஊன்றிய பாதம் மலத்தினை அமுக்குவதையும், தூக்கிய திருவடி அருளை எடுத்து ஆன்மாக்களை ஆனந்தக் கடலில் அழுத்துவதையும் தில்லைத் திரு நடனம் உட்பொருள்களாகக் குறிக்கும். ஒருகையில் உடுக்கையையும் மற்றொருகையில் சிவந்த மழுவையும் இவர் தாங்கியிருப்பது உலக அமைப்பில் ஒலி ஒளிகளின் முக்கியத்துவத்தைக் குறிக்கும். ஒலி, ஒளிகளின் மூல காரணமும் துடிப்பேயாகும். இந்த நடராசப்பெருமானின் தத்துவமே ஒவ்வொரு அணுவினுள்ளும் ஆடல் அசைவுகளாக அமைந்து கிடக்கின்றது என்பதை இன்றைய அறிவியல் உணர்த்துகின்றது.

திருமூலரும் இந்த நடராச தத்துவத்தை,

> **எங்கும் திருமேனி: எங்கும் சிவசக்தி**
> **எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்**
> **எங்கும் சிவமா யிருத்தலால் எங்கெங்கும்**
> **தங்கும் சிவனருட் டன்விளை யாட்டதே** [25]

என்று விளக்குவர். எங்கும் சிவனுடைய திருமேனி உள்ளது. பார்க்குமிடந்தோறும் அவனுடைய அருளாற்றல் நீக்கமற நிறைந்துள்ளது. அவன் திருவருளால் நடைபெறும் படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல், என்ற

25. திருமந்திரம் ஒன்பதாந்தந்திரம் - திருக்கூத்து தரிசனப் — 1.

திருத்தொழில்கள் ஐந்தும் ஆருயிர்களின் நன்மையின் பொருட்டேயாகும், இவையனைத்தும் சிவ சக்தியின் வாயிலாகவே அவன் செய்தருள்கின்றான், அம்மையும் அப்பனும் நுண்ணறிவு அம்பலமாம் திருச்சிற்றம்பலத்தின்கண் விளங்கியருள்கின்றனர். அதனால் எல்லாம் சிதம்பரமாகின்றது. அப்பன் செய்தருளும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்து காணப் பெறுகின்றது. அம்மையின் ஆற்றல் ஒவ்வொரு செயலிலும் தென்படுகின்றது. எல்லா உயிர்களும் உலகங்களும் எல்லா உலகியற் பொருள்களும் அவனைச் சார்ந்து நிற்கின்றன, எல்லாச் செயல்களும் அவனைச் சார்ந்துள்ளன, சுருங்கக் கூறின் உலக மெல்லாம் சிவ சக்தியின் திருக்கூத்தாகும். இதனால் திருமூலரும் 'அம்பலமாவது அகில சராசரம்' என்றனர். இதனையே சிவஞான சித்தியாரும்,

**உலகமே உருவ மாக**
**யோனிகள் உறுப்ப தாக**
**இலகுபேர் இச்சா ஞானக்**
**கிரியையுட் கரண மாக**
**அலகிலா உயிர்ப்பு லன்கட்கு**
**அறிவினை ஆக்கி ஐந்து**
**நலமிகு தொழில்க ளோடும்**
**நாடகம் நடிக்கும் நாதன்.** [27]

என்று விளக்கியுரைக்கின்றது. ஆருயிர்கள் எல்லாமும் பேரின்பம் எய்தும் பொருட்டே இறைவன் இந்த ஐந்தொழில்களையும் புரிந்தருள்கின்றனன்.

ஊழியின் முடிவில் இந்த அகிலம் முழுவதும் அணுத்தத்துவமாக (Involution) மாறும் என்பதையும், மீண்டும் படைப்புக் காலத்தில் (Evolution) அஃது அண்டங்களாக

---

26. சிவஞான சித்தியார்—4 பக்கம் : 257

வடிவெடுக்கும் என்பதையும் மெய்யுணர்வு பெற்ற தாயுமான அடிகள்,

**செகத்தை யெல்லாம் அணுவளவும்**
**சிதறா வண்ணம்**
**சேர்த்து அணு வில்வைப் பை; அணுத்**
**திரளை யெல்லாம்**
**மகத்துவ மாய்ப்பிர மாண்ட**
**மாகச் செய்யும்**
**வல்லவா நீநி னைத்த**
**வாறே யெல்லாம்** [27]

என்று இரத்தினச் சுருக்கமாக விளக்குவர். இந்த உண்மையினையே இன்றைய அறிவியலறிஞர்கள் புலனுணர்வைப் பன்மடங்கு பெருக்க வல்ல கருவிகளைக் கொண்டு விளக்குகின்றனர். நாம் காணும் பொருள்கள் யாவும் அணுத்திரளைகளே (Molecules) யன்றி வேறொன்றுமில்லை என்பதை விளங்க உரைத்தனர். இதனையே அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து விளக்குகின்றது. அணுவிலும் இந்த ஆனந்தக் கூத்தையே நாம் காண்கின்றோம்.

**பூதங்கள் ஐந்தாகிப்**
**புலனாகிப் பொருளாகிப்**
**பேதங்கள் அனைத்துமாய்ப்**
**பேதமிலாப் பெருமையினைக்**
**கேதங்கள் கெடுத்தாண்ட**
**கிளரொளியை மரகதத்தை**
**வேதங்கள் தொழுதேத்தும்**
**விளங்குதில்லைக் கண்டேனே** [28]

என்று மணிவாசகப் பெருமான் விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கே காண்கின்றார். இந்தத் திருக்கூத்தையே சேக்கிழார் பெருமானும்,

---

27. தாயு. பாடல்-தந்தைதாய்-6
28. திருவா-கண்டபத்து-10

**கற்பனை கடந்த சோதி**
**கருணையே உருவ மாகி**
**அற்புதக் கோலம் நீடி**
**அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பர வியோக மாகும்**
**திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடஞ்செய் கின்ற**
**பூங்கழல் போற்றி போற்றி** [29]

என்று கண்டு வழிபடுகின்றார்.

கதிரவனே ஆற்றலின் மூலம் என்று மேலே குறிப்பிட்டோமல்லவா? ஏராளமான ஒளியாற்றல் அல்லது கதிர்வீச்சு ஆற்றல் கதிரவனிடமிருந்து உற்பத்தியாகி விசும்பு வெளியைக் கடந்து நொடியொன்றுக்கு 1, 86, 000 மைல் வீதம் விரைந்து வந்து நம் பூமியை அடைகின்றது. இது நம்மை வந்தடைய எட்டு மணித்துளிகள் ஆகின்றன. கதிரவனின் உட்புறத்திலுள்ள வெப்பம் 2 கோடி சுழியுள்ளது. அங்குள்ள அமுக்கமும் ஓர் அங்குலத்திற்கு 150 கோடி இராத்தல்களாக உள்ளது. இவ்வளவு வெப்பமும் அமுக்கமும் கதிரவனிடம் ஒன்றாகச் சேர்ந்து இருப்பதால்தான் கதிரவனிடமுள்ள கோள் நிலை எலக்ட்ரான்கள் (Planetory electrons) முற்றிலும் உதிர்க்கப் பெறுகின்றன. கதிரவனிடமிருந்து இரண்டு புரோட்டான்களும் இரண்டு நியூட்ரான்களும் இணைந்து பரிதிய உட்கருவை (Helium nucleus) இயற்றுகின்றன. இதனால் அதிகமான அளவு வெப்பம் விடுவிக்கப் பெறுகின்றது. ஒவ்வொரு நொடியிலும் கோடானுகோடி உட்கருக்களில் இந்நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

**கதிரவனின் தேய்வு:** ஒவ்வொரு நொடியிலும் கதிரவனிடமிருந்து ஒன்றரை கோடியே கோடி குதிரைத்திறன்

29. பெரியபுரா. தில்லை வாழந்–12

(Horse-Power) அளவு கொண்ட ஆற்றலைப் பூமி பெறுகின்றதாக அறிவியலறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். இதில் மூன்றில் ஒரு பகுதி ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளிலிருந்து நீரை ஆவியாக மாற்றுவதற்குப் பயன்படுகின்றது. இவ்வாறு நீராவியாகச் செல்லும் நீர்தான் பின்னர் மலைகளின் உச்சியில் மேகமாக நின்று மழையாகப் பொழிகின்றது. மழை நீர் ஆறுகளாகப் பாய்வதனால் அருவிகள் (Water-falls) உண்டாகின்றன. உலகிலுள்ள எல்லா ஆறுகளிலும் ஓடுகின்ற நீரின் ஆற்றலைக் கொண்டு சுமார் 35 கோடி குதிரைத் திறன் அளவு ஆற்றலைப் பெறலாம் என்று மதிப்பிடுகின்றனர். கதிரவனின் வெப்பத்தை யொட்டியே காற்றுகளும் வீசுகின்றன, பருவக் காற்றுகளால்தான் மழையும் பெய்கின்றது. உழவுத் தொழில் நடைபெறுவதற்குக் கதிரவனே முதற்காரணம் ஆவான். இத்தனை நிகழ்ச்சிகட்கும் நெருப்புக் கோளம் போல் உள்ள கதிரவன் ஒவ்வொரு நொடிக்கும் நாற்பது இலட்சம் டன் அளவு தேய்ந்து அழிகின்றமையே காரணமாகும். இவற்றையெல்லாம் விளக்குவது போல்,

**பரிதி யென்னும் பொருளிடை ஏய்ந்தனைப்**
**பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;**
**கரிய மேகத் திரளெனச் செல்லுவை;**
**காலும் மின்னென வந்துயிர் கொல்லுவை;**
**சொரியும் நீரெனப் பல்லுயிர் போற்றுவை;**
**சூழும் வெள்ளம் எனஉயிர் மாற்றுவை;**
**விரியும் நீள்கடல் என்ன நிறைந்தனை;**
**வெல்க காளி யெனதம்மை வெல்கவே.** 30

என்று பாடுவார் பாரதியார். ஆற்றலைக் காளியாகவே உருவகித்துப் போற்றுவார்.

30. பா. க : தோ-பா. மகாசக்தி வாழ்த்து-3

**தாவரங்களின் செயல் :** தாவரங்களின் வாழ்வில் ஒளிச் சேர்க்கை என்பது இயற்கையில் நடைபெறும் ஓர் அற்புத நிகழ்ச்சி. தாவரங்கள் காற்றிலுள்ள கரியமிலவாயு, வேர் களின் மூலம் பெறும் நீர் இவற்றை உட்கொண்டும் கதிரவன் ஒளிக் கதிர்களாகவும் வெப்பக்கதிர்களாகவும் உமிழும் ஆற்றலைத் துணைகொண்டும் (இதுதான் அணுவாற்றல்; நீரிய உட்கருக்கள் பரிதிய உட்கருக்களாக மாறுங்கால் உண் டாவது) கார்போஹைட்ரேட்டுகள் போன்ற பொருள் களைச் சேமித்து வைக்கும் நிகழ்ச்சிதான் ஒளிச்சேர்க்கை (Photo - Synthesis) என்பது. தாவரங்கள் கதிரவன் ஒளியைக்கொண்டே வாழ்கின்றன என்பதை நாம் அறி வோம். அவை கதிரவனிடமிருந்து ஒளியையும் வெப்பத்தையும் நேரே விழுங்குகின்றன. இந்த உலகில் தாவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களும் கதிரவ னிடமிருந்து நேரடியாக ஆற்றலைப் பெறுந்திறன் அடைய வில்லை. மனிதன் உட்பட விலங்கு, பறவை முதலிய பிரா ணிகள் யாவும் கதிரவன் காலும் வெப்பத்தையும் ஒளியை யும் விழுங்காமல் அவற்றை விழுங்கிய தாவரங்களை விழுங் கிக் கதிரவனின் ஆற்றலைப் பெறுகின்றன. புலி, சிங்கம் போன்ற புலால் உண்ணும் விலங்குகளோ கதிரவன் ஆற்றலை நேரே விழுங்குவதில்லை. தாவரம் உண்டாக்கும் பொருள்களை விழுங்குவது மில்லை. அவை பயிருண்ணும் விலங்குகளைக் கொன்று தின்று ஆற்றலைப் பெறுகின்றன. எனவே, இப்புவியிலுள்ள பிராணிகள் அனைத்தும் பகல வனிடமிருந்தே ஆற்றலைப் பெறுகின்றன என்பது வெள் ளிடை விலங்கல், இதன் அறிகுறியாகத்தான் தமிழர்கள் பொங்கல் விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

**தாவரங்களிடம் தேங்கிய ஆற்றல் :** தாவரங்களின் ஒவ் வோர் அணுவிலும் கதிரவனிடமிருந்து வரும் ஆற்றல் அடங்கிக் கிடக்கின்றது. இந்த ஆற்றல்தான் பூமியிலிருந்து கிடைக்கும் நிலக்கரியிலும், மண் எண்ணெய் போன்ற நீர்ம

எரியை களிலும் (Liuuid fuel) அடங்கிக்கிடக்கின்றது. நிலக்கரி என்பது என்ன? பண்டைக்காலத்திலிருந்த காடுகள்தாம் காலப்போக்கில் நிலத்தினுள் அழுந்தி உருமாறி நிலக்கரியாக மாறியுள்ளன. நீர்ம எரியைகள் யாவும் இப்பழைய மரங்களின் சாறுகளேயாகும். ஆகவே தாவரங்களின் ஒளிச்சேர்க்கையால் கதிரவனிடமிருந்து மரத்தினுள் அன்று புகுந்த ஆற்றல் அங்கேயே உறைந்து கிடக்கின்றது. அவ்வாறு உறைந்து கிடக்கும் ஆற்றல்தான் நம் உடலினுள்ளோ வெளியிலோ எரிதல் நிகழும்பொழுது உருகி வழிகின்றது; நாம் மீண்டும் வெப்பத்தையும் பெறுகின்றோம்; ஒளியையும் அடைகின்றோம். எரியைகளிடமிருந்து கிடைக்கும் ஆற்றலைக் கொண்டு இயந்திரங்களையும் இயக்குகின்றோம். இந்த நிகழ்ச்சிகளால் 'கதிரவனே ஆற்றலின் மூலம்' என்ற உண்மையும் நமக்குப் புலனாகின்றது.

**கதிரவன் வாழ்க்கையில் உயிர் நாடி :** மேற்கூறியவற்றால் கதிரவன்தான் வாழ்கையின் உயிர்நாடியாக அமைகின்றான் என்பது தெளிவாகின்றது. இந்த அறிவியல் உண்மையினை அநுபவமாகக் கண்ட இளங்கோ அடிகள் என்ற கவிஞர் கோமான்,

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்[31]

என்று தாம் இயற்றிய காவியத்தில் மங்கல வாழ்த்துப் பாடலாக வெளியிட்டார். "கைபுனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பில்" திளைத்த நக்கீரர் பெருமானும்,

உலகம் உவப்ப வலனேர்வு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு.[32]

31. சிலம்பு-மங்கல வாழ்த்து-அடி4-6
32. திருமுருகு-அடி1-2.

என்று தம் திருமுருகாற்றுப் படையைத் தொடங்குகின்றார். 'உலகம்' என்பது சீவான் மாக்களை உணர்த்துகின்றது. 'பலர்' என்பது எல்லாச் சமயத்தினரையும் குறிக்கின்றது. ஆற்றல் மூலமாக, ஆதிமூலமாக விளங்கும் குகதிரவனே-பொங்கல் திருநாளின் கடவுளாக-உழவர்கள் போற்றும் சூரிய நாராயணனாக-விளங்குகின்றான். ஒவ்வோர் ஆண்டிலும் உழவின் பயனாகப் புதியனவாகப் பெற்ற பொருள்களை ஆண்டவன் திருவடியில் காணிக்கையாக வைத்துத் தம் நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றனர் உழவர் பெரு மக்கள்; பொங்கல் விழாவினைப் பூரிப்புடன் கொண்டாடுகின்றனர். இந்த விழாவில் ''பொங்கலும் அணுவும்'' இணங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

கதிரவனிடமிருந்து இயற்றப் பெற்ற ஆற்றல் (அணுவாற்றல்) தாவரங்களின் மூலம் பாய்ந்து பல்வேறு பொருள்களைத் தோற்றுவிக்கின்றன. இப்பொருள்கள் யாவும் ஒன்று சேர்ந்து பொங்கல் வடிவில் காட்சி அளிக்கின்றன. பொங்கலிலுள்ள பொருள்கள் யாவும் உழவன் தாவரங்களின்மூலம் பெற்றவை. நெய், தாவரங்களையுண்ட பசுவின் மூலம் அடைந்த பொருளாகும். பொங்கல் வடிவமாகவுள்ள ஆற்றல், ஆற்றல் வடிவமாகவுள்ள ஆண்டவனுக்கும்-கதிரவனுக்கும்-படைக்கப் பெறுகின்றது. இயற்கை வாழ்வில் தோய்ந்த தமிழர்களின் பொங்கல் விழா அறிவியல் உண்மையில் அடங்கிய ஒரு பெருவிழாவாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. அணுயுகத்தில் வாழும் நமக்கு அஃது அணுவின் தத்துவத்தை ஒருவாறு விளக்கி நிற்கின்றது. இந்த அடிப்படையில் மேலே குறிப்பிட்ட பாரதியாரின் பாடலுக்குப் பொருள் கண்டு மகிழ்வோமாக. கவிஞன் ஆழ்ந்த பார்வை நமக்குப் புலனாவதைக் காண்போமாக. ஞாயிறு வணக்கத்தின் மெய்ப்பொருளை எண்ணிக் களிப்போமாக.

அழுகையின் தத்துவம் : பிறந்தவுடன் குழந்தை அழுகின்றது. அஃது அழுவதால்தான் மக்கட்பேறு பெற்றவர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகின்றது. மக்கட்பேறு ஏற்பட்ட இல்லங்கட்கு விசாரிக்கவரும் உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள், "குழந்தை அழுத்தா?" என்று கேட்பதை நாம் அறிவோம். இதன் பொருள் என்ன? சீதள அலமாரியை விட எத்தனையோ மடங்கு உயர்ந்த நிலையிலுள்ள தாயின் கருவறையில் எல்லா நலன்களும் பெற்றுப் பத்துத் திங்கள் பாங்குடன் வளர்ந்த குழந்தை புதியதோர் உலகிற்கு இந்தக் கர்ம பூமிக்கு வருகின்றது. தாயின் கருவறையிலிருக்கும் போது அதற்கு வேண்டிய "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை"[33] முதலிய அனைத்தையும் அன்னையிடமிருந்தே பெற்றுவிடுகின்றது. அங்கு அதற்கு ஒரு குறையும் இல்லை. இங்ஙனம் 'செல்வக்களஞ்சியம் போல' சேம அறையில் எல்லாப் பாதுகாப்புடன் இருக்கும் குழந்தைதானே அனைத்தையும் தேடிக்கொள்ள வேண்டிய புதிய உலகிற்கு வருங்கால அழாமல் என்ன செய்யும்? இந்த "அழுகை மொழிதான்" குழந்தை தானாகக் கற்றுக் கொண்ட ஒரே மொழியாகும். தன் உயிர்ப்பிலேயே கற்றுக் கொண்டதுமாகும். இந்த ஒரே மொழியைக் கொண்ட தன் பெற்றோரிடமிருந்து சில திங்கள் காலம் அனைத்தையும் பெற்று வாழ்ந்து வளர்ந்து வருகின்றது.

அறிவியல் நோக்கில் காண்போமாயின் குழந்தைக்கு அழவேண்டிய இன்றியமையாமை உண்டு என்பதை அறியலாம். அன்னையின் கருவறையிலிருக்குங்கால் குழந்தை உயிர்ப்பதில்லை. அன்னை அதனைச் செய்து அதற்கு வேண்டிய உயிர்க் வாற்றை (Oxygen) நல்குகின்றாள். ஆதலால் கருவறை வாழ்வில் குழந்தையின் நுரையீரல் (Lungs) செயல்

33. இவை குறியீடுகள் தத்துவ நூலார் இவற்றைத் "தாரக போஷக போக்கியங்கள்" என்பர்.

படுவதில்லை: குழந்தை கருவறையினின்றும் வெளிப் போந்ததும் அஃது அழுவதால் நுரையீரல் செயல்படு கின்றது. பிறந்தவுடன் அஃது அழாவிடில் மருத்துவப் பெண் அதனைக் கிள்ளியாவது அழவைக்கின்றாள். அதன் நுரையீரலைச் செயல்படுத்துகின்றாள். இந்த உண்மைதான் "குழந்தை அழுததா?" என்ற வினாவில் அடங்கி உள்ளது. "அழுதபிள்ளை பால் குடிக்கும்" என்ற பொன்மொழியில் அடங்கிக் கிடக்கும் உண்மையும் இதுதான், 'பால்குடிக்கும் என்பது ஒரு மரபுத் தொடர். 'பிழைக்கும்' என்பது ஒரு இதன் பொருள். இங்ஙனம் பிறர் மகிழ அழுது 'பிழைத்த குழந்தை' தானாக அறிந்த 'அழுதல் மொழி' யைத்தான் தன் வாழ்வுக்குப் பயன் படுத்திக் கொள்வதை அறிகின் றோம். சில குடும்பங்களில் கல் நெஞ்சமுள்ள கணவன்மார் களை அழுதலால் மன முருகச் செய்து தம் காரியங்களைச் சாதித்து கொள்ளும் மனைவிமார்களையும் காண்கின் றோம்.

தத்துவநோக்கில் இதனைச் சிந்திப்போமாயின் "ஐயோ, ஆண்டவனே! என்னை இந்தப் பொய்யுலகில்- பிறவிப் பெருங் கடலில் தள்ளி விட்டாயே, இதிலிருந்து உய்வது எப்படி?" என்று இறைவனை நோக்கி அழுகின்றது என்றும் கருதலாம். தவிர, ஒரு குழந்தை பிறக்கும்போது அழுகின்றது. சுற்றியிருப்போர், உற்றார் உறவினர் 'பிள் ளைக் கனியமுது' 'பேசும் பொற்சித்திரம்' அந்தக் குடும்ப வாரிசு வந்து விட்டதாக மகிழ்கின்றனர். அந்தக் குழந்தை வளர்ந்து, கல்வி கற்று, வாழ்வில் சான்றோனாகத் திகழ்ந்து இறக்கும்போது எல்லோரும் அழுகின்றனர். பிறக்கும்போது சிரிப்பு, மகிழ்ச்சி, எல்லாம். பிராரப்தம் தீர்ந்து இறக்கும் போது, அழுதல், தவிப்பு, எல்லாம். இஃது ஒருமுரண் உரை (Paradox) போல் வழிவழியாக இருந்து வருகின்றது.

**ஆன்மிக வாழ்விலும்:** இங்ஙனம் உலக வாழ்க்கைக் குப் பெருந்துணையாக இருக்கும் அழுகை ஆன்மிக வாழ்க் கைக்கும் பெருவழியாக அமைவதை அருட் பெருஞ்

செல்வர்கள் நமக்குக் காட்டியுள்ளனர். நூல்வழியாகக் கற்றுணர்ந்த உண்மைகளும் ஆன்மிக நெறியில் உய்வதற்குத் தவறும் பொழுது இந்த அழுகை கை கொடுத்து உதவுவதை விளக்கியுள்ளனர். ஆழ்வார்கள் அருளியுள்ள திருப்பாசுரங்களிலும் நாயன்மார்கள் திருவாய்மலர்ந்துள்ள திருப்பாடல்களிலும் இதற்குச் சான்றுகளைக் காணலாம்.

திருமங்கையாழ்வார் தம்முடைய வாழ்நாட்களில் பெரும் பகுதி கொன்னே கழிந்தமைக்குக் கழிவிரக்கங் கொண்டு புலம்புகின்றார்.

ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
கழிந்தன கழிந்த அந்நாட்கள்[34]

என்பது அவர்தம் திருவாக்கு. ஊமையன் ஒருவன் கனவு கண்டால் அதனை ஒருவரிடம் வாய் விட்டுச் சொல்லி மகிழமுடியாது. ஆகவே, ஊமையன் கனவுகள் பழுதேயாகும். அவன் தன் கனவை வாய்விட்டுச் சொல்ல முடியாமற் போனாலும், தன் நெஞ்சாவது நினைந்திருந்து மகிழ்தல்கூடும், அங்ஙனம்தான் தனக்குள்ளேயே மகிழக் கூடிய விஷயமும் ஒன்றில்லாமையால் ஊமன் கண்ட கனவைவிடத் தன் நாட்கள் வீணாகக் கழிந்து விட்டனவே என்று சோக உணர்வுடன் அழுகின்றான். பொய்கையாழ்வாரும் அன்று திருக்கோவலூரில் தான் கண்ட எம்பெருமானின் திருவடிகளைத் தொழுதவாறு கடந்த காலத்தில் இத்தொழுகையைச் செய்ய முடியவில்லையே என்று பரிதபித்துப் பேசுகின்றார்.

பழுதே பலபகலும்
போயினவென்று அஞ்சி
அழுதேன்[35]

என்பது அவரது திருமொழி.

---

34. பெரி.திரு. 1. 1: 3
35. முதல் திருவந். 16.

ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் தமக்கு அறிவு மலராத காலத்தில் இராமபிரானைத் தோத்திரம் செய்யாது போனமைக்கு இரங்கி அழுகின்றார்.

**தெரிந்துணர்வொன்றின்மையால்**
**தீவினையேன் வாளா**
**இருந்தொழிந்தேன் கீழ்நாட்கள்**
**எல்லாம்[36]**

என்பது அவர்தம் திருவாக்கு. இந்தத் திருவாக்கினை உணர்வு இன்மையால், 'உணர்வு ஒன்றின்மையால், தெரிந்து உணர்வு ஒன்றின்மையால்' என்று பொருள் காணல் வேண்டும். 'உடல் வேறு, ஆன்மாவேறு' என்ற ஞானமில்லாமையைக் கருதி 'உணர்வு இன்மையால்' என்றார். ஆன்மா எம்பெருமானுக்கு அடிமைப் பட்ட பொருள்; என்ற ஞான மில்லாமையை நினைந்து 'உணர்வு ஒன்றின்மையால்' என்றார். 'பகவானுக்கு அடிமை' என்ற கொள்கைக்கு எல்லை நிலம் பாகவதற்கு அடிமை என்கின்ற ஞானமில்லாமையைத் தெரிந்து 'தெரிந்து உணர்வு ஒன்றின்மையால்' என்றார். இந்த உணர்வு நிலைகள் தம்பால் இன்மையால் தம்மைப் 'பாவியேன்' என்று சொல்லிக் கொள்ளுகின்றார்.

இந்த ஆழ்வாரின் திருவாய்மொழி ஆயிரமும் இறைவன் திருவடிகளில் கைங்கரியம் புரிய வேண்டும் என்ற பேரவாவினைப் பல்வேறு நிலைகளில் வெளியிடும் அழுகைத் திருப்பாசுரங்களாகும்.

**செடியார் ஆக்கை அடியாரைச்**
**சேர்தல் தீர்க்கும் திருமாலை**
**அடியேன் காண்பான் அலற்றுவன்[37]**

[அலற்றுவன் - கூவுகின்றேன்]

36. பெரி. திருவந். 82
37. திருவாய் 1. 5; 7

என்பது அத்தகைய அழுகையைக் காட்டும் பாசுரப் பகுதி; சம்சாரமாகிய பெருங்காடு நிறைந்த சரீர சம்பந்தத்தைத் தவிர்த்துத் தருகின்ற எம்பெருமானைக் காணும் பொருட்டு ஆழ்வார் கவல்வதைப் பாசுரம் காட்டுகின்றது. இங்குச் 'சம்சாரம்' என்பது பிறவித் தொடர்கள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கை, இன்னொரு பாசுரத்தில்,

**கூவிக் கூவிக் கொடுவினைத்**
**தூற்றுள் நின்று**
**பாவியேன் பலகாலம்**
**வழிதிகைத் தலமர்கின்றேன்** [38]

*[தூறு - புதர்; அலமர்தல் - வருந்திக் கிடத்தல்]*

என்று பேசுகின்றார். இங்குத் 'தூறு' என்பது மேலே குறிப்பிட்ட 'சம்சாரத்தையே' குறிக்கின்றது.

இன்னொரு பாசுரத்தில் ஆழ்வார் தமக்குக் காட்சி தந்தருளுமாறு வேண்டுவது கல் நெஞ்சத்தையும் உருக்கும் தன்மையது.

**தாவி வையங்கொண்ட எந்தாய்!**
**தாமோதரா என்று என்று**
**கூவிக் கூவி நெஞ்சுருகிக்**
**கண்பனி சோர நின்றால்**
**'பாவி நீ' என்று ஒன்று சொல்லாய்**
**பாவியேன் காண வந்ததே** [39]

என்பது அப்பாசுரப் பகுதி. 'திருவடிகளால் மூன்று உலகங்களையும் அகப்படுத்திக் கொண்ட எந்தையே! தாம்பால் யாப்புண்ட தழும்பை வயிற்றிலுடையவனே' என்று பல காலும் விடாயுடன் கூவிக் கூவி நெஞ்சு நீர்ப்பண்டமாக

---

38. திருவாய் 3. 2: 9
39. ஷை 4. 7: 3

உருகிக் கண்ணீர் பெருக நின்றால், பாவியான அடியேன் சேவிக்கும்படியாகக் கண்ணுக்கு இலக்காகி வந்து; ''ஆழ்வாரே! நீ பாவி' என்று சொன்னாலும்போதும்; அதுவும் சொல்லுகின்றாய் இல்லை'' என்பது இதன் கருத்து பிறிதொரு பாசுரத்தில்,

பாய்ஓர் அடிவைத்து அதன் கீழ்ப்
 பரவை நிலமெல்லாம்
தாய்ஓர் அடியார் எல்லா
 உலகும் தடவந்த
மாயோன்! உன்னைக் காண்பான்
 வருந்தி எனைநாளும்
தீயோடு உடன்சேர் மெழுகாய்
 உலகில் திரிவேனோ? [40]

[பாய் - பரப்பிவைத்து, தாய்-தாவி, அளந்து தடவந்த ஆக்கிரமித்த]

என்று கூறுவர், முன்னிரண்டு அடிகளின் கருத்தை ஆறாயிரப்படியில் ''என்னை உன் திருவடிகளிலே சேர்க்க வேணுமென்று உலகத்தை அளக்கும் செயலை வியாஜமாகக் கொண்டு விலையில்லாத ஓர் இரத்தினம் கொடுத்து தேடுவாரைப் போலப் பெரிய வருத்தத்தோடே உன் திருவடியாலே என்னைத் தேடிக் கொண்டு திரிந்த உன்னை'' என்று பிள்ளான் அருளிச் செய்துள்ளார். ''நீ என்னைத் தேடித் திரிந்த காலத்தில் உனக்கு நான் அகப்பட்டேன் இல்லை; உன்னை நான் தேடித்திரியும் இக்காலத்தில் எனக்கும் நீ அகப்படுகின்றாய் இல்லை'' என்று ஆழ்வார் கூறுவது போல் உள்ளது.

இங்ஙனம் - ஆழ்வார் திருநகரியில் திருப்புளியாழ்வார் நிழலிலிருந்துகொண்டு - ஒலி பரப்பும் வானொலி நிலையத்தில் இருப்பதுபோல் இருந்து கொண்டு-அழலீலிட்ட மெரு

40. திருவாய் 6. 9: 6

கென உருகி ஆண்டவனை அழுது அழுது கூவியழைப்பதே அவர் அருளிய திருவாய்மொழி. அவருடைய திருக்குரல் சிந்தைசெல்லாச் சேணெடுந் தூரத்திலுள்ள அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய பரமபதத்திலும் ஒலிக்கும் என் பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. இந்த அழுகைக் குரலைக் கேட்ட பரமபதநாதன் ஆழ்வாருக்குத் தன் திருவடிப் பேற்றை அருளினான் என்பதை "அவா அற்று, வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்"[41] என்ற அவரது திருவாக்கினா லேயே அறிகின்றோம்.

இங்ஙனமே, சைவ அடியார்களுள் மணிவாசகப் பெரு மான் அழுகையை வீடுபெறும் வழியாகக் கொண்டு உயர்ந்த ஞானியாவார்; அவர்,

**யானே பொய்என் நெஞ்சும்**
**பொய்என் அன்பும்பொய்**
**ஆனால் வினையேன் அழுதால்**
**உன்னைப் பெறலாமே**[42]

என்று கூறியிருப்பதை அறியலாம், அவருடைய திருவாச கம் முழுவதும் இங்ஙனம் ஆண்டவனை நோக்கி அழுத திருப்பாடல்களே யாகும். இவை இன்று நமக்கு "எல்லை, மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன், திருவாசகம் என்னும் தேன்" ஆகத் திகழ்கின்றது; தித்திக்கின்றது. மணிக்க வாசகரின் அழுகைக் குரலை நன்கறிந்த பரஞ் சோதியார் அவரை "அழுது அடி அடைந்த அன்பன்"[43] என்று போற்றி மகிழ்கின்றார்.

ஆன்மா, பரமான்மா; ஆண்டவன் (பரமான்மா) அறிவு மயமானவன்; ஆன்மாவும் அறிவு மயமானது, மேலும் ஆண்டவனும் ஆன்மாவும் அறிவுக்கும் இருப்பிட

41. திருவாய் 10. 10: 10
42. திருவா, திருச்சதகம்-90
43. பரஞ்சோதி-திருவிளையாடல்-மதுரை-21

மானவர்கள்; இந்த அறிவு 'தர்மபூத ஞானம்' என வழங்கப்பெறும். ஆண்டவனின் தர்மபூத ஞானம் பரந்து நோக்கும் ஆற்றலுடையது; கர்ம வசத்தால் கட்டுப்பட்டிருப்பதால் ஆன்மாவின் தர்மபூத ஞானம் சுருங்கிய நிலையில் இருக்கும். இந்தத் தர்மபூத ஞானத்தால் ஆன்மா தன்னையும் அறிகின்றது; இறைவனையும் அறிகின்றது: எந்தப் பொருளும் காணப்பெறுவதற்கு விளக்கின் ஒளி வேண்டு மல்லவா? ஆனால், விளக்கு மற்றொரு விளக்கு வேண்டாமலேயே தனக்குத்தானே நன்கு விளங்கச் செய்வது போலவே. ஆன்மாவும் ஞானத்தை எதிர் பாராமலேயே தனக்குத்தானே விளங்கும். விளக்கும் அதன் ஒளியும் ஒளியுள்ளவைகளாக இருப்பதும் ஒளிக்கு விளக்கு இருப்பிடமாக இருப்பதுபோல் ஆன்மாவும் தான் ஞானமாக இருப்பினும் தனக்குத் தர்மமான ஞானத்திற்கும் தான் ஆதாரமாகவுள்ளது.[44]

ஆண்டவன் அருள் இருப்பின் தியானத்தினால் மனம் ஒன்றித் தர்மபூத ஞானம் மலர்ந்து ஆன்மா ஆண்டவனையே காணும் ஆற்றலைப் பெறும். ஞானிகள் இந்த ஆற்றலைப் பெற்றிருந்தனர். அவர்கள் கால (Time) எல்லையையும் கடந்து காலதத்துவத்தையும் (தத்துவ சூனியம்) கடந்து-நடந்தவற்றையும் நடக்கப்போகுபவற்றையும் அறிந்து கூறும் ஆற்றல் பெற்றவர்கள். அங்ஙனமே விஞ்ஞானிகள் மனம் ஒன்றி ஆய்வுகளால் இடத்தைக் (Space) கடந்து பல உண்மைகளைக் காணவல்லவர்கள். அதனால்தான் தாம் போகாமலேயே மதிமண்டலம், செவ்வாய் மண்டலம் போன்ற இடங்களின் தன்மைகளை நன்கு அறிந்து பயணங்களை ஏற்படுத்த முடிகின்றது. சில ஆண்டு கட்குமுன்னர் ஆளுள்ள பயணங்கள் மேற்கொள்ளப் பெற்று அம்புலியை அடைய முடிந்தது. தாம் போகாம

44. இதன் விளக்கம் மேலும் வேண்டுமாயின் இவ்வாசிரியரின் "முத்தி நெறி" (பாரி நிலையம்), 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108-பக் 24 காண்க

லேயே அறிவியலறிஞர்கள் பயணத்தில் சென்றவர்கட்குத் தரையிலிருந்துக் கொண்டே அம்புலிபற்றிய விவரங்களைத் தந்து கொண்டே எச்சரிக்கையையும் தந்தனர். அண்மையில் செவ்வாய்க்கு ஆளில்லாப் பயணங்களை மேற்கொண்டு வெற்றி கண்டனர். செவ்வாய்க் கோளில் உயிர் உண்டா? என்ற சோதனையையும் நடத்தி வருகின்றனர். எல்லாக் கோள்களையும் எட்டிப்பிடிக்க முயல்வதற்கு இந்தத் தர்ம பூத ஞானம் அவர்கட்குத் துணைபுரிகின்றது. இந்தத் தர்ம பூத ஞானத்தால்தான் நாம் விஞ்ஞானத்தை மெய்ஞ்ஞான மாகவும் மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானமாகவும் காண்கின் றோம். அறிவியலும் ஆன்மிக இயலும்—அறிவியலும் சமயமும்—ஒரு தளத்தில் ஓரிடத்தில் சந்திப்பதையும் உணர்கின்றோம். அறிவியல் காணாத காணமுயலு கின்ற-ஆன்மிக இயலின் முடிவையும் காண முயலு கின்றது இந்தத் தர்மபூத ஞானம். இதுவே "அவன் அருளால் அவன் தாள் வணங்கவும்"45 வழி காட்டுகின்றது.

எனவே அன்பர்களே, நாம் மேற்கொள்ளும் அன்றா டக் கடன்கள் முதல் பண்டையோர் அநுபவ அறிவுவ்ரையில் எல்லா நிகழ்ச்சிகளும் அறிவியல் அடிப்படையில் அமைந் துள்ளன என்று காட்டப்பட்டன. இங்ஙனம் காட்டுங்கால் அணு அமைப்பும் அண்ட அமைப்பும் ஒன்றாகவே உள்ளன என்றும், உலகத்தோற்றம் (Evolution), உலக அழிவு (Involution) இவைபற்றி சமயமும் அறிவியலும் கிட்டத் தட்ட ஒரே விதமாகப் பேசுகின்றன என்றும், சற்காரிய வாதமும் அறிவியலும் ஓரிடத்தில் சந்திக்கின்றன என்றும், பாரதியின் பாடலில் விசிட்டாத்வைதம் பொதிந்து கிடக் கின்றது என்றும், திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங் கார், மணிவாசகப் பெருமான், தாயுமான அடிகள் இவர் கள் பாடல்களிலுள்ள அநுபவ அறிவில் அறிவியல் கருத்து கள் பொதிந்துள்ளன என்றும், குழந்தையின் அழுகையிலுள்ள

45. திருவா, சிவ புராணம்—அடி 18

அறிவியல் தத்துவம் இன்னது என்றும், அதுவே ஆன்மிகத் துக்கு வழிகாட்டியது என்றும் அருட் செல்வர்களின் திருப் பாசுரங்கள் யாவும் ஆன்மா பரமான்மாவை நாடும் அழு குரல்கள் என்றும் இன்னும் பல வாறாவும் விளக்கம் தரப் பெற்றது. சுருக்கமாக அறிவியலும் சமயமும் பல முறை களில் ஓரிடத்தில் சந்திக்கின்றன என்றும் வலியுறுத்தப் பெற்றது.

# 2. திருமங்கையாழ்வார்†

தமிழகத்தில் சோழமண்டலம் என்பது ஒரு முக்கிய மான பகுதி. 'சோழ நாடு சோறுடைத்து' என்பது வழி வழியாக வழங்கி வரும் பொன்மொழியல்லவா? இன்று அது 'தென்னாட்டின் நெற்களஞ்சியம்' என்று போற்றப் படுகின் றது. சோழமண்டலத்தில் 'திருவாலிநாடு' என்ற ஒரு பகுதி யுண்டு. இதனை 'மங்கை நாடு' என்றும் வழங்குவர். சீகாழிக்குக் கிழக்கே சுமார் ஏழு கி. மீ. தொலைவில் உள்ள திருநாங்கூர்த் திருப்பதிகள் என வழங்கும் பதினொரு திவ்விய தேசங்கள் அடங்கிய பகுதியே மங்கை நாடு எனக் கருத இடம் உண்டு. சோழவேந்தனின் சேனைத் தலைவ ராகத் திகழ்ந்தவர் ஒருவர் திருநகரிக்கு அண்மையிலுள்ள திருக்குறையலூரைச் சார்ந்தவர். இவருக்கு ஒரு மகன் பிறந்தான். பிறந்த ஆண்டு நள என்பது; மாதம் கார்த்திகை; நாள் முழு மதியம் கூடிய கிருத்திகை நட்சத்திரம். 'கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே' என்பது இவரது வாழித் திரு நாமம். பிறந்த குழந்தை நீல நிறமாக இருந்தது பற்றி 'நீலன்' என்ற பெயர் வழங்கியது. பெற்றோர் இட்ட பெயர் 'கலியன்' என்பது. இவரே பின்னர் திருமங்கையாழ்வா ராகின்றார். இவரைத் திருமாலின் சார்ங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள்.

கலியன் தாம் பிறந்த குடிக்கேற்ப இளமையிலேயே ஆயுதப் பயிற்சி, குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலிய

---

†சென்னை வானொலி (1989) இலக்கியப் பேருரை.

வற்றிலெல்லாம் நன்கு தேர்ச்சியடைந்து சிறப்புடன் திகழ்ந் தார். தந்தையாருக்குப் பிறகு கலியன் ஆலி நாட்டின் தலை வராகவும் சோழமன்னனின் தானைத் தலைவராகவும் விளங்கினார். சோழமன்னருக்குக் கொடியவர்களோடு போர் நேருங்காலத்தில் படைகளோடு முன் சென்று பகை யையை வென்றதனால் 'பரகாலன்' என்ற புகழ்ப் பெயரும் இவரை வந்தடைந்தது. இவை தவிர, அரட்டு அமுக்கி, அடையார் சீயம், அருள்மாரி போன்ற வேறு புகழ்ப் பெயர் களும் இவருக்கு உண்டு. இவரே பல சுருதிப் பாசுரம் ஒன்றில் (பெரி-திரு. 3. 4:10),

**அங்கமலத் தடவயல்சூழ் ஆலி நாடன்**
**அருள்மாரி அரட்டு அமுக்கி அடையார் சீயம்**
**கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்**
**கொற்றவேல் பரகாலன்**

என்று இப்புகழ்ப் பெயர்களை சுட்டியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

இவருடைய ஒப்பற்ற வீரச் செயல்களை யுணர்ந்த சோழ வேந்தன் இவரைத் திருமங்கை நாட்டுக்குச் சிற்றரச னாக முடிசூட்டினான். திருமங்கை மன்னனும் தம் அமைச் சரவையுள் நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாள் ஊதுவான், தோலா வழக்கன் என்ற நால்வரை அமர்த்திக் கொண்டு அரசுப் பணிகளைக் குறைவின்றி நடத்திப் புகழைப் பெருக்கிக் கொண்டார். இவர் இவர்ந்து வரும் 'ஆடல்மா' என்ற குதிரை இவரது தீரச் செயல்களி லெல்லாம் மிகவும் துணையாக இருந்தது.

அரசராக இருந்தபொழுது இவர் கலையினொடும் கலைவாணர் கவியினொடும்...'இசையினொடும்' பொழுது போக்கினார். வேட்டையாடுவதில் விருப்பமிக்கவராயிருந் தார். அரசர் முதலியவர் பொருட்டு அதிகமாக உழைத்துப் பெரும் புகழ் பெற்றார்; இவ்வாறு இவ்வுலக வாழ்வில் ஆழ்ந்து கிடந்த இவர் பாரமார்த்திகப் பெரு நெறியில் புகு

வதற்கேற்ற வாய்ப்பு தோன்றத் தொடங்கியது. திருமணம் இல்லற வாழ்வில் ஆழ்த்துவதுதான் இயல்பாக நடைபெறுவது, அதற்கு மாறாக இவரது திருமணம் நீதில் நன்னெறியாகிய பாரமார்த்திகப் பெருநெறியில் புகுவதற்கு வாய்ப்பாக அமைந்தது; அதற்கேற்ற அருணோதயமும் தோன்றியது.

'திருவெள்ளக்குளம்' என்பது திருநாங்கூர்த் திருப்பதிகளுள் ஒன்று. 'அண்ணன் கோயில்' என்ற பெயராலும் இது வழங்கும். இந்த ஊரில் மருத்துவ வைணவ அடியார் ஒருவரின் வளர்ப்பு மகள் குமுத வல்லியார்; பேரழகுடன் திகழும் பெரு மாட்டி. ஒரு சமயம் அந்த அடியாரின் இல்லத்திற்குச் சென்றிருந்தார் திருமங்கை மன்னன். அப்போது அந்த அடியவர் தம் வளர்ப்பு மகளின் திருமணம் பற்றித் தம் கவலை தெரிவித்தார். அப்பொழுது அந்தப் பெண் மணியும் இல்லத்தின் புறத்தே ஏகுவதைக் கண்டார் கலியன். அப்பெண்ணின் எழில்திருமேனியும் அன்ன நடையும் மருண்ட மான்நோக்கும் மன்னரைக் கவர்ந்தன. உடனே கலியனும் அப்பெண்ணைத் தாம் மணப்பதாகக் கூறினார்.

வளர்ப்புத் தாய் தந்தையர் திருமணத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில் அந்த எழில் நங்கை, "திருவிலச்சினையும் பன்னிரு திருமண் காப்பும் உடையவர்க்கன்றி மற்றொருவருக்கு என்னைப் பேசலொட்டேன்" என்ற தன் குறிக்கோளைத் தெரிவித்தாள். கலியனும் 'நாச்சியார் கோயில்' என்று வழங்கும் திருநறையூர் சென்று ஆங்கு எழுந்தருளியுள்ள நம்பி திரு முன்பு திருவிலக்கினை பெற்று பன்னிரண்டு திருமண் காப்புகளையும் தரித்துக் கொண்டு வந்தார். ஆசையுடன் குமுதவல்லியாரைச் சந்தித்தார்.

குமுதவல்லியார் இப்பொழுது வேறொரு நிபந்தனையை விதிக்கின்றார். கலியனைப் பார்த்து "ஓராண்டு நாடோறும் 1008 ஸ்ரீவைணவர்கட்கு அமுது செய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமும் பிரசாதமும் உண்டு நிறைவேற்

றினாலொழிய நான் தங்களைக் கணவனாக ஏற்றுக் கொள்வதற்கில்லை'' என்பதுதான் இந்த நிபந்தனை. இவரும் அந்தப் பெண்ணின்மீது கொண்ட ஆராக் காதலாலே அங்ஙனம் செய்வதாக வாக்குறுதி செய்து தந்தார்; நிபந்தனையை நிறைவேற்றவும் செய்தார். அதன் பிறகு குமுதவல்லியாரை ''நாடும் ஊரும் அறியக் கண்ணாலம் கோடித்துக்'' கலியனைக் கைபிடிக்கச் செய்தனர் குமுதவல்லியின் வளர்ப்புப் பெற்றோர்.

**ததியாராதனை :** கலியன் தம்கையிலகப் பட்ட பொருளையெல்லாம் வைணவ அடியார்கட்கு—பாகவதர்கட்கு—அமுது படைத்திடுவதிலேயே செலவழித்தார். அரசனுக்குச் சேர வேண்டிய பகுதிப் பணமும் இதிலேயே கழிந்தது. நாளடைவில் இவரது செயல் வெளிப்பட அரசன் இவரை ஒரு தேவாலயத்தில் சிறை வைத்தான் என்றும், பின்னர் கலியன் மூன்று நாள் அமுது செய்யாமல் உபவாசம் இருந்தார் என்றும், பிறகு காஞ்சிப் பேரருளாளர் (வரதராசர்) திருவருளால் காஞ்சி வேகவதி தீரத்தில் பெரும் பொருளைப் பெற்று அரசனுக்குரிய கப்பப் பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக் கொண்டார் என்றும், மிகுதிப் பணத்தைத் ததியாராதனத்தில் செலவழித்தார் என்றும் குருபரம்பரை முதலிய வரலாறுகளால் அறியக் கிடக்கின்றது.

இந்த நிகழ்ச்சியின் பின்னரும் ததியாராதனை செய்ய முடியாமல் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாளூதுவாதன், தோலா வழக்கன் ஆகிய நான்கு அமைச்சர்களையும் துணைகொண்டு மாறுவேடத்தில் ஆறலைத்தாகிலும் பொருளீட்டி இப்பொருளைக் கொண்டு ததியாராதனையை இடைவிடாமல் நடத்த வேண்டும் என்று உறுதி கொண்டார். இந்த அடாத செயலிலும் இறங்கினார். இங்ஙனம் பொருள்திரட்டித் ததியாராதனையை இடைவிடாது

நடத்திக் கொண்டு வந்தார். இவருடைய பகவத் பக்தியை யும் பாகவத பக்தியையும் உலகிற்கு உணர்த்த வேண்டும் என்று திருவுளங் கொண்டான் பரமபத நாதன். ஒருநாள் திருமணம் கொல்லை எனற இடத்தில் ஓர் அரசமரத்தில் கலியனும் அவனது அமைச்சர்களும் மாறு வேடத்தில் பதுங்கியிருந்த பொழுது பரமபதநாதன் வேதியனாக மண வாளக் கோலத்துடன் புதுமணம் புணர்ந்த தம் மனைவி யுடன் எல்லாவிதப் பொன் அணிகளைப் புனைந்து கொண் டும் அதிகச் செல்வத்துடனும் சென்று கொண்டிருந்தார். இதனைக் கண்ட கலியன் வாளும் கையுமாகப் பரிவாரங்க ளுடன் இவரை வளைத்துக் கொண்டார். தம்பதிகளின் அணிகலன்களையெல்லாம் கழற்றச் செய்து அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டினார். திருமணமானவராதலால் கால் விரலில் பொன்னாலான அறுகாழி மோதிரம் (மெட்டி என்றும் சொல்லுவர்) காணப்பட்டது. அதையும் கழற்றித் தருமாறு கேட்டார் கலியன். கழற்ற முடியவில்லை. உடனே மண மகனின் காலைப் பிடித்துக் கொண்டுத் தம் பல்லால் கடித்து வாங்கினார். இப்போது சரணாகதி ஆகி விட்டது. கலியன் கட்டி வைத்த மூட்டையைத் தூக்க முயலும்போது தூக்க முடியவில்லை; பேர்க்கவும் முடிய வில்லை. உடனே மறையவரை நோக்கி, ''ஐயரே, நீர் ஏதோ மந்திரம் செய்து விட்டீர்'' என்று சொல்லி நெருக்க, ''கள்வா, அந்த மந்திரத்தை உனக்குச் சொல்லுகின்றேன்'' என்று கழுத்தை அணைத்தார். கலியனும் சம்மதித்து ''நீர் சொல்லாவிடில் இந்த வாளுக்கு இரையாவீர்'' என்று தம் கையிலுள்ள வாளைக் காட்டி அதட்டினார். உடனே மறையவரும் மூன்று பதமாய், எட்டெழுத்துகளாய் இலங்கும் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் சகல வேத சாரமான திருமந்திரத்தைக் கலியனின் வலத்திருக்காதில் செவிக்கின்பமாய், முன்பு நர-நாராயணராய்த் தமக்குத் தாமே சொல்லிக் கொண்ட குறை தீர உபதேசித்தார். அன்றியும், தாமும் வேதியராக வந்த திரு உருவை மறைத் துக் கொண்டார். ஆகாயத்தில் பெரிய திருவடிமீது கார்

மேகம் போன்ற திருமேனியுடன் பெரிய பிராட்டியார் பூமிப் பிராட்டியாருடன் சேவை சாதித்தார். இவ்வாறு வழிப்பறி செய்யப்பட்ட வேதியர் ஆண்டாளை மணம் செய்து வந்த திருவரங்கப் பெருமானே என்று ஆழ்வார்களைப் பற்றிக் கூறும் திவ்வியசூரிசரிதம். குறிப்பிடுகின்றது.

**கலியனின் மாற்றம் :** இங்ஙனம் யாதொரு காரணமும் பற்றாது கிடைத்த திருமந்திரத்தையும், அதற்கு உள்ளீடான ஶ்ரீமந் நாராயணனுடைய சொரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களையும் அருள்மாரி என்னும்படியான பெரிய பிராட்டியாரின் அருளினாலே கண்டு அநுபவிக்கின்றார்; தாமும் திருமங்கை யாழ்வாராகின்றார். இந்த அநுபவத்தின் விளைவாக.

> வாடினேன்; வாடி, வருந்தினேன் மனத்தால்;
> பெருந்துயர் இடும்பையில் பிறந்து
> கூடினேன்; கூடி, இளையவர் தம்மொடு
> அவர்தரும் கலவியே கருதி
> ஓடினேன்; ஓடி, உய்வதோர் பொருளால்
> உணர்வெனும் பெரும்பதம் திரிந்து
> நாடினேன்; நாடி நான்கண்டு கொண்டேன்
> நாரா யணா என்னும் நாமம்.

என்ற பாசுரம் அவர் திருவாயினின்றும் பிறக்கின்றது. இதைத் தொடர்ந்து பத்துப் பாசுரங்களால் முதல் திருமொழி முற்றுப்பெறுகின்றது.

**திருமந்திரம் பிறந்த வரலாறு :** இந்தத் திருமந்திரம் பிறந்த வரலாற்றையும் நாம் இவ்விடத்தில் அறிந்து கொள்வது பொருத்தமாயிருக்கும். 'பாரோர் புகழும் வதரி' என்று மங்கை மன்னன் போற்றும் பதரிகாச்சிரமத்தில் தான் இந்த மந்திரம் பிறந்தது. இறைவனே ஆசாரியனாகவும் சீடனாகவும் நின்று திருமந்திரத்தை உபதேசித்ததாக வரலாறு, வரலாறு இதுதான்: சத்திய யுகத்தில் தர்ம

தேவனுக்கும் தட்சப் பிரஜாபதியின் மகளாகிய மூர்த்தி தேவிக்கும் நரன், நாராயணன் என்ற பெயர்களுடன் திருமாலின் அவதாரங்களாகப் பிறந்தனர். இவர் தம் குழந்தைப் பருவம் நைமிசாரணியத்தில் கழிந்தது; தவவாழ்க்கை கந்த மாதன பருவத்தில் தொடங்கியது. பிறகு தேவர்கள், முனிவர்கள், மக்கள் இவர்கட்குக் குரு-சீட முறையை நன்கு விளக்கும் பொருட்டுப் பதரிகாச்சிரமம் வருகின்றனர். இங்குத்தான் நாராயணன் நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசிக்கின்றான். இவர்கள் துவாபரயுகத்தில் கண்ணனாகவும் காண்டீபனாகவும் பிறக்கின்றனர். பகவத் கீதை என்று பாரோர் போற்றும் ஒப்பற்ற கிரந்தம் பிறப்பதற்கும் காரணமாகவும் அமைகின்றனர்.

**வடநாட்டுத் திருத்தலப் பயணம்:** திருமந்திரம் பிறந்த இடமாகிய வதரியை அநுபவிக்க வேண்டுமென்று பேரவாவால் திருமங்கையாழ்வார் வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். 'வாள்வலியால் மாயோனிடம் மந்திரம் கொண்ட' மகிழ்ச்சியால் ஆழ்வாரிடம் அர்த்தபஞ்சக ஞானம் ஏற்படுகின்றது. பக்தி வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. திருமந்திரப் பொருளின் எல்லை நிலமான திருத்தலங்களை அநுபவிக்க இழிகின்றார். எம்பெருமான் 'சர்வசுவாமி' என்பதும், 'சர்வசுலபன்' என்பதும் திருமந்திரத்தின் தேர்ந்த பொருளாகும். அடியவர்கள் இந்த உடம்புடன் அடிமை செய்து மகிழும் படிக்குப் பாங்காக எம்பெருமான் பல இடங்களிலும் கோயில் கொண்டு தன்னுடைய சுவாமித்துவத்தையும் செளலப்பியத்தையும் விளங்கக் காட்டிக் கொண்டு நிற்கின்றான். ஆகவே, திவ்வியதேசங்கள் திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலமாக அமைகின்றன. இத்தகைய திவ்விய தேசங்களை மற்றுமுள்ள ஆழ்வார்கள் அநுபவித்தார்களெனினும் திவ்வியதேச அநுபவத்தையே திருத்தலப் பயணமாகக் கொண்டவர் இவ்வாழ்வார் ஒருவரேயாவார்.

வதரியை நோக்கிச் சென்ற இந்த ஆழ்வார் முதலில் திருப்பிரிதி என்ற திவ்விய தேசத்தை அடைகின்றார். அதனை மங்களாசாசனம் செய்து கொண்டு வட நாட்டுத் திருப்பதிகளாகிய இமயமலையிலுள்ள வதரிகாச்சிரமம் சாளிக் கிராமம் ஆகியவற்றை அநுபவித்து மங்களாசாசனம் செய்துவிட்டு நைமிசாரணியம், வடமதுரை, பிருந்தாவனம், ஆயர்பாடி, அயோத்தி, வண்துவராபதி, சிங்கவேழ் குன்றம் ஆகியவற்றைச் சேவித்து மங்களாசாசனம் செய்கின்றார் இறுதியாக ஈரத்தமிழ் நடையாடுதற்கு எல்லை நிலமான திருவேங்கடத்தைச் சேவிக்கின்றார். திருப்பாற் கடலையும் பரமபதத்தையும் மானசிகமாகக் கண்டு அநுபவித்து மங்களாசாசனம் செய்து வடநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தலைக்கட்டுகின்றார்.

**தொண்டை நாட்டுப் பயணம்**: தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தொடங்கும் நோக்கத்துடன் திருவேங்கடத்தினின்றும் புறப்படுகின்றார். முதன் முதலாக வீரராகவப் பெருமாள் கோயில் கொண்டுள்ள திருஎவ்வுளூர் (திருவள்ளூர்) வருகின்றார். தொடர்ந்து திருக்கடிகை (சோழ சிங்கபுரம்), திருநின்றவூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை, திருவிடவெந்தை ஆகிய திருத்தலங்கட்கு வந்து ஆங்காங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்கின்றார்; அடுத்து, முத்தி தரும் நகரங்களில் ஒன்றாகிய காஞ்சிமா நகருக்கு வருகின்றார். அங்குள்ள அத்திகிரி (வரதராசப் பெருமாள் கோயில்), திரு வெஃகா (சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில்), திருவட்டபுயகரம், திருவேளுக்கை, திருத்தண்கா (விளக்கொளிப் பெருமாள் சந்நிதி), திருஊரகம், திருக்காரகம், திருக்கார்வானம் திரு நீரகம் (இவை நான்கும் உலகளந்த பெருமாள் கோயிலுள்ளவை) திருக்கள்வனூர் (காமாட்சியம்மன் கோயிலுக்குள் இருப்பது), நிலாத்திங்கள் துண்டம் (ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் உள்ளது), திருப்பரமேச்சுரவிண்ணகரம்,

(வைகுண்டப் பெருமாள் கோயில்), திருப்பாடகம் (பாண்டவதூதர் சந்நிதி) ஆகிய திருக்கோயில்களில் சேவை சாதிக்கும் எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்கின்றார்; காஞ்சிக்கு வெளியில் சுமார் பத்து கி. மீ. தொலைவிலுள்ள திருப்புட்குழி எம்பெருமான் விசயராகவப் பெருமாளையும் மங்களாசாசனம் செய்து தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கின்றார்.

**நடு நாட்டுப் பயணம் :** நடு நாட்டில் திருக்கோவலூர், திருவயிந்திரபுரம் என்ற இரண்டு திவ்விய தேசங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோவலூர் திவ்வியப்பிரபந்தம் பிறந்த இடம். மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி முகுந்தனைத் தொழுத இடம் என்று வில்லிபாரதத்திற்கு சிறப்புப் பாயிரம் வரைந்த வரந்தருவார் போற்றிப்புகழ்வர். திருக்கோவலூரில் எழுந்தருளியிருக்கும் திரிவிக்கிரமனைத் திருமங்கையாழ்வார் 'திருக்கோவலூர்த் தீங்கரும்பு' என்று உருவகித்துப் புகழ்வர். இதற்கேற்ப வேதாந்த தேசிகர் மூன்று ஆழ்வார்களைக் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலை உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானைக் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் தமது தேகளீசஸ்துதியில் உருவகித்துப் புகழ்ந்துள்ளமை இப்போது நம் நினைவிற்கு வருகின்றது. தமிழ்ப் பாசுரங்களின் கருத்து வடமொழிச் சுலோகங்களுக்கு அடிப்படையாக அமைந்ததைக் கண்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். இந்த எம்பெருமானை மங்களாசாசனம் செய்தபிறகு திருஅயிந்திரபுரம் வருகின்றார் ஆழ்வார். இங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் தெய்வநாயகனை மங்களாசாசனம் செய்தபிறகு சோழநாட்டுத்திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார்.

**சோழநாட்டுத் திருத்தலப்பயணம் :** முதன் முதலாகத் தில்லைத் திருச்சித்திர கூடம் என்னும் திருப்பதியில் இழி

கின்றார். தில்லை கோவிந்தராசர் சந்நிதிதான் இவ்வாறு ஆழ்வார் திருமொழிகளில் இடம் பெறுகின்றது. இங்கு 'தில்லைச் சித்திர கூடம் சென்று சேர்மின்களே' (பெ. திரு.3.2) 'காழிச் சீராம விண்ணகரே சேர்மின்களே' (ஷை 3. 4), 'திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே' (ஷை 6.6) என்று இப்படிப் பல திருப்பதிகளையும் எடுத்துரைத்துச் "சென்று சேருங்கள், சென்று சேருங்கள்" என்றால் எந்தத் திருப்பதியில் சென்று சேர்வது?" என்று வைணவர் அடியார் ஒருவரைச் சாமானியமானவர் ஒருவர் கேட்டாராம்; அதற்கு அந்தஅடியார் "ஆழ்வார் திருவாயில் நுழைந்து புறப்பட்ட திருப்பதிகளிலெல்லாம் நாம் நுழைந்து புறப்படுவது பிராப்தம்." என்று மறுமொழி பகர்ந்தாராம். 'பதியே பரவித்தொழும் தொண்டர்' என்றும்,

**கண்டியூர் அரங்கம் மெய்யம்**
**கச்சிபேர் மல்லை என்று**
**மண்டினார் உய்யல் அல்லால்**
**மற்றையார்க்கு உய்ய லாமே (19)**

என்று திருக்குறுந்தாண்டகத்தில் இந்த ஆழ்வாரே கூறியுள்ளார். திருநெடுந்தாண்டகத்திலும்,

**தான்உகந்த ஊரெல்லாம்**
**தன்தாள் பாடி**
... ... ... ... ... ... ... ...
**பூங்கோவல் ஊர்தொழுதும்**
**போது நெஞ்சே (6)**

என்று கூறியுள்ளதையும் நாம் காண்கின்றோம். சித்திர கூடத்தை மங்களாசாசனம் செய்த பின்னர் ஆழ்வார் காழிச் சீராமவிண்ணகரம், திருவாலி என்ற திருப்பதிகளைச் சேவித்து மங்களாசாசனம் செய்து கொண்டு திருநாங்கூர்த்திருப்பதிகளைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

திருநாங்கூர்த்திருப்பதிகள் எனப்படுபவை சீகாழிக்குக் கீழ்த்திசையில் சுமார் ஏழு கி. மீ. தொலைவில் அமைந்திருக்கும் பதினொரு திருப்பதிகளாகும். இவை யாவும் திருமங்கைநாட்டிலேயே அமைந்துள்ளன. மணிமாடக் கோயில் தொடங்கி வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், திருத்தேவனார் தொகை, வண்புருடோத்தமம், செம்பொன்செய் கோயில், திருத்தெற்றியம்பலம், திருமணிக் கூடம், காவளம்பாடி, திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்) பார்த்தன் பள்ளி ஆகிய திருப்பதிகளை யெல்லாம் சேவித்து மங்களாசாசனம் செய்கின்றார். இவை யாவும் சோழநாட்டைச் சேர்ந்தவையே,

இவற்றையடுத்து இந்தளூர், தலைச்சங்க நாண்மதியம், வெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, திருக்கூடலூர், திருவெள்ளறை, கோயில் எனப்படும் திருவரங்கம், கரம்பனூர் (உத்தமர்கோயில்) திருப்பேர்நகர் (அப்பக் குடத்தான் சந்நிதி), கோழி (உறையூர்), நந்திபுரவிண்ணகர் (நாதன் கோயில்), திருவிண்ணநகர் (ஒப்பிலியப்பன் சந்நிதி), திருக்குடந்தை, தஞ்சைமாமணிக் கோயில், திருக்கண்டியூர், திருநறையூர், திருச்சேறை, திருவழுந்தூர், சிறுபுலியூர் சலசயனம், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணங்குடி, திருநாகைஆகிய திருப்பதிகளைச் சேவித்து மங்களாசாசனம் செய்துகொண்டு சோழநாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கின்றார்.

**பாண்டிநாட்டுத் திருப்பதிகள் :** அடுத்து பாண்டிநாட்டுத்திருப்பதிகளைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார். திருமெய்யம் தொடங்கி திருப்புல்லாணி, திருமாலிருஞ் சோலை, திருக்கோட்டியூர், மதுரைக் கூடல் (தென்மதுரை), திருமோகூர், திருத்தண்கால், திருக்குறுங்குடி ஆகிய திவ்விய தேசங்களை யெல்லாம் சேவித்து மங்களாசாசனம் செய்கின்றார். திருக்குருகூர் முதலிய நவதிருப்பதிகளை ஏன் சேவிக்கவில்லை? இது ஒரு விளங்காப் புதிர்.

இங்ஙனமே நம்மாழ்வாரும் திருநாங்கூர்த் திருப்பதிகளுக்கு எழுந்தருள வில்லை,

அடுத்து, மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருநாவாய், திருமூழிக்களம் ஆகியவற்றைச் சேவித்து மங்களாசாசனம் செய்து கொண்டு திருத்தலப் பயணத்தையே தலைக் கட்டி விடுகின்றார். இங்ஙனமாக இந்த ஆழ்வார் 108 திவ்விய தேசங்களுள் 22 போக மிகுந்தவைகளை (86) மங்களாசாசனம் செய்தருளுகின்றார்.

**அருளிச் செயல்கள் :** இங்ஙனம் இந்த ஆழ்வார் மங்களாசாசனம் செய்த அருளிச்செயல்களை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து அடைவு படுத்தின நாதமுனிகள் (1) பெரிய திருமொழி, 2. திருக்குறுந்தாண்டகம், 3. திருநெடுந்தாண்டகம். 4 திருவெழுக் கூற்றிருக்கை, 5. சிறிய திருமடல், 6. பெரிய திருமடல் என்று ஆறு பகுதிகளாக அடைவு படுத்தியுள்ளார். நம்மாழ்வார் அருளியுள்ள நான்கு திருமறைகளின் சாரமாகத் திகழும் 1. திருவிருத்தம், 2. திருவாசிரியம், 3. பெரிய திருவந்தாதி, 4. திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களுக்கும் ஆறு அங்கங்களாக இந்தப் பிரபந்தங்கள் அமைந்துள்ளனவாக வைணவர்கள் கருதுவர். இங்கு எண்கள் ஒற்றுமையேயன்றி பொருள் ஒற்றுமை இல்லை என்பதை நாம் உளங் கொள்ள வேண்டும்.

**பொது இயல்புகள் :** இந்த ஆழ்வாரின் அருளிச் செயல்களை மேலோட்டமாக நோக்கினாலும் சில பொது இயல்புகளை நாம் காண முடிகின்றது. பெரும்பாலும் இந்த ஆழ்வாரின் பாசுரங்கள் யாவும் அர்ச்சாவதார எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்தவை என்றாலும் விபவாவதார எம்பெருமான்களின் திருக்குணங்களை எடுத்துக் கூறுவனவாகவும் சில திருமொழிகள் அமைந்துள்ளன. இராமாவதாரத்தை இராட்சச பாவனையாலும், கிருட்டிணாவதாரத்தை யசோதை பாவனையாலும், மற்றைய அவதாரங்

களின் மேன்மையோடு கிருட்டிணாவதாரத்தின் எளிமையைச் சேர்த்து அநுபவித்தல் போன்ற திருமொழிகளும் உள்ளன. விபவாவதார மகிமையும், விபவாவ தாரங்களில் எம்பெருமானுடைய சௌலப்பியமும் பரத்துவமும் எதிரெதிராகக் கூறும் இரண்டு தோழியர் அநுபவமும் திருமொழிகளாக அமைந்துள்ளன.

இவை தவிர, அகப்பொருள் துறைகளில் தாய்ப்பாசுரங்களாகவும், மகள் பாசுரங்களாகவும் அமைத்த திருமொழிகளும் உள்ளன. தோழி பாசுரங்களாக அமைந்த திருமொழிகள் இந்த ஆழ்வாரின் அருளிச் செயல்களில் காணப் பெறவில்லை. அகத்துறையில் அமைந்த இருமடல்களும் மிகச் சிறப்பானவை. இவர் பாசுரங்களில் ஆகிஞ்சன்னியம், அநந்ய கதித்துவம், உலகவாழ்வில் வெறுப்பு முதலியவற்றை நவிலும் பண்புக் கூறுகளையும் காணலாம். நாட்டுப் புறப் பாடல்களின் சாயையில் ஒரு சில திருமொழிகள் அமைந்துள்ளன. திருஎழுக் கூற்றிருக்கை சித்திரகவி வகையைச் சேர்ந்தது. இரதபந்த அமைப்பை இதில் கண்டு மகிழலாம். திருக்குடந்தை சார்ங்க பாணி பெருமாள் கோயிலின் அமைப்பும் தேர்போலவே உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டுதான் இந்த ஆழ்வார் இந்தச் சித்திர கவியை அமைத்தனரோ என்று கருத இடம் தருகின்றது. இது சரணாகதித் தத்துவத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது. ஒரு திருமொழி உடல் உறவை அறுத்துத் தள்ளுமாறு வேண்டும் பாங்கில் அமைந்துள்ளது. திருமந்திரத்தின் பெருமையைக் கூறுவனவாக இரண்டு திருமொழிகள் அமைந்துள்ளன.

**சிறப்பியல்புகள் :** இந்த ஆழ்வாரின் பாசுரங்களின் சிறப்பியல்புகளாகக் கற்பனை, இயற்கை வருணனை புதிய இலக்கிய உத்திகள், பழமொழிகளை அமைத்து பாடுதல் வைணவ தத்துவக் கருத்துகள், இறைவனைப் பற்றிய கருத்துகள், ஆராவமுதனிடம் அளவற்ற ஈடுபாடு, ஆழ்வாரின் இறையநுபவம், பாகவதர்களின் பெருமை,

நாயக - நாயகியின பாவனை, திருமந்திரத்தின் பெருமை, பிரபத்தி நெறியின் அருமை போன்றவற்றை கண்டு மகிழ லாம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

**கற்பனை :** கற்பனை என்பது என்ன? புலன்கள் ஒரு பொருளை நேரே அநுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொணர்ந்து அப்பொருளினிடத்து மீண்டும் அநுபவத்தை ஏற்றவல்ல ஆற்றலே கற்பனை யாகும். இது கவிதையைக் கனிவித்துக் கற்போரின் மனத்தை விரிந்த பார்வையில் செலுத்த வல்லது. கவிதை யின் பிற பண்புகளுக் கெல்லாம் அடிநிலமாக இருப்பது இதுதான்; முடியாக இருப்பதுவும் இதுவேயாகும். திருமங்கையாழ்வாரின் கற்பனை யெல்லாம் பக்தி கலந்த கற்பனையாகும்.

திரிவிக்கிரமாவதாரத்தைக் காட்டுவதிலுள்ள கற்பனை யில் பகவதநுபவம் பெறுவதாய் இருப்பதைக் காணலாம்.

**ஒண்மிதியில் புனலருவி ஒருகால் நிற்ப**
**ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து**
**எண்மதியும் கடந்து அண்டம் மீதுபோகி**
**இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து மேலைத்**
**தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி**
**தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு**
**மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை**
**மலர்புரையும் திருவடி (நெடுந் 5)!**

என்பது திரிவிக்கிரமாவதாரக் காட்சி. குருட்சேத்திரப் போர்க்களத்தில் கண்ணன் காண்டீபனுக்குக் காட்டிய விசுவ ரூபக் காட்சியை யொத்தது இது.

எம் பெருமானின் திருதிருவடி பூமி, ஏழுகடல்கள், ஏழு தீபங்கள், சக்கரவாள கிரி, மகாசலம், அண்டகடாகம் அளவு சென்றதல்லாது ஆவரண நீரளவும் சென்று நின்றது;

எம்பெருமானின் மற்றொரு திருவடி அண்டத்திற்கு அப்பால் போவதாகக் கிளம்பி அதற்கு மேலேயும் ஆதித்திய பதம், சந்திரபதம், நட்சத்திரபதம் ஆகியவற்றிற்கு அப்பாலும் கடந்து செல்வதாயிற்று. ஆக, இரண்டு திருவடிகளாலும் மண் முழுவதையும் அகப்படுத்திக் கொண்டான். திருவடிகளின் அளவுகளைக் கூறி அவனுடைய அளவைக் காண்பதற்கு நமது மனத்தின் கற்பனைக்கு அளவிட்டுவிட்டு விடுகின்றார் ஆழ்வார். விண்வெளி முழுவதும் அவனது திருமேனி விரிந்து பெருகி வளர்ந்திருக்க வேண்டும் என்று மானசிகமாகக் காண்கின்றோம்.

எம் பெருமானின் வராக அவதாரக் காட்சியை,

**சிலம்பின் இடைச் சிறுபரல்போல் பெரிய மேரு**
**திருக்குளம்பில் கணகணப்ப, திரு ஆகாரம்**
**குலுங்க, நில மடந்தைதனை இடந்து புலகி**
**கோட்டிடைவைத் தருளியஎங் கோமான்**

—பெரி-திரு. 4.4:3

என்பது காட்டுவார். இக்காட்சிக்கு விரிவுரைபோல் இன்னொரு காட்கியை,

**தீதறு திங்கள்பொங்கு சுடரும்பர் உம்பர்**
**உலகேழி னோடு முடனே**
**மாதிர மண்சு மந்து வடகுன்று நின்ற**
**மலையாறும் ஏழு கடலும்.**
**பாதமர் சூழ்கு ளம்பி னகமண்ட லத்தி**
**னொருபா லொடுங்க வளர்சேர்**
**ஆதிமுன் ஏன மாகி அரணாய மூர்த்தி**

—ஷை 11-4:3

என்ற பாசுரத்தால் காட்டுவார்.

எம்பெருமான் பேருருவம் கொண்ட வராகமூர்த்தியாய்த் தோன்றிய பொழுது திங்கள், கதிரவன், தேவர்கள் மேலுலகங்கள், திசைகள், மேருமலை, ஆறுகுல பர்வதங்கள்

அவனது திருக்குளம்பின் அகமண்டலத்தில் அடங்கி விட்டனவாம். ஒரு தண்டைச் சிலம்பில் மிகச் சிறிய பரல்கள் கண கண வென்று ஒலிக்குமாப்போலே வராகநாயனாரின் திருக்குளம்பில் மேருமலை பரல்கள்போல் ஒடுங்கி ஒலித்ததாம். இப்படிப் பேருருவம் கொண்டு ஒரு பயில்வான் போல் நிற்கும்போது 'அகலகில்லேன் இறையும்' என்று பிராட்டி இருக்கும் திருமார்பு குலுங்கிற்றாம். இந்தப் பேருருவத்தை நம் மனத்திரையில் அமைத்து மகிழ வேண்டும். பெரிய வடிவு கொண்டு உலகளந்த காலத்து மிக விசாலமான திருவடிக்குப் போதுமானதாக இருந்த பூமி வராகாவதார காலத்தில் எயிற்றின் நுனியில் அடங்கா திருந்த விசித்திரத்தை எண்ணி மகிழ வேண்டும்.

**இயற்கை வருணனை :** இந்த ஆழ்வார்தம் பாசுரங்களில் காட்டும் இயற்கையின் அழகையும் பெருமையையும் சொல்லால் அடக்கிக் காட்ட இயலாது. எங்கங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையை யொட்டியே ஆழ்வார்கள் இயற்கையில் தோய்ந்து இறைவனை அநுபவிக்கின்றனர். இத்தகைய இயற்கை அழகுகள் வாய்ந்த தலங்கள்தாம் 'திவ்விய தேசங்கள்' என்றும், திருப்பதிகள் என்றும் மதித்து அங்குள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை வழிபடுவது முக்கியம் என்றும் கருதினர் பக்தர்கள். இப்போது திருமங்கையாழ்வார் காட்டும் நானிலவருணனைகளைக் கண்டு மகிழ்வோம்.

**குறிஞ்சிநிலக் காட்சிகள் :** குறிஞ்சி நில வருணனையைப்பற்றிச் சிந்திக்கும்போது இமயமலை, சிங்கவேள் குன்றம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலைமலை என்ற மலைத்திருப்பதிகள் நம் நினைவுக்கு வருகின்றன. திருப்பிரிதி (இமயமலையில்)யில் ஒரு காட்சி: இங்கு ஆண்யானை யொன்று தன் காதலியாகிய இளம்பெண்

யானையை மகிழ்விக்க வேண்டி நெடுக ஓங்கி வளரும் மூங்கில் முளைகளைப் பெயர்த்தெடுத்து மலைமுழைஞ்சுகளில் மிகுதியாகவுள்ள தேனில் தோய்த்து அதன் வாயில் ஊட்டுகின்றது (பெ. திரு. 1. 2: 5) இக்காட்சியில் நம் உள்ளம் தோய்ந்திருக்கும்போது திருமலையில் பூதத்தாழ்வார்காட்டும் காட்சி நினைவிற்கு வருகின்றது.

> **பெருகு மதவேழம்**
> **மாப்பிடிக்கு முன்னின்று**
> **இருங்கண் இளமூங்கில்**
> **வாங்கி, அருகிருந்த**
> **தேன்கலந்து நீட்டும்**
> **திருவேங்கடம்** (இ. திரு. 75)

என்ற பாசுரத்தில் இதனைக் கண்டு மகிழலாம். மதம் பிடித்து மனம்போனபடி திரியும் யானையொன்று தன் பேடையைக் காண்கின்றது. அதனை மீறி அப்பால் செல்ல மாட்டாமல் அதற்கு இனிய உணவு கொடுத்துத் திருப்தி செய்ய விரும்புகின்றது. உடனே அருகிருந்த மூங்கிற் குருத்தொன்றைப் பிடுங்கி மலைக்குகையிலுள்ள ஒரு பெருந் தேன் கூட்டில் செருகிக் 'குலோப்ஜாமுன்போல்' அதன் வாயில் ஊட்டுகின்றது. இந்தப் பாசுரம் முன்னே காட்டிய திருமங்கையாழ்வார் பாசுரத்திற்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கலாம் என்று கருத இடம் உண்டு. இந்த இரண்டு பாசுரங்களின் நினைவினால் கம்பநாடன் சித்திரகூடமலையில் ஓர் அற்தபுக் காட்சியைப் படைத்துக் காட்டுவான். இங்கு ஆண்யானை யொன்று சூல்கொண்டுள்ள தன் இளம் பிடிமீது அளவற்ற அன்பு கொண்டுள்ளது. ஒருமலை இடுக்கில் ஒரு பெரிய தேன் கூடு உள்ளது. அதில் தேன் ததும்பி நிற்கின்றது. ஆண்யானை அண்மையிலுள்ள ஒருதழைக் கொத்தினை ஒடித்து அதனைக் கொண்டு அம்மழலை வண்டினங்களை ஓச்சுகின்றது. பிறகு அந்தத் தேன் கூட்டினை அப்படியே அசையாமல் தன் துதிக்கையினால் வாங்கி சூல் நிறைந்து உண்பதற்குச் சிரமப்படும் தன் பிடி

யின் வாயில் தின்னுமாறு தந்து நிற்கின்றது-கல்கத்தா ரஸகுல்லாவைத் தருவது போல.

**மருதநிலக் காட்சிகள் :** தென்னார்க்காடு, திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலுள்ள திவ்விய தேசங்கள்யாவும் நீர் வளம் நிலவளம் மிக்க மருத நிலச் சூழலில் அமைந்துள்ளன. இத்திருத்தலங்கட்கு வருங்கால் திருமங்கையாழ்வார் மருத நிலக் காட்சிகளில் ஆழங்கால் படுகின்றார். திருக்கோவலூர்ச் சூழ்நிலையை,

> **எழுந்த மலர்க் கருநீலம் இருந்தில் காட்ட**
> **இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட**
> **செழுந்தட நீர்க்கமலம் தீவிகைபோல் காட்டும்**
> **திருக்கோவலூர்** (பெ. தி. 2.10:3)

என்று காட்டுவார். இங்கு இதனை ஒரு பொற்கொல்லனின் பொற்களரியாக உருவகித்துக் காட்டுகின்றார். பொற்களரியில் கரிகள் கொட்டப்பெற்று நிரம்பியிருக்கும்; பொன்களும் முத்துகளும் நிறைந்திருக்கும்; நெருப்பு செந்நிறத்டன் ஒளிர்ந்து கொண்டிருக்கும். இங்குக் கருநீல மலர்கள் கரித்துண்டுகளாகவும், புன்னை மொக்குகள் முத்தாகவும் புன்னைப் பூக்கள் பொன்னாகவும், தாமரைப் பூக்கள் நெருப்பாகவும் திகழ்ந்து தட்டானின் பொற்களரிபோல் காணப்பெறுகின்றது.

திருநறை யூரின் நீர்வளத்தைக் குறிப்பிடும் பாசுரம் இது.

> **பள்ளிக் கமலத் திடைப்பட்ட**
> **பகுவாய் அலவன் முகம்நோக்கி**
> **நள்ளி யூடும் வயல் சூழ்ந்த**
> **நறையூர்** (பெ.தி.6.7:6)

'தாமரைப் பூவில் படுத்துக் கொண்டிருந்த ஆண் நண்டின் முகத்தைப் பெண் நண்டு பார்த்து ஊடல் செய்யப் பெற்ற வயல் சூழ்ந்த நறையூர்' என்பது இதன் நேர்பொருள்,

இதற்குப் பட்டர் அருளிச் செய்ததைக் குறிப்பாகக் கேட்டிருந்த நம்பிள்ளை அருளிச் செய்ததாகப் பெரிய வாச்சான் பிள்ளை தம் உரையில் குறிப்பிட்ட சுவையான பொருளை நான் ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். ஓர் ஆம்பல் மலரில் நண்டுத் தம்பதிகள் இனிது வாழ்ந்து வருகையில் நிறைசூல் கொண்ட பேடைக்கு (நள்ளி) இனியபொருள் களைக் கொணர்ந்து தரவேண்டும் என்று ஆண் நண்டிற்கு (அலவன்) ஆசை உண்டாயிற்று; பிறகு தாமரைப் பூவிலிருந்து நல்ல மகரந்தத்தைத் திரட்டிக் கொணர்ந்து கொடுக்க விரும்பி மெல்ல மெல்ல நகர்ந்து தாமரைப் பூவை அடைந்தது. அவ்வமயம் பகலவன் மறையவே அத்தாமரை மலர் மூடிக் கொண்டது. அலவன் அதற்குள் அகப்பட்டுக் கொண்டது. தாமரையை மலர்த்திக் கொண்டு எப்படி யாவது வெளிக் கிளம்பி விடவேண்டுமென்று எவ்வளவோ முயன்றும் பயன் அளிக்கவில்லை. மறுநாள் பகலவன் உதயமானாலல்லது தாமரை மலராது. உடம்பைக் கொண்டு புரட்டி இரவு முழுவதும் அதிலேயே தங்கியிருந்து பொழுது விடிந்ததும் மலர்ந்த தாமரையினின்றும் வெளிப் பட்டுத் தாதும் சுண்ணமும் உடலிலே நிழலிட்டுத் தோன்ற தன் மனைக்கு விரைந்து வந்து சேர்ந்தது; பகற் பொழுதில் ஆம்பல் மலர் முடிக் கொள்ளும். ஆண் நண்டு அங்கு வந்து சேரும் சமயமும் பெண் நண்டு கிடக்கும் ஆம்பல் மலர் மூடிக் கொள்ளும் சமயமும் ஒன்றாக இருந்தது. இதனைப் பார்த்தால் ஆண் நண்டு இரவில் வேறிடத்தில் தங்கி வந்த தாகக் கருதிக் கவடு இல்லாத ஆண்நண்டின்மீது ஊடல் கொண்டது பெண்நண்டு; இஃது அகப் பொருளில் 'வாயில் மறுத்தல்' என்ற துறைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டு. ஒருபுறத்தில் மலர்ந்த தாமரை மலர்களும் மற்றொரு புறத்தில் குவிந்துள்ளனவுமான ஆம்பல் மலர் களும் விளங்கப் பெற்ற வயலால் சூழப்பட்டது நறையூர் என்று வயல்வளம் கூறிய ஆழ்வாரின் கற்பனைத் திறமும் அதற்குப் பொருத்தமாக அற்புத விளக்கம் தந்த பட்டரின் கூர்த்த அறிவும் நம்மை வியக்க வைக்கின்றன. காலச்சுருக்

கம் கருதி முல்லை, நெய்தல் நிலக்காட்சிகள் விடப்படு கின்றன.

**புதிய இலக்கிய உத்திகள்:** சங்க இலக்கிய காலத் திற்குப் பிறகு பக்தி இலக்கிய காலத்தில் பாடல்களின் யாப்பு முறையிலும் விரைப்பான நடைப் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. கற்றவர்க்கு உரியனவாகப் பாடப் பெற்ற பாடல்களின் போக்கு மாறி கற்றவர்களோடு மற்றவர்களும் கூடிக் களிப்புடன் பாடுவதற்கு ஏற்றவாறு சந்தக் கொழிப்பும் இசையேற்றமும் கொண்ட பாசுரங்கள் பெருகின; தமிழ் நடையிலும் நெகிழ்ச்சி அமைந்தது; மக்கள் கூட்டம் கூட்டமாகப் பாடித் திருக்கோயிலைச் சுற்றி வலம் வந்து வழிபடும் முறைக்கு ஏற்றவாறு இசை இனிமை யும் நடை எளிமையும் கூடினமையால் தமிழ் இலக்கியத்தில் ஒருவித புத்துணர்ச்சி பிறந்தது. புதிய இலக்கிய உத்தி களும் கையாளப்பெற்றமையால் சமுதாயத்தில் பெரும்பா லோர் இலக்கியத்தைத் துய்க்க முடிந்தது. பாமர மக்கள் மனத்திலும் இலக்கிய வானம் கவிந்து அவர்களிடமும் முருகுணர்ச்சி எழுவதற்குக் காரணமாயிற்று,

பிள்ளைத் தமிழ்க் கூறுகள், நாட்டுப்புற இலக்கியக் கூறுகள், பழமொழிகளைப் பாங்குடன் அமைத்துப் பாடும் போக்கு, இராக்கதர்கள் பாவனையில் பாடல்பெறும் பொங்கத்தம் பொங்கோ, குழமணி தூரம் என்ற போக்கில் அமைந்த பாசுரங்கள் பக்தி இலக்கியத்திற்குப் புதுமெருகு ஊட்டியுள்ள பாங்கை இந்த ஆழ்வாரின் பாசுரங்களில் கண்டு மகிழலாம். ஆழ்வார் பிராட்டியாரின் நிலையை ஏறிட்டுக் கொண்டு ஏசிப் பேசுகின்ற ஒருத்தி வாயால் எம் பெருமானின் எளிமைக் குணத்தையும், ஏத்திப் பேசுகின்ற மற்றொருத்தி வாயால் மேன்மைக் குணத்தையும் ஒரே காலத்தில் அநுபவிக்கும் பாங்கில் பாசுரங்கள் அமைந்து புதிய சுவையை ஊட்டுகின்றன.

ஆழ்கடல்சூழ் வையகத்தார்
ஏசப்போய், ஆய்பாடித்
தாழ்குழலார் வைத்த
தயிர் உண்டான் காணேடி!
தாழ்குழலார் வைத்த
தயிர் உண்ட பொன்வயிறுஇவ்
ஏழ்உலகு உண்டும்
இடம்உடைதல் சாழலே (11-5:3)

என்ற மகளிரின் சாழல் விளையாட்டுப் பாசுரத்தில் இரு இடைச்சிமார் வாக்கில் இருவித பேச்சுகளின் போக்கைக் கண்டு மகிழலாம்.

பழமொழிகள் : ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்த்துவதற்கு அந்நாட்டு மக்கள் மொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுவன. பழமொழிகளே அந்நாட்டு மக்கள்பால் அடிபட்டு வரும் மன இயல்புகளை எடுத்துக் காட்டுவனவாகும். இங்ஙனம் நாட்டுமக்களிடம் பயின்று வரும் பழமொழிகளைப் பெரும் புலமை வாய்ந்த பரகாலரின் பாசுரங்களிலும் கண்டு மகிழலாம். எடுத்துக் காட்டாக சிறிய திருமடலில் ஒன்றைக் காட்டுவேன்.

காரஆர் புரவிஏழ் பூண்ட தனிஆழி
தேர்ஆர் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா அமுதம் அங்கு எய்தி அதில் நின்றும்
வாராது ஒழிவது ஒன்று உண்டே! அது நிற்க
ஏர்ஆர் முயல்விட்டுக் காக்கைபின் போவதோ
—கண்ணி 6-8

என்ற பாசுரப் பகுதியில் 'முயலை விட்டுக் காக்கை பின் போவாருண்டோ?' என்ற பழமொழி அமைந்திருப்பதைக் காணலாம். இஃது அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்டால் சுவையின் பாங்கு மனத்திற்குத் தட்டுப் படும்.

நிலத்தில் ஓடுவது முயல்; மரங்களின்மீது பறந்து திரிவது காக்கை. மாமிசம் வேண்டுவோர் கைப்பட்ட முயலை விட்டுக் கைப்படற்கு அரியதும், கைப்பட்டாலும் பயன்படாததுமான காக்கையைப் பின்பற்றித் திரிதல் அறிவற்ற செயல். அப்படியே கிட்டுவதற்கு எளிதாயும் சுவை மிக்கதாயும் உள்ள அர்ச்சாவதார அநுபவத்தை விட்டுக் கிட்டுவதற்கு அரிதாயும் சுவை அற்றதாயுமுள்ள மோட்ச அநுபவத்தைப் பெற விரும்புவதும் பேதைமையின் பணியாகும் என்று இதில் விளக்குகின்றார் ஆழ்வார்.

**தத்துவக் கருத்துகள் :** கோலார் பொன்வயல்களில் தங்கச் சின்னங்கள் தென்படுவனபோல, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் தத்துவக் கருத்துகள் பொதிந்து மலிந்து கிடக்கின்றன. இவை பக்தர்கட்குப் பெருவிருந்தாக அமைகின்றன. சிலவற்றைக் கண்டு மகிழ்வோம்; அநுபவித்துப்பயன் பெறுவோம்.

சரீர - சரீரிபாவனை என்பது வைணவதத்துவத்தின் உயிர் நாடியாகும். சித்தின் வகைகளாகப் பக்தர் முத்தர் நித்தியர் என்ற ஆன்மகோடிகளும், அசித்தின் வகைகளாகிய சுத்த தத்துவம், மிச்ர தத்துவம், சத்துவ சூனியமாகிய காலத்தத்துவமும் அடங்கிய பரமபதம், பிரக்ருதி மண்டலங்கள் ஆகியவை எம்பெருமானின் திருமேனியாக அமைந்துள்ளன என்பது வைணவ தத்துவம்.

திருமங்கையாழ்வார் இதனை,

**திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும்**
**செழுநிலத்து உயிர்களும் மற்றும்**
**படர்பொருள் களுமாய் நின்றவன்** பெரி.தி. 4.3:3

என்ற பாசுரத்தில் கூறுவர். 'திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும் செழுநிலம் படர் பொருள்' என்ற தொடர் அசித்தையும், 'உயிர்களுமாய்' என்பது சித்தையும் குறிக்கின்றன. சரீர-சரீர பாவனையை விளக்கும் பாசுரங்கள் பல உள்ளன.

வான் நாடும் மண்நாடும்
மற்றும் உள்ள பல்லுயிரும்
தான்ஆய எம்பெருமான் (4-1:3)

என்று வருவதிலும் இதனைக் காணலாம்.

பவ்வநீர் உடையாடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருவடியா நின்றான் (6.6:3)

என்பதில் அசித்து மட்டிலும் இறைவனது உடலாகக் காட்டப்பெற்றிருப்பதைக் காணலாம்.

ஈசுவரன் : வைணவதத்துவத்தில் சீமந் நாராயணனே சர்வேசுவரன். இவன் எப்பொழுதும் மாறுபடாத் தன்மையுடையவன். சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம், அமலம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப்பெறாதவன். மூன்றுவித சேதந அசேதந பரிணாம ரூபமான வேறுபாட்டின் குறைகள் தட்டாதவன்.

பிறப்பொடு மூப்பு ஒன்று இல்லவன் தன்னை
பேதியா இன்பவெள் ளத்தை
இறப்புஎதிர் காலம் கழிவும் ஆனானை (4.3:2)

என்று கூறுவர் பரகாலர். இறைவன் இவ்வுலகத்தினைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரணபூதன்.

பூவலர் உந்திதன்னுள் புவனம் படைத்து
உண்டு உமிழ்ந்த தேவர்கள் நாயகன் (9.9:1)
உடம்பு உருவில் மூன்று ஒன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றவன். (2.5:3)

என்று பேசுவர், ஆழ்வார். இவண் குறிப்பிட்ட முதல் பாசுரத்தில் 'உண்டு உமிழ்தல்' என்ற ஒரு தொடர் வருகின்றது. இன்னும்,

ஞாலம் முற்றும் உண்டு உமிழ்ந்த
　　நாதன் என்றும், நானிலம்சூழ்
வேலை அன்ன கோல மேனி
　　வண்ணன் 'என்றும் (4.8:6)

என்ற திருநாங்கூர் பார்த்தன்பள்ளிப் பாசுரத்திலும்,

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து
　　பாரதம் கையெறிந்து ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த
　　செங்கண்மால் (4.10:5)

என்ற திருவெள்ளியங்குடிப் பாசுரத்திலும் இந்தத் தொடர் காணப்படுகின்றது. இங்கு 'உண்ணல்' என்பது அழித்தலை யும், 'உமிழ்தல்' என்பது படைத்தலையும் குறிக்கின்றன. இவற்றுள் 'உண்ணல்' உலகம் இருக்கும் நிலையில் இருக்கும் இருப்பையும், 'உமிழ்தல்' பருப்பொருளாக இருக்கும் இருப்பையும் குறிக்கின்றன.

ஒரு பொருள் உண்டாவதற்கு முதற் காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்று மூன்று காரணங்கள் கூறுவர் உலகியலில். ஆனால் உலகத்தோற் றத்திற்கு இறைவன் மூவகைக் காரணங்களாக உள்ளான் என்பது வைணவ தத்துவம். சித்தும் அசித்தும் சூக்குமமாக (நுண்மையாக) இருக்கும் நிலையில், அதாவது உலக உற் பத்திக்கு முன்னர்—அவற்றுக்குள் இறைவன் அந்தர்யாமி யாக சங்கற்பத்தாடு இருக்கும் நிலையில்—இறைவன் உலகிற்கு முதற்காரணமாகின்றான். இங்ஙனம் நுண்ணிய நிலையில் இருக்கும் சித்து அசித்துகளை வெளிப்படுத்தி 'உலகப்படைப்பு செய்வோம்' என்று இறைவன் எண்ணு கின்ற நிலையில் இறைவன் உலகிற்கு நிமித்த காரணமாக அமைகின்றான். இறைவனுடைய ஞானம் சக்தி முதலி யவையே துணைக் காரணமாகின்றன. ஆக, இறைவன் இம்முறையில் உலகப் படைப்பிற்கு மூன்று காரணங் களுமாக உள்ளான் என்று மெய்விளக்க அறிஞர்கள்

முடிவு செய்துள்ளனர். இக்கருத்தினை ஆழ்வார் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

**ஆராவமுதனிடம் ஈடுபாடு :** திருமங்கையாழ்வார் திருக்குடந்தை ஆரா அமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் என்பதை அவர்தம் பாசுரங்களால் அறிய முடிகின்றது. மறைந்து போயிருந்த திவ்வியப் பிரபந்தம் வெளி வருவதற்குத் திறவு கோலைத் தந்தவரல்லவா? இந்த ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை 'குடந்தை உத்தமன்' (1. 5:4) என்கின்றார். 'தண்குடந்தை நகரா ளன்' (3. 6, 5, 7) என்று பேசுகின்றார்; 'கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைதலைக் கோவினை...மறக்கேனே' (7. 3:8) என உள்ளம் உருகப் பாடுகின்றார்.

**தூவிசேர் அன்னம் மன்னும்**
**சூழ்புனல் குடந்தை யானைப்**
**பாவியேன் பாவி யாது**
**பாவியேன் ஆயினேனே** —திருக்குறுந். 14

என்று உளம்உருகப் பாடுகின்றார். 'பழுதே பலகாலும் போயின' என்று அங்கலாய்க்கின்றார். திருவுக்கும் திருவா கிய அழுந்தையில்மன்னி நின்ற அஞ்சனக் குன்றம்தன்னைச் சேவிக்கும் போதும் இந்த நகர் எம்பெருமான் ஆழ்வாரின் மனக் கண்ணுக்கு இலக்காகின்றார்

**பேராளைக் குடந்தைப்**
**பெருமானை இலங்கொளிசேர்**
**வாரார் வனமுலையாள்**
**மலர்மங்கை நாயகனை**
**ஆரா இன்னமுதை**
**தென்அழுந்தையில் மன்னிநின்ற**
**காரார் கருமுகிலைக்**
**கண்டு களித்தேனே** (7-6:9)

என்று எக்களிப்புடன் பாடுவதைக் காணலாம்.

எம்பெருமான் ஆசாரியனாக நின்று கள்வன் நிலையில் திருமந்திர உபதேசம் பெற்ற ஆழ்வார்.

தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுதுஎன்
நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாரா யணாஎன்னும் நாமம் (1-1;2)

என்று பாடி மகிழ்கின்றார். 'தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்' என்றது பெருமாளும் பிராட்டியாரும் பிரியாது வாழும் சேர்த்தியைச் சொன்னபடியாம். ஈண்டு அன்னம் என்றது பெருமானை; துணை என்றது பிராட்டியை. நம்முடைய குற்றங்களைப் பொறுப்பிப்பவளும் பொறுப்பிப்பவனும் பிரியாது வாழும் இடம் குடந்தை என்றபடியாம்.

முதல் திருமொழியில் இங்ஙனம் பேசிய ஆழ்வார் இறுதிப் பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்திலும் 'தண் குடந்தைக் கிடந்த மாலை, நெடியானை, அடிநாயேன் நினைந்திட்டேனே' (திருநெடுந். 29) என்று நாயகி நிலையில் திருக்குடந்தைக் கிடந்த மாலைப் பேசித் தலைக்கட்டுவதால் இப்பெருமான்மீது இந்த ஆழ்வார் கொண்டுள்ள மிக்க ஆதரம் உறுதிப் படுகின்றது. பரகால நாயகி நிலையிலும்,

பெற்றேன்வாய்ச் சொல்இறையும்
பேசக் கேளாள்
பேர்பாடி தண்குடந்தை
நகரும் பாடி
பொற்றா மரைக்கயம்நீர்
ஆடப் போனாள்;
பொருஅற்றாள் என்மகள்உம்
பொன்னும் அஃதே (ஷை-19)

என்று தாய்ப் பாசுரமாகப் பேசுவர்.

**ஆழ்வாரின் இறையநுபவம் :** திருமங்கையாழ்வாரின் பாசுரங்களை ஊன்றிப் படிப்போர் அவர் எம்பெருமானை இரண்டு வழிகளில் அநுபவிப்பதை நன்கு அறியலாம்; தாமான தன்மையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவித்தல் ஒருவகை. பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்று வாயாலே பெண்பேச்சாகப் பேசி அநுபவித்தல் மற்றொரு வகை.

திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் யாவரும் அர்ச்சாவதார மூர்த்திகளே ஆவர். விபவாவ மூர்த்திகளும் அர்ச்சைவடிவில்தான் எழுந்தருளியுள்ளனர். சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரமேயாதலால் எல்லா ஆழ்வார்களுமே அர்ச்சாவதாரங்களில் ஆழங்கால் பட்டு அநுபவிக்கின்றனர். திருமங்கையாழ்வார் அர்ச்சாவதாரத்தை அநுபவிப்பதில் பல நிலைகளைக் காண்கின்றோம்.

தாம் பெற்ற அர்ச்சாவதார அநுபவத்தை இவ்வையகமும் பெற வேண்டுமென்று எண்ணிய பரந்த நோக்குடைய இந்த ஆழ்வார் பிறரையும் அந்தத்திருத் தலங்கட்கு ஏகுமாறு ஆற்றுப் படுத்துகின்றார்.

**தில்லை, திருச்சித்திரகூடம்**
**சென்று சேர்மின்களே** (3-2)

**திருநறையூர் மணிமாடம்**
**சேர்மின்களே** (6-6)

**காழிச், சீராம விண்ணகரே**
**சேர்மின் நீரே** (3-4)

என்று திருத்தலங்கட்கு ஆற்றுப் படுத்துவதைக் காணலாம். இதனை ஒரு முறைக்கு ஒன்பது முறையாகச் சொல்லிச் சொல்லி வற்புறுத்துவதையும் காணலாம்.

சிலசமயம் ஆழ்வார் தம்மனத்தை வேறாகவும் தம்மை வேறாகவும் வேறு படுத்திக் காட்டும் முறையில் மனத்திற்கு-நெஞ்சத்திற்கு-உபதேசஞ் செய்யும் முறையைக் கையாளுவதையும் காணலாம்.

மணிமாடக் கோயில்
வணங்கு, என் மனனே (3-8)

நாங்கூர், வைகுந்த விண்ணகரம்
வணங்கு, மட நெஞ்சே (3-9)

நாங்கூர், அரிமேய விண்ணகரம்
வணங்கு, மட நெஞ்சே (3-10)

திரு, வேங்கடம் அடை
நெஞ்சமே! (1-8)

என்று தம் நெஞ்சத்தைப் பன் முறை வற்புறுத்துவதையும் கண்டு மகிழலாம்.

**பாகவதர்களின் பெருமை:** பாகவதர்களின் பெருமையை இந்த ஆழ்வார் எடுத்துக் காட்டியிருப்பது நம் கவனத்திற்கு உரியதாகும். ஆன்மா உய்வதற்கு இன்றியமையாது அறிய வேண்டிய பொருள்கள் யாவும் பெரிய திருமந்திரத்தினுள்ளே அடங்கியுள்ளன என்று முமுட்சுப்படி (முமுட்சு-23) போன்ற நூல்கள் குறிப்பிட்டாலும் இவற்றுள்ளும் சாரமாய் அறிந்துள்ள பொருள் 'அடியார்க்கு அடிமை' என்பது தேர்ந்த பொருளாகும் என்பது இவ்வாழ்வாரின் கருத்தாகும்.

பகவத் சேஷத்துவதற்கு எல்லை நிலம் பாகவத சேஷத்துவமாகும். இதனைத் திருக்கடல்மல்லைத் திருப்பதிகம் (26), திருச்சேறைத் திருப்பதிகம் (7-4) ஆகிய இரண்டிலும் விளக்குவார் ஆழ்வார். இந்த இரண்டு திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப்

பணிகின்ற பாகவதர்களே தாம் வழிபடுவதற்கு உரியவர்கள் என்கின்றார் ;

**தண்ணார்ந்த கடல்மல்லைத்**
**தலசயனத் துறைவாரை**
**எண்ணாதே இருப்பாரை**
**இறைப்பொழுதும் எண்ணோமே** *(2-6:1)*

**தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார்**
**காண்மின்என் தலைமே லாமே** *(7-4:1)*

என்ற திருமொழிகளில் இத்திருக் குறிப்பைக் கண்டு மகிழலாம்.

**நாயக-நாயகி பாவனை :** பரம் பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான உறவுகள் உண்டு என்பதாகக் கூறுகின்றது திருமந்திரம். இது சம்பந்தஞானம் என்று பேசப் பெறும். இந்தச் சம்பந்த ஞானம் இல்லாத காரணத்தால் நாம் ஈசுவரனை விட்டுப் பிரிந்து பிறவிக் பெருங்கடலில் ஆழ்ந்து நீந்தமுடியாமல் துன்புறுகின்றோம். எம்பெருமானையும் நம்மையும் சேர்த்து வைப்பது இந்தச் சம்பந்த ஞானமே யாகும். இந்த ஞானம் இல்லாத பிறப்பு வீண் பிறப்பு ஆகும்.

இந்த ஒன்பது வகை உறவுகளில் தலை சிறந்தது நாயக-நாயகி பாவனை யாகும். இந்த முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் கொண்டு பகவதநுபவம் நடைபெறும். திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்களிடம் சில சமயம் ஞானம் தலைதூக்கி நிற்கும்; அப்பொழுது அவர்கள் தாமான தன்மையில் தம் அநுபவத்தைப் பாசுரங்களாக அருளிச் செய்வர். சிலசமயம் அவர்களிடம் காதல் (பிரேமம்) மீதூர்ந்து நிற்கும்; அப்போது அவர்கள் பெண் பாவனையில் பாசுரங்களை அருளிச் செய்வர். இதனை,

ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு

என்று ஆசாரிய ஹிருதயம் என்ற பக்திப் பனுவல் குறிப்பிடும். நாயகி நிலையில் பேசும்போது ஆழ்வார்களின் ஆண்மைப் பெயர் நீங்கிப் பெண்மைப் பெயர் வழங்கப் பெறும். நம்மாழ்வார் (பராங்குசர்) 'பராங்குச நாயகி' என்ற பெயரைப் பெறுகின்றார். திருமங்கையாழ்வார் (பரகாலர்) 'பரகால நாயகி' என்ற பெயரைப் பெறுகின்றார்.

ஆழ்வார் பெருமக்கள் சங்ககால நெறியை யொட்டி ஓர் அகப் பொருள் தத்துவத்தை அமைத்துக் காட்டிய பெருமையினைப் பெற்றனர். மகளிர்மீது வைத்துப் பேசப் பெறும் 'விஷயாந்திரகாமம்' மாதவன்மீது வைத்துப் பேசப் பெறும் 'பகவத் விஷயகாமம்' என்று பரிணாமமாக வளர்த்த பெருமை ஆழ்வார்களுக்கு உண்டு. தம் அகப் பொருள் பாசுரங்களில் விஷயாந்திர காமத்திற்குரிய துறைகள் யாவும் பகவத்விஷய காமத்திற்கும் வழங்கிய சிறப்பு இவர்கட்கு உண்டு. சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல, பகவத் விஷயாநுபவத்திற்கும் பரபக்தி, பரஞானம், பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப் பெறுகின்றன என்று சமயச் சான்றோர் பணிப்பர்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும் பொழுது அவர்கள் பாசுரங்களும் தோழி சொல்வதுபோல் வடிவெடுத்துத் 'தோழிப் பாசுரம்' என்று பெயர்பெறும்; தாய் சொல்லுவதுபோல் வடிவெடுத்துத் 'தாய்ப்பாசுரம்' என்று திருநாமம் பெறும். தலைவி பேசுவது போல் வடிவெடுத்து 'மகள் பாசுரம்' என்று வழங்கப் பெறும். இவ்வாறு அமைந்துள்ள பாசுரங்கட்குத் தத்துவம்

காட்டிய பெருமை உரையாசிரியர்கட்கு உண்டு. தோழி கூற்றாக வரும் பதிகங்களில் அநந்யார்ஹத்துவம் தெரியும். அநந்யார்ஹத்துவம் என்பது, மற்றவருக்கில்லாமல் ஈசுவரனுக்கே உரித்தாயிருத்தல். தாய்ப் பாசுரமாக வருவதில் பாரதந்திரியம் தெரியும். பாரதந்திரியம் என்பது, பகவானுக்கு வசப்பட்டிருத்தல். மகள் பாசுரமாக நடைபெறுவதில் சித்தோபாயம் தெரியும். 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டினையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெற வேண்டும் என்ற பதற்றத்தை உடையவளாக இருக்கும் மனநிலை தெரியும். திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் 'தோழிப் பாசுரங்கள்' இல்லை. விரிவஞ்சி எடுத்துக்காட்டுகளால் இந் நிலைகளை விளக்கவில்லை.

**திருமந்திரத்தின் பெருமை :** இந்த ஆழ்வார் எம்பெருமானிடம் நேராக எட்டெழுத்து மந்திரத்தை உபதேசம் பெற்றவர். ''செல்கதிக்கு உய்யுமாறு எண்ணி 'நாராயணா' என்னும் நாமத்தை நல்துணையாகப் பெற்றவர்.'' ஆதலால் இவர் சொல்லுகின்றார்: 'நாராயணமந்திரத்தை அநுசந்திப்பவர்கட்கு யாவரும் கொண்டாடும்படியான சேஷத்துவ ஞானமாகின்ற குலத்தைத் தரும்; அக்குலத்திற்கேற்ற கைங்கரியமாகின்ற பெருஞ் செல்வத்தை அளிக்கும்; தொண்டர்கள் அநுபவிக்கும் துக்கம் என்னும் பெயரையுடைய எல்லாவற்றையும் தரைமட்டமாக்கும்; கைங்கரியத்திற்கு இடையீடின்றி மேன்மேலும் வளர்ந்தோங்கச் செய்வதான பரமபதத்தைக் கொடுக்கும்; தன் கருணையினால் தன்னை அநுபவிப்பதால் ஏற்படும் பேரானந்தத்தில் திளைக்கச் செய்யும்; தான் செய்யும் கைங்கரியத்திற்குத் தான் கருத்தா என்றும் அதை அநுபவிப்பவன் என்றும் நினையாமலிருத்தலாகின்ற வன்மையையும், சேஷத்துவ சொரூபததிற்கு ஏற்ற மற்ற தன்மைகளையும் தரும்; பெற்ற தாயைக்காட்டிலும் பல நலங்களைப் புரியும்,'' என்கின்றார் ஆழ்வார்.

திருமங்கையாழ்வார் திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை பெற்றார் என்பதை முன்னர்க் குறிப்பிட்டேன். இதனால் நம்பி இந்த ஆழ்வாருக்கு ஆசாரியராகின்றார். ஆசாரியருடைய திருநாமமே அநுசந்தேயமாதலால் பெரிய திருமந்திரமாகிய அத்திருநாமத்தைத் தாமும் அநுசந்தித்துப் பிறர்க்கும் கற்பிக்கும் முறையில் பேசுகின்றார் திருநறையூர்த் திருமொழி யொன்றில் (6.10). திருக்குடந்தையில் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிப்பவனும் வராகாவதாரத்தில் பூமிப்பிராட்டியை அண்டபித்தியினின்றும் ஒட்டு வித்தெடுத்தவனும், இலங்கையை அழித்த பெருமானும்' மூவுலகை ஈரடியால் அளந்தவனுமாகிய பெருமானின் திருநாமம் 'நமோ நாராயணம்' என்பது. இத்திருமொழி முழுவதும் நாராயண நாமத்தைச் சொல்லும் போக்கிலேயே அமைந்துள்ளது.

பிறபத்திநெறி : இந்த நெறி சரணாகதி நெறியாகும். இஃது எல்லோரும் அநுட்டிக்கக்கூடியது. சுக்கிரீவன் வீடணன் காகம் (காகாசுரன்) திரௌபதி முதலியோர் இந்நெறியைக் கடைப்பிடித்தே உய்ந்தவர்கள். இந்தப் பிரபத்தி நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். இவரைப் 'பிரபந்ந ஜனகூடஸ்தர்' என்று வழங்குவதும் உண்டு. பிரபத்தி நெறியைக் கடைப்பிடிக்கும் வைணவர்கள் யாவர்க்கும் தலைவர் என்பது இதன் பொருள், இவர் பிரபத்தி செய்தது அர்ச்சாவதாரத்திலேயாகும். திருமங்கையாழ்வார் கடைப் பிடித்த நெறியும் இதுவேயாகும். எல்லா ஆழ்வார்களும் இந்நெறியையே ஒரு குரலாகப் பேசுகின்றனர். நம்மாழ்வார் திரு வேங்கடவனைச் சரணம் புகுந்த 'அகலகில்லேன்' இறையும் (திருவாய் 6.10:10) என்று தொடங்கும் பாசுரமே சரணாகதி தத்துவத்தை விளக்கும் திருமறை போன்ற பாசுரமாகும். முதலில் 'திருவேங்கடம் அடை நெஞ்சே!' (பெரி. திரு.1.7) என்று ஒருமுறைக்கு ஒன்பது முறை கூறிய திருமங்கை ஆழ்வார் அந்த வேங்கடத்தெம்மானை நோக்கிப் பேசுகின்றார்:

வேய்ஏய் பூம்பொழில்சூழ்
 விரைஆர் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
 நல்கிஆள்என்னைக் கொண்டருளே (1.9:1)

இப்படி ஒன்பது முறைப் பன்னிப் பன்னி உரைக்கின்றார். இது சரணாகதி தத்துவத்தை-பிரபத்தி நெறியை-விளக்க வந்த பாசுரமாகும். திருவிண்ணகர் எம்பெருமானை மங்களா சாசனம் செய்யும் மூன்று திருமொழிகளும் (6.1;6.2;6.3) திருவெழுக்கூற்றிருக்கையும் சரணாகதி நெறியை விளக்குவனவாகும்.

துறந்தேன் ஆர்வச்செற்றச்
 சுற்றம்; துறந்தமையால்
சிறந்தேன் நின்அடிக்கே
 அடிமை; திருமாலே!
அறந்தான் ஆய்த்திரிவாய்!
 உன்னைஎன் மனத்தகத்தே
திறம்பாமல் கொண்டேன்
 திருவிண் நகரானே! (6.3;2)

என்ற பாசுரத்தில் இந்நெறி சுட்டப்பெற்றுள்ளதைக் காணலாம்.

உள்ளத்தை உருக்கும் பாசுரங்கள் நைமிசாரண்யத்து எம்பெருமான்மீதுள்ளவை. பாசுரங்கள்தோறும் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக 'திருவடி அடைந்தேன்' என்று சொல்லிச் சரண் அடைவதைக் காண்கின்றோம். புருஷகார பூதையாகிய பிராட்டியை முன்னிட்டுச் சரணாகதி செய்வது ஆன்மாவின் சொரூபமாகையால்,

தேன்உடைக் கமலத்
 திருவினுக்கு அரசே!
... ... ... ... ... ... ... ...

நான்உடைத் தவத்தால்
திருவடி அடைந்தேன் (1-6:9)

என்று பெரிய பிராட்டியாரை முன்னிட்டுப் பிரபத்தி செய்வதைப் பாசுரத்தில் காணலாம்.

இவ்விடத்தில்,

'சேஷிபக்கப் சேஷபூதன் இழியும் துறை
பிரஜை முலையிலே வாய்வைக்கு
மாப்போலே' (முமுட்சு-147)

என்ற முமுட்சுப் படியின் வாக்கியம் சிந்திக்கத் தக்கது: ஈண்டு பிரஜை என்பது குழந்தை. பால் பருகும் பச்சைக் குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற உறுப்புகள் யாவற்றையும் விட்டு, தான் உயிர் வாழ்வதற்கிடனாய் உள்ள அவள் கொங்கையில் வாய்வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகின்ற எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே சீவன் (சேதநன்) பற்றுகின்றான் என்பதை இந்த வாக்கியம் அழகாய்ப் புலப்படுத்துகின்றது. கொங்கையில் வாய் வைத்தல் குழந்தைக்கு இயல்பாய் அமைந்ததைப் போலவே, திருவடிகளைப் பற்றும் செயலும் சேதநனுக்கு இயல்பாய் அமைந்துள்ளது என்பதை நாம் அறிதல் வேண்டும். மேலும்,

'பிராட்டியும் அவனும் விடினும்
திருவடிகள் விடாது திண்கழலா யிருக்கும்'
முமுட்சு—146

என்று விளக்குவர் அந்த ஆசாரியப் பெருமகனார்.

பிரபத்தி செய்வோருக்கு முக்கியமாக வேண்டப் பெறுபவை ஆகிஞ்சன்யமும் அநன்னிய கதித்துவமும் ஆகும். ஆகிஞ்சன்யம் என்பது, கன்மஞான பக்திகளாகின்ற மற்ற உபாயங்களில் தொடர்பற்றிருக்கை. அநன்னிய கதித்துவம் என்பது, ஆன்மா பாதுகாப்பிற்கு எம்பெருமானைத் தவிர,

வேறொரு காக்கும் பொருள் அற்றிருக்கை. 'புகலொன் றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' (திருவாய் 6.10:10) என்ற நம்மாழ்வார் வாக்கில் இதனைக் காணலாம். திருமங்கையாழ்வாரும்,

> **நலந்தான் ஒன்றுமிலேன் நல்ல தோரறஞ்**
> **செய்துமிலேன்** (பெரி.திரு.1.9;4)

என்று திருவேங்கடம் பற்றிய திருமொழிப் பாசுரம் ஒன்றில் இக்கருத்தினையே கூறியிருத்தலையும் காண்கின்றோம்.

புருஷகாரம் (தகவுரை; அல்லது சேர்ப்பிக்கும் தன்மை) பிராட்டிக்கு உரியது என்பது வைணவ தத்துவம், இங்கு அவள் புருஷகார பூதையாகச் செயற்படுகின்றாள். பிரபத்தி நெறியில் பெரிய பிராட்டியாரோடு கூடிய எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப்பற்ற வேண்டும் என்பது விதி. வைணவ மந்திரமாகிய துவயத்தின் முதற்பதமாகிய 'ஸ்ரீமத்' என்பதில்—'மதுப்பால்'—இது மிகத் தெளிவாக விளக்கமடைகின்றது. இந்த மதுப்பு புருஷகாரமான பிராட்டியும், உபாயமான பெருமானும் ஆகிய இவர் களுடைய நித்திய சேர்க்கையைத் தெரிவிக்கின்றது. மக்களுக்கு இறைவனும் இறைவியுமான இருவரோடு சம்பந்தம் இருக்கவும், இறைவனை அடையும்போது இவள் புருஷகாரமாக அமைவது ஏன்? என்ற வினா எழுகின்றது.

இதனையும் விளக்க வேண்டியது இன்றியமையாததா கின்றது. சேதநன் தான் எம்பெருமானுக்குச் சேஷபூதன் (அடிமை) ஆகவும், எம்பெருமான் தனக்குச் சேஷி (தலைவன்) ஆகவும் இருக்கும் தொடர்பை நன்கு அறிந்த வன் என்பது உண்மையே. ஆயினும், "இவள் தாயாம் தன்மையால் வந்த வாத்சல்யத்தை மிகுதியாக உடையவள்; தந்தையாகிய எம்பெருமானைப்போல் வன்மையும் மென்மையும் கலந்திராமல் 'மென்மையே வடிவு கொண்ட

வள். பிறர் கண்குழிவு காட்டமாட்டாத தன்மையள்; தீயமனமுடையவர்களையும் மருவித்தொழும் மனமுடைய வர்களாக்குகைக்குத் தக்க செயல் புரிபவள்; குற்றமுடைய வர்களும் கூசாமல் வந்து காலிலே விழலாம்படி இருப்பவள்; ஆண்மையால் வந்தவன்மையோடே தந்தையாம் தன்மை யால் வந்த நலம் செயும் தன்மையுடைய வரையும், குற்றங் களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டுக் கொடிய தண்டனை களை விதிக்கும் செய்கையாலே, குற்றமுடையவர்கள் முன் செல்லக் குடல்கரிக்கும்படி இருக்கும் சர்வேசுவரனைத் தக்க வழிகளாலே குற்றங்கள் அனைத்தையும் மறைப்பித்துச் சேர்ப்பிக்கும் தன்மையள்; இத்தகைகவள் பாவமே செய்து பாவிகளான மக்கள் சர்வேசுவரனைப் பற்றுங்கால் புருஷ காரமாக வேண்டும்" என்பது மணவாளமாமுனிகளின் கருத் தாகும். (ஸ்ரீ. வச.பூஷ. 7 இன்உரை).

இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

**"நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக"** (முமுட்சு 127)

என்று விளக்குவர். பகவான் மிக்க அருள் நிறைந்த திருவுள்ளத்தனாய் இருப்பினும், சேதநன் செய்யும் அளவு கடந்த குற்றங்கள், குளிர்ந்த நீரில் நெருப்புப் பிறத்தல் போன்று, அவனுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. அச்சீற்றத்தை மாற்றிக் கொண்டு இவனுடைய குற்றங் களைப் பொறுப்பது பிராட்டியாருக்காகவே என்பதை உளங்கொள்ள வேண்டும்.

பிராட்டியார் உலக உயிர்கட்குத் தாயாக இருப்பதால், இவர்களுடைய துக்கத்தைப் பொறாதவராயும் இருக் கின்றார். எல்லோருடைய அன்பைக் காட்டிலும் தாயன்பு சிறந்த தன்றோ? பிராட்டியார் பகவானுக்குப் பத்தினியாக

வும் இருப்பதால், அம்முறையில் அவனுக்கு இனிய பொருளாயும் இருக்கின்றார். இக்காரணத்தால் இவரே அருள் நிறைந்த புருஷகாரமாக அமைந்து விடுகின்றார். இதனால் இவர் உயிர்களுக்கு அருள் நிறைந்த புருஷகார மாக இருந்து இருவரையும் உபதேசத்தால் திருத்துகின்றார் (முமுட்சு-128). இதனை ஸ்ரீவசன பூஷணமும்,

''இருவரையும் திருத்துவது உபதேசத்தாலே'' (வாக்.12)

என்று பகர்கின்றது. இதனை நன்கு விளக்க வேண்டும்.

எம்பெருமாட்டி இறைவனை நோக்கி இவ்வாறு பேசுவாள்: ''சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு நீர் இப்படித் தள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறு புகல் உண்டோ? உனக்கும் இவனுக்கும் உண்டான உறவு முறையைப் பார்த்தால் 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது (திருப் 28) என்கின்றபடி குடநீர் வழிந்தாலும் போகாதது ஒன்று உண்டோ? உடைமையாக இருக்கின்ற இவனை அடைதல் சுவாமியான உம்முடைய பேறாக அன்றோ இருப்பது? எதிர் சூழல் புக்குத் (திருவாய் 2-7;6) திரிகின்ற உமக்கு நான் சொல்ல வேண்டுமா? காப்பாற்ற வேண்டும் என்ற விருப்பத்தோடு வந்த இவனைக் காப்பாற் றாது விட்டால் 'எல்லாப் பொருள்களையும் காப்பவர்' என்ற உம்முடைய தன்மை குலைந்து போகாதோ? அநாதி காலமாக நம்முடைய ஆணையை மீறித் தன் இச்சைப்படி ஒழுகிப் போந்த இவனைக் குற்றங்களுக்கேற்பத் தண்டிக்காமல் நாம் ஏற்றுக் கொள்ளின், நாம் ஏற்படுத்திய சாத்திரங்களின் மரியாதை குறையாதோ என்றல்லவா நும் திருவுள்ளத்தில் ஓடுகின்றது? அங்ஙனமாயின், நும்மை நாடி வந்த இவனைக் காக்காமல் இவனுடைய குற்றங்களை மட்டிலும் நோக்கித் தண்டித்தால் உம்முடைய அருட்குணம் நிலைப்பது எவ்வாறு? இவனைக் காப்பாற்றிய பொழு தன்றோ உம்முடைய அருட்குணம் ஒளிபெறும்? 'இவனைத் தண்டிக்கவில்லையேல் சாத்திரம் நிலையாது; இவனைக்

காக்கவில்லையேல் அருள் முதலிய குணங்கள் ஒளிபெறா என்று அஞ்ச வேண்டா; உம்மைச் சிறிதும் நோக்கிப் பாராது தன்னிச்சையில் செயல் படுபவனிடம் சாத்திரத்தைப் பயன் படுத்துவீர்; உம்மை அன்புடன் நாடிவந்த இவனைப் பாவங் களினின்றும் நீக்கிக் காப்பாற்றுவீர். இப்படிச் செய்தால் சாத்திரமும் பழுது படாது: உம்முடைய அருட்குணமும் உயிர் பெற்றுத் துலங்கும்". இவ்வாறு எம்பெருமானுக்கு ஏற்ற பற்பல இனிய சொற்களைப் பகர்ந்து அவன் சினத்தை மாற்றி, அவனுக்குச் சேதநனிடம் அருள் பிறக்குமாறு செய்வர். இவ்வினிய சொற்களாலும் எம்பெருமானது நெஞ்சம் இளகவில்லையேல், பிராட்டியார் தம் அழகைக் காட்டி அவனைத் தம் வசப்படுத்திச் சேதநனை அங்கீகரிக்கு மாறு செய்வர்.

எம்பெருமாட்டி சேதநனை நோக்கி இவ்வாறு பேசுவர்: "உன் குற்றங்களின் மிகுதியைப் பார்த்தால், உனக்கு ஓரிடத்திலும் காலூன்ற இடம் இல்லை. ஈசுவரன் யாதொன்றாலும் தடைசெய்யப் பெறாத சுவாதந்திரத்தை யுடையவனாதலால், குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டு அறுத்து நுகர்விப்பான். இதற்கு நீ தப்ப வேண்டுமாகில், அவன் திருவடிகளில் தலைசாய்க்கையைத் தவிர வேறுவழி இல்லை. குற்றங்கள் நிறைந்த உன்னை அவன் ஏற்றுக் கொள்வானோ? என்ற ஐயம் வேண்டா; ருசி பிறந்த அளவில் உன்னுடைய குற்றங்கள் அனைத்தையும் பொறுப்பான். இனியனவாகவும் கொள்ளுதற்கு ஈடானவு மான குணங்களால் நிறைந்தவன் என்று புகழ் பெற்றவன். ஆகவே, நீ உய்ய வேண்டுமாகில் அவனை அடைந்திடுக" என்று நல்லுபதேச செய்வார்.

இந்த இரண்டையும் கருத்தில் கொண்ட பிள்ளை உலக ஆசிரியர்,

"உபதேசத்தால் மீளாத போது சேதநனை அருளாலே திருத்தும்; ஈசுவரனை அழகாலே திருத்தும்"

(ஸ்ரீவச. பூஷ. 14)

என்று அழகாகக் காட்டுவர். உபதேசத்தால் சேதநன் மீளாமைக்குக் காரணம் ""யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு, அங்கு ஆப்புண்டும், ஆப்பு அவிழ்ந்தும், மூது ஆவியில் தடு மாறும் உயிர்" (திருவிருத். 95) என்பதுவேயாகும். அதாவது இறைவனிடத்தில் ருசி இல்லாதவனாய், இவ்வுலக இன்பத் தில் ருசி உள்ளவனாய்ப் போதலினால் வந்த கெட்ட வாசனை முதலியவைகள். இறைவன் மீளாமைக்குக் காரணம் மக்கட்குத் தகுதியாகத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தாலே நின்ற நிலை இளகாமல் நிற்கைக்கு இட மான நிரங்குச் சுவாதந்திரியம்; அதாவது தடை இல்லாத சுவாதந்திரியம் என்பதனாலாகும்.

இனி, மக்களை அருளாலே திருத்துதல் யாங்ஙனம்? 'ஐயோ, இவனுடைய தீய அறிவு நீங்கி ஈசுவரனிடத்தில் ருசி உண்டாவதற்கு அடியான நல்லறிவு உண்டாக வேண்டும்' என்று அவர்கள் திறத்தில் தான் பண்ணுகின்ற 'பங்கயத்தாள் திருவருள்' (திருவாய் 9.2;1) என்கிற மேலான அருளாலே அவர்களுடைய தீயஅறிவு குலைந்து பகவானிடத்தில் ருசியுடையனாம்படி செய்தலாகும். ஈசுவரனை அழகாலே திருத்துதல் யாங்ஙனம்? 'ஓம் காண், போ, உனக்குப் பணி அன்றோ இது?' என்று உபதேசத்தை உதறி எறிந்துவிட்டு, கண்களைப் புரட்டுதல், கச்சையை நெகிழ்க்குதல் முதலிய சாகசச்செய்கைகளால் அவனைப் பிச்சேற்றித் தான் சொன்னபடி செய்தலல்லது வேறுவழி யில்லாமல் செய்து அங்கீகாரத்தைச் செய்வதிலே நோக்குடையவனாகச் செய்தலாகும். பெரிய மிடுக்கனும் முரடனுமான அநுமனையே அசோகவனத்தில் தம் உபதேசத்தால் பொறுக்குமாறு செய்த பிராட்டியார் தம் அழகில் சிக்குண்டு தம்மிடம் அளவு கடந்த அன்புடையவனும் தம் சொல்லின்படி நடப்பவனுமான (Hen-pecked) பெருமானைப் பொறுக்குமாறு செய்வர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இங்ஙனம் பிராட்டியாரின் புருஷகாரத்தினால் ஈசுவரனின் சுதந்திரத்தன்மை மாய்கின்றது; புருஷகாரத்திற்கு முன்பு தலையெடுக்கப் பெறாமல் மறைந்திருந்தன வான வாத்சல்யம், செளலப்பியம், செளசீல்யம், சுவாமித்துவம் முதலான குணங்கள் ஓங்கி நிற்கும்; இவற்றுள் வாத்சல்யம், செளலப்பியம் மிக முக்கியமானவை. இவை எம்பெருமானைப் பற்ற வேண்டும் என்னும் நினைப்புடன் நிற்கும் சேதநனுக்கு இறைவனைக் கண்டு அஞ்சாமை உணர்வு ஏற்படச் செய்கின்றன. எம்பெருமானைப் பற்றும்போது உதவிபுரிவது செளலப்பியம் என்னும் அருள் குணமாகும்.

கருணையே வடிவு கொண்ட பிராட்டியார் அருகிலிருந்து இராமபிரானுடைய அருட்டன்மை மேல் கிளம்பச் செய்ததனால் காகாசுரன் பிழைத்தான். பிராட்டியார் பிரிந்ததனால் இராவணன் இராமபிரானின் அம்பிற்கு இலக்காகி உயிரிழந்தான், 'உந்து மதகளிற்றன்' (திருப்.18) என்ற திருப்பாவையின் உரையில் காணும் குறிப்பும் ஈண்டு நினைத்தல் தகும். ''பிராட்டியை விரும்பாமல் பெருமானைப் பற்றின சூர்ப்பணகை கேட்டினை அடைந்தாள்; பெருமானையொழிய பிராட்டியைப் பற்றின இராவணனும் கேட்டினை அடைந்தான்; இருவரையும் பற்றின வீடணன் உய்ந்தான்'' என்பதுவே அந்த உரைக் குறிப்பாகும்.

இன்னும் வாலி இராமனது அம்புபட்டு அவனை ஏசிப் பேசின போதுள்ள,

ஆவியைச் சனகன் பெற்ற
    அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
    திகைத்தனை போலும் செய்கை

—கிட்கிந்.வாலிவதை-38.

என்ற பாடற்பகுதியும் ஈண்டு நம் நினைவில் எழுகின்றது. ''மனைவியைப் பிரிந்ததனால் உன் மதிகெட்டுப்போய் இங்ஙனம் மறைந்து நின்று அம்பு எய்த அடாத செயலைப் புரிந்தாயோ?" என்ற தொனி இதில் காணப்படினும், ''புருஷகார பூதையான பிராட்டி அருகில் இல்லாததனால் தான் எனக்கு இக்கேடு நேர்ந்ததோ?" என்ற ஆழ் பொருளும் இதில் அடங்கிக் கிடக்கின்றதையும் சிந்தித்து அறிந்து மகிழ்கின்றோம், இங்ஙனமாக, பிரபத்திக்குப் 'பிராட்டியின் புருஷகாரம்' இன்றியமையாததாகின்றது. ஆகவே, பிரபத்தி செய்யும்போது எம்பெருமான்-எம்பெருமாட்டி ஆகிய இருவர் சேர்த்தியில்தான் இரக்க வேண்டியவர்களாகின்றோம் என்பதை அறிகின்றோம். இதற்கு எம்பெருமானார் (இராமாநுசர்) நம்மனோர் புரிந்த கொடிய குற்றங்களைப் பொறுக்குமாறு படிதாண் டாப் பத்தினியாகிய சீரங்க நாச்சியாரும் அழகிய மணவாளப் பெருமாளும் ஒரே சேர்த்தியில் எழுந்தருளி யிருக்கும் காலத்தை நோக்கிக் கொண்டிருந்து பங்குனி உத்தரத்தில் பிரார்த்தித்ததுவே தக்க சான்றாகும்.

இறுவாய் : திருமங்கையாழ்வார் மிகவும் ஈடுபாடு கொண்ட எம்பெருமான்கள் திருக்குடந்தை ஆரா அமுதனும் திருக்குறுங்குடி நம்பியும் ஆவர். நம்பி எழுந்தருளியிருக்கும் திருக்குறுங்குடியில்தான் திருமங்கையாழ்வார் தம் துணைவி குமுதவல்லியாரோடு தம் இறுதிக் காலத்தைக் கழிக் கின்றார். பரம விரக்தராய்ச் சிலகாலம் நம்பியின் வடிவழகைக் கண்டு அநுபவித்துக் கொண்டிருந்து அங்கிருந்தே திருநாட்டுக்கு எழுந்தருளுகின்றார்.

**கலந்ததிருக் கார்த்திகையில்**
**கார்த்திகை வந்தோன் வாழியே**
**காசினியில் குறையலூர்க்**
**காவலோன் வாழியே**

நலந்திகழா யிரத்தெண்பத்து
நாலுரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும்
நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற் றிருக்கையிரு
மடல்தந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்றிருபத்
தேழீந்தான் வாழியே
வலந்திகழும் குமுதவல்லி
மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன்
மங்கையர்கோன் வாழியே

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

# 3. வாய்மொழியும் வாசகமும்†

இன்பமும் துன்பமும் நிறைந்து ஒளியும் இருளும் சூழ்ந் துள்ள இவ்வுலகில் வாழப் பிறந்தவன் மனிதன். இன்ப வெளியை நாடிச் செல்லும் அவனுக்கு வழிகாட்டுவதற்கு எய்ப்பினில் வைப்பாகக் கிடைத்திருப்பவை அநுபூதி நிலையை அடைந்த அருளாசிரியர்களின் அருளிச் செயல்கள். தமிழ் மொழியில் இவை ஏராளம், ஏராளம். இவற்றுள் 'திருவாய் மொழியும்' 'திருவாசகமும்' ஈண்டு ஒப்பு நோக்கிக் காண்பதற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றன. இவற்றுள் நம் கவனத்தைச் செலுத்துவோம்.

இந்தக் கட்டுரையில் நாம் குறிப்பிடுவது: 'வாசகம்' என்பது திருவாசகம். 'வாய்மொழி' என்பது திருவாய் மொழி. திருவாசகத்தை அருளியவர் வாதவூரடிகள். திருவாய்மொழியை அருளியவர் மாறன் என வழங்கப்படும் சடகோபர்; நம்மாழ்வார். வாதவூரடிகள் முறையாகக் கல்வி பயின்று கற்றுத்துறைபோய வித்தகரானவர். ஐம்புல இன்பமும் ஆரத்துய்க்கும் அரச வாழ்வில், அமைச்சர் பதவியிற் சிக்கி, பிறந்ததன் பயனைச் சிறிது மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகட்கு இறைவன் திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியில் குருமூர்த்தியாக எழுந்தருளி உண்மை ஞானத்தை உணர்த்த, அதன் விளைவாக எழுந்த அநுபவ ஞானத்தைக் காட்டுவது திருவாசகம். கருவிலே திருவுடைய மணிவாசகப் பெருமான்,

---

† மதுரை - காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்) மணிவிழா மலரில் (1988) வெளி வந்தது.

உருத்தெரியாக் காலத்தே
 உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
 கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை (475)

என்ற பாடலில் தான் கருவிலிருந்த போதே தன்னைச் சிவபெருமான் ஆட்கொண்டதாகக் கருதுவர். திருப்பெருந் துறையில் ஆட்கொண்ட சிறப்பை,

செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
 திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய் (373)

என்ற திருப்பள்ளியெழுச்சிப் பாடலாலும்,

தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம்
 காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித்
 தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய
 நாம்மேலை வீடெய்த
ஆட்டான் (180)

என்ற திருவம்மானைப் பாடலாலும் தெளிவிக்கின்றார்.

உயர்வற உயர்நலமுடையவனான எம்பெருமானால் மயர்வற மதிநலமருளப் பெற்றவர் சடகோபர். கருவிலே திருவுடையவர். திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் சந்நிதியிலுள்ள திருப்புளியாழ்வார் (புளியமரம்) அடியில் பதினாறு வ்யதளவும் கண் விழியாமல் மௌனமாக எழுந்தருளியிருந்தபோது பரமபதநாதன் நியமனப்படி சேனை முதலியார் என்கின்ற விஷ்வக்சேனர் யாரும் இல்லாதபோது தனிமையில் எழுந்தருளி இவருக்குத்

திருவிலச்சினை செய்து எல்லாவித மந்திரார்த்தங்களையும் உபதேசித் தருளினார் என்பது வரலாறு. இந்த ஆழ்வார் ஓதாது உணர்ந்த ஞானச் சிறப்புடையவர் என்பதை,

அறியாக் காலத்துள்ளே
அடிமைக்கண் அன்புசெய்வித்து
அறியா மாமாயத்து
அடியேனை வைத்தாயால்

என்ற அகச்சான்றினால் அறியலாம்.

சடகோபர் திருப்புளியாழ்வார் அடியில் எழுந்தருளி யிருந்தபோது உலகியலைச் சிறிதும் நினையாமல் இறைவன் சிந்தனையிலேயே ஆழங்கால் பட்டிருந்தார். அப்போது இவரது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி, 'தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூறான உடல் தொடர்பை அறுத்துத் தந்தருள வேண்டும்' என்று சம்சார சம்பந்தத்தைப் புறக்கணிக்க நினைத்தார். ஆனால், எம்பெருமான் இவரது விருப்பத்தைத் தலைக் கட்டித் தந்தருளவில்லை. இந்த ஆழ்வார் சம்சாரத்தை விட்டுவிலகி நலமந்தமில்லதோர் நாட்டில் போய்ச் சேர வேண்டும் என்று பாரிப்பது தம்முடைய திருக்குணங்களை அநுபவிப்பதற் காகவே என்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் அந்த குணாநுபவத்தை இந்த லீலாவிபூதியிலேயே வாய்க்கச் செய்ய, அதனை அநுபவித்த ஆழ்வார் அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ளமிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகியது. ஒரு தாய் தன் குழந்தைக்குச் செரிமான மின்மையை நீக்கிப் பசியை மிகுவித்துச் சோறிடுமாப் போலே எம்பெருமான் தமக்குச் சுவையைப் பிறப்பித்த படியையும், அந்தச் சுவை பரபக்தி, பரஞானம், பரமபக்தி களாகப் பக்குவமானபடியையும், பின்பு பிரகிருதி சம்பந்த மற்றுப் பேற்றோடே தலைக்கட்டினபடியையும் அருளிச் செய்தார் 'திருவாய்மொழியில்'.

பெயர்க்காரணம்: திருவாசகம். திரு-அழகு, வாசகம்—வார்த்தை, சொல். திருவாசகம்—அழகிய சொல் என்பது அதனையுடைத்தாகிய நூலை உணர்த்திற்று. திரு என்பதற்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை, நோக்கம் என உரை காண்பர் பேராசிரியர், இதனைக் கண்டார் வேறு எதனையும் விரும்பார் ஆதலின் புண்ணிய கூட்டம் கண்ட பக்குவ ஆன்மாக்களால் விரும்பப்படும் தன்மையுடைய வாசகம் என்றும் பொருள் கொள்ளலாம். பண்டிதமணி அவர்கள் ''திருவாசகம் என்பது அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களாலாகிய செய்யுள் நூல் என்னும் பொருளை உடையதாகும். ... வாசகம் — சொல். இத்திருவாசகத் திருப்பாட்டுகள் தெய்வநலம் கனிந்த சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்தவை; இனிமை, எளிமை, ஆழமுடைமை என்னும் குணங்கள் தம்பால் அமையப் பெற்றவை; மெய்யன்புடன் ஓதுவார் கேட்பார் உணர்வார் எல்லோரையும் மிக்க பேரின்பத்தில் திளைப்பித்துப் பரவசப்படுத்தும் இயல்பின; அநுபவ உண்மைகளைத் தெளிவுண்டாம்படி விளக்குவன'' என்று தம் 'திருவாசகம் - கதிர்மணி விளக்கம்' என்ற நூலில் விளக்குவார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு 'திருவாசகம்' என்ற நூலில் நுழைந்து பார்க்கும் போது அடிகளாரே 'வாக்குடன் மணிவார்த்தைக் காக்கி' (30) என்றும், 'பேச்சிறந்த மாசில் மணியின் மணிவார்த்தை' (632) என்றும், இறைவனைப் போற்றிப் பாடும் தமது மொழியை 'வார்த்தை' என்று வழங்குவதைக் காண்கின்றோம். 'வார்த்தை', 'வாசகம்' என்பன ஒரு பொருட்கிளவி. அன்றியும் இறைவன் தம்மை ஆட்கொண்ட அருள் விசேடத்தை உலகத்தவர்க்கு உரைப்பது போலவும், பிரிந்ததனால் உண்டான வருத்தத்தைப்பற்றிப் பெருமானோடு உரையாடுதல் போலவும் இந்நூல் முழுவதும் அமைந்திருத்தலின் பேச்சு முறையின் அமைந்த இந்நூல் 'வாசகம்' என வழங்கப் பெற்றிருக்கலாம் என்று நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

திருவாய்மொழி : திரு-உயர்வை விளக்கும் அடைமொழி. இது வாய்க்கும் அடைமொழி ஆகலாம்; வாய்மொழிக்கும் அடைமொழி ஆகலாம். மேன்மையுடைய வாயினால் சொல்லும் சொற்களினாலாகிய நூல் என்பது பொருள். உயர்வை விளக்கும் அடைமொழி கொடுக்கும்படி ஆழ்வாரது வாக்குக்குள்ள சிறப்பு அவரது 'திருநாவீறுடைய பிரான்' என்னும் திருநாமத்தாலும் விளங்கும். திருமங்கையாழ்வாரின் அருளிச் செயலாகிய 'திருமொழியினும்' வேறுபாடு விளங்குதற்கு இது 'திருவாய்மொழி' எனப்பட்டது. வாய்மை தங்கியமொழி என்று வழங்குவாரும் உளர். ஆழ்வார் பாடிய முறையும் அவர்தம் திருவாக்குகளாலாயே தெளியலாம்.

இவருடைய ஞானக்கண்ணுக்குப் புலனான இறைவன் இவருக்கு,

> **தேனும் பாலும் கன்னலும்**
> **அமுதும் ஆகித் தித்திப்ப** (*4.3:10*)

அவனை இடைவிடாது நினைப்பதனால் உண்டான தெவிட்டாத பேரின்பம் அப்போதைக்கப்போது புதியபுதிய ஆராஅமுதம் உண்டாற்போன்று பெருகி வளர்வதாயிற்று. பொறியுணர்ச்சியைக் கடந்து உயிரின்கண் உண்டாகிய இன்பம் என்பதை,

> **ஆரா அமுதாய் அடியேன்**
> **ஆவி அகமே தித்திப்பாய்** (*5.8:10*)

> **எண்ணம் புகுந்து தித்திக்கும்**
> **அமுதே! இமையோர் அதிபதியே** (*6.10:3*)

என்பவை அவர்தம் திருவாக்குகள்.

இவர் பாடிய வாய்மொழிகள் யாவும் இறைவனது வாய்மொழிகளே என்பது இவர்தம் கருத்து. எல்லாம்

'மயர்வற மதிநலம் அருளின் (1. 1:1) இறையருளால் தம்மைக் கருவியாகக் கொண்டு நிகழ்ந்தன என்பதே ஆழ்வாரின் நினைவாக உள்ளது.

என்நெஞ்சத்து உள்ளிருந்துஇங்கு
இருந்தமிழ்நூல் இவைமொழிந்து (10.6;4)

என்றும்,

பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி
'தென்னா' என்னும் என்அம்மான் (10.7:6)

என்றும் ஆழ்வாரே கூறுவர். ஒரு திருப்பதிகம் முழுவதும் (7.6) இவ்வாறே அமைந்துள்ளது.

ஆம்முதல் வன்இவன் என்றுதன் தேற்றிஎன்
நாமுதல் வந்து புகுந்து நல்இன்கவி
தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
வாய் முதல் அப்பனை (7.9;3)

என்றும்;

என் சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன் (7.9:2)

என்றும் கூறுவர். 'என்னால் தன்னை, வன்கவி பாடும் என் வைகுந்தநாதனே" (7. 9:6) என்று மீண்டும் கூறுவர். இறைவனே அருளியதால் 'திருவாய் மொழி' என்றும், 'தமிழ் மறை' என்றும் 'யாழின் இசை வேதம்' என்றும் இவ்வாய்மொழி வழங்கப்படுகின்றது.

இறைவன் : இரண்டு ஞானச் செல்வர்களும் இறைவனைப்பற்றிக் கொண்ட கருத்து கிட்டத்தட்ட

ஒன்றுபோல் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். நம்மாழ்வார் இறைவனை 'திருவின் மணாளன்' (1. 9:1), 'ஓமகளார் தனிக்கேள்வன்' (1. 9;3), 'மலராள் மணவாளன்' (1. 10:4), 'ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' (4. 9:10), 'என்திருமகள் சேர்மார்வன்' (7. 2:9); 'திருமார்பன்' (7. 6:6), 'திருவாழ்மார்பர்' (8. 3:7), 'திருஅமர்மார்வன்' (8. 6;3), 'செய்யாள் திருமார்வினில் சேர்திருமால்' (9. 4:1), 'திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்' (10. 6:9) என்று திருமகளை—பெரிய பிராட்டியாரை-இணைத்தே பேசுவர்: பல இடங்களில் நாராயணனே அவன் என்றும் மொழிவர்.

மணிவாசகப் பெருமானும் இறைவனை 'மாதாளும் பாகத்தெந்தை' (திருவா. 34), மானை நோக்கி தன் கூறன்' (42); 'மானேர் நோக்கி உமையாள் பங்கன்' (59), 'மங்கையோர் பங்கன்' (69), 'கொம்பரார் மருங்குல்மங்கை கூறன்' (71), 'இணங்குகொங்கைமங்கை பங்கன்' (79). 'பூண்முலை மங்கைபங்கன்' (145)' 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று' (167), 'நந்தம்மையாளுடையாள் தன்னில் பிரிவிலா எங்கோமான்' (170), 'மாதிருக்கும் பாதியனை' (181), 'பெண் சுமந்த பாகத்தன்' (182), 'பெண்ணாளும் பாகன்' (184), 'கிளிவந்தமென் மொழி யாள் கேள்கிளரும் பாதியனை' (192), 'மாதியலும் பாதியன்' (193), 'தேவியும் தானும் வந்தெம்மையாளச்' (196), 'மங்கைபங்கினன்' (201), 'வரையாடு மங்கைதன் பங்கொடும் வந்தாண்டதிறம்' (240], 'பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்' (263), 'பழுதில்தொல் புகழாள் பங்கன்' (455) என்று இறைவனைத் தையல் பாகனாக—அர்த்தநாரியாக—அம்மை அப்பனாகக்—காண்பர்.

முழுமுதற்கடவுள் : சடகோபருக்கு நாராயணன் ஒருவனே முழுமுதற்கடவுள்; ஏனையோர் சிறு தெய்வங்கள் மணிவாசகப் பெருமானுக்குச் சிவபெருமானே பரதெய்வம்; ஏனையோர் புறத்தெய்வங்கள். இவர்களைத் தவிர

இப்பெரியார்கள் பிறதெய்வங்களை வழிபடுவதில்லை. இந்தக் கருத்து அவர்தம் பனுவல்களால் தெளியப் படுகின்றன.

தோற்றம் கேடுஅவை இல்ல வன்உடை
யான்;அ வன்ஒரு மூர்த்தியாய்;
சீற்றத் தோடுஅருள் பெற்ற வன்அடிக்
கீழ்ப்பு கநின்ற செங்கண்மால் (3,6:6)

துயர மேதரு துன்ப இன்ப
வினைக ளாய்அவை அல்லனாய்
உயர நின்றதோர் சோதி யாய்உல(கு)
ஏழும் உண்டுமிழ்ந் தான்தன்னை
அயர வாங்கு நமன்ற மர்க்கரு
நஞ்சி னையச்சு தன்றன்னை
தயர தற்கும கன்றன் னையன்றி
மற்றி லேன்தஞ்ச மாகவே (3.6:8)

சிந்தைமற் றொன்றின் திறத்ததல்
லாத்தன்மை தேவபி ரான்அறியும்
... ... ... ... ... ...
சிந்தையி னால்சொல்லி னால்செய்கை
யால்நிலத் தேவர் குழுவணங்கும்
சித்தை மகிழ்திரு வாறன்
விளையுறை தீர்த்தனுக் கற்றபின்னே (7.10:10)

என்ற இந்த மூன்று பாசுரப் பகுதிகளாலும் ஆழ்வார் தானான தன்மையில் தம் கருத்தைப் புலப்படுத்துகின்றார்.

உன்னித்து மற்றொரு தெய்வம்
தொழாள்அவ னையல்லால் (4.6;10)

என்ற இந்தப் பாசுரப் பகுதியில் ஆழ்வார், நாயகி நிலையில் உள்ளபோது, தோழி கூற்றாக, இந்தக் கருத்து வெளிப்படுவதைக் கண்டு மகிழலாம். திருமாலே முழுமுதற் கடவுள் என்பதை முத்தாய்ப்பாக,

துனிமாப் புகழே எஞ்ஞான்றும்
　　நிற்கும் படியாத் தான்தோன்றி,
முனிமாப் பிரம்ம முதல்வித்தாய்,
　　உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம் (8.10:7)

என்ற பாசுரத்தால் அறுதியிடுவதையும் கண்டு தெளியலாம்.

புராணச் செய்திகளாலும் வேறு வகையினாலும் விட்டுணுவே பரதெய்வம் என்பதை ஆழ்வார் புலப்படுத்து வதையும் காணலாம். நம்மாழ்வார் வாணாசுரன் கதையில் கண்ணன் அவனுடைய ஆயிரம் தோள்களைத் துணித்த செய்தியை எடுத்துக்காட்டி விட்டுணுவின் பரத்துவத்தை நிலைநாட்டுவதுடன் போரில் சிவன் முதலியோர் அடைந்த தோல்வியையும் காட்டி அவர்களது தாழ்நிலையையும் புலப்படுத்துகின்றார்.

'பரிவின்றி வாணனைக் காத்தும்' என்று
　　அன்று படையொடும் வந்தெதிர்ந்த
திரிபுரம் செற்றவ னும்மக
　　னும்பின்னும் அங்கியும் போர்தொலைய
பொருசிறைப் புள்ளைக் கடாவிய
　　மாயனை ஆயனைப் பொற்சக்கரத்(து)
அரியினை அச்சுத னைப்பற்றி
　　யான்இறை யேனும் இடரிலனே (3.10:4)

என்ற பாசுரத்தில் இதனைக்காணலாம்[1]. இன்னும்,

வலத்தனன் திரிபுரம் எரித்தவன்
　　இடம்பெறத் துந்தித்
தலத்துஎழு திசைமுகன் படைத்தநல்
　　உலகமும் தானும்
புலப்பட (1.3:9) என்ற பாசுரமும்,

1. திருவாய். 2.4:2; 3.8:9; 4.8:9; 7.4:8; 7.10:7 என்ற பாசுரங்களிலும் வாணன் வரலாறு குறிப்பிடப் பெறுகின்றது

பேச நின்ற சிவனுக்கும்
பிரமன் தனக்கும் பிறர்க்கும்
நாய கன்அவனே; கபாலநன்
மோக்கத்துக் கண்டு கொண்மின் (4.10:4)

என்ற பாசுரமும்,

யானும் தானாய் அழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை (8.8:4)

என்ற பாசுரமும்,

தானோர் உருவே தனிவித்தாய்
தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி, அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் (1.5:4)

என்ற பாசுரம் திருமாலின் பரத்துவத்தையும் ஏனையோரின் தாழ்நிலையையும் காட்டுகின்றன. இங்ஙனம் பல பாசுரங்கள்.

மணிவாசகப் பெருமான் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொள்வர்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நல்லேன் ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதுஎங்கள் உத்தமனே (6)

என்ற திருச்சதகப் பாடலாலும் 'மற்றறியேன பிறதெய்வம் வாசிகியலால்' (548] என்ற திருவசறவுப் பாடலாலும் இதனைக் காணலாம். ''மற்றோர் தெய்வம் கனவிலும் நினையா'' (போற்றி—அடி 74) என்ற அடியாலும் இக் கருத்தைத் தெளியலாம். சிவனது பரத்துவத்தை,

**தேவர்கோ அறியாத தேவ தேவன்**
**செழும்பொழில்கள் பயந்துகரத் தமிக்குமற்றை**
**மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி**
**மூதாதை மாதாளும் பாகத் தெந்தை**
**யாவர்கோன் என்னையும்வந் தாண்டுகொண்டான்** *(34)*

என்ற பாடலின் மூலமும் அறியலாம். இன்னும்,

**திருமாலும் பன்றியாய்ச்**
**சென்றுணராத் திருவடி** *(235)*

என்பதாலும்,

**அரிக்கும் பிரமற்கும்**
**அல்லாத தேவர்க்கும்**
**தெரிக்கும் படித்தன்றி**
**நின்றசிவம்** *(237)*

என்பதாலும்,

**அலரவனும் மால்வனும்**
**அறியாமே அழலுருவாய்**
**நிலமுதற்கீழ் அண்டம்உற**
**நின்றதுதான் என்னேடி**
**நிலமுதற்கீழ் அண்டமுற**
**நின்றிலனேல் இருவருந்தம்**
**சலமுகத்தால் ஆங்காரம்**
**தவிரார்காண் சாழலோ** *(260)*

என்பதாலும்,

மாலே பிரமனே
மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான்
நுண்ணியனாய் வந்து (248)

என்பதாலும் சிவனது பரத்துவமும் ஏனைய தேவர்களின் தாழ்நிலையும் அறிய முடிகின்றது. இன்னும்,

தடமதில்கள் அவைமூன்றும்
தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான்
திருமால்காண் (269)

என்ற பாடலும்,

நலமுடைய காரணன்தன்
நயனம்இடந்து அரனடிக்கீழ்
அலராக இடஆழி
அருளினன்காண் (272)

என்ற பாடலும் முழுமுதற்கடவுள் சிவன் என்பதையும் திருமால் சிறுதேவதை என்பதையும் அறிவிக்கின்றன. இங்ஙனம் எத்தனையோ பாடல்கள்.

**உருவம், நாமம் இல்லாதவன் :** இந்த இரண்டு ஞானச் செல்வர்களும் இறைவனுக்கு உருவம், பெயர் முதலியன இல்லை என்று கூறியவர்கள். இதனை இருவரின் பாடல்களாலும் அறியலாம். இறைவனின் உருவம் முதலியன பற்றிப் பராங்குசர்,

பேரும்ஓர் ஆயிரம் பிறபல
உடையஎம் பெருமான்
பேரும்ஓர் உருவமும் உளதுஇல்லை
இலது இல்லை பிணக்கே (1.3:4)

என்று கூறிவார். இக்கருத்தையே மணிவாசகப் பெருமான்,

ஒருநாமம் ஓர்உருவம்
ஒன்றுமிலார்க்(கு) ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ (235)

என்று விவரிப்பர். இப்படிச் சில இடங்களை இருவர்பனுவல் களிலும் கண்டு தெளியலாம்.

**இறையநுபவம் :** இருபெரியார்களும் இறைவனை அமுது, ஆராஅமுது என்றே கொள்பவர்கள். நம்மாழ்வார் பல பாசுரங்களில் இறைவனை அமுதாகவே காண்பர். 'உள்கலந்தார்க்கு ஓர் அமுதே' (1. 6:5) என்று கூறுவது காண்க. மேலும் 'தூயஅமுது' (1. 7:3), 'என்அமுதம்' (1. 9:1), 'என்கடல்படா அமுதே' (2. 3:5), 'ஆராஅமுத மாய்' (2. 5;5), 'நல்ல அமுதம்' (2. 5:9), 'அமுது ஆயவான் ஏறு' (2. 6:1), 'நலம் கடல் அமுதம் என்கோ?' (3.4;5), 'கரும்பின் இன்சாறினை கட்டியை, தேனை, அமுதை' (3. 5:6), 'எழுமைக்கும் எனது ஆவிக்கு இன் அமுதத்தினை' (3. 6:7), 'ஆவியே! ஆர்அமுதே!' (3.8:7), 'கட்டியை, தேனை, அமுதை, நன்பாலை' (3·10:3), 'அமுதும் ஆகித் தித்திப்ப' (4.3:10), 'ஆராஅமுதே' (5. 8:1), 'யாழின் இசையே, அமுதே' (5. 8:6), 'இன்அமுதம் தன்னை' (5.9:5), 'அடியேன் மேவி அமர் கின்ற அமுதே' (6.10:7), 'அண்ணலே! அமுதே!' (7.1:1), 'கன்னலே! அமுதே!' (7.1:2), 'இன்அமுது எனத்தோன்றி, (7.1:8), 'ஆவியே' அமுதகே!' (8. 1:1), 'பேணுவார் அமுதே!' (8.1:2), 'அமரர்தம் அமுதே!' (8. 1:4), 'கடலினுள் அமுதே' (8.1:7) என்பவை காண்க. இறைவனை 'அமுதம்' என்று பொதுவாகக் குறிப்பிட்ட ஆழ்வார் திருக்குடந்தை எம்பெருமானுக்கு 'ஆரா அமுதன்' (5.8:1) என்ற பெயர்சூட்டி மகிழ்கின்றார்.

மணிவாசகப் பெருமானும் பல இடங்களில் இறைவனை அமுதமாகவே சுட்டி உரைப்பர். 'ஆராஅமுதே! அளவிலாப்

பெம்மானே!' (1-67) என்று முதற்பாடல் சிவபுராணத்திலே குறிப்பிடுவதைக் காணலாம். 'கண்ணாரமுதக்கடல்' (4-150), 'ஆராஅமுதே அருளே போற்றி' (ஷை-199) 'அருளமுதம்' (17), 'மாலமுதப் பெருங்கடலே!' (30), 'தேனே அமுதே!' (59), 'ஆணே பெண்ணே ஆரமுதே' '88), 'தேனே அமுதே?' (89), தேனே அமுதே' (94); அமுதப் பெருங்கடலே!' (116), 'மணியே அமுதே' (117), 'அத்தன் ஆனந்தன் அமுதன்' (157), கண்ணாரமுதமுமாய்' (172), ஆராஅமுதாய் (176), 'தேன் வந்தமுதின்' (178), 'பொன்னம்பலத்தாடும் அமுதே' (380) 'கோதிலா அமுதே' (390), 'நிறையின அமுதை அமுதின் சுவையை' (439), 'அந்தமில் அமுதே' (453). 'அருளாரமுதப் பெருங்கடல்' (485), 'அன்பினில் விளைந்த ஆரமுதே' (536), 'உண்ணார்ந்த ஆரமுதே' (545), 'தேனாய் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' (553), 'வந்தெனக்கு மாறின்றி ஆராஅமுதமாய்' (621), என்றவை காண்க.

அமுதமாய்த் திகழும் இறைவனை அநுபவித்த பெரியார்கள் இருவரும் நமக்குத் தெரிந்த பொருள்களைக் கொண்டே விளக்குகின்றனர். காதலின்பமாகிய சிற்றின்பத்தையே இன்னதென எடுத்துக்காட்ட இயலாதபோது பேரின்பமாகிய இறையநுபவத்தை எங்ஙனம் எடுத்துக் காட்ட இயலும்? இதனை நம்மாழ்வார்,

> உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று
> உயர்ந்துஉரு வியந்தஇந் நிலைமை
> உணர்ந்து உணர்ந்து உணரிலும், இறைநிலை
> உணர்வு அரிது உயிர்காள்! (1.3:6)

என்று உணர்த்துவர். எனினும்,

> ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
> மாயப் பிரானைஎன் மாணிக்கச் சோதியை
> தூய அமுதைப் பருகிப் பருகிஎன்
> மாயப் பிறவி மயர்வறுத் தேனே (1-7:3)

என்று விளக்குவர். இப்படிப் பல பாசுரங்கள். நம்போலியர் மனத்தால் இதனைப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆனால்,

> தானும் யானும் எல்லாம்
> தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
> தேனும் பாலும் நெய்யும்
> கன்னலும் அமுதும் ஒத்தே (2.1:3)

என்று கூறும்போது சிறிது விளங்குவதாகத் தோன்று கின்றது. இன்னும்,

> தனியன் பிறப்பிலிதன்னை
> தடங்கடல் சேர்ந்த பிரானை
> கனியை கரும்பின்இன் சாற்றை
> கட்டியை தேனைஅமுதை
> முனிவுஇன்றி ஏத்திக் குனிப்பார்
> முழுதுஉணர் நீர்மையி னாரே (3.5:6)

என்று கூறும்போது சற்றுத் தெளிவாகின்றது. மேலும் மூவுலகுக்குஉரிய இறைவனை,

> கட்டியைத் தேனை அமுதைநன்
> பாலைக் கனியைக் கரும்புதன்னை
> மட்டவிழ் தண்ணந் துழாய்முடி
> யானை வணங்கி அவன்திறத்துப்
> பட்ட பின்னை (3-10:3)

என்றும்,

> தேனும் பாலும் கன்னலும்
> அமுதும் ஆகித் தித்தித்துஎன்
> ஊனில் உயிரில் உணர்வில்
> நின்ற ஒன்றை உணர்ந்தேனே (8.8:4)

என்றும்,

சேலேய் கண்ணியரும்
பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய்தந்தையும்
அவரேஇனி யாவாரே (5'1:8)

என்றும் தம் இறையநுபவத்தை வெளியிடுகின்றார்.

மணிவாசகப் பெருமான் தம் இறையநுபவத்தை,

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் களிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே!
தேசுடை விளக்கே! செழுஞ்சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெரு மானே!
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே (540)

என்ற பாடலில் வெளியிடுகின்றார். இப்படிப் பல பாடல்கள். இந்த அநுபவத்தை நம்போலியர் புரிந்து கொள்வது அரிது. ஆனால்,

தேனை ஆனெயைக் கரும்பினின்
தேறலைச் சிவனைஎன் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன்
கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம் (42)

என்று கூறும்போது சிறிது தெளிவாகின்றதாகப் புலப்படுகின்றது. மேலும்,

தேனே யமுதே சிந்தைக்கரியாய்
சிறியேன் பிழைபொறுக்கும்
கோனே சிறிதே கொடுமைபறைந்தேன் (89)

என்று கூறும்போது மேலும் சிறிது புலப்படுகின்றது. இன்னும்,

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் *(94)*

என்று கூறும் போதும்,

அப்ப னேஎனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாஉனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாளர் எய்ப்பினில்
வைப்பனே *(102)*

என்று கூறும் போதும் சிறிது நன்கு தெளிவு ஏற்படுகின்றது.

வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை
யும்அமு தத்தையும் ஒத்(து)
ஊனையும் என்பினை யும்உருக்
காநின்ற ஒண்மையனே *(125)*

என்றும்,

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்தி *(209)*

என்றும்,

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலால் பிறிதுமற் றின்மை (392)

என்றும்,

எந்தை யாய்எம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக்கு அஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன் (51)

என்றும் தம் இறையநுபவத்தை வெளியிடுகின்றார்.

நைச்சியாநுசந்தானம் : மணிப்பிரவாள நடையில் அமைந்த வைணவ உரைவளத்தில் சாதாரணமாக அடிபட்டுவரும் இத்தொடர் 'தாழ்வை வாய்விட்டுக் கூறுதல்' என்று பொருள்படும். இங்ஙனம் வாய்விட்டுக் கூறுதலைச் செம்மனச் செம்மல்களாகிய இருபெரியார் வாக்குகளிலும் காணலாம்.

நம்மாழ்வார் பாசுரங்களில் இக்குறிப்புகள்:

மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்;
ஓவுதல் இன்றி உன்கழல் வணங்கிற்றிலேன் (3.2:8)

என்றும்,

இடகிலேன்; ஒன்று அட்டகில்லேன்
 ஐம்புலன் வெல்ல கில்லேன்;
கடவ னாகிக் காலந்
 தோறும் பூப்பறித் தேத்தகில்லேன் (4.7:9)

என்றும் காணப் பெறுகின்றன.

மணிவாசகரின் திருமொழிகளில் இவை.

வைப்புமா டென்று மாணிக்கத்
 தொளியென்று மனத்திடை யுருகாதே
செப்பு நேர்முலை மடவர
 லியர்தங்கள் திறத்திடை நைவேனை (426)

நீதி யாவன யாவையும்
நினைக்கிலேன் நினைப்பரொடுங் கூடேன்
ஏத மேபிறிந் திறந்துழல்
வேன்றனை (427)

பரவு வாரவர் பாடுசென்
றணைகிலேன் பன்மலர் பிறித்தேத்தேன்
குரவு வார்குழ வார்திறத்
தேநின்று குடிகெடு கின்றேனை (430)

எண்ணி லேன்திரு நாமஅஞ்
செழுத்தும்என் ஏழமை யதனலே
நண்ணி லேன்கலை ஞானிகள்
தம்மொடு நல்வினை நயவாதே (431)

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேன் (476)

சாதிகுலப் பிறப்பென்னும்
சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி ந.யேன (477)

பாங்கி னொடு பரிசொன்றும்
அறியாத நாயேன் (487)

என்றும் பல பாடல்கள் காணப்பெறுகின்றன. இருவர் வாழ்க்கையையும் அறிந்த நாம் இவை இட்டுக் கட்டின மொழிகள் என்பதை அறிவோம்.

**பழமொழிகள் :** ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்வதற்கு அநநாட்டு மொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுவன என்பர் ஆய்வாளர்கள். பக்தி இயககக் காலத்தில் மக்களைத் திரட்டுவதற்குக் கலை நயத்துடனும் இசையேற்றத்துடனும் கூடிய பக்திப் பாடல்கள் பெரிதும் பயன்பட்டன. இசைப் பாடல்களில்

மக்களிடையே வழங்கும் பழமொழிகளையும் கலையுணர்ச்சியுடன் கையாண்டதால் இப்பெரியார்களின் கருத்துகள் மக்கள் உள்ளத்தில் வேர்விட்டு நன்கு வளர்வதற்குக் காரணமாயின. ஒரே ஓர் அரிய பழமொழி நம்மாழ்வாரின் திருவிருத்தத்திலும் மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திலும் கையாளப் பெற்றிருப்பது நம்மை வியக்கவைக்கின்றது. நம்மாழ்வார் நாயகி நிலையிலிருந்து பேசுகின்றார்.

**மைப்படி மேனியும் செந்தாமரைக்**
**கண்ணும் வைதிகரே**
**மெய்ப்படி யானுன் திருவடி**
**சூடுந் தகைமையினார்**
**எப்படி யூராமிலைக்கக் குருட்டா**
**மிலைக்கு மென்னும்**
**அப்படி யானும் சொன்னேன்**
**அடியேன்மற் றியாதென்பனே.** (94)

*[மை படி—நீல நிறம் செறிந்த; மெய்படி—உண்மையான நெறி; தகைமை—தன்மை; ஊர் ஆ—(கண் தெரிந்த) ஊர்ப் பசுக்க்ள்; மிலைக்க — கனைக்க; குருடு ஆ — குருட்டுப் பசுக்கள்; மிலைக்கும் - கனைக்கும்; சொன்னேன் - துதித்தேன்; மற்று யாது - வேறு என்ன; என்பன் - சொல்லுவேன்,]*

''கண்டார் கண்குளிரும்படியான உனது திருமேனியையும் சிவந்த தாமரை மலர்போன்று இருக்கும் திருக்கண்களையும் உடையவனான உன்னுடைய திருவடித் தாமரை மலர்களை மெய்யாகக் கண்டு தலைமேற்கொண்டு அநுபவிக்கும் தன்மையுடையவர்கள் வேதவேதாந்த ஞானத்திற் சிறந்த மகான்களேயாவர்; அறிவிலியான நானும் அவர்களைப் போல் ஏதோ சொல்லுகின்றேன். இஃது என்போலவெனில் : நன்றாய்க் கண் தெரிந்த பசுக்கள் ஊர்புகுந்து சேர்ந்ததும், அந்த மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகக் கனைக்

கின்றன. கண் பார்வையற்ற குருட்டுப் பசுவும் அதுகேட்டு அதன் காரணம் இன்னதென்றறியாமலே ஒக்கக் கனைக்கும் என்று உலகம் சொல்லும். வேதவிற்பன்னர்கள் சொன்ன பாசுரத்தைக் கேட்ட ஞானத்தாலே சொல்லுகின்றேனே யன்றி, என் ஞானக்கண்ணால் கண்டு என் ஆற்றலால் சொல்லவில்லை" என்கின்றாள் பராங்குச நாயகி (பராங் குசர் - நம்மாழ்வார்).

மணிவாசகப் பெருமானும் இதே பழமொழியைத் திருவாசகப் பாடல் ஒன்றில் (தானான தன்மையில்( கையாண்டு பாடுகின்றார்.

**தாரா உடையா யடியேற்கு**
**உன்தாள் இணையன்பு**
**பேரா உலகம் புக்காரடியார்**
**புறமே போந்தேன்யான்**
**ஊரா மிலைக்கக் குருட்டாமிலைத் தாங்கு**
**உன்தாள் இணையன்புக்கு**
**ஆராஅடியேன் அயலே**
**மயல்கொண் டடியேனே** *(91)*

[தார் - மாலை; பேரா - மீளா; ஊர் ஆ - ஊர்ப்பசு; மிலைக்க - கனைக்க; குருட்டு ஆ - குருட்டுப் பசு; மயல் கொண்டு - அவாக் கொண்டு]

"சிவனே, நின் அடிமையாகிய எளியேனுக்கு உன் திருவடித் தாளிணையின் மெய்யன்பினைத் தந்தருள்க; நின் மெய் யடியார் என்றும் மீளா உலகம் புக்கனர். அடியேன் புறமே போந்தேன்; ஊர்ப்பசுக்கள் கனைத்த காலத்து அதனோ டுள்ள குருட்டுப் பசுவும் கனைத்ததையொப்ப நின் திருவடிக் கண்வைக்குப் துய்ப்பாகிய அநுபவ மெய்யன்பில்லாத யானும் மெய்யன்பு வேண்டி அவாக் கொண்டு அழுகின் றேன்'' என்கின்றார். இந்த இரண்டு ஞானச் செல்வர் களின் நைச்சியாநு சந்தானத்தை (தாழ்வை வாய்விட்டுக்

கூறுதலை) அவர்தம் திருப்பாடல்களில் காணலாம். பழமொழியில் அவர்தம் உள்ளக்கிடக்கைத் தெளிவுறுதலையும் கண்டு மகிழலாம்.

'நாவினுக்கு அருங்கலம்' என்றும் 'நல்லக விளக்கு' என்றும் பாராட்டப் பெறும் திருவைந்தெழுத்தை முதலாக வைத்து 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கும் சிவபுராணம் முதலாக அமைந்திருப்பது திருவாசகத் தொகுப்பு; நாலாயிரத்தை அடைவுபடுத்தித் தொகுத்த நாதமுனிகள் 'ஆன்ம உபதேசமாக' அமைந்த 'உயர்வுஅற உயர்நலம் உடையவன்' என்று தொடங்கும் பதிகத்தை முதலாக அமைத்துத் தொகுத்ததே திருவாய்மொழித் தொகுப்பு. இப்படிப் பல ஒற்றுமைகளை இந்தத் தெய்வப்பனுவல்கள் இரண்டும் கொண்டு இலங்குவதைக் கண்டு மகிழலாம்.

# 4. நம்மாழ்வாரின் இறையநுபவம்*

நம்மாழ்வார் கருவூரிலிருந்த பொழுதே (கருவில்) ஞானத்திருவுடையவர். கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன்' (முதல் திருவந். 6) என்று பொய்கையாழ்வார் கூறுவது போலவும், 'கருக்கோட்டியுள்ளிருந்து கைதொழுதேன்' (இரண்டாம் திருவந்.87) என்று பூதத்தாழ்வார் கூறுவது போலவும் இவர் கருவிலே திருவுடையவர். உறையூருக்கு (பூவுலகம்) வந்த பிறகும் இவர் ஓதாது உணர்ந்த ஞானச் சிறப்புடையவர் என்று வரலாறு கூறுகின்றது. அறிவு தோன்றுவதற்குரியதல்லாத மிக்க இளம் பருவத்திலேயே இவ்வாழ்வார் இறைவன்பால் பேரன்பு கொண்டவர் என்பதை,

> அறியாக் காலத்துள்ளே
> அறியா மாமாயத்து
> அடியேனை வைத்தாயால் —திருவாய் 2.5;3

என்ற இந்த ஆழ்வாரின் கூற்றாலேயே அறியலாம்.

அறியாக் காலந்தொட்டு இறைவனிடம் உண்டாகிய ஆழ்வாரின் அன்பு நாளுக்குநாள் பெருகி வளர்வதாயிற்று. இறைவனை நினைத்தல், அவனை அன்போடு வணங்குதல் என்பன போன்ற செயல்கள் ஒருவித கடமையோடு நடைபெறுவன என்றில்லாமல் அவை அவரது இயல்பாகவே அமைந்து விட்டன. அவனை நினைக்காமல் இருக்க முடியாத நிலையும் ஏற்பட்டுவிட்டது. மக்கள்

---

* அண்ணாமலைப்பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களின் மணி விழா மலரில் (1991) வெளிவந்தது.

உணவின்றி உயிர் வாழ இயலாதவர்களாக இருப்பது போல ஆழ்வார் எம்பெருமானை நினையாதிருக்க அன்பை விட்டிருக்க இயலாதவராகிவிட்டார். எம்பெருமானைப் பற்றிய நினைவு அவரது உள்ளத்தில் இன்ப ஊற்றாகி விட்டது. அதனால் நம் முன்னோர் 'ஆழ்வார் பிரபத்தியை மேற்கொண்டவரே; ஆனால் பக்தி அவருக்கு தேக யாத்ராசேஷம்' [பக்தியின்றி உயிர் வாழ இயலாதவர்] என்று அறுதியிட்டு உரைத்தனர்.

**இருவகை இன்பம் :** மக்கள் இரண்டு வகைகளில் இன்பம் எய்துகின்றனர். ஒன்று, ஐம்பொறிகளால் அறிதற்குரிய பொருள்களை நுகரும்பொழுது உள்ளத்தில் உண்டாகும் இன்பம். இரண்டு, இங்ஙனம் ஐம்பொறிகளின் தொடர்பில்லாமலேயே உள்ளத்தில் இன்பம் உண்டாதலும் உண்டு. இதுவே உயர்ந்த இன்பம்; மானச இன்பம். துன்ப நிகழ்ச்சிகளை அநுபவித்துக் கொண்டே மனத்தில் இன்பம் உண்டாதலும் உண்டு, நாடு விடுதலை பெறும் பொருட்டு நாட்டுப் பற்றாளர்கள் சிறையில் அநுபவித்த துன்பங்களை இன்பமாகக் கொண்டார்களன்றோ? 'அஞ்சிறைய மடநாராய்" [1.4:1] என்று தொடங்கும் திருவாய்மொழியில் 'வஞ்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால் என் செயுமோ?' என்ற அடியின் பொருளை விளக்குமிடத்தில் ""பரார்த்தமாகச் சிறை இருக்கும் இருப்பு கிடைக்க வேண்டுமே!" என்றார் உடையவர். பரார்த்தமாகச் சிறையிருக்கும் இருப்பு உடலளவில் துன்பமாயினும் மன அநுபவத்தில் இன்பமாகும் - பேரின்பமாகும் என்பது அந்த ஆசாரியப் பெருமகனின் கருத்தாகும். வள்ளுவப் பெருந்தகையின் கருத்தும் ஈண்டு நினைத்தல் தகும். 'இடுக்கண் வருங்கால் நகுக' [குறள் 621] என்ற குறளில் 'துன்பம் வரும்போது சோர்ந்து அழியாமல் உள்ளத்தில் மகிழ வேண்டும்; வந்த துன்பத்தை வெல்வதற்கு அதைப்போல் சிறந்த வழி இல்லை' என்று விளக்குவர். 'இன்னாமை இன்பம்' [குறள் 630] என்ற குறளில் இன்

பம், துன்பம் என்று பகுத்துணர்வதையும் விட்டு வரும் துன்பத்தையே இன்பமாகங் கொண்டு கடமையைச் செய்து வந்தால் பகைவரும் விரும்பத்தகுந்த சிறப்பு ஏற்படும் என்பர்.

**ஆழ்வாரின் இன்பம்:** இங்ஙனம் உடல் தொடர்பின்றி உள்ளத்தே உண்டாகும் இன்பம் மிகச் சிறந்ததென்பது தெளிவு. எம்பெருமானை நினைக்க நினைக்க ஆழ்வாருக்கு அவர் உள்ளத்தெழுந்த இன்ப வெள்ளம் உடல் தொடர்பில்லாதது; அஃதாவது உயிரை ஒட்டிய இன்பமாகும். பொறிகளால் ஏற்படும் இன்பமாயின் அவ்வப் பொறிகளால் அநுபவிப்பதற்குரிய பொருள்கள் இல்லாத போது உண்டாதல் இல்லை. ஆழ்வார் எம்பெருமானை ஊனக் கண்ணால் கண்டிலர்; ஞானக் கண்ணுக்கு இலக்கான அவனை நினைந்து நினைந்தே இன்புற்றனர்; அதனால் அவருடைய இன்பம் தடையின்றி நிகழ்ந்தது. உலகப் பொருளில் இன்பம் தரத்தக்க பல்வேறு பொருள்களால் உண்டாகும் இன்பம் எல்லாம் ஒருங்கு சேர்ந்தாற்போல் எம்பெருமானை நினைதலால் ஆழ்வார் உள்ளத்தில் இன்பம் உண்டாயிற்று. இத்தகைய அவர் நிலைமையை அவர்தம் பாகரங்களில் கண்டு மகிழலாம்.

> **தேனும் பாலும் கன்னலும்**
> **அமுதும் ஆகித் தித்திப்ப**
> **யானும் எம்பி ரானையே**
> **ஏத்தினேன்; யான்உய் வானே** (4.3:10)

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் ''தேன், பால்' சருக்கரை, அமுதம்" ஆகிய எல்லாவற்றின் இன்பமும் எம்பெருமானை நினைதலாய் எனக்கு உண்டாகின்றது'' என்கின்றார். ''அப்பெருமானை நினைக்கும் அன்பே மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத சோறும் நீரும்போல எனக்கு உண்ணும் சோறும் பருகும் நீரும் ஆகும்'' என்கின்றார். இந்த இன்பம் பொறியுணர்ச்சியைக் கடந்த இன்பம் என்

பதை ‘ஆரா அமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்’ (5.8,10) என்றும், ‘எண்ணப் புகுந்து தித்திக்கும் அமுதே’ (6.10;3) என்றும் அவரே கூறுவார்.

**அருளிச் செயல்கள் :** ‘உள்ளுந்தோறும் தித்திக்கும்’ அவனை இடைவிடாது நினைப்பதனால் உண்டான தெவிட்டாத உணர்ச்சி பெருகி வளரவே அஃது உள்ளடங்காத நிலையில் இறைவனைப் பற்றிப் பாடத் தொடங்கினார்.

> கண்டுகொண்டு என் கண் இணை
> ஆரக் களித்து
> பண்டை வினையாயின
> பற்றோடு அறுத்து
> தொண்டர்க்கு அமுதுண்ணச்
> சொல்மாலைகள் சொன்னேன் (9.4:9)

என்பது அவர்தம் திருவாக்கு. இங்கு ஆழ்வார் ‘‘கண்டுகொண்டு என் கண்இணை ஆரக்களித்ததெல்லாம்’’ தன் ஞானக் கண்ணால் கண்டவையேயாகும் என்றும் அவர் அநுபவமெல்லாம் மானசாநுபவம் என்றும் நம் முன்னோர் முடிவு கொண்டனர். அந்தக் களிப்பே, எக்களிப்பே, சொல்மாலைகள் வடிவம் பெற்றது. இவையே அவர்தம் அருளிச் செயல்களாகப் போற்றப் பெறுகின்றன. ஓதி அநுபவிக்கப் பெறுகின்றன.

**இறைவன்மீது அவா :** ‘குருகூரி’லிருந்து உறையூருக்கு வந்த பிறகு இவர் இறைவனிடத்துக் கொண்ட காதல், ஆராக் காதல். இதனை ஆழ்வார் ‘அவா’ என்று குறிப்பிடுவர். இந்த அவா இவர்தம் திருவிருத்தத்தில் முளை விடுகின்றது.

> கையபொன் னாழிவெண் சங்கொடுக்
> காண்பான் அவாவுன்நான் (50)

என்ற பாசுரத்தால் அறியலாம். இந்த அவா பெருகி வளர்வதை இவர்தம் பாசுரங்களால் அறியலாம்:

ஆழ்வாரின் அவா முழுவதும் ஆரா அமுதமாகிய ஆண்டவன்பாலே செல்லுவதாயிற்று. இதனை அவரே 'ஆராக்காதல் குருகூர்ச் சடகோபன்' (2.1;11) என்று குறிப்பிடுவர். இவர்தம் இந்த இயல்பினை இவர்தம் பிற பாசுரங்களாலும் ஒருவாறு அறியலாம். ஞானக் கண்ணால் கண்ட இறைவனை ஊனக் கண்ணாலும் காண விழைந்து கண்ணீர் பெருக நெஞ்சம் நெக்குருகிப் பன்முறை கூவிக் கூவி அழைக்கின்றார் ஆழ்வார்.

> கூவிக் கூவி நெஞ்சுருகிக்
> கண்பனி சோர நின்றால்
> பாவிநீ என்றொன்று சொல்லாய்
> பாவியேன் காண வந்தே (4.7:3)

என்ற பாசுரத்தில் இதனைக் காணலாம். காட்சி எய்தவில்லை. "நான் இந்த ஊனக் கண்ணால் காணும்படி நீ அன்போடு காட்சியளிக்க விரும்பவில்லையாயினும் அவ்விருப்பமின்மையை என் கண் எதிரே தோன்றிக் கூறுக. 'நீ பாவி; அதனால் உனக்குக் காட்சி தருதல் இயலாது' என்றாவது என் கண்முன் தோன்றிக் கூறுக. அதுவும் எமக்கு அமையும். நீ வெறுப்போடு கூறியதாயினும் அவ்வேறுபாட்டை நான் கருதவில்லை. உன்னைக் காணல், உன் சொற்களைக் கேட்டல் அவ்வளவே என் ஆசை" என்கின்றார்.

**அவா ஆறாகப் பெருகுதல் :** 'திருவிருத்தத்தில் முளைவிட்ட ஆழ்வாரது இந்த அன்பு பெரிய திருவந்தாதியில் ஆறாகப் பெருகியோடத் தொடங்குகின்றது. இதனைப் பாசுரங்கள் பல காட்டும். நீ பேசின உபகாரத்தை வாய் விட்டுப் பேசினால் நீயே பெற்ற தாய்; பிறப்பித்த தந்தை; ஆன்மாவுக்கு உற்ற நன்மைகளைச் செய்து புதிய

பிறப்பினை நல்கும் ஆசாரியனும் நீ (5); என்னை அடிமைப்படுத்திக் கொண்டு என் கண்களுக்கு உன் திருமேனியின் ஒளியைக் காட்டியருள்க (13); எம்பெருமான் காரணமற்ற கருணையினால் என் பாவங்களைத் தொலைக்கத் தொடங்கினபோது அடியேனும் அடியேனுடைய நெஞ்சும் அச் செயலுக்கு உட்பட்டிருந்தோம் [20]; பாலாழி நீ கிடக்கும் பண்பயாம் கேட்டேயும் காலாழும்; நெஞ்சு அழியும்; கண் சுழலும் [54]; மேகங்கள், பெரிய மலைகள், கருங்கடல், செறிந்த இருள், பூவைப் பூ மற்றுமுள்ள கார் உருவங்களைப் பார்க்கும் போதெல்லாம் 'இவை கண்ணனின் அழகிய திருமேனி' என்றெண்ணி என் மனம் என்னை விட்டு அங்கே ஓடும். [49]; பூவைப் பூ, காயாம் பூ, செங்கழுநீர்ப் பூ, கருநெய்தல் பூ ஆகியவற்றைப் பார்க்கும்போதெல்லாம் அவை எம்பெருமானுடைய திருவுருவமே என்று கருதி என் உடலும் உயிரும் பூரிக்கின்றன [73]; நின் அன்றி மற்றிலேன் கண்டாய்—எனதுயிருக்கு ஓர் சொல் நன்றி ஆகும் துணை (77) என்ற பாசுரங்களில் ஆழ்வாரது அன்பு ஆராய்ப் பெருகியோடுவதைக் காணலாம்.

**காதல் கடலாய்ப் பெருகுதல் :** பெரியதிருவந்தாதியில் ஆறாய்ப் பெருகியோடிய காதல் திருவாய்மொழியில் கடலாய் விரிந்து பெருகுகின்றது. இதனை ஆழ்வார் நாயகி நிலையிலிருந்து பேசுகின்றார்.

**ஊரவர் கவ்வை எருவிட்டு**
**அன்னைசொல் நீர்ப்படுத்து**
**ஈரநெல் வித்தி முளைத்த**
**நெஞ்சப் பெருஞ்செய்யுள்**
**பேரமர் காதல் கடல்**
**புரைய விளைவித்த**
**காரமர் மேனிநங் கண்ணன்**
**தோழீ! கடியனே** (9.3:4)

[கவ்வை - பழிமொழி; நீர்ப்படுத்து - நீரைப் பாய்ச்சி; ஈரநெல் - ஆசையாகிய நெல்; செய் - வயல்]

இது பிரிவாற்றாமை மேலீட்டால் தலைமகள் காதல் கைமிக்கு மடலூரத் துணிதலை நுவல்வது. ஊர்மக்கள் சொல்லும் பழிமொழியையே இட்டான் எம்பெருமான். ஊரார் பழிசொல்லுவதைக் கொண்டே இவள் பகவான் மீது கொண்ட காதலை அன்னை அறிந்து இத வசனங்கள் சொல்ல ஆரம்பித்தாள்; இந்த வசனம் தண்ணீர் பாய்ச்சின படியாயிற்று. எருவானது ஒரு காலை அடியில் இட்டு விடுவது; நீர் மாறாமல் பாய்ச்சப்படுவது; இதனல் ஊரார் ஒருகால்பழி சொல்ல, அன்னை உடனிருந்து பொடிந்து கொண்டே இருக்க, காதல் பயிர் செழித்து வளர்வதாயிற்று. ஈரநெல்-அன்பாகியநெல். இது காதலுக்கு உருவகம். இதனை விளைவித்தவன் எம்பெருமான். எங்கு? ஆழ்வார் நெஞ்சமாகிய வயலில். 'முளைத்த' என்பதை 'முளைப் பித்த' என்பதாகக் கொள்ள வேண்டும். 'பெருஞ்செய்யுள்' என்று பெருமையிட்டுச் சிறப்பித்தற்கு நம்பிள்ளை அருளிச் செய்தது—''ச்லேஷ விச்லேஷங்களாலே (கலவி பிரிவு களாலே) புடைபடுத்தி நித்தியவிபூதியோபாதி பரப்புடைய தாம்படி பெருக்கினானாயிற்று'' என்பதாக. 'அதாவது கடலளவு பெரிதாக வளர்வதாயிற்று. ஆக, 'பொய்ந் நின்ற ஞாலம்' (திருவிருத். 1.) தொடங்கி மயர்வற மதிநலம் அருளிச் செய்து இவ்வளவும் வர விளைவித்துக் கொண்டே காரியம் இதுவாயிற்று. காதலைக் கடலளவு பெருக்கினா யிற்று.

**காதல் கடலையும் விஞ்சுதல் ;** ஆழ்வார் நாயகியின் காதல் கடலையும் விஞ்சி நிற்கின்றது. எம்பெருமான் உருவெளிப்பாட்டில் காணப்பெறுகின்றான். அவனிடம் செல்ல வேண்டும் என்று துடிக்கின்றாள் பராங்குச நாயகி.

**காலம் பெறஎன்னை காட்டுமின்கள்**
**காதல் கடலின் மிகப்பெரிதால்**
**நீலமுகில் வண்ணத்து எம்பெருமான்**
**நிற்கும்முன் னேவந்தென் கைக்**
**கும்எய்தான்** *(7.3:6)*

*[காலம் பெற - சீக்கிரமாக]*

*தலைவி தென்திருப்பேரையில் சென்றுசேரத் துணிதலைக் கூறுவது: "எனக்கோ அபிநிவேசம் (அதிகஆசை) மீதூர்ந்து நிற்கின்றது; எனக்கு இங்கு தரிப்பு அரிது; வீணாக எதனையும் சொல்லிப் போது போக்காமல் இப்போதே என்னைத் தென்திருப்பேரையில் கொண்டுசென்று மகரநெடுங்காதனைக் காட்டிச் சமாதானப்படுத்துங்கள்" என்கின்றாள். 'குடிக்குப் பரிகாரம் அன்றாகிலும் எனக்கு இஃதல்லது இல்லை' என்பது நம்பிள்ளை ஈடு. இதற்குக் காரணம்: "காதல் கடல் மிகப் பெரிதால்". இதற்கு முன்னர் "காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி" (5.3:4) என்று தன் காதலைக் கடலோடொத்ததாகச் சொன்னாள்; இங்கு அது கடலினிலும் விஞ்சியதாகச் சொல்லுகின்றாள். நீலமுகில் வண்ணன் அவள் முன்னே வந்து நிற்க, காதல் வளர்வதற்கு வழி ஏற்படுகின்றதேயன்றி அதனை அளவு படுத்தவழி இல்லை. உருவெளிப்பாட்டில் தோன்றியவனாதலால் அவன் அவள் கைக்கு எட்டும் நிலையில் இல்லை.*

**மேலும் வளர்தல் :** *கடலளவுக்கும் மேலே வளர்ந்த ஆழ்வாரின் காதல் அதற்கு மேலும் வளர்ந்து பெருகுகின்றது.*

**மண்திணி ஞால மும்ஏழ் கடலும்**
**நீள்விசும்பும் கழியப் பெரிதால்** *(7.3:8)*

*என்கின்றாள் ஆழ்வார் நாயகி. "அணுக்கள் செறிந்திருக்கின்ற இந்த உலகத்தையும் இதனைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்களையும் இவற்றையெல்லாம் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கின்ற ஆகாயத்தையும்விடப் பெரிதாகும்"*

என்கின்றாள். அஃதாவது, ஆழ்வாரின் காதல் அசேதந தத்துவத்தையே விழுங்கிவிட்டது. அடுத்து, அஃது அசித்து தத்துவத்தைவிடப் பெரியதும், அடுத்த தத்துவமும் ஆகிய சேதநதத்துவத்தையும் விஞ்சும்படி வளர்கின்றது. இந்தப் பெரிய காதலின் பெருக்கை சீவான்மா தாங்கிக்கொள்ள முடியாதபடி மிகச் சிறிதாக உள்ளது. "ஆவியின் பரம் அல்ல வேட்கை" (10.3;2)—அணு அளவினதான உயிர்ப் பொருளின் அளவன்று காதல். "என்தன் அளவன்றால் யானுடை அன்பு" (இரண். திருவந் - 100) என்று பூதத்தாழ்வார் கூறுவது போல, உயிரின் அளவன்று காதல் என்றாயிற்று.

**ஆழ்வாரின் காதல் எம்பெருமானின் காதலில் மூழ்குதல்:** இங்ஙனம் கங்குகரையின்றி வளர்ந்த காதல் எம்பெருமானுடைய மிகப் பெரிய காதலில் மூழ்கிவிட்டதை அருளிச் செய்கின்றார் ஆழ்வார்.

சூழ்ந்துஅகன்று ஆழ்ந்துஉயர்ந்த முடிவில்
பெரும்பா ழேயோ !
சூழ்ந்துஅத னில்பெரிய பரநன்
மலர்ச்சோ தீயோ !
சூழ்ந்துஅத னில்பெரிய சுடர்ஞான
இன்பம் மேயோ!
சூழ்ந்துஅத னில்பெரிய என்அவா
அறச்சூழ்ந் தாயே (10.10:10)

இது மூன்று தத்துவங்களையும் விளாக்குலை கொண்டிருக்கும் தம் அவாவானது சிறிதாம்படி, அதாவது தம்முடைய காதல் குளத்தின் அளவு என்னும்படி, கடல்போன்ற காதலோடே எம்பெருமான் வந்து கலந்தான் என்பதைத் தெரிவிக்கின்றது.

பெரிய பிராட்டியார் ஆணையிட்டுத் தடுத்துப் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்டு இவர் வேண்டிக் கொண்டபடியே

எல்லாவற்றாலும் நிறைந்த எம்பெருமான் வந்து கலந்தருளினான்; ஆழ்வார் அது கண்டு, "என்னுடைய அபரிமிதமான விடாய் எல்லாம் தீர வந்து கலந்தாய்; என்னுடைய மனோரதமும் ஒருவாறு ஒருவிதமாக நிறைவேறப் பெற்றது" என்று பேரின்பம் பொலிய விண்ணப்பம் செய்கின்றார்.

ஆழ்வார் தம்முடைய அபினிவேசம் (அதிக ஆசை) பெரியவற்றிலும் பெரிது என்கைக்காக மூன்றடிகளில் தத்துவத் திரயத்தினுடைய (திரயம் - மூன்று) பெருமையை அருளிச்செய்கின்றார். அசித்து (அசேதநம்) என்ற தத்துவத்தின் பெருமையைச் சொல்லுகின்றது முதலடி; சித்து (சேதநம்) என்ற தத்துவத்தினுடைய பெருமையைச் சொல்லுகின்றது இரண்டாம் அடி; ஈசுவரன் என்ற தத்துவத்தின் பெருமையைச் சொல்லுகின்றது மூன்றாம் அடி. இப்படி மூன்று தத்துவங்கள் ஒன்றுக்கொன்று பெரிதாகச் சொல்லிக் கொண்டு போந்து இவற்றிற் காட்டிலும் பெரியது தம்முடைய 'அவா' என்று ஈற்றடியில் அருளிச் செய்து 'அது அறச் சூழ்ந்தாயே' என்று தலைக்கட்டுகின்றார்.

இங்கு 'என் அவா அற' என்பதற்கு 'என்னுடைய அவா சிறிதென்னும்படி' என்று பொருள் கொள்ளுவது சிறக்கும். இதுவரையில் ஆழ்வார் தம்முடைய அவாவே பெரிது என்றிருந்தார். இப்போது தம்மை அநுபவிக்கப் பதறி வந்த எம்பெருமானுடைய அவாவின் மிகுதியைப் பார்த்தவாறே மேல் "மூன்று தத்துவங்களையும் விளாக்குலை கொண்டு அவை குளமாம்படிப் பெரிதான என்னுடைய காதலை அதனிலும் பெரிய உன் காதலைக் காட்டி வந்து கலந்தாயே! என்னுடைய கூப்பீடும் ஒருபடி ஓவும்படிப் பண்ணிற்றே" என்கின்றார். "பர~~மைத்துனா~~தனை மடியிலே வைத்துக் கொண்டு மகிழ்ச்சியுற்றவராய்த் தழுவினார்" என்கின்றபடியே, பெருமாள் (இராமபிரான்) காட்டில் நின்று மீண்டு எழுந்தருளி பரதாழ்வானை மடியிலேவைத்து

உச்சியைமோந்து உகந்து அணைத்தாற்போலே ஆயிற்று. இவருடைய விடாய் கெடும்படி கலந்தது.

x a x x

இத்தகைய ஞானச் செல்வர் எம்பெருமானின் பலவெற்றிச் செயல்களை அநுபவித்த பிறகு (திருவாய்.7.4) அவனது அவதார குணங்களை அநுபவிக்கத் திருவுளங் கொண்டு முதன் முதலாக,

> **கற்பார் இராமபிரானை அல்லால்**
> **மற்றும் கற்பரோ ?** *(7.5:1)*

என்று இராமபிரானின் விலட்சணமான திருக்குணத்தில் ஈடுபடுகின்றார். திருவயோத்தியில் உண்டான எல்லாப் பொருள்களையும் காரணம் ஒன்றும் இல்லாமலே, நல்ல தன்மையுடையனவாகச் செய்தார். இராமன் என்பது அழகைக் குறிக்கும் சொல்; பிரான்-என்பது அறிவுள்ள சேதநர்களைத் தன்மீதுபற்றுள்ளவர்களாகவும் ஆனந்தப் படுபவர்களாகவும் செய்தல்! இப்பெருமான் அயோத்தியில் வாழ்ந்த அனைத்துயிர்கட்கும் வைகுந்தப் பதவியையும் தந்தருளினார்.

இத்தகைய சக்கரவர்த்தித்திருமகனின் திருப்பெயரைத் தாங்கியவர் மணி விழா நாயகர் டாக்டர்எம். ஏ. எம். இராமசாமி. 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்ற பொய்யாமொழிக்கிணங்க தம் பாட்டனாரால் நிறுவப் பெற்றுத் தம் தந்தையாரால்-நன்கு புரக்கப் பட்டு வந்த சாம்ராஜ்யத்தைப் புரக்கும் பொறுப்பை ஏற்றார். தம் முன்னோர் கண்ட கல்வி சாம்ராஜ்யத்தை மேலும் பன்முக வளர்ச்சியடையச் செய்து வருகின்றார் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் இராமசாமி. மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கும் தம் தந்தையாரின் அருங்கனவை நனவாக்கின பெருமகனார். இதன் வளர்ச்சியைத் 'தாயினும் சாலப்பரிந்து' நோக்கிக்

கவனிக்கிறார். வாழையடி வாழையாகத் தமிழையும் இசையையும் வளர்த்து வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வேளாண்மை, பொது மருத்துவம், பல்மருத்துவம் இவற்றையும் சேர்த்துக் கொண்டு வளர்த்து வருகின்றது. இவை தவிர, பல்வேறு கல்வி நிறுவனங்களையும் கண் காணித்துவரும் பொறுப்பும் சேர்ந்து 'கல்விசாம்பிராஜ்யத் தைக் கல்வி இராமராஜ்யமாக்கிப் புரந்து வருவதை இந்தியத் துணைக்கண்டம் குறிப்பாகத் தமிழகம் நன்கு அறியும். பிறநாடுகளிலிருந்து மாணாக்கர் இங்குப் பயின்று வருவதால் உலகம் தழுவிய பெரும் புகழ் பெறுகின்றது. இதனை இன்று கல்வி இராம ராஜ்யமாகப் புரந்துவரும் மணிவிழாக்காணும் வள்ளல் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி தாம் விரும்பும் நாளெல்லாம் உடல் நலத்துடனும் மனவளத்துடனும் வாழ்ந்து இந்த சாம்ராஜ்யத்தைச் சீரியமுறையில் புரக எல்லாம்வல்ல 'வேங்கடம் மேவிய விளக்கு' ஒளிகாட்டி வழியும் காட்டியருளவேண்டும் என அவன் திருவடிகளை நினைந்து வாழ்த்துகின்றேன்.

# 5. புலவர்க்கு அறிவுரை*

தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்தையும் நீதி நூல் காலத்தையும் அடுத்துத் தெளிவாகக் காணப்படுவது பக்தி இலக்கியக் காலம் ஆகும். கி. பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சைவ சமயப் பெரியவர்களான நாயன் மார்களும் வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார் களும் தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடிப் பக்தி இலக்கியக் கருவூலத்தை நிரப்பியவர்கள். இறைவனைப் பற்றிய பாடல்கள் பெருகி வரும் காலத்தில் கல்வி நிரம்பிய புலவர்கள் பலர் வறுமையால் வாடிச் செல்வர்களை நாடிச் சென்றனர். அவர்களின் புகழைப்பாடி, அவர்கள் நல்கின சிறு பொருளைப் பெற்று மகிழ்ந்தனர். தங்கள் அருமை யான கவிதை பாடும் திறமையை இப்படிச் செல்வரின் பொருளுக்காக விற்று வந்தது நம்மாழ்வார் என்று புகழோங்கி நின்ற சடகோபரின் உள்ளத்திற்கு வெறுப்பைத் தந்தது, இங்ஙனமே, சைவப் பெரியாராகிய தம்பிரான் தோழர் என்று புகழோங்கி நின்ற சுந்தரமூர்த்தி சுவாமி கட்கும் வெறுப்பு ஏற்பட்டது. இருவருமே இத்தகைய புலவர்கட்குத் தத்தம் பதிகங்களில் அறிவுரை கூறு கின்றனர்.[1]

புலவர்களின் இந்த இழி நிலைமையை நினைந்து அவர் களைத் திருத்திப் பணிகொள்ள நினைக்கின்றார் ஆழ்வார்.

**சொன்னால் விரோதமிது ஆகிலும்**
**சொல்லுவன் கேண்மினோ (1)**

என்று தன் இதோபதேசத்தைத் தொடங்குகின்றார்.

---

* தமிழ்க் 'கா. சு' நூற்றாண்டு விழா நினைவு மலரில் வெளிவந்தது. (நவம்பர் 5, 1987).

1. திருவாய். 3.9; தேவாரம் 7.34.

விழிப்புடன்தான் பேசுகின்றார். இப்படிச் சொன்னால் புலவர்களும் வெறுப்பை அடைவார்கள்; செல்வர்கட்கும் விரோதமாக இருக்குமே என்று கருதுகின்றார். இப்படிச் சொன்னால் தனக்கும் சொரூப விரோதமாக இருக்குமே என்றுகூட நினைப்பதாகக் கொள்ளலாம். நரர் புகழைப் பாடுவதுபற்றி நெஞ்சினால் நினைப்பதும், வாயினால் சொல்லுவதும் கூட தமக்குச் சொரூப விரோதம் ஏற்படும் என்பது இவர்தம் திருவுள்ளம் கருதுவதாகவும் கொள்ள லாம். சொன்னால் விரோதம் ஏற்படும் என்று இவர்தம் திருவுள்ளம் கருதுவதாகவும் கொள்ளலாம். சொன்னால் விரோதமேயாகிலும் 'நீங்கள் படும் தொல்லைகளைப் பொறுத்திருக்க மாட்டாமையால் சொல்லாதிருக்க முடிய வில்லை' என்கின்றார் என்பது 'ஆகிலும் சொல்லுவன்' என்பதால் பெறப்படுகின்றது. தன் பக்கலில் தவறாக நடந்துகொள்ள முயலும் இராவணனைக் குறித்து சீதாப் பிராட்டி அறிவுரை கூறினது போலவும், பிரகலாதாழ வாரன் இரணியனைக் குறித்தும் அசுரக்குடி மக்களைக் குறித்தும் அறிவுரை பகன்றது போலவும், தன்னை முற்றிலும் வெறுத்த இராவணனைக் குறித்து விபீஷணாழ் வான் அறிவுரை சொன்னது போலவும், விமுகராணாரையும் குறித்து, அவர்களையும் விடமாட்டாத நசையாலே, ஆழ்வார் அவர்கட்கு இதோபதேசம் பண்ணுகின்றார் என்பதை ஈண்டு நாம் அறிதல் வேண்டும்.

'பால்குடிக்கக் கால் பிடிப்பாரைப்போலே பகவத் விஷயத்தைக் கேட்பதற்குக் கால்பிடிக்கின்றார்' என்பது நம்பிள்ளை ஈடு. "நான்சொல்வதைக் கேட்டபின் அப்படியே அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதுதல் வேண்டா; கடைப்பிடிக்கலாம், அல்லது கடைப்பிடியா தொழியலாம். என் சொற்களுக்குக் காது கொடுத்தால் போதும்! கடலோசைக்குக் காது கொடுக்கின்ற நீங்கள் அப்படியே என் சொற்களுக்கும் காதுகொடுக்கலாகாதோ?" என்ற கருத்துகள் 'கேண்மினோ' என்பதால் பெறப்படு கின்றது என்பதை நாம் நுணுகி அறிதல் வேண்டும். அடுத்து ஆழ்வார் பேசுவது !

என்நாவில் இன்கவி யான்ஒரு
வர்க்கும் கொடுக்கிலேன்
'தென்னா தெனா'என்று வண்டுமுரல்
திருவேங்க டத்து
என்ஆனை என்அப்பன் எம்பெரு
மானுள னாகவே (1)

இதமுரைக்க இழிந்த ஆழ்வார் அவர்கட்கு ருசி பிறக்கைக்காகத் தம்முடைய மதத்தை முந்துற முன்னம் அருளிச் செய்கின்றார். அடுத்த அடிகளில் அவர்கள் செய்யவேண்டியதை அருளிச் செய்யாமல் தம்முடைய நிலைமையைப் பேசுவது அவர்கள் சிறுவர்களோ என்ற அச்சத்தினால் போலும். வழிதவறிப் போகின்றவர்கள் சரியான வழியே போவான் ஒருவனைக் கண்டால் தாமும் அங்ஙனமே போக வேண்டுமென்று ஆசைப்படுவார்களல்லவா? அதற்காகத்தான் தம் நிலையை எடுத்துக்காட்டுகின்றார் என்று கொள்ளலாம்.

'எம்பெருமான் ஒருவனையே துதிக்கப் பிறந்த நான் வேறொருவரையும் துதிக்கமாட்டேன்' என்று சொல்ல வேண்டியவர் 'யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்' என்று சொல்லுவதில் ஒரு கருத்துச் சிறப்புண்டு. எம்பெருமானைத் துதியாமல் இருந்தாலும் இருக்கலாம், பிறரைத் துதிக்கலாகாது என்பதுவே அது. 'திருவேங்கட முடையானே என் பாசுரத்திற்குப் பொருளாகக் கூடியவன்' என்கின்றார் பின்னடிகளால். இவ்விடத்தில்,

'மறந்தும் புறந்தொழா மாந்தர்'
—நான். திருவந். 68

'தண்ணார்ந்த கடல்மல்லைத்
தலசயனத்து உறைவாரை
எண்ணாதே இருப்பாரை
இமைப்பொழுதும் எண்ணோமே'.
பெரி. திரு. 2:6:1

கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தை எண்ணாத
போதெல்லாம் இனிய வாறே
—பெரி. 11.6:7

என்ற பாசுரங்கள் அநுசந்திக்கத் தகும், அநுபவ ரசிகர்களான ஆழ்வார்கள் எம்பெருமானை யானையாகப் பலவிடங்களிலும் பேசுவதை அவர்கள் பாசுரங்களில் காணலாம்.

அடுத்து, அற்ப சம்பத்துகளையுடையரானவர்களைக் குறித்துக் கவிபாடுவாரை நிந்திக்கின்றார் ஆழ்வார்.

உளனாக வேயெண்ணித் தன்னையொன்
றாகத்தன் செல்வத்தை
வளனா மதிக்கும்இம் மானிடத்
தைக்கவி பாடியென்? (2)

தன்னையும் ஒரு பொருளாகப் பாவித்துத் தன் செல்வத்தையும் ஒரு செல்வமாக மதித்திருக்கின்ற இந்த அற்ப மனிதர்களைக் கவிபாடி என்ன பயனாகும்? என்று கூறுகின்றார். 'அந்தப் பரம்பொருளைத் தவிர பலவகைப் பட்ட பொருள்கள் ஒன்றும் இல்லை' என்பது கடவல்லி உபநிடதம் (2.4:11), ஆகவே, அவனுக்குப் புறம்பாய் இருப்பது என்பதாக ஒரு பொருள் இல்லை. தானே இல்லையாம்போது தன் செல்வம் என்று ஒன்று உண்டோ? இல்லாத செல்வத்தை இருப்பதாக நினைப்பது தவறு. அதற்குமேல் அது தன்னை மிகவும் உயர்ந்ததாக மதித்திருப்பது மேலும் பெருந்தவறு. 'இம் மானிடரை' என்று சொல்ல வேண்டிய இடத்தில் 'இம் மானிடத்தை' என்று அஃறிணையாகச் சொன்னதற்கும் ஒரு சிறப்புப் பொருள் உண்டு. தன்னை மெய்யாக[2] அறியாதவன் அறிவற்ற

2. 'தன்னை மெய்யாக' என்றது, சிலேடை. ஈசுவரனுக்குத் தன்னைச் சரீரமாக நினையாதவன் என்றும், தன்னை உண்மையாக அறியாதவன் என்றும் இருபொருள் காண்க.

பொருளுக்குச் சமமானவன் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே இவ்வாறு கூறினார். இக் கருத்தை ஓரளவு ஒட்டித் தம்பிரான் தோழரும்.

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்**
**சார்வினும் தொண்டர் தருகிலாப்**
**பொய்மை யாளரைப் பாடாதே எந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள் (1)**

என்று பேசுவார். 'தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும் சார்ந்து நின்றாலும் பொருள்தர மனம் வராத செல்வரைப் பாடாமல் சிவனுடைய ஊரைப் பாடுங்கள் (புகலூர்)[3]; கோயிலைப் பாடுங்கள்' என்கின்றார்.

ஆழ்வார் தம் கவிதையில் திருக்குறுங்குடி[4] எம்பெருமானைக் குறித்துக் கவிபாட வேண்டும் என்கின்றார் பின்னடிகளில். திருக்குறுங்குடி[4] என்றது எல்லா திவ்விய தேசங்களுக்கும் உபலட்சணம். பர வாசுதேவனாயும்

---

3. **திருப்புகலூர் :** நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து கிழ்த்திசையில் 4 கல் தொலைவிலுள்ளது. முருக நாயனார் நாடோறும் பூத்தொடுத்து வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரின் பாடல் பெற்ற தலம். அப்பரடிகள் முத்தி பெற்றதலம். சுந்தரர் செங்கல்லைத் தலையணையாக வைத்து உறங்கும்போது இறைவன் அதைப் பொன்னாக்கி அவருக்கு அளித்த அற்புதத்திருத்தலம்.

4. **திருக்குறுங்குடி :** இது பாண்டி நாட்டுப் பதினெட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. குறுகியவனான வாமனனது கோயிலாதலால் இத்திருத்தலத்திற்குக் குறுங்குடி என்று திருநாமம் ஏற்பட்டது. சேரன்மாதேவி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 16 கல் தொலைவிலுள்ளது. வானமாமலை (சிரீவரமங்கை) என்ற திருத்தலத்திற்கு மேற்கே பேருந்து வழியில் 8 கல் தொலைவிலுள்ளது. நம்மாழ்வார், திருமழிசையாழ்வார் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நால்வரும் மங்களாசாசனம் செய்த திருத்தலம்.

திருப்பாற்கடல் நாதனாயும் (வியூகம்), இராமகிருஷ்ணன் முதலிய அவதாரங்கள் செய்தவனாயும் (விபவம்), சர்வ அந்தர்யாமியாயும் கோயில், திருமலை, பெருமாள் கோயில் (திருவரங்கம் திருவேங்கடம், காஞ்சி அத்திகிரி) முதலிய திவ்விய தேசங்களில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனாயும் உள்ள சர்வேசுவரன் ஒருவனையே கவி பாட வேண்டும் என்பது ஆழ்வாரின் குறிப்பு[5], இங்ஙனமே, தம்பிரான் தோழரும், 'இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம், இடர்நீங்கி வாழலாம்; மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயமே இல்லை' என்கின்றார் பின்னடிகளில்.

ஆழ்வார் கூறுவது : காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையும் நிலை நின்று அநுபவிக்கும்படி கைங்கரியத்தைத் தந்தருளி நம்மை ஆட்கொள்பவன் எம்பெருமான்; இவன் கைங்கரியம் செய்கின்ற நித்தியசூரிகளை ஒரு நாடாக உடையவன்; இப்படிப்பட்ட எம்பெருமானை எத்தனை யூழிகாலம் கவி பாடினாலும் ஏற்றிருக்கும்; பாடுவதற்கு மெய்யான திருக்குணங்கள் எல்லை கடந்தவை உண்டு. பாடுபவர்கட்கும் அடையத் தக்கவையெல்லாம் அடையும் சித்தி உண்டு. பாட்டுக்கும் மிக்க சிறப்புண்டு இப்படியிருக்கக் கீழான பொருள்களைத் தேடித் திரிந்து

5. எம்பெருமானுடைய திருமேனி பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலையில் இருக்கும். பரம் என்பது வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் பரவாசுதேவனின் இருப்பு; வியூகம் என்பது திருப்பாற்கடலில் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்னன் அநிருத்தன என்ற நால்வரின் இருப்பு! விபவம் என்பது, அவதார மூர்த்திகளின் இருப்பு; அந்தர்யாமி என்பது எல்லோருடைய இதயகமலத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை; அர்ச்சை என்பது, திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள நிலையும், மற்றும் அடியார்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனி கொண்டு இருக்கும் நிலையும்.

மானிடம் பாடிக் கீழான நிலையை அடையப் பார்க்கின்றீர்களே. பாட்டுண்கிறவனுக்கு இல்லாத நன்மைகளை இட்டுச் சொல்லுகையாலே, அவனுக்கே ஒரு பிரமிப்பு ஏற்பட்டு விடும். அவனுக்கு இல்லாதனவற்றை இட்டுப் பாடும்போது கவிகளும் அவற்றையுடையவனையன்றோகாட்டும்?' என்கின்றார் (3). தம்பிரான் தோழரும்,

மிடுக்கி லாதானை வீம னேவிறல்
விசயனே வில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரியே என்று
கூறி னும்கொடுப் பாரிலை (2)

என்று கூறுவர் இப்படிப் பாடாமல் 'பொடி கொள்மேனி எம் புண்ணியன் புகலூரைப்' பாடினால், 'அமரர் உலகம் ஆள்வதற்குரிய பேறும் கிட்டும். இதில் ஐயம் சிறிதும் இல்லை' என்றும் உறுதி கூறுவர் (2).

சடகோபர் கூறுவார்: 'அழிந்து போகின்ற ஒரு மானிடப் பிறவியைப் பாடிப் படைக்கும் பெரிய பொருள் எத்தனை நாட்களுக்குப் போதும்? மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினால் தனக்கே உரியவனாக நினைத்துப் பிறவித் தளையும் அறும்படி செய்வான். சுந்தரமூர்த்தி அடிகளும்,

காணி யேற்பெரி துடையனே கற்று
நல்லனே சுற்றநன் கிளை
பேணி யேவிருந் தோம்புமே என்று
பேசி னும்கொடுப் பாரிலை (3)

என்று பேசுவர்.

ஆழ்வார் அருளிச் செய்வது; 'குப்பைகளைக் கிளறினால் கெடுதலான கூறுகள் தென்படுமேயன்றி நன்றான தொன்றும் தென்படமாட்டாது; அதுபோல் நீசர்கள் வரலாற்றைக் கவி பாடப் புகுந்தால் மறைந்து கிடக்கும் மாசுகள்தாம் வெளி வரும்' என்று அநுபவத்திற்குப்

பொருத்தமாகத் தெரிவிக்கின்றார். இதனால் அடையும் பேறு 'பொய்யர்கள்' என்ற அபகீர்த்திதான். அற்ப மனிதர்களின்மீது ஏற்றங்களை ஏறிட்டுக் கொண்டுகவி பாடினால் அவற்றைக் கொள்ளும் பெருமை அவர்கட்கு இராது. எம்பெருமான்மீது எவ்வளவு ஏற்றமாகக் கவி பாடினாலும் அந்த ஏற்றமெல்லாம் அங்கே மிகவும் பொருத்தமாக அமைந்து விடும் (5); இதனை வன்றொண்டர்,

**நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல்**
**நடுங்கி நிற்குமிக் கிழவனை**
**வரைகள் போல்திரள் தோளனே என்று**
**வாழ்த்தி னும்கொடுப் பாரிலை (4)**

என்று கூறுவார். சொற்கள் தவறான இடங்களில் தம்மை அமர்த்தியமைக்கு நாணித் தலைகுனிந்து நிற்கின்றன.

சடகோபர் சாற்றுவார் : 'உங்கள் உடம்பை உழைக்கச் செய்து தொழில் செய்து பிழைக்கலாம். இந்த உலகில் உங்கள் பாட்டுக்கு ஏற்ற செல்வர்கள் இலர் என்பதைத் தெரிந்து கொண்டோம். உங்கள் கவிதைகள் கொண்டு உம் இட்டாத் தெய்வத்தைப் புகழ்ந்து பாடுங்கள், இத்துதி மொழிகள் சிறு தெய்வங்கட்குப் பொருத்தமற்றவை என்று உண்மையாகவே பொருளுக்கு உரிய எம் திருமாலுக்குச் சேர்ந்து விடும்' (6) என்று. சுந்தர மூர்த்தியடிகளும்,

**வஞ்ச நெஞ்சனை மாச ழக்கனைப்**
**பாவி யைவழக் கில்லையைப்**
**பஞ்ச துட்டனைச் சாதுவே என்று**
**பாடி னுங்கொடுப் பாரிலை (5)**

என்று கூறுவர். ஆகவே, செஞ்சடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமாறு ஆற்றுப்படுத்துவர். மேற்குறிப்பிட்டவாறு நாணித் தலைகுனியும் சொற்கள் இறைவன்மீது பிரயோகப் படுத்தும்போது செம்மாந்து நிற்கின்றன. அவனுடைய அனந்த கல்யாண குணங்களை முற்றிலும் வெளிப்படுத்து

வதற்கான ஆற்றல் தமக்கில்லையே என்று வருந்தவு செய்கின்றன.

குருகைப் பெருமான் கூறுவது :

சேரும் கொடைபுகழ் எல்லை
இலானைஓர் ஆயிரம்
பேரும் உடைய பிரானைஅல்
லால்மற்று யான்கிலேன்
மாரி அனையகை மால்வரை
ஒக்கும்திண் தோள்என்று
பாரில்ஓர் பற்றையைப் பச்சைப்
பசும்பொய்கள் பேசவே (7)

என்பது பாசுரம். இதற்குமுன் ஆறு பாசுரங்களில் பிறருக்கு உபதேசம் செய்தருளினார் ஆழ்வார். இவருடைய உபதேசத்தைக் கேட்டு ஒருவரும் திருந்துதலைக் காணாமை யால் வெறுத்து அவர்களை விட்டு 'எம்பெருமானைத் தவிர வேறு சிலரைக் கவி பாடுகையாகிய பாவம் 'எனக்கு இல்லை யாகப் பெற்றதே!' என்று தம்மளவிலே உகந்து பேசு கின்றார். "வழிபறிக்கும் நிலத்தில் தன் கைப்பொருள் கொண்டு தப்பினவன் உகக்குமாபோலே இவர்களைப் போலன்றியே, பகவத் விஷயத்தை ஒழிய வேறு சிலரைக் கவி பாடுகைக்கு நான் சக்தன் அல்லனாக ஒழியப் பெற்றேன் என்று பிரீதர் ஆகின்றார்" என்பது நம்பிள்ளை ஈடு.

இவ்வுலகில் கொடையாளிகள் பலர் இருப்பினும், 'இன்னான் இன்னது கொடுத்தான்' என்று சொன்னால் 'அதை நான் நம்பேன்' என்பார் உண்டு. எம்பெருமான் உபய விபூதியையும் ஒருவனுக்குக் கொடுத்தருளினான் என்றாலும் 'இது நடக்கக் கூடிய தன்று' என்பார் இலர். கொடை புகழ் பொருந்தியிருக்குமாயிற்று எம்பெரு மானுக்கு; அதாவது தகுதியான கொடையால் வந்த புகழுக்கு எல்லையில்லாதவன் என்பது உறுதியாயிற்று;

பெரும் புகழ் பொருந்திய ஆயிரந் திருநாமங்களையுடைய வனாதலால் எந்த வீருத்தத்திலும் எளிதாகத் திருநாமங் களையிட்டுக் கவி பாடுவதற்குரியவனாகின்றான். "ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை அல்லது மற்றொரு தாழ்ந்த புருஷனை என் வாயினால் நான் துதிக்க மாட்டேன்; அவரவர்கள் நரஸ்துதி செய்வதெல்லாம் பச்சைப் பசும் பொய்யே அல்லது வேறில்லை'' என்று காட்டுகின்றார் பின்னடிகளில்,

கொடுக்கின்ற கைம்முதல் சிறிதுமில்லாத ஒருவனை நோக்கி 'மாரியனைய கையான் இவன்' என்றும் கொடையை நினைத்துத் தேம்புகின்ற தோளுடையானைக் குறித்து 'மால்வரையொக்கும் திண் தோளன் இவன்' என்றும் கவி பாடுவதெல்லாம் மெய்யுரை சிறிதும் கலவாத பொய்யுரையேயாம் (unadulterated lie); இத்தகைய பொய்யுரைகளில் தான் பிரவேசிக்கத் தக்க சக்தனல்லன் என்கின்றார். அசாரமான திருணவிசேடத்தைப் பற்றை என்பர். அது போன்றவன் என்னாமல் அதுவாகவே சொன்னது முற்றுவமை. "முளைத்தெழுந்து தீய்ந்து போவன சில தூறு உண்டாயிற்று; அது போல, பிறந்தவன்று தொடங்கி முடிந்து போமளவும் ஒரு காரியத்திற்கு உதவாத வர்களைப் பற்றை என்கின்றது" என்பர் நம்பிள்ளை.

இத்தகைய கருத்துகளையே நம்பியாரூரரும்,

நலமி லாதானை நல்லனே 'என்று
நரைத்த மாந்தரை இளையனே
குலமி லாதானைக் குலவனே என்று
கூறி னும்கொடுப் பாரிலை (6)

நோய னைத்தடந் தோளனே என்று
நொய்ய மாந்தரை விழுமிய
தாயன் றோபுல வோர்க்கெலாம் என்று
சாற்றி னும்கொடுப் பாரிலை (7)

எள்வி ழுந்திடம் பார்க்கு மாகிலும்
ஈக்கும் ஈகில னாகிலும்
வள்ள லேஎங்கள் மைந்தனே என்று
வாழ்த்தி னுங்கொடுப் பாரில்லை (8)

என்ற பாடல்களில் காட்டுவர். இவர்களைப் பாடுவதைத் தவிர்த்துப் பூம்புகலூரைப் பாடுமாறு ஆற்றுப்படுத்துவர்.

'நான் பிறரைக் கவி பாடுவேன் என்றாலும், என்வாய் அவனைத் (எம்பெருமானைத்) தவிரப் பாடாது' என்கின்றார் குருகூர்ச் சடகோபர்.

வேயின் மலிபுரை தோளி
பின்னைக்கு மணாளனை
ஆய பெரும்புகழ் எல்லை
இலாதன பாடிப்போய்க்
காயங் கழித்தவன் தாளிணைக்
கீழ்ப்புகும் காதலன்
மாய மனிசரை என்சொல
வல்லேன்என் வாய்கொண்டே (8)

என்பது பாசுரம். "நப்பின்னைப் பிராட்டியின் விரோதிகளைத் தொலைத்து அவளை அடிமை கொண்டதுபோல என் விரோதிகளையும் தொலைத்து என்னை அடிமை கொள்பவனான எம்பெருமானையொழிய வேறு நீசரைக் கவி பாட நான் நினைத்தாலும் என் வாய் அதற்குப் பாங்காகாது" என்கின்றார். எம்பெருமானை வருணிக்கப் புகுந்து 'நப்பின்னை கேள்வன்' என்று சொல்லி அந்த நப்பின்னையைப் பல பாசுரங்களால் வருணிப்பது, அவளது தோளழகினைப் பல பாசுரங்களால் வருணிப்பது, இப்படி எத்தனை யூழிக்காலம் பாசுரம் பாட நினைத்தாலும் பொருள்கள் பரந்து பட்டிருக்க இதரப் பொருள்களைப் பாட என்ன அவசியம்?" என்று காட்டுகின்றார்.

இப்பாசுரத்தில் 'ஆய பெரும் புகழ் எல்லை இலாதன பாடிப் போய்க் காலம் கழித்து' என்ற தொடர் மிக இனிமையானது. எல்லை இல்லாத பகவத் குணங்களையே இடைவிடாது பாடிக்கொண்டிருந்து அதுவே யாத்திரை யாய் உடலை விடவேண்டுமென்கின்ற பாரிப்பை ஆழ்வார் தெரிவிக்கின்றனர். இந்த முறையில் சரீரம் கழிந்தால் சுவர்க்கமோ நரகமோ செல்லப் பிராப்தியில்லையே; அவனது திருவடி நிழலில்தானே ஒதுங்கும் பேறு கிட்டும்; இக்கருத்தை மூன்றாம் அடியில் பேசினர். இங்கு, "இச்சரீரத்தைக் கழித்த பின்னர், ஸ்வாநுபவம் பண்ணி யிருத்தல், வேறு பயன்களைக் கொள்ளுதல் செய்ய இராமல், அடிமைக்குப் பாங்கான சரீரத்தைப் பெற்று, தாய்முலைக்கீழே போய் ஒதுங்கும் இளங்குழவியைப் போன்று திருவடியின்கீழே ஒதுங்குவேன் என்னும் ஆசை யுடையவன் நான்" என்பது நம்பிள்ளை ஈடு.

'மாயமனிசரை' என்பது, "பிறப்போடே முடிகின்ற அழிவினையுடையவர்களை; அதாவது—பாடத்தொடங்கின கவி முடிவதற்கு முன்னே முடியும் மனிதரை" என்பது (இஃது ஈடு). கழுத்துக்கு மேலே சொல்ல என்னிலும் இசைகிறது இல்லை என்பார், 'வாய் கொண்டு சொல்ல வல்லேன்' என்கின்றார். வேறே சிலர் வாக்காலே பாடினா லும் பாடலாம் என்பார் 'என்வாய் கொண்டு' என்கின்றார். 'மனம் முன்னே வாக்கு பின்னே' என்னக் கடவதன்றோ? எம்பெருமான் விஷயத்தில் காதலைப் பண்ணிப் புறம்பே சிலரைக் கவி பாடவொண்ணுமோ? ஆசைப்படுவது ஒன்றாய், பேசுவது வேறொன்றாய் இருக்குமோ? எல்லா இந்திரியங்கட்கும் அடி, மனம் அன்றோ? அதனைத் தொடர்ந்து செல்வன அன்றோ அல்லாத காரணங்கள்? இப்போது இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்? என்னில்: சம்பந்தம் ஒத்திருக்கப் புறம்பே சிலர் சிலரைக் கவி பாடக் காண்கையாலே "நான் முந்துற முன்னம் இதில் நின்றும் தப்பப் பெற்றேன்" என்கின்றார்.

இந்த இடத்தில் தம்பிரான் தோழர் கூறுவதையும் சிந்திக்கின்றோம்.

கற்றிலா தானைக் கற்று நல்லனே
காம தேவனை யொக்குமே
முற்றிலா தானை முற்றனே என்று
மொழியி னுங்கொடுப் பாரிலை (9)

தையலா ருக்கேள காமனே சால
நலவழகுடை ஐயனே
கையு லாவிய வேலனே என்று
கழறி னுங்கொடுப் பாரிலை (10)

என்பவற்றை ஆழ்வார் கருத்துடன் ஒப்பிட்டுக் காண்கின்றோம்.

அடுத்த பாசுரத்தில் "பரம உதாரனானவன் என் கவிக்குத் தன்னைப் பொருளாக்கி வைத்த பின்பு மற்றையோரைத் துதித்தற்கு அதிகாரி அல்லேன்" என்கின்றார்.

வாய்கொண்டு மானிடம் பாடவந்த
கவியேன் கல்லேன்
ஆங்கொண்ட சீர்வள்ளல் ஆழிப்
பிரான்எனக் கேயுளன்
சாய்கொண்ட இம்மையும் சாதித்து
வானவர் நாட்டையும்
நீகண்டு கொள்ளென்று வீடும்
தரும்நின்று நின்றே (9)

என்பது பாசுரம். 'நாவாயிலுண்டே நமோ நாரணா என்று, ஓவாது உரைக்கும் உரை உண்டே' (முத. திருவந் 95) என்று பொய்கையாழ்வார் கூறுகிறபடி எம்பெருமானைத் துதிக்கைக்காகவே படைக்கப் பெற்ற வாயைக் கொண்டு நீசரைக் கவிபாடப் பிறந்தவனல்லேன் என்கின்றார் முதலடியில், 'பஞ்சவர்க்குத் தூது, நடந்தானை ஏத்தாத

நாவென்ன நாவே, நாராயணா என்னா நாவென்ன நாவே" (சிலப் ஆய்ச். குர) என்ற இளங்கோ அடிகளின் வாக்கினா லும் இதனை அறியலாம். சக்கரக்கையனான எம்பெருமான் என் வாக்குக்கே இலக்காக உள்ளான். இஃது எப்படித் தெரிகின்றது? என்னில்:

''பெருங்கேழ லார்தம் பெருங்கண்
 மலர்ப்புண் டரீகம்நம்மேல்
ஒருங்கே பிறழவைத் தார்இவ்வ
 காலம் ஒருவர் நம்போல்
வருங்கேழ் பவருளரே' (திருவிருத். 45)

என்னும்படி தன் கடைக்கண் பார்வையை என் பக்கலி லேயே ஒருமடை செய்தது போலத் தன்னைப் பற்றிக் கவி யிடுவதையும் என்னொருவனுக்கே உரித்தாக்கியருளினான் எம்பெருமான்', என்கின்றார். 'எனக்கே' என்பதில் உள்ள ஏகாரம் 'எம்பெருமானைப் பொருளாகக் கொண்டது என்னைத் தவிர வேறொருவரும் இல்லை' என்பது தெரிவிக்கப் படுகின்றது.

வலக்கை யாழி இடக்கைச்
 சங்கம் இவையுடை மால்வண் ணனை
மலக்கும் நாவுடையேற்கு மாறுள
 தோஇம் மண்ணின் மிசையே

—திருவாய் 6.4:9

என்று பின்னும் கூறுவர். மோட்ச சுகத்திலும் நன்றாம்படி இவ்வுலகத்திலேயே தன் அநுபவமே யாத்திரையாம்படி செய்து தந்தானாதலின் 'சாய்கொண்ட இம்மை' என்கின்றார். 'இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்.' (திருமாலை: 9) என்றவாறு பகவத் குணாநுபவத்தையே அந்த சுகமாகக் குறிக்கின்றார். எம்பெருமான் பரமபதத்தை நித்தியமுக்தர் களிட்ட வழக்காம்படி அவர்கட்கு உரிமையாக்கி, அவ்வீடத்

தில் தான் பிறர்மனையில் குடியிருப்பவன் போல இருக்கின்றான் என்று தோன்றுமாறு 'வானவர் நாடு' என்கின்றார். 'வானிளவரசு வைகுந்தக்குட்டன்' (பெரியா. திரு 3.6:6) என்றார் பெரியாழ்வாரும்.

இறுதிப் பாசுரத்தில் 'உலகம் படைத்தான் கவியான எனக்குப் பிறரைத் துதிக்கும் காரணம் ஏற்றதன்று' என்கின்றார்.

**நின்றுநின்று பலநாள் உய்க்கும்**
**இவ்வுடல் நீங்கிப்போய்ச்**
**சென்றுசென் றாகிலும் கண்டுசன்**
**மங்கழிப் பானெண்ணி**
**ஒன்றியொன்றி உலகம் படைத்தான்**
**கவியாயி னேற்கு**
**என்றுமென் றும்இனி மற்றொரு**
**வர் கவி ஏற்குமே** (10)

என்பது பாசுரம். உலகில் வேளாண்மையில் ஈடுபட்டவன் தான் மேற்கொண்ட தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிட்டா தொழிந்தாலும் 'இன்னமும் ஒரு தடவை செய்து பார்ப்போம்' என்று மீண்டும் மீண்டும் நசையாலே வேளாண்மையை விட்டொழியான். அது போல எம்பெருமானாகிய 'பக்தியுழவனும்' (நான். திருவந். 23) பக்தி வேளாண்மை செய்து வருபவனாதலால், அத்தொழில் எத்தனை தடவை முட்டுப்பட்டாலும் 'இன்னொருதடவையிலாகிலும் பலிக்க மாட்டாதோ' என்று மீண்டும் மீண்டும் உலகப் படைப்பைச் செய்தருளுகின்றான். காலம் உள்ள அளவும் ஆன்மாவைத் தன் வசத்தில் இழுத்துக் கொண்டு சென்று அனர்த்தங்களுக்கு ஆளாக்குவது இந்த உடல். ஆன்மா உடலை விட்டுப் போகக்கூடிய வழிகள் கர்ப்பகதி, யாம்யகதி, தூமகதி, அர்ச்சிராதிகதி என்ற நான்காகும். அர்ச்சிராதிகதி வழியாக ஆன்மா பரமபதத்தை அடைந்து தன்னை அநுபவிக்கப்பெற வேண்டும் என்று எம்பெருமான்

பாரித்திருந்தும் ஆன்மாக்கள் அவ்வழியைப் புறக்கணித்து ஏனைய மூன்று வழிகளிலேயே செல்லுகின்றன. ஆனால், எம்பெருமான் என்றேனும் ஒரு பிறவியில் இந்த வழிக்கு அவர்கள் வரக்கூடும் என்று எண்ணி மேன்மேலும் உலகினைப் படைத்து வருகின்றான். இதனைப் பெரிய திருவந்தாதியிலும் 'சோம்பாது இப்பல்லுருவை எல்லாம் படர்வித்த வித்தகா' (18) என்கின்றார். "இங்ஙனம் மேன் மேலும் கைவாங்காமல் ஒரு நசையாலே உலகத்தைப் படைத்துக் கொண்டே வந்த எம்பெருமானுடைய வேளாண்மை என் ஒருவனைப் படைத்ததனால் பலித்த தால் அவனையே கவிபாடும் படியான பேறு பெற்றேன்" என்கின்றார். "அவன் எதிர்சூழல்புக்குத் திரிந்து பண்ணின கிருஷிபலித்து அவனுக்குக் கவியாகப் பெற்ற எனக்கு" என்பது நம்பிள்ளை ஈடு. "எம்பெருமானது கவியாக வாய்க்கப்பெற்ற நான் இனி மற்றொரு நீசனையும் கவி பாடி நின்றேனாகில் எம்பெருமானுக்குப் பலித்த வேளாண்மை விணாகுமன்றோ? ஆகையால் அத்தகைய செயலில் ஈடுபடுவது என் இயல்புக்கு மாறானது" என்று தலைக்கட்டுகின்றார்.

இங்ஙனம் சமயப் பெரியார்களின் அறிவுரையைச் செவி மடுத்த பிறகு அவற்றைச் சிந்தித்தும் தம் அநுபவத்தை யொட்டியும் பிற்காலக் கவிஞரொருவர்,

கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்
    காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
    போர்முகத்தை அறியானைப் புலியேன் என்றேன்
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை
    வழங்காத கையனைநான வள்ளல் என்றேன்
இல்லாத சொன்னேனுக்கு இல்லை என்றான்
    யானும்என் குற்றத்தால் ஏகின் றேனே

என்று கூறுவார். ஆனால் இக்காலத்துக் கவிஞர்களில்

6. ஒரு தனிப்பாடல்

பெரும்பாலோர் செல்வர்களையும் அரசியல் வாதிகளையும் அமைச்சர் பெருமக்களையும் 'வாய் கொண்டு' (வாய்க்கு வந்தபடி) பாடி வருவதையும் அவர்கள் பற்றிப் பிள்ளைத் தமிழ் போன்ற பிரபந்தங்களைப்பாடி மகிழ்வதையும் காண்கின்றோம். நெய்க்குடத்தை எறும்பு கள் சுற்றித் திரிவதுபோல் இப்பெருமக்களைச் சுற்றித் திரியும் இவர்கட்கு இறைவன்தான் அறிவு கொளுத்த வேண்டும். இவ்வுலகில் இவர்களைத் தடுத்து நிறுத்துவார் ஒருவரும்இலர். கா. சு. பிள்ளையும் புகழுடன் வாழ்ந்தார்; காசுக்காகப் பாடாத பெருமகனார் அவர், அவர் நமக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக நின்று நம்மை வாழ்த்து பவராக அமைந்து திகழட்டும்.

# 6. திருக்குறள் - சமயவியல் சிந்தனைகள்*

சமயமே-மெய்ப்பொருளியலே-மானிட வாழ்க்கையின் சிறந்த நிலை என்று கருதுவர் சான்றோர். திருக்குறள் ஒரு நாத்திக நூல் என்று இதுகாறும் எவராலும் நிறுவப்பெற வில்லை. ஏன்? தந்தை பெரியார் கூட திருக்குறளை ஒரு பகுத்தறிவு நூலாகவோ ஒருநாத்திக நூலாகவோ ஏற்க வில்லை. 'கடவுள் வாழ்த்து' அடங்கிய 'பாயிரம்' வள்ளுவர் பாடவில்லை என்ற கருத்துகூட உண்டு. கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் கூட இக்கருத்திற்கு உடன் பாடாக இருந்தார். எனினும், பாயிரத்திற்கும் நூலுக்கும் உள்ள சொல், பொருள், ஒருமைப்பாடுகளைக் காரணமாகக் கொண்டு நோக்கினால் பாயிரம் பாடியது அவரே எனலாம். எல்லாச் சமயத்தவர்களும் அவரைச் சிறைப்படுத்த முயன்றாலும் அவர்கட்கு அகப்படாமல் தப்பித்தே செல்கின்றார். பல்லாண்டுகளாக வைணவத்தை யும் சைவத்தையும் ஆழ்ந்து கற்பவனாதலால் நம் அருமைத் தம்பி டாக்டர் கு. மோகனராசு நான் சமயச்சிறையில் அகப் பட்டவன் என்று கருதித்தான் இந்தப் தலைப்பு தந்துள்ளார் என்று கருதுகின்றேன். ஆனால் ஒன்று சொல்வேன்; அதை வற்புறுத்தியும் சொல்வேன்: ''நான் சமயங்களை ஆழ்ந்து பயில்பவன்; சமயச் சான்றோர்களின் சிந்தனைகளில் மிதப்பவன், 'ஒன்றேகுலம்; ஒருவனே தேவன்' என் கொள் கையில் சுதந்திரமாக இருப்பவன். சாதிப் பிரிவுகளில்

---

* உலகத்திருக்குறள் உயராய்வு மையம் நடத்திய நான்காவது திருக்குறள் மாநாட்டில் (17-3-92) 'ஆய்வரங் கத்தில்' படிக்கப் பெற்றது.

நம்பிக்கை இல்லாதவன்; அதனை அடியோடு வெறுப்பவன்; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கொள்கைப் பிடிப்பில் அகப்பட்டவன்''.

வாழ்க்கை நடைமுறைக்கு உகந்த கீதையை சமயவாதிகள் சிறைப்படுத்த முயல்வதைப் போலவே, திருக்குறளையும் சமயவாதிகள் சிறைப்படுத்த முயல்கின்றனர். ஆனால் அவர்கள் படும் தொல்லைகள் :

1. திருவள்ளுவர் எந்த ஒரு இடத்திலும் தம்முடைய சமயச்சார்பு இன்னது என்பதை வெளிப்படையாகத் திட்டவட்டமாகப் புலப்படுத்திக் கொள்ளவில்லை.

2. இறை, மறை இயல் தொடர்பாக அவர் கையாண்டுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் பற்றாசாகக் கொண்டு வலிந்தும் மெலிந்தும்—ஏன்? நலிந்தும் கூடத்தான்—தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றனர்.

திருக்குறள் சமய சம்பந்தமான ஓர் ஏடா? என்ற ஆராய்ச்சியில் இறங்குவோர் திறந்த மனம் உடையவராகவும் விருப்பு வெறுப்பு அற்றவராகவும் இருத்தல் வேண்டும். இம்மன நிலை எளிது அன்று. ஆயினும் அருமையில்தான் பெருமை அடங்கியுள்ளது.

என் சிற்றறிவுக்கு எட்டியவரை அடியிற்கண்டவற்றை என் ஆய்படுபொருளாக (thing at issue) வைத்து ஆயமுற்படுகின்றேன்.

1. திருவள்ளுவர் 'இறைவன்' என்ற ஒரு பொருளை நம்புகின்றார்; இந்த நம்பிக்கை சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இல்லை.

2. திருவள்ளுவர் வினைபற்றிய கொள்கையில் நம்பிக்கையுடையவர். இந்த நம்பிக்கை சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இல்லை.

3. திருவள்ளுவர் பிறப்பு-இறப்பு வட்டங்களில் நம்பிக்கையுடையவர். கிறித்தவர்கட்கும் இஸ்லாமியர்கட்கும் இந்த நம்பிக்கை இல்லை.

4. திருவள்ளுவர் உலகு, உயிர், அறியாமை (அவித்யை அல்லது மாயை) ஆகிய பொருள்களின் உண்மையை (Truth) நம்புபவர். ஆனால் சங்கரரின் அத்வைதத்தின் நிலை இதற்கு மாறானது. அத்வைதிகள் ஆன்மிகப் பயிற்சி நிலையில் (சாதன நிலை) இவற்றின் உண்மைகளில் உடன்பட்டு பேறுநிலையில் (சாத்திய நிலை) உடன்படுவதில்லை. திருவள்ளுவர் இவ்விரு நிலைகளிலும் உடன்படுபவர்.

5. உயிர்கள் எண்ணற்றவை என்ற கருத்தை கடவுள் வாழ்த்தில் வரும் 'குணமிலவே' என்ற பன்மை வழக்கு உறுதிப்படுத்தும். இக்கருத்து சைவத்திற்கும் வைணவத்திற்கும் உடன்பாடானது. அத்வைதத்திற்கு முரண்பாடானது.

6. சைவத்திற்கும் வைணவத்திற்கும் சிந்தாந்த அடிப்படையில் வேறுபாடுகள் அதிகம் இல்லை.

**சைவம் :** இந்த நிலையில் திருவள்ளுவரின் உள்ளார்ந்த சமயச் சார்பு சைவமா? வைணவமா? என்று காண்பதில் இரண்டே காரணங்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு

வரலாம், ஒன்று: கடவுள் வாழ்த்தில் வரும் 'எண்குணத் தான்' (9) என்று சொல்வது சைவஆகமங்களின் அடிப்படை யில்தான் என்பதைப் பரம வைணவராகிய பரிமேலழகரே ஒப்புக் கொண்டுள்ளார், இரண்டு: 'அடியளந்தான்' (610), 'தாமரைக்கண்ணன்' (1191) என்ற இடங்களையும் கூர்ந்து நோக்கின் கீர்த்தி உடையனவாகத் தெரியவில்லை. இந்த நீக்குதல் முறையால் (Elimination Process) திருவள்ளுவரின் சமயச் சார்பு 'சைவமே' என்று அறுதியிட்டு உறுதிப்படுத்துவர் சைவச் சான்றோர். மேலும்,

> **'சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்**
> **சார்தரா சார்தருநோய்'** (359)

என்பன போன்ற குறள்களைக்கொண்டு திருவள்ளுவரின் சமயம் சைவமே என்று தெளிவு படுத்நுவர்.

**வைணவம் :** (1) கடவுள் வாழ்த்தில் வரும் 'ஆதி', 'பகவன்' என்ற சொற்கள் திருமாலுக்கே உரியவையாகக் கூறுவர் வைணவப் பெரியோர்கள். 'அந்தமில் ஆதியம் பகவன்' என்ற திருவாய் மொழித் தொடரைச் சான்றாகக் கொள்வர். (2) இதே கடவுள் வாழ்த்தில் வரும் 'இறைவன்' (5,15) என்பதற்கு எல்லாப் பொருள்களிலும் தங்கு கின்றவன்' என்பதாகப் பொருள் கூறி இது 'நாராயணன்', 'வாசுதேவன்', 'விஷ்ணு' என்பவற்றின் தமிழ் வடிவமே என்று வலியுறுத்தி 'இறைவன்' என்ற சொல்லும் திருமாலுக்கே உரியதாக நிலை நாட்டுவர். (3) 'ஐந்தவித் தான்' (6) என்னும் பெயர் 'இருடிகேசன்' (இந்திரியங்களின் தலைவன்) என்பதன் தமிழ் வடிவம் எனக் கொண்டு இதுவும் திருமாலுக்குரிய பெயரே என்று சாதிப்பர். (4) 'அறவாழி அந்தணன்' (8) என்ற பெயரும் 'அறவனை ஆழிப்படை அந்தணனை' (1.7:1) 'அறமுயல் ஆழிப் படையவன்' என்ற திருவாய்மொழித்தொடர்களைச் சான்றுகளாகக் காட்டித் திருமாலுக்கே உரியனவாக உரிமை கொண்டாடுவர். ( ) 'எண் குணத்தான்' என்பதற்கு 'எளிமைக்குணமுடையவன்' என்று பொருள் கூறி

இச்சொல்லுக்கு இப்பொருளாதலை 'எண்பதத்தால்' (548, 991) என்றவற்றின் சொற்பொருளால் அறியலாம் என்று உறுதிப்படுத்துவர். 'எளிவரும் இயல்வினன்' (1.2;3), 'யாரும் ஓர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான்' (1.3;4) என்ற திருவாய்மொழிகளை இதற்கு அரணாக அமைத்துக் கொள்வர். இறைவனின் திருக்குணங்களுள் 'சௌலப்பியம்' (சுலபமுடைய குணம்)என்பதனை அடியார்கள் சிறப்பித்து கூறுவதும் இதனை வற்புறுத்தும் என்பர். இன்னும் வை. மு. கோ (எண்குணத்தான்) என்பதற்கே விஷ்ணுவின் எட்டுக் குணங்களையே எடுத்துக் காட்டுவர். (6) தாமரைக் கண்ணான்' (1191), 'அடியளந்தான்' (610) என்ற இரண்டு பெயர்களும் திருமாலுக்கன்றி வேறு எத்தெய்வத்திற்கும் இல்லாமையை எடுத்துக்காட்டுவர். இக்கூறியவற்றால் திருவள்ளுவர் சமயம் வைணவமே என்று விதந்து கூறுவர்.

**பௌத்தம்** : (1) 'மலர்மிசை ஏகினான்' (3) என்பதில் 'மலர்' என்பது தாமரைப்பூ. பகவான் புத்தர் பிறந்தவுடன் ஏழடி நடந்தார் என்றும் ஒவ்வொரு அடியை வைக்கும் போது தாமரைப்பூ தோன்றி அவருடைய பாதங்களைத் தாங்கிக் கொண்டன என்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. ஆகவே, 'மலர்மிசை ஏகினான்' என்பது புத்தரையே குறிக்கும். எவ்வாற்றானும் சைவ, வைணவ சமயக் கடவுளரைக் குறிக்கவில்லை என்பது உறுதி என்பர். (') 'ஐந்தவித்தான்' என்பதும் பகவான் புத்தரையே குறிக்கும். புத்தர் பெருமான் மனிதனாகப் பிறந்து வளர்ந்து தம்முடைய பொறிவாயில்கள் அவித்துப் போதி ஞானம் பெற்றுப் புத்த பதவியை அடைந்தார். சிவபெருமானும் திருமாலும் ஐந்தவித்தவர் அல்லர்; அவர்கள் மனிதனாகப் பிறக்காமலேயே (பொறிபுலனும் இல்லாமல்) ஆதியிலிருந்தே கடவுளர்களாக இருப்பவர்கள். (3) 'அறவாழி அந்தணன்' (8) என்ற சொற்றொடரும் புத்தர் பெருமானையே குறிக்கின்றது. பொறிவாயில் ஐந்தவித்துப் போதி ஞானம் பெற்றுப் புத்தர் நிலையை

அடைந்த பகவான் புத்தர் தாம் கண்ட அறநெறியை உலக மக்களுக்குப் போதித்தார். அந்தப் போதனைக்குத் 'தரும சக்கரம்' (அறவாழி) என்பது பெயர் என்று பௌத்த சமய நூல்கள் (எ. டு. மணிமேகலை) கூறுகின்றன. தர்மபீடிகை (தர்ம சக்கரம்) என்பது அறவாழி. புத்தருடைய போதனையை அறவாழியாக அமைத்துப் பௌத்தர்கள் வணங்கினார்கள். அறவாழி என்பது திருமால் ஏந்தியுள்ள 'சுதர்சனம்' என்ற சக்கரப் படையைக் குறிக்காதோ எனின், குறிக்காது. அது மறவாழி, சுடராழி, கொலையாழி, எரியாழி என்றெல்லாம் ஆழ்வார்கள் அருளிச் செய்திருக்கின்றபடியால் என்க என்பர். 'தம்மபதத்தில்' காணப்படுகின்ற பல கருத்துகள் திருக்குறளிலும் காணப்படுவதால், வள்ளுவர் புத்த சமயச் சார்புடையவரே என்று நிலை நாட்டுவர்.

**சமணம்:** சமணர்களும் மேற்காட்டிய குறள்களையே எடுத்துக் கொண்டு தம் வாதத்தை நிறுவுகின்றனர். (1) 'ஆதிபகவன்' (1) என்பது சமண சமயக் கடவுளையே சுட்டுகின்றது. அருகக் கடவுளராகிய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் முதல்வராகிய இரஷபதேவர் ஆதிநாதர் என்றும், ஆதிபகவர் என்றும் கூறப்படுகின்றார். ஆதலால் 'ஆதிபகவன்' சிறப்பாக அருகக் கடவுளையே சுட்டுகின்றது. (2) 'மலர்மிசை ஏகினான்' (3) என்ற தொடரும் அருகக் கடவுளை (தீர்த்தங்கரரை)ச் சுட்டுகின்றது. அருகப் பெருமான் எழுந்தருளும்போது தாமரைப் பூக்கள் தோன்றி அவருடைய திருப்பாதங்களைத் தாங்குகின்றன. என்பது சமண சமயக் கொள்கை. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் 'மலர்மிசை நடந்தோன் மலரயன் அல்லது என், தலைமிசை உச்சிதான் அருளிப் பொறாது,'[1] என்று கூறுவதையும், 'தண்டாமரை மேல் நடந்தான் தடந்தாள் வணங்கிக், கண்டேன் கிடந்தேன் கனவின்'[2] என்று

1. சிலப் நாடுகாண். அடி 204.5.
2. நீலகேசி-அவையடக்கம்.

கூறுவதையும் காட்டுவர். (3) 'பொறிவாயில் ஐந்தவித்தான் (6) என்ற தொடர் அருகக் கடவுளராகிய இருபத்து நான்கு தீர்த்தங்கரருக்கும் பொருந்தும். இந்தத் தீர்த்தங்கரர்கள் மனிதராகப் பிறந்து பொறிவாயில்கள் ஐந்தினையும் அவித்துப் பிறவி நீங்கிக் கடவுளர் நிலையை அடைந்தனர் என்பது சமண சமயக் கொள்கை. ஐம்பொறிகளும் இயற்கையாகவே இல்லாத கடவுளர்கள் ஐம்பொறிகளை அவிக்க வேண்டியதில்லையன்றோ? என்கின்றனர். (4) அற வாழி அந்தணன்' (8) என்பதும் அருகக் கடவுளையே சுட்டுகின்றது. அருகப் பெருமானும் அறவாழியை (தரும சக்கரத்தை) யுடையவர். அவருடைய அற நெறி அறவாழி என்று கூறப்பெறுகின்றது. சமணர்கள் தங்களுடைய திருக்கோயில்களில் தருமசக்கரத்தை வைத்து வணங்குகின்றனர்: அருகர் (தீர்த்தங்கரர்) எழுந்தருளும் போது அவருக்கு முன்னால் அறவாழி செல்லுகின்றது என்பது சமணர்களின் நம்பிக்கை. இவற்றால் திருவள்ளுவர் சமணர் என்பது பெறப்படுகின்றது.

**இஸ்லாம் :** திருக்குறள் தோன்றிய மண் தமிழகமாயி னும் தமிழ், தமிழ்நாடு என்ற சொற்களே வரப்பெறா. முதல் குறளிலேயே 'உலகு' என்ற சொல் அகிலத்துவ நோக்கோடு அமைக்கப் பெற்றிருப்பதாலும், எப்பாவலரும் ஏற்கும் பொது அறங்களைக் கூறுவதாலும், 'பொதுமறை' என்ற பாராட்டைப் பெற்றது. திரு குர்-ஆன் அறபு மொழி யில் அருளப் பெற்றதாயினும், மனிதகுல அனைத்துக்கும் நல்வழிகாட்டும் மறையாகவே அமைந்துள்ளது. இஸ்லாம் பல தெய்வ வழிபாட்டை ஒப்புகொள்ளவில்லை. வள்ளு வரும் பல தெய்வங்களைக் குறிப்பிடவில்லை. பிற தமிழ் நூலார் போலன்றிச் சமயச் சார்பற்ற குணப் பெயர் களாலேயே இறைவனைக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். ஆதிபகவன், வாலறிவன், வேண்டுதல் வேண்டாமை இலான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான், இறைவன் என்று கடவுள் வாழ்த்தில் வரும் பெயர்களும், பொருள், செம்பொருள், மெய்ப்

பொருள், பற்றற்றான், வகுத்தான் எனப் பிற இடங்களில் வரும் பெயர்களும் குர்-ஆன் இறைவனைப் பற்றிக் கூறும் தன்மைகளையே வெளிப்படுத்துகின்றது. இவற்றுக்கும் மேலாக வள்ளுவர் இறைவனை உருவுடையவனாகக் குறிப்பிடவில்லை. குர்-ஆனும் இறைவனை உருவற்றவனாகவே கருதுகின்றது. மறுமை என ஒன்று உண்டென்பதும், இம்மையில் ஒருவன் செய்த வினையின் பயனை மறுமையில் துய்ப்பான் என்று குறள் கூறுவதை (121, 222, 290) இஸ்லாமும் ஏற்கின்றது. இவற்றால் வள்ளுவர் இஸ்லாம் நெறியைத் தழுவியவர்போல் காணப்பெறுகின்றார்.

**கிறித்தவம் :** கிறித்தவ சமயக் கொள்கைகளில் ஒன்றும் திருக்குறளில் இருப்பதாக தெரியவில்லை என்கின்றனர் கிறித்தவ அறிஞர்கள் (மெய்த்திரு டாக்டர் எஸ். இராசமாணிக்கம்). 'இகழ்வாரைப் பொறுத்தல்தலை' (151) என்பதால் மன்னிப்பும், 'பெருக்கத்து வேண்டும் பணிவு' (963) என்பதால் தாழ்ச்சியும், 'என்பும் உரியர் பிறர்க்கு' (72) என்பதால் அன்பையும் வேண்டுமானால் கூறலாம் என்றும், ஆயினும் இவை பண்பட்ட சான்றோர் பலருக்கும் உரிய பொதுப்பண்புகளே என்றும் கூறி 'சமயக் கொள்கைகளாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை" என்று கையை விரிக்கின்றனர். ஆனால் டாக்டர் தெய்வநாயகம் என்பார் திருவள்ளுவர் கிறித்தவரே எனக் கூறிப் பல சிறுசிறு நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் கிறித்தவத்திற்கு முரணாகத் தென்படும் பல குறள்கட்குப் புதிய விளக்கங்கள் கூறி அறிஞர்களின் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளார். இந்நிலையில் மனோன்மணீயத்தில் சீவகனும், நாராயணனும் வாதாடும்போது இறுதியில் ''எதற்கும் திருக்குறள் இடம் தரும், விடு, விடு" என்று சீவகன் முடிவு கட்டுவதை நினைவு கூர்ந்து இவ்வாய்வுக்கு — சிந்தனைகட்கு — முடிவு கட்டுகின்றேன். திறந்த மனத்துடன் மேற்கொள்ளும் ஆராய்ச்சி மனத்திற்குத் தரும் மகிழ்ச்சிபோல் உலகில் வேறொரு பொருள் இல்லை.

# 7. கீதை—மறைமுடியின் சாரம்*

சமயங்களுக்குச் சாத்திரங்கள் இன்றியமையாதவை. அவை மாறிப்போகாதிருப்பதற்கும் மறைந்து போகாதிருப்பதற்கும் சாத்திரங்கள் துணைபுரிகின்றன. சாத்திரங்கள் இல்லையேல் சமயங்கள் உருமாறி விடுகின்றன; பின்பு நிலையற்று அவை அழிந்தும் போகின்றன. சாத்திரங்களைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ள சமயங்கள் என்றும் அசைவற்று உள்ளன. உலகில் நீடூழி நிலைத்துள்ள சமயங்கட்கெல்லாம் அதனதன் சாத்திரங்கள் உள்ளன. கிறித்தவ மதத்திற்கு சாத்திரம் விவிலியம்; இஸ்லாம் சமயத்திற்குச் சாத்திரம் குர்-ஆன்; புத்தமதத்திற்குச் சாத்திரம் தம்மபதம்; இந்து சமயத்திற்கு அப்படித் தனிப்பட்ட சாத்திரம் ஒன்றும் இல்லை. அவரவர்கட்கு விருப்பமானவற்றைச் சொல்லுவர்.

**இந்து சமயம் :** இந்து சமயத்தில் கணக்கற்ற சாத்திரங்கள் உள்ளன. பொதுவாக அவையனைத்தும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டவை. வேதங்களில் பல மறைந்து போய்விட்டன. ஆனால் மறைகளினின்றும் தெள்ளி எடுத்த உபநிடதங்கள் (மறைமுடி) காப்பாற்றி வைக்கப் பெற்றுள்ளன. மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் உபநிடதங்களின் போக்கை எடுத்துக் காட்டுவது பிரம்மசூத்திரம். இதனை வேதாந்த சூத்திரம் என்றும் வழங்குவர். இது பாதராயணர் (வேதவியாசர்) என்பாரால் இயற்றப் பெற்றது. உபநிடதங்களின் கருத்துகளை எல்லாம் தெளிவுபடவிளக்குவது பகவத் கீதை. இதுவும் வேத வியாசரால் இயற்றப்பட்டது. உபநிடதங்களைப் பசுக்கள் என்று கொண்டால் பகவத் கீதையைப் பால் என்று பகரலாம்.

---

* திருமலை-திருப்பதிதேவஸ்தான சமய மாத இதழ்-சப்தகிரி-மார்ச்சு-1992.

உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத் கீதை ஆகிய இம்மூன்று நூல்களும் பிரஸ்தான திரயம் (திரயம்-மூன்று) என்னும் பெயர் பெறுகின்றன. முடிவான பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பது இதன் பொருள். இம்மூன்றனுள் கருத்து வேற்றுமை இல்லை. மெய்ப் பொருள் விளக்கம் இவற்றுள் முறையாக அமைந்துள்ளது. இவற்றுள் அடங்காத தத்துவ விளக்கம் வேறு எந்த நூல் களிலும் இல்லை. ஆகவே இந்து சமயத்தின் சாத்திரத்தைப் 'பிரஸ்தான திரயம்' என்று இயம்புவதில் தவறில்லை. மற்ற சாத்திரங்களில் நுவலப்பெற்றுள்ள கோட்பாடுகள் பிரஸ் தான திரயத்தில் அடங்கியுள்ள கோட்பாடுகளுக்கு விளக்க மாக வந்து அமையலாம்.

**பகவத் கீதை :** மாபாரதம் என்னும் இதிகாஸத்தில் அடங்கியுள்ளது பகவத் கீதை. வீடும பர்வதத்தில் 25வது இயல் தொடங்கி 42வது இயல் முடிய அமைந்திருப்பது இந்த அரிய நூல். அதாவது இந்நூல் பதினெட்டு இயல் களாக அமைந்துள்ளது. இவற்றுள் அடங்கியுள்ள சுலோகங் களின் தொகை எழுநூறு. மாபாரதம் முதலில் இயற்றப் பெற்றது என்றும், பகவத் கீதை பின்னர் இயற்றப்பெற்று அதில் செருகப்பட்டது என்றும் ஒரு கருத்து உண்டு. ஆனால் அதற்குத் தக்க அகச்சான்று இல்லை. இலக்கிய அமைப்பு, மொழியமைப்பு, கருத்து அமைப்பு இவற்றுள் ஒற்றுமை இருப்பதால் அக்கருத்தை அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மாபாரதத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் பால் என்றால், கீதையில் அடங்கியுள்ள விஷயங்கள் வெண்ணெய் என்று கூறலாம். மாபாரதம் என்னும் உடலுக்கு கீதை இதயம்போல் அமைந்துள்ளது என்று கூறுவதும் பொருந்தும்.

**கீதை ஓர் உபநிடதம் :** உபநிடதங்களில் யாவும் நான் மறைகளினின்றும் வந்தவை. அதனால்தான் அவற்றிற்கு **மறைமுடி** என்ற ஒரு பெயரும் வந்தது. கீதை மாபாரதத்

தினின்று வந்தது. ஆயினும் அஃது உபநிடதம் என்று வழங்கப்பெறுகின்றது. காரணம், உபநிடதங்களின் சாரம் இதில் அடங்கியுள்ளது. உபநிடதங்களைப் பசு என்று வைத்துக் கொண்டால் கீதையை அதுதரும் பால் என்று பகரலாம். பசுக்களோ பன்னிறமுடையவை; பாலோ வெண்ணிறமுடையது; பசுக்களை வைத்துப் பராமரிப்பதும் அவற்றினின்று பால் கறப்பதும் சிரமம். ஆனால் பாலை அருந்துவது எல்லார்க்கும் எளிது. பாலினின்று தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலியவை தயாரித்துப் பயன் படுத்திக் கொள்ளலாம். அங்ஙனமே கீதையை இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படுமாறு செய்து கொள்ளலாம். பசுவை ஓட்டிக்கொண்டு போகமுடியுமா? ஆனால் பாலை எங்கு வேண்டுமானாலும் பாதுகாத்து எடுத்துச் சொல்லலாம். அதாவது கீதையை நன்றாக, தெளிவாக, அறிந்து கொண்ட வர்கள் உபநிடதங்களில் அடங்கியிருக்கும் கோட்பாடுகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எல்லார்க்கும் எளிதில் விளங்காத உபநிடதங்களை விளங்கும்படி செய்தவன் கண்ணன். அதுவே கண்ணன் காட்டிய வழி. இதற்குக் கருவியாக அமைந்தவன் அருச்சுனன். கன்றுக்காகப் பசு பால் சுரக்கின்றது. பின்பு அது உலகிற்கும் பயன்படு கிறது. கீதையும் அங்ஙனமே உலகிற்குப் பயன்படுவதா யிற்று. செரிமானத்திற்கு ஏற்ற அளவு பாலைப் பருகலாம். அது நோயாளிகட்கும் உடல்நலமுள்ளவர்களுக்கும் நல்லுணவு ஆகின்றது. கீதையை அவரவர் மனநிலையின் பக்குவத்திற்கு ஏற்பப் பயன்படுத்திப் பயன் பெறலாம்.

**கீதை-யோக சாத்திரம் :** ஒவ்வொரு சாத்திரத்திலும் கொள்கை (Theory) என்றும் நடைமுறை அல்லது அநுட்டானம் (Practice) என்றும் இரண்டு பகுதிகள் உள்ளன. யுக்தியால் முடிவுகட்டுவது கொள்கையாகும்; நடைமுறையில் செய்து காட்டுவது அநுட்டானம்; பரந்தாமன் பார்த்தனுக்குப் புகட்டியது பிரம்ம ஞானம்; புதிய ஐயங்கள் பிறக்காத அளவுக்கு ஞானத்தைப் புகட்டி

விட்டான் பார்த்தசாரதி. அதுதான் பிரம்மவித்தை; பிரம்ம ஞானம். சாதாரண மனிதனுக்குப் பிரம்ம ஞானம் வெறும் கொள்கையளவில் நின்று விடலாம். அதனால் அவனுக்கு நன்மையொன்றும் நேரிடாது. வாய் வேதாந்தம் என்பது இதுவேயாகும். பிரம்மஞானம் முற்றிலும் வாழ்க்கைக்கு உரியது. ஒவ்வொருவரும் அதனைத் தம் வாழ்க்கையில் அநுட்டானத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும். இதனால் அது யோக சாத்திரம் என்ற பெயரைப் பெறுகின்றது. கீதையின் தத்துவம் தெரிந்திருந்தால் கூலி வேலை செய்பவனும் தன் வேலையைத் திறம்படச் செய்வான். பயிர்த் தொழில் செய்பவனுக்குக் கீதையின் கோட்பாடுகள் தெரிந்திருந்தால் அவன் சிறந்த உழவனாகத் திகழ்வான். வாணிகம் செய்வோன் இக்கோட்பாடுகளை நன்கு அறிந்திருந்தால் அவன் சிறந்த வணிகனாகத் திகழ்வான். அரசு அலுவலர் கீதையின் தாத்பர்யத்தை நன்கு தெரிந்திருந்தால் அவர் தம் கடமையைத் திறமையுடன் நிறைவேற்றுவார். பள்ளியாசிரியர்கள் கீதையின் கோட்பாடுகளை அறிந்து கொண்டால் அவர்கள் சிறந்த ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியும். கீதையை அநுட்டிப்போர் மேலானவராகத் திகழ்வர். திறமை வாய்க்கப் பெற்றவர்கள் யோகியர் என்ற பெயரையும் பெறுகின்றனர்.

**கீதையின் தனிச்சிறப்பு :** பகவத்கீதை ஒரே சமயத்தில் சுருதியாகவும் சுமிருதியாகவும் வழங்குவதால் அது தனிச் சிறப்புக்குரியதாகின்றது. செவி வழியாகக் கேட்டுக் காப்பாற்றி வைக்கப்பட்டது சுருதி. உபநிடதங்கள் யாவும் சுருதி என்ற பெயரைப் பெறுகின்றன. நெடுங் காலமாகக் கேட்டு வந்தாலும் சுருதி அமைப்பு மாறாது உள்ளது. ஆதலால் அதன் பொருள் அமைப்பும் திரிபு ஏற்படாதுள்ளது. கணிதத்தில் எண் சுவடியையும் அறிவியலில் வாய்பாடுகளையும் (Formula) யாரும் மாற்ற முடியாதனவாக இருப்பதுபோல் சுருதிப் பொருளையாரும் மாற்ற முடியாது. மெய்ப்பொருளை விளக்கும் சுருதிமொழியும்

என்றும் மாறாதுள்ளது. ஆகவே சுருதி யாண்டும் சாசுவத மாக—நிலைபேறுடையதாக—அமைந்துள்ளது.

சுமிருதி என்பது நினைவில் வைத்துக்கொண்டுள்ளது என்று பொருள் படுவதாகும். சமூக வாழ்க்கை சம்பந்த மான கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் சேர்ந்த பகுதி சுமிருதி என்ற திருநாமம் பெறுகின்றது. நன்கு அமைக்கப் பெற்ற சுமிருதிகள் எப்போதும் பரதத்துவங்களை அடிப் படையாகக் கொண்டவை. பராசர சுமிருதி, மநுசுமிருதி முதலியவை புகழ் பெற்றவைகள். இவை நிலையானவை அல்ல. காலத்துக்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப மாறியமையும் தன்மையவை. இதனால்தான் சில சுமிருதிகளின் அடிப்படையில் அமைந்த சில திருக்கோயிலின் வழிபாட்டு முறைகளில் காலப் போக்கில் மாற்றம் அடைந்து கொண்டே வருகின்றன.

பகவத் கீதை ஏக காலத்தில் சுருதியாகவும் சுமிருதியாக வும் செயற்படுகின்றது. பரதத்துவத்தை அது நன்கு விளக்குவதால் அது சுருதியாக அமைகின்றது. பரதத்துத்வ திற்கு ஏற்ற வாழ்க்கை அமைவது சநாதன தர்மம். கீதை யினின்று சநாதன தர்மத்தை உள்ளபடி கற்றுக்கொள்ள லாம். சமுதாய அமைப்பு எத்தகையது என்பதையும், அஃது எங்ஙனம் நடைபெறவேண்டும் என்பதையும் கீதை நன்கு விளக்குகின்றது. சநாதனதர்மம் யுகதர்மமாக வடிவெடுக் கும் பாங்கையும் அது காட்டித் தருகின்றது.

மற்ற சுமிருதிகள் காலத்திற்கேற்றவாறு மாறியமையும் எனினும் கீதையை மாற்றி அமைக்க முடியாது. கீதை சமூக நடைமுறையிலும் எக்காலத்திற்கும் பொதுவான கோட்பாடுகளைக் கொண்டிருப்பதால் இஃது எக்காலத் திற்கும் எல்லாச் சமூகங்கட்கும் பயன்படும் சுமிருதியாகும். கீதையைக் கற்போர் பாரமார்த்திகத் தத்துவங்களையும் உலக நடைமுறைத் தத்துவங்களையும் கற்றறிந்தவர்கள் ஆவர்.

**ஆன்ம-பரமாத்தும உறவு :** உலகில் உள்ள சமயங்கள் போற்றும் உயர்ந்த நூல்கள் யாவும் பொது இயல்பு ஒன்றைக் கொண்டுள்ளன. அவை நேர்முகமாகவோ, மறை முகமாகவோ பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவு முறையை நுவல்கின்றன. வேதங்களில் உள்ள நான்கு மகா வாக்கியங்களுள் மிக்க சிறப்புடையதாகக் கருதப் பெறுவது **'தத் துவம் அஸி'** என்னும் மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியம் ஆகும். துவம் - நீ தத்-அதுவாக, அஸி-இருக்கிறாய் என்பது பொருள். சீவான்மாவாகிய நீ பரமான்மாவாகிய அதற்கு வேறுபட்டவன் அல்லன் என்பது இதன் விளக்கம். இக்கோட்பாட்டை எல்லாச் சாத்திரங் களும் ஏதேனும் ஒரு விதத்தில் எடுத்தியம்புகின்றன. கீதை இந்த உயர்ந்த விளக்கத்தை ஓதுகின்றது.

யோகம் யோகம் என்று முடியும் பதினெட்டு இயல் களைக் கொண்டது கீதை. திரிஷட்கம் (3X6 மூவாறு) என்று அப்பதினெட்டு இயல்களும் வழங்கப்பெறுகின்றன. இவற்றுள் முதல் ஆறு இயல்கள் துவம் (நீ) என்ற சொல்லுக்கு இலக்காக உள்ள ஆன்ம தத்துவத்தை விரிவாக விளக்குவதாக அமைந்துள்ளன. சீவனிடத்துள்ள குறை பாடு, அவன் அடைய வேண்டிய நிறைநிலை, அதற்காக அவன் மேற்கொள்ள வேண்டிய முயற்சி ஆகியவை அனைத்தும் முதல் ஆறு இயல்புகளில் அடங்கியுள்ளன. கீதை இதனை **முதல் ஷட்கம்** என்று வழங்குகின்றது.

இயல் ஏழு முதல் இயல் பன்னிரண்டு ஈறாக உள்ளவை **தத் (அது)** என்னும் சொல்லுக்கு இலக்காக அமைந்த பரதத்துவம் (அல்லது பரமான்மா) என்பதை விரிவாக விளக்குகின்றன. உலகனைத்திலும் அவர் எப்படி உள்ளார், உலகங்களில் அவர் எப்படி அந்தரானமாவாக உள்ளார். உலகங்களைக் கடந்தவராகவும் எப்படி அவர் உள்ளார் ஆகியவை யாவும் இரண்டாவது பகுதியில் வந்தமை கின்றன. இஃது **இரண்டாவது ஷட்கம்** என்று வழங்கப் பெறுகின்றது.

இயல் பதிமூன்று முதல் இயல் பதினெட்டு முடியவுள்ள ஆறு இயல்களில் அஸி (இருக்கிறாய்) என்னும் சொல்லுக்கு இலக்காகவுள்ள பரமான்மா - சீவான்மா இணக்கத்தை - உறவினை - இப்பகுதி தெளிவுறுத்துகின்றது. இந்த மூன்று பகுதிகட்கும் சமமான நிலையை அளித்துள்ளது கீதை. ஒவ்வொரு பகுதியையும் ஒருமைப்படுத்தித் தெளிவாகவும் முறையாகவும் விளக்கியிருப்பது போன்று உலகில் வேறுஒரு நூலைக் காண்டல் அரிது. ஆகவே மகாவாக்கியத் திற்கு முறையான விளக்கம் என்று கீதையைக் கூறலாம்.

**முத்தி நிலைகள் :** பிரஸ்தான திரயம் நுவலுகின்ற கோட்பாடுகளையெல்லாம் தொகுத்து அத்தொகுப்பை 'வேதாந்தம்' என்று சொல்லுவது உண்டு. வேதத்தின் அந்தம் (முடிவு) வேதாந்தம். இம்மை, மறுமைகளைப் பற்றிப் பகர்வது வேதம். இந்திரியங்கள்மூலம் நுகரும் அகில வாழ்க்கையைப் பற்றிப் பகர்வது வேதம் என்று வேறு ஒரு முறையிலும் கூறலாம். புலன்கட்கும் மனத்திற்கும் எட்டாத பரத்தைப்பற்றிப் பேசுவது **வேதாந்தம்.** நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தோன்றியுள்ள எல்லாச் சமயங்களின் அடிப்படைத் தத்துவங்களை வேதாந்தத்தில் காணலாம். வேதாந்தத்தில் இல்லாத கோட்பாடு உலகில் எந்தச் சமயத்திலுமே இல்லை. ஆக, சமயங்கட்கெல்லாம் தாய் மதமாக இருப்பது வேதாந்தம். மெய்ப்பொருளுக்கு எந்தத் திருநாமத்தை இட்டு வழங்கினாலும் வேதாந்தம் ஒப்புக் கொள்ளும். பெயரையும் விளக்கத்தையும் முன்னிட்டுப் போரிட்டுக் கொண்டிருக்கும் சமயங்களை அடிப்படைக் கோட்பாட்டைக் காணுமாறு தூண்டுவது வேதாந்தம். தமிழர் தண்ணீர் என்பர்; இந்தி மொழியினர் பாணி என்பர்; மலையாளிகள் வெள்ளம் என்பர்; ஆங்கிலேயர்கள் வாட்டர் என்பர். இவர்கள் குறிக்கும் பொருள் ஒன்றே. இங்ஙனம் சமயங்கள் சாற்றும் கருத்து களில் பொதுத்தன்மையை நோக்கும் பண்பு நம்மிடம் தோன்றுமானால் வேற்றுமையும் வீண்வாதமும் விதண்டா

வாதமும் ஒடுங்கும். வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு வளரும். மனிதன் அடையும் உயர்நிலையை ஐயம் திரிபு இன்றி விளக்குவது வேதாந்தம்.

மக்களிடையே வழங்கும் சிறு சிறு சமயங்களை விட்டு முக்கியமானவற்றை நோக்கினால் **துவைதம், விசிட்டாத் வைதம், அத்வைதம்**என்ற மூன்று முக்கிய சமயங்கள் தென் படும். இவற்றைச் சுருக்கமாக நோக்குவோம். நம் கண்ணுக்குப் புலப்படுவது இவ்வுலகம்; இதில் வாழும் உயிர் கள் சீவர்கள். உலகையும் சீவர்களையும் தாங்கி நிற்கும் பெரிய பொருள் பரம் (பிரம்மம்) என்பது. இப்பரம் பொருள் பேரறிவும் பேராற்றலும் கொண்டது. இது உலகனைத்தையும், உயிர்கள் யாவற்மையும் ஆண்டு வருகின்றது, உலகப்பிணிப்பில் அடங்கியுள்ள சீவர்கள் எண்ணிறந்த பிறவிகளை எடுக்கின்றனர். இப்பிறவிகள் மூலம் அவர்கள் மேலான நிலைக்குப் போவதும் உண்டு; கீழான நிலைக்கு இறங்குவதும் உண்டு; சீவர்கள் தாம் இயற்றும் புண்ணிய பாவங்கட்கேற்ப இந்நிலைகளை அடை கின்றனர். உலகினின்றும் விடுதலை அடைந்து பரம் அல்லது ஈசுவரனைச் சார்வது முக்தி. எல்லா உயிர்களும் முக்தி அடைய வேண்டும்: இக்கோட்பாட்டை மூன்று சமயங் களும் ஒப்புக்கொள்கின்றன. இம்மூன்று சமயங்களிலும் தனி இயல்புகள் உண்டு.

**துவைத சமயம் :** உலகம், சீவன், பரம் ஆகிய மூன்றும் அனாதியானவை எனச் சாற்றும். இவற்றிற்குத் தொடக்கம், முடிவு இல்லை. பரம் பொருள் உலகையும் சீவர்களையும் ஆளுகின்றார். ஆனால் உலகமும் சீவனும் யாண்டும் பரத்திற்கும் வேறானவை. சீவன் பரத்தின் கருணையினால் உலகினின்றும் விடுதலையடைந்து அவருக்குத் தொண்டனாய் ஆட்படுவது முக்தி. முக்தியில் பரமன் வேறு, சீவன் வேறு. இரண்டும் தனித்தனியாக இருப்பவை.

**விசிட்டாத்வைதம்** என்பது ஒரு விசேடத்துடன் கூடிய அத்வைதம். கடவுள் ஒருவர்தான் உண்டு. அவருக்கு உடலாயிருப்பது இந்த உலகம். அந்த உடலில் உயிர்த் தத்துவங்களாக இருப்பது சீவன். பரமான்மாவைப் பூரணன் என்றும் அதில் தன்னை ஒரு கூறு என்றும் சீவன் சுவாநுபவத்தில் அறிந்து கொள்ளுதல் முக்தி. அதற்குச் சீவன் பரமான்மாவிடத்தில் பரபக்தி செய்ய வேண்டும். அவர் அருளால் சீவன் தன்னை அவருடைய ஓர் உறுப்பு என்று அறிந்திருப்பது முக்தி.

**அத்வைதம்** என்பதற்கு இரண்டற்றது என்பது பொருள். உலகம், சீவன் என்று சொல்லுபவை வேறு; பரம்பொருள் வேறு அல்ல; உள்ளது ஒரு பொருளே. அஃது அகண்ட சத்சித் ஆனந்தம். தன்னை உலகமாகவும் சீவனாகவும் காட்டிக்கொள்ளுகின்ற வல்லமை அப்பரம் பொருளிடத்து உண்டு. அந்த வல்லமைக்கு **மாயாசக்தி** என்று பெயர். பிரம்மமும் பிரம்மத்தினுடைய சக்தியும் இரண்டல்ல. சீவனிடத்துள்ள அஞ்ஞானத்தால் உலகம் என்றும் சீவன் என்றும் பேதம் அவனுக்குத் தோன்றுகின்றது. பிரம்ம ஞானத்தில் பிரம்மம் ஒன்றே யாண்டும் உள்ளது. ஆறு ஆழியில் கலப்பது போன்று சீவன் பரத்தில் கலக்கின்றான். இஃது அத்வைதம் கூறும் முக்தி.

சாத்திரங்களில் இந்த மூன்று நிலைகளும் இடம் பெறுகின்றன. மனிதனுடைய வாழ்க்கையிலும் இந்த மூன்று நிலைகளும் அதனதன் இடத்தைப் பெறுகின்றன. மனிதன் விழித்திருந்து வியவகாரம் பண்ணுவது துவைத நிலை. ஆங்கு தான் வேறு, மற்ற உயிர்கள் வேறு, உலகம் வேறு நிலை. பிறகு கனவு காண்கின்றான். கனவில் தென்படும் மனிதர்களும் உலகமும், அவனுடைய மனத்திற்கு வேறுபட்டவை அல்ல. பேதம் போன்று தென்பட்டுக் கொண்டிருக்கும் அபேதநிலை அது. விசிட்டாத்வைத நிலையை இது நன்கு விளக்குகின்றது. பிறகு கனவு அற்ற ஆழ்ந்த உறக்க நிலை.

இங்கு உணர்வு (பிரக்ஞை) ஒன்றைத் தவிர ஏனையவை மறைந்து விடுகின்றன. எல்லாநிலைகட்கும் பொதுவாகிய உணர்வு ஒன்றே எஞ்சியிருப்பது. இதுவே அத்வைதநிலை. இந்த மூன்று நிலைகளும் அஞ்ஞானத்தில் இருப்பனபோல் ஞானத்திலும் அமையக் கூடியவை. இவற்றுள் எது சாதனம், எது சாத்தியம் என்பவைபற்றியே சமயவாதி களிடம் நிலவும் சச்சரவுகள்.

**இறைவனது இயல்பு :** பரம்பொருள் மனம் மொழி இவற்றிற்கு எட்டாதது. அஃது இந்த அகிலமாக வடிவெடுக்கு மிடத்து அதனை **சத்** சித் ஆனந்தம் என்று சொல்லலாம். சொல்லற் ரிய பொருளை ஒரு சொல்லால் விளக்குமிடத்து சச்சிதானந்தம் என்பதற்கு நிகரான சொல் வேறு ஒன்றும் இல்லை. சத் என்பதற்கு உள்ளது என்பது பொருள். காலத் தாலும் இடத்தாலும் செயலாலும் மாறுபடாதிருப்பது பரம்பொருள். இதே சத் பொருள் காலத்தாலும் இடத்தா லும் செயலாலும் தன்னை விளக்கிக் கொண்டிருக்கும் போது அஃது எண்ணிறந்த சீவ கோடிகளாகக் காட்சியளிக் கின்றது. சீவான்மா தோற்றத்துக்கு வந்துள்ள நிலையில் கர்மமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். கர்மத்திற்கு அடிப் படையாயிருப்பது சங்கற்பம். வாழவிரும்புதல் முடிந்த சங்கற்பம். சீவர்கள் எக்கர்மத்தைப் புரிந்தாலும் அதன் மூலம் வாழ்ந்து நிலைத்திருத்தல் என்பதை நிலைநாட்ட முயல்கின்றனர். அதாவது தம்முடைய உண்மைநிலை யாகிய சத் சொரூபத்தை நிலைநாட்டவே சீவ கோடிகள் கர்மம் புரிகின்றனர். ஆக, கீதையின் முதல் ஆறு இயல்களும் சத் சொரூபத்தை விளக்குவதாக அமைகின்றது.

உயிர்கள் கர்மம் புரிகின்றன. உயிர்களிடம் உணர்ச்சி உண்டு. உணர்ச்சியும் உயிர் வாழ்க்கையும் இணை பிரியாதவை. உணர்ச்சி விதவிதமான வடிவம் கொள்ளு கின்றது. விருப்பு, நட்பு, ஆசை போன்ற உடன்பாட்டு உணர்ச்சிகள் வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன. வெறுப்பு, பகை, சினம், பொறாமை போன்ற எதிர்மறை உணர்ச்சி

கள் வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன. கீதையின் ஏழுமுதல் பன்னிரண்டு இயல்கள் முடிய கடவுள் சொரூபத்தை விளக்குவதோடு பக்தியையும் அப்பகுதி வளர்கின்றது. உணர்ச்சிகளின் திரள் பக்தி. இஃது அன்பு ஊற்றெடுக்கக் காரணமாகயிருக்கின்றது. அன்புடைய உயிர் தெய்வத்தினிடம் கவின்பெறுகின்றது. அன்பே கடவுள் என்பது கோட்பாடு. அன்பில் இனிமை மிளிர, அஃது ஆனந்தமாகப் பரிணமிக்கின்றது. அஃது உலப்பிலா ஆனந்தமாகின்றது. ஆனந்தமே பிரம்மம். பரமான்மாவின் சொரூபம் ஆனந்தம். இந்த ஆனந்தத்தை நாடியே உயிர்கள் வாழ்க்கையில் பற்று வைக்கின்றன. ஆனந்தம் இல்லையேல் உயிர்கள் கணப்பொழுதும் வாழா. ஆக, ஆனந்தம் என்னும் ஆன்ம சொரூபத்தை வளர்ப்பது கீதையின் இரண்டாவது ஷட்கம்.

சேதநப்பொருளுக்கு 'இருக்கின்றேன்' என்ற அறிவு உண்டு. சடப்பொருளுக்கு (அசேதநத்திற்கு) அந்த அறிவு இல்லை. சீவன் உயிரோடிருக்கின்றான் என்பதற்கு அவனது அறிவே பிரதானம். அறியும் தன்மையில் ஏற்றத் தாழ்வு உண்டு. பேருயிர்கள் நன்கு அறிகின்றன. சிற்றுயிர்கள் மங்கிய அறிவுடையன. அறிவு இல்லாத உயிர் இல்லை. அறிவை வளர்ப்பது வாழ்வின் நோக்கம். ஞானத்தை வளர்ப்பதற்கான வழிகளை கீதையின் பதின்மூன்றாவது இயல் முதல் பதினெட்டாவது இயல் முடியக் காண்கின்றோம். அந்தக்கரண சுத்தி பண்ணுவதற்கான வழிகள் ஞான வாழ்க்கையில் காட்டப்பெற்றுள்ளன. சடம்போல் தென்படும் சீவனை இந்நெறி சித் சொரூபமாகத் திருத்தியமைக்கின்றது. ஆன்மா சோதி மயம் என்பது கோட்பாடு. ஆகவே சத் சித் ஆனந்தமாகிய பரசொரூபத்தின்கண் சீவனை நடத்திச் செல்லுதல் கீதையின் திட்டமாக அமைகின்றது.

**பேருரைகள் :** பிரஸ்தான திரயத்தில் அதிக எண்ணிக்கையில் பேருரை பெற்றது பகவத் கீதையே பேருரையாளர்

களில் பெரும்பான்மையோர் சமய அடிப்படையிலேயே உரைகள் இயற்றியுள்ளனர். அத்வைத சம்பிரதாயத்திற்கு சிறந்த முன்மாதிரியாயிருப்பவர் சங்கரர்; விசிட்டாத்வைதிகள் அனைவருக்கும் பிரதிநிதியாயிருப்பவர் இராமாநுசர். துவைத சமயவாதிகளில் முன்னணியில் இருப்பவர் மத்வர். குருட்சேத்திர பூமியில் இப்போது கீதா மந்திரம் என்ற ஓர் ஆலயம் எழுப்பப் பெற்றுள்ளது. அந்த இடத்தில்தான் பரந்தாமன் பார்த்தனுக்கு கீதை உபதேசம் செய்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் ஊகம்.* இந்த இடத்தில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட வியாக்கியானங்களைச் சேகரித்து வைத்துள்ளனர். அவை யாவும் வெவ்வேறு காலத்தில் இயற்றப் பெற்றவை. அவற்றை வரைந்தவர்கள் யாவரும் ஞான ஒழுக்கங்களால் மேம்பட்டவர்கள். சான்றோர் உலகில் கீதை உயர்ந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது என்பதற்கு இதுவே தக்கதோர் சான்றாக அமைகின்றது. இன்றும் புதிய புதிய உரைகள் தோன்றி வருகின்றன. சமயச் சான்றோர்கள் 'கீதையக்ஞம்' என்ற பெயரில் உரைகள் நிகழ்த்தி வருகின்றனர்.

கீதை எண்ணிறந்த சம்பிரதாயங்களை விளக்க அடிப்படை நூலாக அமைகின்றது. இந்த உரைகட்கெல்லாம் மேலான வியாக்கியானம் ஒன்று உள்ளது. அது கண்ணன் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை. இதுவே கீதையின் கூற்றுக்கு ஒப்பான விளக்கமாகின்றது. அவதார புருடர்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையின் மூலம் புகட்டுவதுதான் முதலான இடம் பெறுகின்றது. அவர்கள் பகர்ந்தருளியவை அதற்கு அடுத்த இடம் பெறுகின்றன. இக்கோட்பாடு கண்ணனது வாழ்க்கையில் உச்சநிலையைப் பெறுகின்றது. 'மனத்தகத்திலிருந்து கச்மலத்தை (அழுக்கை)க் களைந்து விடு' என்று புகட்டினார் கண்ணன். பகலவனிடத்து இருள் இருக்க இடம் இல்லாததுபோல் அச்சுதனிடம் கீழ்மை குடிகொள்ள இடம் இல்லை; 'ஆற்றல் படைத்தவனாய்

---

* 1968-இல் நான் அந்த இடத்தை நேரில் கண்டவன்.

எழுந்திராய்' என்று இயம்பினவரும் அவரே. பின்னர் ஆற்றல்கள் அனைத்திற்கும் நிலைக்களனாயும் இலங்கினார். 'உயிர்களிடத்து அன்பு பூண்டு ஒழுகுக' என்று உபதேசித்தார். தாமே அன்பின் வடிவாயும் திகழ்ந்தார். நலத்தை நிலை நாட்டும் வீரன் ஒருவனுக்கு உற்றார் வேற்றார் என்னும் வேற்றுமை இல்லை என்று எடுத்தோதினார். பரந்தாமனது பாங்கும் அங்ஙனமே இருந்தது. இயற்கை கர்மமாக வடிவெடுத்தது. அதற்கு ஆதாரமாக நிற்கும் ஆன்மாவின் கண் கர்மம் இல்லை என்பது கண்ணனின் உபதேசம். கண்ணனாக வடிவெடுத்த உடல் கர்ம வீரனாக வினையாற்றியது.

மாபாரதத்தில் பங்கு பெற்ற சற்றேறக்குறைய மூன்னூறுக்கும் குறையாத காவியமாந்தர்கள் எல்லோரும் கூடிச்செய்த செயல்கள் யாவும் கண்ணபிரானின் செயலில் கால் பங்குகூட ஆகா. உடல் அவ்வளவு வினையாற்றிக் கொண்டிருந்த போதிலும் கண்ணன் என்றைக்கும் பரமாத்மா சொரூபமாகவே திகழ்ந்தார். மற்ற உயிர்கள் போல் அவர் அழவில்லை; ஏமாற்றம் அடையவில்லை; வியப்படையவில்லை; கவலைப்படவில்லை; துயருற்றதும் இல்லை; புன்முறுவல் பூத்த முகத்துடன் திகழ்ந்தார். கண்ணனை அறிபவர் கீதையை அறிவர். கண்ணன் வாழ்க்கையே கீதைக்கேற்ற பேருரை.

**பொது நூல் :** பகவத் கீதையைச் **சர்வகத சாத்திரம்** என்றும் பொது நூல் என்றும் பகரலாம். காரணங்கள்: (1) முத்தி நெறியைப் புகட்டும் சாத்திரங்களே யாவற்றிலும் மேலானவை. மனிதன் அடைய வேண்டிய பேறுகளில் முக்திக்கு நிகரானது வேறொன்றும் இல்லை யாவருக்கும் ஒப்ப முடிந்த கோட்பாடு இது. கீதை முக்தியைப் புகட்டுகின்றது. வாழ்க்கையின் குறிக்கோள் முக்தி என்பதை அது நன்கு தெளிவுறுத்துகின்றது. (2) முக்திக்கு உற்ற நெறி யோகம். கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்று யோகங்களும் கீதையில் இடம் பெறுகின்றன. எல்லா சாதனங்களும்

இம்மூன்றினுள் அடங்கிவிடுகின்றன. (3) கீதை இகபரம் இரண்டிற்கும் உரிய இடத்தை முதல் முறையாக வகுத்து வழங்குகின்றது. (4) வினைகளையெல்லாம் மேலான வினைகளாக மாற்றக் கற்றுக்கொடுப்பது கீதை. இஃது இதன் தனிச் சிறப்பு. அன்னை பராசக்தியே மாந்தர் உள்ளத்தில் இச்சா, ஞான, கிரியா சக்திகளாக எழுந்தருளியுள்ளார் என்பது கோட்பாடு. மனத்தில் இந்த மூன்று வித மாண்புகளும் ஒருங்கே மிளிர்ந்தால்தான் மனிதன் திண்ணியன் ஆவான் என்பதைக் கீதை வற்புறுத்துகின்றது.

இவை தவிர மனிதனை நிறைமனிதனாக்குவது கீதையின் கோட்பாடு. உறுதியான உடலும் உயர்ந்த உள்ளமும் நிறைந்த நிலைக்கு இன்றியமையாத உறுப்புகளாகும்; பேராற்றல் படைதிருப்பது முதற்கோட்பாடு. ஒழுக்கம் ஆற்றலில் அடங்கி விடுகின்றது. அடுத்த கோட்பாடு அன்பு; இப்பண்பு உயிர்கள் அனைத்திற்கும் பொதுவான பண்பு. எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தும் உயரிய பண்பு அன்பு. இனி மூன்றாவது கோட்பாடு அறிவு. பட்டப்பகலைஉண்டு பண்ணும் ஞாயிறு போன்றது அறிவு. அனைத்தையும் விளக்குவது அது. மாண்புகளையெல்லாம் எடுத்துக் காட்டி உயிர்களை உற்றவழிகளில் ஏவுவது அறிவு. அன்பு, அறிவு, ஆற்றல் இம்மூன்றையும் ஒருங்கே அடைந்தவனுக்கு மேலும் பெறவேண்டியது ஒன்றுமில்லை. அவனே நிறை மனிதன் ஆகின்றான். நிறைநிலையை எய்தி நிறை மனிதன் ஆக விரும்புவோர் அனைவருக்கும் கீதை பொது நூலாகும்.

"உபநிடதங்கள் யாவும் பசுக்கள்; கண்ணன் பால் கறப்பவன்; பார்த்தன் கன்று; அருந்துபவர் பேரறிஞர்; கீதை என்னும் அமிழ்தம் ஒப்பற்ற பால் ஆகிறது" (தியான சுலோகம்-4)

# 8. சரணாகதி நெறி*

சீவர்களாகிய நாம் செய்கின்ற செயல்களிலெல்லாம் இறுதியான செயல் இறைவனிடத்து அடைக்கலம் புகுதல் ஆகும். இதனைப் பாரதப் பெரும் போரில் கண்ணன் தேர்த்தட்டிலிருந்துகொண்டு பார்த்தனுக்கு உபதேசித்தான்,

> "அறங்களை எல்லாம் பரித்தியாகம் செய்து விட்டு என்னையே சரண் அடைக. பாபங்கள் அனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன். வருந்தற்க" (18:66)

என்ற இச்சுலோகம் பகவத் கீதையில் பதினெட்டாம் இயலில் 66-ஆம் சுலோகமாக அமைந்துள்ளது. இதுவே கீதையின் இறுதி சுலோகம், சரமசுலோகம் ஆகும்.

அடைக்கலம் புகுதல் என்பதன் பொருள், ஒருவன் தன் முயற்சி போதவில்லை, ஆகையால் இறைவனிடம் தஞ்சம் அடைந்து அவர் துணையையும் கொஞ்சம் தேடிக் கொள்ளலாம் என்பதல்ல. சிற்றோடை பெரிய நதியில் கலந்து பிறகு மாக்கடலில் சங்கமமாவது போன்றது சரணாகதி. சீவனுடைய இச்சா சுதந்திரமெல்லாம் இறைவனுடைய சங்கற்பத்தில் சேர்ந்து விடுகின்றது. சீவனுக்கென்று தனிச் செயல் ஒன்றும் இல்லை. இறைவனின் செயல் கடலின் செயல் போன்றது. சீவனின் செயல் அலையின் செயல் போன்றது. அலை, கடலுக்குப் புறம்பானதல்ல. சீவனின் செயல் எல்லாம் உண்மையில் ஈசுவரனின் செயலேயாகும்,

---

* சென்னை வானொலியில் நிகழ்த்திய இலக்கியப் பேருரை (4-10-92)

பக்தன் எப்பொழுதும் தன் தெய்வத்தைச் சார்ந்திருக்கின்றான். தனக்கு வரும் நலம் கேடுகள் யாவும் இறைவனது ஆணையாகக் கருதுகின்றான். ஆகையால் பக்தன் ஒரு செயலை நன்று என்றும், மற்றொரு செயலைக் கேடு என்றும் பொருள் படுத்துவதில்லை. அறம், மறம் ஆகிய இரண்டும் ஈசன் செயல் என்ற புனிதத்தன்மை அடைந்து விடுகின்றன.

அன்றே என்றன் ஆவியும்
　　உடலும உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
　　கொண்ட போதே கொண்டிலையோ ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
　　எண்தோள் முக்கண் அம்மானே !
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
　　நானோ இதற்கு நாயகமே (580)

என்பது இறைவன் திருப்பெருந்துறையில் குருவாய்க் குருந்த மரத்தடியில் எழுந்தருளி மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டபோது அவர் அருளிய பாடல் இது. வள்ளுவப் பெருந்தகையும் ஊழ் என்னும் அதிகாரத்தில்,

நன்றாங்கால் நல்லவாக்
　　காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் ? (379)

என்று வினவுவதைக் காண்கின்றோம். இதற்கு உரை வகுத்த பரிமேலழகரும் "தாமே முன் செய்து கொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டும் இயைந்து அநுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றை இயைந்து அநுபவித்து ஏனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம்" என்று விளக்குவார்.

**அருளாசிரியர்கள் :** இங்ஙனம் கண்ணன் கீதையில் உபதேசித்த கருத்து அருளாசிரியர்களின் அருளிச்செயல்

களில் ஆங்காங்கு பொதிந்து கிடக்கின்றது. ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமான அடிகள், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்களின் அருளிச் செயல்களில் குறிப்பாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறயிருப்பதைக் காணலாம்.

மனிதன் அடைய வேண்டிய உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்பன இம்மை வாழ்வுக்கு வேண்டியனவாகும்; வீடுபேறு மறுமை வாழ்க்கைக்கு வேண்டியதாகும். பெறுதற்கரிய மாணிடப்பிறவி ஈசுவர இலாபத்திற்காக அமைந்தது என்றாலும், அதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று அறிந்து கொள்பவரோ மிகச் சிலரே. பின்பு அநுகூலமான சூழ்நிலை, முறையான முயற்சி ஆகியவை வாயிலாகக் கடைத்தேறுவாரைக் காண்பது அரிதிலும் அரிதாகவே உள்ளது. இலட்சியம் எவ்வளவுக் கெவ்வளவு பெரியதோ அதனை அடைதல் அவ்வளவுக் கவ்வளவு அரிதாகின்றது. சிலர் ஒரே பிறவியில் முக்தியை அடைகின்றனர். பலர் எத்தனையோ பிறவிகளை எடுத்து முயலவேண்டியவர்களாகின்றனர்.

இவ்விடத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரின் அருள் வாக்கு ஒன்றினை நினைவுகூரலாம். வாரணாசியில் அன்னபூரணி கோயில் என்ற ஒன்று உண்டு. அது விசுவநாதர் திருக்கோயிலுக்குச் செல்லும் ஒரு சந்தில் உள்ளது. அத்திருக்கோயிலுக்குள் நுழைந்தவர்கள் அனைவரும் பிரசாதம் பெறாமல் வெளியில் வருவதில்லை. சிலருக்கு உடனே பிரசாதம் கிடைத்து விடுகின்றது. சிலர் காத்திருந்து பெறுகின்றனர். நெடு நேரம் காத்திருந்து பெறுபவர்களும் உண்டு. ஆனால் எவர் ஒருவருக்காவது பிரசாதம் இல்லை என்ற சந்தர்ப்பமே இல்லை. அங்ஙனமே பிறப்பெடுப்பவர்கள் அனைவருக்குமே முக்தி உண்டு. சிலர் இப்பிறப்பிலேயே முக்தி அடைகின்றனர். சிலர் இன்னும் இரண்டு மூன்று பிறவிகளில் முக்தி அடை

கின்றனர். வேறு சிலர் எண்ணற்ற பிறவிகள் எடுத்த பின்பு முக்திக்குரியவர்களாகின்றனர். ஆனால் எல்லோரும் முன்னது பின்னதாக முக்தி அடைகின்றனர் என்பதாகக் கூறுவார் பரமஹம்சர்.

**சரணாகதி நெறி :** அருளாசிரியர்கள் தமது அருளிச் செயல்களில் குறிப்பிட்ட அடைக்கலம்பற்றிய பல குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆசாரியப் பெருமக்கள் சரணாகதி நெறியை வகைப்படுத்திக் காட்டியுள்ளனர். இவற்றை இப்பொழுது விளக்குவேன். பக்தி நெறியை எல்லோரும் அநுட்டிக்க முடியாததால் உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றவர், கல்லாதவர், மகளிர் என்ற வேறுபாடுமின்றி எல்லோராலும் மேற்கொள்ளக் கூடிய நெறியியொன்றினைக் கண்டனர், மெய் விளக்கம் பெற்ற மேலோர். ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் பிரபத்தியே-சரணாகதியே-தமது சித்தாந்தம் என்று உபதேசித்தார். அதனால் அவருக்குப் **'பிரபந்ந ஜன கூடஸ்தர்'** என்ற ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. பிரபத்தி நெறியை அநுட்டிக்கும் பிரபந்நர்கள் யாவருக்கும் தலைவர் என்பது இதன் பொருள். இந்த நெறியை வேதாந்த தேசிகர்,

> **அந்தணர் அந்தியர் எல்லையில்**
> **நின்ற அனைத்துலகும்**
> **நொந்தவ ரேமுத லாக**
> **நுடங்கி அனன்னியராய்**
> **வந்தடை யும்வகை** (தே. பி. 56)

என்று சிறப்பித்துப் பேசுவர். அந்தியர் என்பது சண்டாளர் வரையில் உள்ளவர்கள். இந்நெறியை வைணவப் பெருமக்கள் 'சரணாகதி', 'பரந்யாசம்', 'பரசமர்ப்பணம்' 'உபயாநுஷ்டானம்' என்ற பெயர்களாலும் வழங்குவர். சமுசார தாபதத்தால் வருந்தி வேறு உபாயத்தையும், வேறு பலனையும், வேறு தெய்வத்தையும் நாடாத யாவரும்

இந்த நெறியைக் கடைப்பிடிக்க வல்ல அதிகாரிகளாவர். மனநிலை மாறி எம்பெருமானின் கருணையின்மீது பெரு நம்பிக்கை கொள்வதே இந்நெறியைக் கடைப்பிடிப் போரிடம் வேண்டப் பெறுவது. மணிவாசகர் பெருமான் திருவாசகத்தில் அடைக்கலப்பத்தில் குறிப்பிடுவது இந்த நெறியேயாகும். இதில் ஒரு பாடல்!

**பொழிகின்ற துன்பம் புயல்வெள்ளத்தில்**
**நின்கழல் புணைகொண்டு**
**இழிகின்ற அன்பர்கள் ஏறினர்**
**வான்;யான் இடர்க்கடல்வாய்ச்**
**சுழிசென்று மாதர்த் திரைபொரக்**
**காமம் சுறவுஎறிய**
**அழிகின்றனன் உடை யாய்அடி**
**யேன்உன் அடைக்கலமே** (409)

'துன்பக் கடல் என்னும் மண்உலகுக்கு வந்த பக்தர்கள் இறைவன் திருவடி என்னும் தெப்பத்தைக் கொண்டு முக்தி என்னும் கரை ஏறினர். அடியேனாகிய எளியேன் பிறவிப் பெருங்கடலில் தோன்றும் பெண் உடம்பு முதலிய பேரலை கள் மோத, காமம் என்னும் சுறாமீன் தாக்க நைந்து அழிகின்றேன். எளியேனை அடிமைப் பொருளாக உடைய வனே! நின்திருவடிக்கு அடைக்கலம்' என்கின்றார் இதில்.

இன்னொரு பாடலில், ''எளியேனை அடிமைப் பொருளாக உடையவனே! செழுமையாகத் திரண்ட செந்தாமரையின் மலரையொத்த நின் திருவடியினை நின் திருவருளால் செவ்வி வாய்ந்த மெய்யடியார் சேரப் பெற்றனர்; அவர்கள் அன்பாற் கனிந்த இன்ப உள்ளத்த ராயினர். அவர்கள் நின் திருவாணைப்படி நீ எழுந் தருளியதும் உடன் போயினர். அப்பெரும் பேறு வாய்க்காத பாவியேனாகிய அடியேன் அளவில்லாத புழுக்களுக்கு இட மாகவுள்ள தாழ்ந்த இந்த உடம்பினைப் பெற்றவனாக உள்ளேன். நின் திருவடியுணர்வு வாயிலாகிய கல்வி உணர்வு

சிறிதும் இல்லாதவனாகவும் இருக்கின்றேன். அதுமட்டுமா? பொல்லாங்கு நிறைந்ததும், காமம்வெகுளி மயக்கம் ஆகிய அழுக்கு நிறைந்ததுமாகிய தீயமனத்தினையும் பெற்றவனாக இருக்கின்றேன். எளியேனை நின் திருவடிகட்கு உரிமை யாக்கும் வண்ணம் அடியேன் நினக்கு அடைக்கலப் பொருளானேன்'' என்கின்றார்.

அழுக்கு மனத்தடி யேன்உடை
யாய்! உன் அடைக்கலமே (406)

என்பது அடிகளாரின் அமுதவாக்கு.

அடைக்கலம் புகுந்தார் அனைவரும் தங்கள் குறைபாடு களை நீக்கி நிறையுடையராக்கி நெறிப்படுத்துமாறு வேண்டிக் கோடலே யாண்டும் காணலாம். நோயாளி மருத்துவர்பால் அடைக்கலம் புகுவன். நன் மருத்துவர் அடைக்கலம் கொடுத்து ஏற்றுக் கொள்வர். ஏற்றுக் கொண்டதும் நோயாளியின் பொறுப்பு முழுவதும் மருத்து வரைச் சார்ந்ததாகி விடுகின்றது. இதுபோல் அடிகளாரும் ஆண்டவன் திருவாணைவழி நிற்கும் பொறுப்பு ஒன்றே உடையவராகின்றார்.

இன்னொரு பாடலில் அடிகள் பேசுவது: ''அறிவின் பொருள்களை உடைமையாகவும், அறிவுப் பொருள்களை அடிமையாகவும் என்றும் உடைய எம்பெருமானே! எளியேன் அறியாமையினால் வெறுக்கத் தக்க சிறுமைகளை செய்தாலும், அளவிடற்கரிய நின் பேரருட் பெருமையினால் பொறுத் தருள்பவனே! நஞ்சுடைய பாம்பினை அஞ்சாது பூண்பவனே! பொங்கி எழும் கங்கை நதியைத் திருச்சடை யின் கண் தடுத்து நிறுத்துபவனே! நின் திருவருளால் அடியேனின் பிறவி முதலை அறுத்தருள் பவனே! அடியேன் நின் திருவடிகட்கு அடைக்கலம்'' என்கின்றார்.

வெறுப்பன வேசெய்யும் என்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னே!அராப் பூண்பவ
னே! பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளால்என் பிறவியைவேர
செறுப்பவ னே!உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே (407)

என்பது மணிவாசகப் பெருமானின் அமுத வாக்கு.

பிறிதொரு பாடலில் அடிகளார் கூறுவது: "நின்திருவருளைவிட்டுப் பிரியாத மெய்யன்பர்கள் பேரின்பப் பெருவாழ்வாம் நின் திருவடிச் செல்வத்தினைப் பெற்றனர். ஆனால் அடியேனுக்கு உன்னை வழுத்தத் தெரியாது— "உன்னை வந்திப்பதோர் நெறியறியேன்." நின்னையும் அறியேன், உன்னை அறிவதற்கான புத்தி யோகம் எனக்கு இல்லை—"நின்னையே அறியும் அறிவறியேன்". இத்தகைய அறிவுக்குறை உடையேன் நின்னையே அடைக்கலம் புகுகின்றேன்" என்று மனம்உருகி மொழிகின்றார். (414)

இந்தப் பாடல் கண்ணன் கீதையில் கூறும் புத்தியோகம் பற்றிய ஒரு சுலோகத்தை நினைவுகூரச் செய்கின்றது.

> "என்றும் யோக முயற்சியோடு அன்புடன் என்னை வழுத்துபவர்கட்குப் புத்தியோகம் வழங்குகின்றேன். அதனால் அவர்கள் என்னை அடைகின்றனர்" (10:10).

சருக்கரையை நாவில் வைத்தால் அதன் இனிப்புச் சுவையை அறிய முடிகின்றது. பிறகு அந்தச் சருக்கரையைப் பல்வேறு வகைப் பலகாரங்களாகச் செய்தால் அதன் சுவையில் நன்கு ஈடுபட்டு அநுபவிக்கலாம் என்று அறிவது சருக்கரையைப் பற்றிய புத்தியோகமாகிறது. உள்ளன்போடும் உறுதியாக

வும் யோகத்தில் நுழைபவர்கட்கு இறைவனது மகிமை சிறிது விளங்குகின்றது. அது போகத்திற்கு மேலும் தூண்டு கோலாகின்றது. பகவான் தந்து கொண்டே வருகின்ற புத்தி யோகத்தால் அவருடைய சொரூபம் மேலும் மேலும் அறியப்பெறுகின்றது. அவருடைய சொரூபத்தைத் தொடர்ந்து அறியும் அளவிற்கு பக்தன் இன்னும் அதிகமாகப் பகவானை அறிகின்றான்.

இந்த அடைக்கலப் பத்தின் இறுதிப் பாடல்:

**வழங்குகின் றாய்க்குஉன் அருளார்**
**அமுதத்தை வாரிக்கொண்டு**
**விழுங்குகின் றேன்;விக் கினேன்வினை**
**யேன்என் விதியின்மையால்**
**தழங்குஅரும் தேன்அன்ன தண்ணீர்**
**பருகத்தந் துய்யக்கொள்ளாய்;**
**அழுங்குகின் றேன்உடை யாய்அடி**
**யேன்உன் அடைக்கலமே.** (415)

இதில் ''எம்பெருமானே! நின் அருளார் அமிர்தத்தை நீ வேண்டியவாறு வழங்குகின்றாய். அதனை அள்ளி அருந்து கின்ற அடியேனுக்கு நல்வினைப் பயன் இன்மையால் நான் விக்கி வருந்துகின்றேன். எனக்குத் தண்ணீரைப் பருகத் தந்து என்னை உய்விப்பாயாக'' என்கின்றார்.

இறைவன் திருவருளால் திடீரென்று நிர்விகல்ப சமாதி கூடிவிட்டால் அது தனது வீடுபேறு என்று சீவான்மா உடனே அறிந்து கொள்வதில்லை. அதில் திளைத்திருக்க அவன் முதலில் மறுதலிக்கின்றான். தேன் போன்ற இறைவனது திருநாமத்தை இனிது உச்சரித்து ஒலித்துக் கொண்டிருந்தால் போதும் என உணர்கின்றான். ஆனால் விரைவில் தடுமாற்றத்தினின்றும் நீங்கி மேல்நிலைக்குப் போகின்றான்.

**ஆழ்வார் பாசுரங்களில் :** பிரபத்தி நெறிதான் நம்மாழ்வாரின் நெறியாக இருப்பதால் அந்நெறிபற்றிய குறிப்புகளை பிற ஆழ்வார்களின் பாசுரங்களில் கண்டு மகிழலாம். பொய்கையாழ்வார் பாசுரம் ஒன்றில் 'வினை, நோய், பாவம் இவை வாசனையோடு நீங்க வேண்டுமாயின் சக்கரவர்த்தித் திருமகனைச் சரணம் புகுதலேயாகும்' (முத. திரு. 59) என்ற கருத்து அமைந்துள்ளது. "உன் திருவடிகளில் கைங்கரியம் பண்ண நேர்பட்டேன்; அத்திருவடிகளையே சிந்தித்தேன்; அவற்றில் அன்பே வடிவெடுத்தவனாய்ப் பொருந்தினேன். உன் திருவடி சேவையே சிறந்தது. நீ உலகளந்த காலத்தில் கீழ் உலகத்தி லுள்ளவர்கட்கும் மேல் உலகத்திலுள்ளவர்கட்கு மட்டுமே நின் திருவடி சேவை கிடைத்தது'' என்று கூறுவார் பூதத் தாழ்வார் (80). பேயாழ்வாரோ,

> **இன்றே கழல்கண்டேன்;**
> **ஏழ்பிறப்பும் யான்அறுத்தேன்** (2)

என்கின்றார். "உன்னுடைய திருவடி சேவையால் என்னுடைய பிறவி வட்டங்கள் யாவும் ஒழிந்தன" என்று சொல்லிக் களிக்கின்றார். மேலும்,

> **சுடராழி ஒன்றுடையான்**
> **சூழ்கழலே நாளும்**
> **தொடர்; ஆழிநெஞ்சே! தொழுது** (24)

என்று பேசுவார். இந்த மூன்று ஆழ்வார்களும் இறைவனின் திருவடிப் பெருமையையே அதிகமாகப் பேசிப் போற்று கின்றனர்.

இந்தத் திருவடியின் பெருமையை முமுட்சுப்படியும் ஓர் இனிய உவமையால் விளக்குகின்றது. துவயமந்திரத்தை விளக்கும் பிள்ளை உலக ஆசிரியர்,

"சேஷிபக்கல் சேஷபூதன் இழியும்
துறை ப்ரஜை முலையிலே வாய்
வைக்குமாப் போலே" (முமுட்சு-147)

என்று சூத்திரமிட்டுக் காட்டுவர். பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி தாயினுடைய ஏனைய உறுப்புகளையும் விட்டு தான் உய்வதற்கு இடனாயும் பாலமுதம் சுரக்கும் ஊற்றாயும் உள்ள தாயின் கொங்கையிலே வாய்வைக்கின்றது. அது போலவே சேதநன் சேஷியாகிய எம்பெருமானின் மற்ற உறுப்புகளைவிட்டு அவன் திருவடிகளையே பற்றுகின்றான். தாயின் கொங்கையைப் பற்றுதல் குழந்தைக்கு இயல்பாக இருப்பது போலவே, சேதநனுக்கும் எம்பெருமானின் இணைத்தாமரை அடிகளைப் பற்றுதல் இயல்பாகஅமைந்து விடுகின்றது.

இந்தத் திருவடிகட்கு இன்னொரு பெருமை உண்டு. அதுதான் குணப்பெருமை என்கின்றார் ஆசாரியப் பெருமகனார். சில சமயம் பரிந்துரைக்கும்-புருஷகாரமாகச் செயற்படும் பிராட்டியும் சில சமயம் கைவிட நேரிடலாம். பெரும்பாலும் பிராட்டி சேதநனுடைய குற்றங்களை எம்பெருமானிடம் எடுத்துரைக்க மாட்டார் என்பது உண்மை. ஆயினும், எம்பெருமான் மனத்தில் இவனை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தை ஊன்றுவிப்பதற்காக, ஒருகால் சில குற்றங்களை உரைக்கவும் நேரிடும். இங்ஙனம் குற்றம் உனரக்கும் பாங்கில் பிராட்டியார் சேதநனைக் கைவிடுபவர் ஆகின்றார். ஆனால் அந்தச் சேதநனிடம் ஊன்றிய அன்பு கொண்ட எம்பெருமான் தனக்குரிய வாத்சல்யம் முதலிய பெருங் குணங்களால் "என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்" (பெரியாழ். திரு 4.9;2) என்று அவனை ஏற்றுக் கொள்ள முன் வந்து நிற்பன். இத்தகைய எம்பெருமானும் ஏதோ ஒரு சமயம் கைவிட நேரிடுதலும் உண்டு. இம்முறையில் சேதநனுக்கு நன்மை புரிபவர்களாகிய இருவரும் கைவிடினும், தன் அழகினால் சேதநனை விலகிச் செல்லாத

வாறு அகப்படுத்திக் கொள்ளும் அவனுடைய இணைத் தாமரை அடிகளோ அவனை விடாதுபற்றிக் கொள்ளும் திண்மை வாய்ந்தனவாக இருக்கும், இதனை மனத்திற் கொண்டே நம்மாழ்வாரும் ''வண்புகழ் நாரணன்தின் கழல் சேரே'' (திருவாய் 1.2;10) எனத் திருவாய் மலர்ந்தார் போலும். இவற்றை மனத்திற் கொண்டே பிள்ளை உலக ஆசிரியர்,

''பிராட்டியும் அவனும் விடினும்
திருவடிகள் விடாது திண்கழ
லாயிருக்கும்'' (முமுட்சு-146)

என்று சூத்திரமிட்டு விளக்குவர்.

இனி, மீண்டும் ஆழ்வார்களின் பாசுரங்கட்கு வருவோம். திருமழிசையாழ்வார் தாம் எம்பெருமானின் திருவடிக்கு அற்றுத் தீர்ந்தாக உரைக்கின்றார். எம்பெருமான் எல்லாவித சாத்திரங்களாலும் போற்றப்படுகின்றான். ஆதலால் அவனை ''நூலாளன்'' என்ற பெயரால் வழங்குவர். இதற்குப் பெண்பால் பெயர் ''நூலாட்டி'' என்பது. இதனால் எம்பெருமானைத் திருமழிசைபிரான் ''நூலாட்டிக் கேள்வனார்'' என்று குறிப்பிடுகின்றார். எம்பெருமான் நூல் வலையில் சிக்கிக் கொண்டிருப்பது போலத் தாம் அவனுடைய 'கால்வலையில்' (திருவடிவலையில்) சிக்கிக் கொண்டு விட்டதாகக் கூறுவார்.

—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த
நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன்
காண் (நான். திரு. 40)

என்பது ஆழ்வாரின் அமுத வாக்கு. பிறிதொரு பாசுரத்தின் ''என்றேன் அடிமை; இழிந்தேன் பிறப்பு இடும்பை'' (ஷை-95) என்ற தொடரால் இப்பிரபத்தி நெறியைத் தெளியலாம்.

மணிவாசகப் பெருமான் இறைவன்தாளை வணங்குவ தற்கும் அவன் அருள் வேண்டும் என்பதை,

''அவனருளாலே அவன்தாள் வணங்கி''

என்று (சிவபு-அடி 18) கூறுவார். இக்கருத்தையே

பரந்த சிந்தை ஒன்றிநின்று
நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்ப தாக
நீநினைக்க வேண்டுமே

என்ற தம் திருச்சந்த விருத்தத்தில் (101) பக்திசாரர் குறிப்பிடுவார். ''தேவரீரின் திருவடித் தாமரைகளை நாடோறும் சிந்தித்து மகிழ வேண்டுமானால் அஃது என் முயற்சியினால் தலைக்கட்டிவிடுமோ? தேவரீர் சங்கல் பியாத அளவில் அதுதானும் நடைபெறுமோ? ஆகையாலே அடியேன் தேவரீரின் திருவடிகளை இடைவிடாமல் நினைப்ப தற்கு திருவுள்ளம் பற்றிஅருள வேண்டும்'' என்பதை இவ்வடிகளில் பிரார்த்திப்பதைக் காணலாம். பிறிதொரு பாசுரத்தில்,

அடைக்கலம் புகுந்த என்னை
'அஞ்சல்' என்ன வேண்டுமே

என்கின்றார் (92). இதில் ''வீடணனுக்கு அபயம் அளித்தது போலவும், பார்த்தனை நோக்கி ''மாசுச;— வருந்தற்க'' என்று சொன்னது போலவும் அடியேனை நோக்கி 'அஞ்சேல்' என்று அருளிச் செய்ய வேண்டும்" என்கின்றார்.

இராமனுக்குப் 'பெருமாள்' என்ற திருப்பெயர் உண்டு. குலசேகராழ்வார் அத் திருப்பெயரைத் தம் பெயருடன் சேர்த்துக் கொண்டு 'குலசேகரப் பெருமாள்' எனத் திகழ் கின்றார். இதனால் அவர் தம் அருளிச் செயலும் 'பெருமாள் திருமொழி' என்ற திருநாமத்துடன் வழங்கி வருகின்றது.

இராமபிரான்மீது அதிக ஈடுபாடு கொண்டதே இதற்குக் காரணமாகலாம். அவர் இராமனது திருவடிகளைத் தம் சென்னிமீது சூடிக் கொள்ள ஆசைப்படுகின்றார். அதுதான் வெற்றரசை நீக்கி வீட்டரசைத் தரவல்லது என்று நம்பிக்கையும் கொள்ளுகின்றார். அவரது தில்லைச் சித்திர கூடத்திருப்பதிகம்-பத்தாம் திருமொழி-இராமசரிதத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்பது. கதை வெகு வேகமாக நடை பெறுகின்றது.

**திருமகளோடு இனிதுஅமர்ந்த செல்வன் தன்னைத்**
**தில்லைநகர் திருச்சித்திர கூடந்தன்னுள்**
**அரசுஅமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்**
**அரசுஆக எண்ணேன்மற்று அரசுதானே (10:7)**

என்ற பாசுரத்தில் ''இராமனது திருவடியைச் சென்னியில் சூடிக் கொள்ளுதலாகின்ற அரசாட்சியை விரும்புவேனே யன்றி அதற்குமாறாக சுவாதந்திரியத்தைப் பாராட்டும் மண்ணரசை ஒரு பொருளாக மதிக்க மாட்டேன்" என்று பேசுவதைக் காண முடிகின்றது.

பெரும்பாலான அருளாசிரியர்கள்—ஞானச் செல்வர்கள்—'இறைவன் திருவடி நிழல்' என்ற சொற்றொடரைத் தம் பாடல்களில் ஆளுகின்றனர். வெயிலில் அலைந்து திரியும் ஒருவன் தண்ணிய ஆலமரத்தின் நிழலை அடையும் போது வெப்பம் மறைந்து இனிமையான குளிர்ச்சியை உணர்ந்து அநுபவித்து மகிழ்கின்றான். அதுபோல இருள் தருமா இவ்வுலகில் சம்சார வெப்பத்தில் உழன்று தாபங்கள் எல்லாம் மறைந்த நிலையில் இறைவன் திருவடியை அடையும் போது நிழலில் இருப்பது போன்ற குளிர்ச்சியைக் கற்பனையில் கண்டு அதனைத் **'திருவடி நிழல்'** என்று உருவகமாகக் கொள்ளுகின்றான். இதனால்தான் குலசேகரப் பெருமாள் குடைகவித்ததுபோல் இராமபிரானின் திருப்பொலிந்த சேவடியைத் தம் சென்னியின்

மீது சூடிக் கொள்ள விரும்புகின்றார் போலும் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

இவ்விடத்தில் அப்பர் பெருமானின் திருக்குறுந்தொகை பதிகம் பாடல் ஒன்று நம் நினைவிற்கு வருகின்றது.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே** (5.90:1)

இங்கு அப்பர் பெருமானுக்கு இறைவனின் திருவடி நீழல் காதால் அநுபவிக்கும் வீணையின் கான ஓசையின் இன்பமும்; கோடைக் காலத்தில் இல்லத்தின் மொட்டை மாடியில் அமர்ந்து கொண்டு அநுபவிக்கும் தென்றலின் ஊற்றுணர்வு இன்பமும், வெயிலில் நடந்து சென்ற பயணி வழியில் தென்படும் சோலையில் வண்டுகள் இன்னோசையை தர பொய்கைக் கரையில் அமர்ந்து கொண்டு நுகரும் இன்பமும் ஆகிய மூன்று வகை இன்பங்களும் கலந்ததோர் இனிய கலவை இன்பமாகத் தருவதைக் கற்பனையில் கண்டு நமக்குக் காட்டுகின்றார். இந்த அநுபவத்தின் நேர்த்தியை எண்ணி எண்ணி அநுபவிக்கும்போது ஒன்று பத்தாகப் பெருகுகின்ற உணர்வு நம்மிடையே உண்டாகின்றதல்லவா?

மீண்டும் ஆழ்வார்களின் பாசுரங்களை நினைக்கின்றோம். ஆழ்வார் பெருமக்களில் நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் அதிகமான பாசுரங்களை அருளிச் செய்தவர்கள். குறிப்பாகத் திருமங்கையாழ்வார் திருக்குடந்தை, திருவேங்கடம், நைமிசாரணியம் திருவிண்ணகர் ஆகிய நான்கு திருத்தல எம்பெருமான்களைப் பாடும்போது சரணாகதி நெறிபற்றிய குறிப்புகளைக் காண்கின்றோம்.

திருமங்கையாழ்வார் திருக்குடந்தை சாரங்கபாணிப் பெருமான்மீது பாடியருளிய திருஎழுகூற்றிருக்கை

சரணாகதி நெறியை நுவல்வதாக அமைந்துள்ளது. இஃது "இரதபந்தம்" என்னும் சித்திரக் கவியால் அமைந்தது.

செல்வம் மல்கு தென்திருக் குடந்தை
அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க,
ஆடரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த
பரம! நின் அடியிணை மாற்றோ வினையே (43-45)

என்று ஆரா அமுதனிடம் சரணாகதி பண்ணுவதை அறியலாம். திருக்குடந்தை ஆரா அமுதனிடம் இந்த ஆழ்வாருக்குத் தனிப்பற்று உண்டு. 'சரமப் பிரபந்தம்' எனக் கருதப்பெறும் திருநெடுந்தாண்டகத்திலும்,

தன்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை-அடிநாயேன்
நினைந்திட் டேனே (29)

என்று கூறி தன் நினைவில் அடிக்கடிச் சேவை சாதிக்கும் ஆராவமுதனை நினைவால் வழிபடுகின்றார்.

பிரபத்தி செய்யும் அதிகாரி ஆகிஞ்சன்னியமும் அநன்னிய கதித்துவமும் உடையவனாயிருத்தல் வேண்டும் என்று கூறுகின்றது முமுட்சுப்படி (120). இந்த சாத்திரம் பிள்ளை உலக ஆசிரியரால் அருளிச் செய்யப் பெற்றது. இஃது அஷ்டாதச இரகசியங்களுள் ஒன்றாகும். ஆகிஞ்சன்னியம் என்பது, கர்ம ஞான பக்திகளாகின்ற மற்ற உபாயங்களின் தொடர்பற்று இருத்தலாகும். அநன்னிய கதித்துவம் என்பது, ஆன்ம இரட்சணத்திற்கு எம்பெருமானைத் தவிர வேறு ஓர் இரட்சகப் பொருள் அற்றிருத்தலாகும். நம்மாழ்வார் திருவேங்கடம்பற்றிய திருவாய்மொழிப் பதிகத்தின் பாசுரம் ஒன்றில் தம்முடைய அநன்னியகதித்துவத்தைத் தெரிவிப்பதைக் காணலாம். "திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! உன்னையொழிய உபாயமும் இரட்சகமும் ஒன்றுமற்ற அடியேன் உன்திருவடிக் கீழ் என் தலைக்கும் உன்திருவடி

களுக்கும் இடைவெளி இல்லாதவாறு நெருங்கி நுழைந்து, உன்னை உபாயமாகப் பற்றினேன்" (6.10:10) என்று ஆழ்வார் கூறுவதைக் காணலாம். சைவப் பெருமக்கள் இறைவனுடைய தாளையும் பக்தனுடைய தலையையும் சேர்த்து தாள் + தலை = தாடலை என்று இதே கருத்தைக் கூறுவதை நினைந்து பார்க்கலாம். திருமங்கையாழ்வாரும், "நலந்தான் ஒன்று மிலேன், நல்லதோர் அறம் செய்து மிலேன்" (பெரி. திரு. 1.9:4) என்று திருவேங்கடம்பற்றிய திருமொழியில் நுவல்வதைக் கண்டு தெளியலாம்.

எம்பெருமானிடம் சரண்புகுமிடத்து அவனுடைய மேன்மைகளையும் தம்முடைய தாழ்வுகளையும் வெளியிட்டுக் கொண்டே செய்ய வேண்டும் என்பது விதி. இவை ஆர்த்தியின் கனத்தாலே தம்முடைய குற்றங்களெல்லாம் நினைவிற்கு வந்தே தீருமாதலால் திருமங்கை ஆழ்வார் தம்முடைய குற்றங்களையெல்லாம் விவரமாகப் பேசிக் கொண்டு சரண் அடைகின்றார். நைமிசாரணியத்துத் திருமொழியிலும் (1.6) திருவேங்கடம்பற்றிய ஒரு திருமொழியிலும் (1.9) இந்த நிலையைக் காணலாம்.

இருள்தருமா இவ்வுலகில் வாழ்வோர் வாழ்வுபற்றிய செயல்களைக் குறிப்பிடும் வள்ளுவர்,

> **செய்தக்க அல்ல**
> **செயக்கெடும் செய்தக்க**
> **செய்யாமை யானும்**
> **கெடும்** (466)

என்று கூறியது போலவே, சாத்திரங்களில் செய்ய வேண்டிய கருமங்கள் என்று விதிக்கப்பெற்ற நற்கருமங்களைச் செய்யா தொழிகையும், செய்யலாகாதவை என்று மறுக்கப் பெற்ற தீவினைகளைச் செய்கையும் என்று குற்றங்கள் இருவகைப்படும். இந்த இருவகைக் குற்றங்களும் தம்மிடத்தில் இருப்பனவாகச் சொல்லிக் கொள்ளுகின்றார்

நைமிசாரணியப் பற்றிய திருமொழியில். ''எம்பெருமானே! மாதர்களின் உறுப்புகளின் அழகினால் ஈர்க்கப்பெற்று சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்தேன்; இந்திரிய போகங்களை மேன்மேலும் பெருக்கிக் கொண்டு வாழ்நாளை வீணாகக் கழித்தேன்; அதிகமாகச் சூதாடினேன்; துணிந்து களவுத் தொழிலில் ஈடுபட்டேன்; இரப்பவர்களிடம் இரக்கம் காட்டாத நீசனானேன்; வேட்டைத் தொழிலில் மிகவும் ஈடுபட்டேன்; பிராணிகளைக்கொன்று உணர்வற்ற நிலையை எய்தினேன். இங்ஙனம் நெடு நாட்கள் கழிந்தன. 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்'. காரணம் பற்றாத நின்னுடையக் கடைக்கண் நோக்கின் சிறப்பினால், நின்னுடைய திருவருளினால், இந்திரிய போகங்களில் அருவருப்பு உண்டாயிற்று; அவற்றைக் காறியுமிழ்ந்து நின்திருவடியையடைந்தேன்'' என்று ஒரு முறைக்கு ஒன்பது முறையாகக் கூறித் தான் பிறவி நோய் அறுக்கும் வழியிலே வந்து நின்றதாக விண்ணப்பிக்கின்றார் ஆழ்வார்.

திருவேங்கடம் பற்றிய ஒரு திருமொழி முழுதும் (1.9) பிரபத்திபற்றியதாக அமைந்துள்ளது. 'திருவேங்கடம் அடைநெஞ்சே' என்று தம் நெஞ்சைத் தூண்ட (1.8) அதுவும் அப்படியே இசைந்து ''யானும் என் நெஞ்சும் இசைந் தொழிந்தோம்'' என்றாப்போலே திருமலை யப்பனைச் சரணம் அடைகின்றார். (1.9) ''திருமலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! உறவினரல்லாதாரை உறவினர் என்று அவர்கள்மேல் ஆசை வைத்து பல்வேறு துன்பங்களை அடைந்தேன்; ஆற்றலில்லாத அவர்களை நம்பி வீணே கெட்டேன். போக்கியமல்லாத பொருள்களை போக்கியம் என்று கொண்டு மயங்கி மோசம் போனேன். நின்னைப் பற்றினால் ஒரு குறையும் இராது என்று இன்று நல்லறிவு உண்டாயிற்று.

**நாயேன் வந்தடைந்தேன்**
**நல்கியாள் என்னைக் கொண்டருளே (1)**

என்கின்றார்.

நெஞ்சு நஞ்சாக இருந்தும் வெளிநோக்கை மிக அழகாகச் செய்துகொண்டு ஆடவர்களைக் கவர்கின்ற மாதர்களின் கண்வலையில் அகப்பட்டு அதற்காக அளவற்ற பாவங்களைச் செய்து கெட்டொழிந்தேன், 'போக்கிய மல்லாத பொருள்களில் மயங்கி அவற்றில் ஈடுபட்டுப் பல் வேறு தீங்குகளை விளைவித்துக் கொண்டோமே' என்ற அநுதாபம் உண்டாயிற்று. 'பரம போக்கியமான பொருள் களில் ஈடுபட்டு நற்கதி அடைவோம்' என்ற விவேகமும் உண்டாயிற்று. ஆதலால்,

**தேனேய் பூம்பொழில்சூழ்**
**திருவேங்கட மாமலைமேய, என்**
**ஆனாய்! வந்தடைந்தேன்**
**அடியேனை ஆட்கொண்டருளே** *(2)*

என்று அடைக்கலம் புகுகின்றார்.

உடலைக் காட்டிலும் ஆன்மா உண்டென்றும், தெய்வம் உண்டென்றும், சாத்திரம் உண்டென்றும், புண்ணிய பாவங்கள் உண்டென்றும், பாவ புண்ணியங்கள் அநுபவிக்கும் நரகம் சொர்க்கம் உண்டென்றும், சாத்திரங் கள் கூறுகின்ற இவை ஒன்றிலும் நம்பிக்கையற்றவனா கையால் இவ்வளவென்று கணக்கிட முடியாத உயிரினங் களைக் கொலை செய்தேன். இரந்து வந்தவர்கட்கு இனிமையான சொற்களைக் கூறாமல் அவர்கள் மனம் நோகும்படியாகப் பல கடிய சொற்களைக் கூறி வெருட்டினேன். அநுதாபம் பிறந்த அக்கணமே,

**அன்றே வந்தடைந்தேன்;**
**அடியேனை ஆட்கொண்டருளே** *(3)*

என்கின்றார்:

'புல்லாய்ப் பூண்டாய்ப் பறவையாய்ப் பாம்பாகிப் பல் விருகமாகிக்...என்பது போல 'குலந்தாங்கு எத்தனையும் பிறந்து இறந்து எய்த்து ஒழிந்தேன். 'நலந்தான் ஒன்று

மிலேன்; 'நல்லதோர் அறம் செய்துமிலேன். இன்னும் பிறப்பதற்கு வினைமீதி இருந்தாலும், பிறப்பதற்கு ஆற்றல் இல்லாதபடி மிகவும் மெலிந்து போனேன். இப்படிப் பல பிறவிகள் எடுத்தாலும், அவற்றில் ஒன்றிலாகிலும் தமக்குத் தெரியாதவாறு நேரிடும் சந்தர்ப்பங்களில் கூட ஒன்றிலாகிலும் நன்மையொன்றும் செய்யவில்லை' இந்நிலையில்,

**அலந்தேன வந்தடைந்தேன்**
**அடியேனை ஆட்கொண்டருளே (4)**

என்கின்றார்.

அதிபாதகம், உபபாதகம், மகாபாதகம் என்னும்படியான பாவங்கள் எப்படிப் பட்டவையாயினும், செய்யும் போது சிறிதும் சலியாமல் செய்து விட்டேன். பிறகு அப்பாவங்கட்கு நேரக்கூடிய பலன்களைக் கேள்வியுற்று மிகவும் துக்கப்பட்டேன். உன் இணைத்தாமரை அடிகளை நினைந்து துதிக்கவும் ஆற்றலற்று நின் திருவடிகளை வந்தடைந்தேன்.

**அப்பா! வந்தடைந்தேன்**
**அடியேனை ஆடகொண்டருளே (5)**

என்று சரணம் அடைகின்றார்.

இந்த உடல் பஞ்சபூதங்களால் ஆகியது. மண்ணையும் மணலையும், கல்லையும், சேற்றையும் கொண்டு வீடு கட்டுமாப்போலே, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களைக் கொண்டு இந்த மாமிசபிண்டம் உண்டாக்கப்பட்டது. 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றம்' மிகுந்தது இந்த உடல். இதில் அகப்பட்டுத் துவண்டு போனேன். இனி ஓர் உடலையும் ஏற்க ஆற்றலின்றி, பிறவி வட்டங்கட்கு அஞ்சி நின்திருவடி வாரத்தில் வந்து விழுந்தேன்.

**அண்ணா! வந்தடைந்தேன்**
**அடியேனை ஆட்கொண்டருளே (6)**

என்று ஏங்கி அரற்றுகின்றார்.

'கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்' நல்லவற்றைக் கற்காமல் அதற்கு எதிர்த்தட்டாக அறிவற்றவனாய்ப் பல தீய செயல்களைப் புரிந்து விட்டேன். குமரப் பருவத்திலே எப்பொருளைக் கண்டாலும் அதனை மாதர்க்காகத் தேடித் திரிந்து அலைந்து சதிர்கேடனானேன்; இங்ஙனம் சென்ற காலமெல்லாம் பழுதே கழிந்தாலும், இனியாகிலும் அடையத்தக்க விஷயத்தில் தொண்டு பூண்டு அமுதம் உண்ணப் பெறலாம் என்று நின் திருவடிகளை வந்தடைந்தேன்.

> அரியே! வந்தடைந்தேன்;
> அடியேனை ஆட் கொண்டருளே (7)

என்று பிரலாபிக்கின்றார்.

என் வினைப்பயனால் பல பிறவிகளில் பிறந்து கொண்டே வந்தேன். எதிர்பாராமல் தற்செயலாக நின்னைக் காணவேண்டும் என்ற ஆசை பிறந்தது இப்பிறவியில்; இதனால் நான் நின்ற நிலை மிகவும் பொல்லாதது என்று என் நெஞ்சில் பட்டது. இதுகாறும் நிகழ்ந்தவற்றையும் இனி நிகழப்போகின்றவற்றையும் நினைந்து சகிக்க மாட்டாமல் நின் திருவடிகளை வந்து பணிந்தேன்.

> ஆற்றேன் வந்தடைந்தேன்;
> அடியேனை ஆட் கொண்டருளே (8)

என்று நெஞ்சுருகிப் பேசுகின்றார். இப்படி இந்தப் பதிகத்தில் ஒருதடவைக்கு ஒன்பது தடவையாகப் பாசுரங்களில் பேசுகின்றார்.

மேலும், ''இனி, என்னுடைய முன்னைய தீவினைகளை நோக்கி என்னைக் கைவிடலாகாது. நீயோ சர்வ இரட்சகன். அடியேன் அனாதன்; அநந்யகதி''. என்று விண்ணப்பித்துச் சரண் அடைகின்றார்.

ஒப்பிலியப்பன் சந்நிதி என வழங்கப்படும் திருவிண்ணகர் எம்பெருமானைச் சரண் அடைவதையும் காண்போம். இங்கும் தமக்கு ஆர்த்தி விளைந்ததை எம்பெருமானிடம் எடுத்துக் கூறிக் கதறுகின்றார். "திருவிண்ணகரில் சேவை சாதிக்கும் எம்பெருமானே! பிறரது அற்பமான சொற் களைப் பொறுத்துக் கொண்டிருந்தேன். பஞ்சேந்திரியங் களுக்குரிய பொருள், பெண்டிர் என்ற இரண்டையும் அநுபவித்துத் தீர்த்தேன். நண்பர்களிடத்து அன்பையும் வேண்டாதவர்களிடத்துப் பகையையும் நிறைவேற்றி விட்டேன். இப்போது அந்த இரண்டு இயல்புகளும் நெஞ்சினின்றும் நீங்கி விட்டன. ஆபாச பந்துக்களின் உறவையும் விட்டொழித்தேன், நின்னை உணர்தல், என்னை உணர்தல், உய்யும் வழியை உணர்தல், பேற்றை உணர்தல், பேற்றின் விரோதிகளை உணர்தல் என்ற 'அர்த்தபஞ்சக ஞானம்' அடியேனிடத்து இல்லை. ஆகையால் துக்கங்கட்கு மூலமான பிறப்பு இறப்புகளை உடையவனானேன். மாதர்களின் கருக்குழியில் கிடந்து படாத பாடு பட்டேன். இப்படிப்பட்ட உடற்பிறவி நமக்குத் தகாது என்று உணர்ந்து அப்பிறவியை அறுத்தொழிப்பதற் காக நின்திருவடியை நாடி வந்தேன். சிற்றின்பங்களை நாடி அநியாயமாய்க் கெட்டொழிந்தேன். படைப்புக் காலத்தில் என்னை நல்வழிப்படுத்த நீ நல்கிய இந்திரியங்கள் வழிவிலகி கொடிய சம்சாரத்தில் தள்ள நினைத்து என்னை இம்சிக் கின்றன. பலவகைப் பாபங்களும் அடியேனைச் சூழ்ந்து கொண்டு வெந்நரகில் வீழ்த்தப் பார்க்கின்றன. நின்னை யல்லால் மற்றோர் தெய்வம் இல்லையென்று உணர்ந்து நின்னை வந்தடைந்தேன். இவ்வாறு "நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே" "தேறேன் உன்னையல்லால் திருவிண்ணகரானே" என்று ஒரு முறைக்கு ஒன்பது முறை களாக ஓலமிட்டுக் கொண்டு ஒப்பிலியப்பனைச் சரண் அடைகின்றார் ஆழ்வார்.

எம்பெருமானைச் சரண் அடைவதற்குப் பிராட்டி யாரின் புருஷகாரம் மிகவும் இன்றியமையாதது என்பது

விதி. இதனைத் துவயமந்திரத்தால் அறியலாம். "துவயம் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது—இவள் புருஷகார மானால் அல்லது ஈசுவரன் காரியம் செய்யான் என்கை" (118, 119) என்ற முமுட்சுப்படி வாக்கியங்களாலும் இதனைத் தெளியலாம். 'பெரிய பிராட்டியாரோடு கூடிய எம்பெருமானின் திருவடிகளை உபாயமாகப் பற்றுகின்றேன்' என்பது 'ஸ்ரீமந் நாராயண சரணௌ' என்பதன் பொருளாகும். "அகலகில்லேன் இறையும்" என்று அலர் மேல் மங்கை உறை மார்பன்" என்பது நம்மாழ்வாரின் அமுதவாக்கு. 'பகவான் எங்ஙனம் உபேயப் பொருளோ அங்ஙனமே பிராட்டியாரும் உபாயப் பொருள்' என்பது தேறி நிற்கும் கருத்தாகும்.

பிராட்டியார் எம்பெருமானை விடாது பற்றியிருப்ப தற்குக் காரணம் என்ன? என்ற வினா எழுகின்றது. ஈசுவரன் எதையும் தன் இச்சையினால் செய்பவன்; சேதநன் எண்ணிறந்த குற்றங்களையுடையவன். பிராட்டியார் எம்பெருமானின் சுதந்திரத் தன்மையையும் சேதநனின் அளவற்ற குற்றங்களையும் கண்டு 'என்னாகப் போகின்றதோ?' என்று அஞ்சி எம்பெருமானை ஒரு நொடி யும் விட்டுப் பிரியாமல் இருக்கின்றார். உலகத்தாரைப் போன்றல்லாமல் ஈசுவரன் குற்றங்களுக்கேற்பச் சேதநனைத் தண்டிக்க ஊன்றி நிற்கின்றான். சேதநனோ அளவற்ற குற்றங்களைச் செய்தவனாயும் செய்கின்றவனாயும் இருக் கின்றான். கூடின சித்தமுடைய நாயகனையும், குறும்பு நிறைந்த துடுக்கான மக்களையும் பெற்ற ஓர் இல்லத்தரசி எங்ஙனம் அவர்களை விட்டுத் தன் தாய் வீடு செல்ல மாட்டாளோ அங்ஙனமே குற்றத்திற்கேற்ற தண்டனை அளிப்பதில் ஊன்றி நிற்கும் கணவனையும் குற்றங்களையே செய்து போகும் துட்டராகிய மக்களையும் பெற்ற பெரிய பிராட்டியாரும் எம்பெருமானை விட்டுப் பிரிய மாட்டார் என்பது தத்துவம்.

இந்த புருஷகார தத்துவம் ஆழ்வார் பாசுரங்களில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்**
**சூழ்புனல் குடந்தையே தொழுது**
—பெரி. திரு. 1.1;2

என்ற திருமங்கையாழ்வார் பாசுரத் தொடரில் அமைந் திருப்பதைக் காணலாம். 'தூவிசேர் அன்னம துணையொடு புணரும்' என்பதில் பெருமாளும் பிராட்டியும் பிரியா திருப்பதைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். ஈண்டு 'அன்னம்' என்பது பெருமானை; துணை என்பது பெரியபிராட்டியாரை. 'நம்முடைய குறையைப் பொறுப் பிப்பவளும் பொறுப்பவனும் பிரியாது வாழும் இடம் திருக்குடந்தை' என்ற படியாம். மேலும்,

**தூவிசேர் அன்னம் மன்னும்**
**சூழ்புனல் குடந்தை யானை** —திருக்குறுந்.14

என்ற பாசுரத்திலும் இந்தச் சேர்த்திநிலை காணப் பெறுகின்றது.

இங்ஙனம் பிராட்டியும் பெருமானும் நிரந்தரச் சேர்க்கையான இருப்பாலே சேதநன் அச்சம் கொள்ள வேண்டியதில்லை (முமுட்சு-133). அர்ச்சையில் பெரிய பிராட்டியாரும் அபயகரத்துடன் பொலிவதைக் காண் கின்றோம். இந்நிலை தம்மிடம் வரும் சேதநரை நோக்கி "ஈசுவரனுடைய சுதந்திரத் தன்மைக்கு அஞ்சுதல் வேண்டா; நான் உங்களை அவனோடு சேர்த்து வாழச் செய்கின்றேன்" என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவ தாகும். இன்னும் இம்மதுப்பை ('ஸ்ரீமத்' என்ற பதத்தை) ஊன்றி நோக்குங்கால் "எம்பெருமானைப் பற்றுதற்கு வேட்கையே வேண்டுவது. இருவரும் சேர்ந்திருக்கும் காலத்தை நோக்கி இருக்கவேண்டுவதில்லை" (முமுட்சு-134) என்பதை அறிய முடிகின்றது. மேலும், பிராட்டியார்

திருமாலின் திருமார்பில் நித்திய வாசம் செய்வதற்கு உட்கருத்து ஒன்று உண்டு. ''தாம் பிரியும் காலமும் சேதநன் ருசியோடு வந்து ஈசுவரனைப் பற்றும் காலமும் ஒன்றாயிருப்பின் என் செய்வது? அப்பொழுது சேதநன் கதி என்னாகும்?'' என்று கருதியே பிராட்டியார் அத்திரு மார்பில் நித்திய வாசம் செய்கின்றார்.

மக்களுக்கு இறைவனும் இறைவியுமான சம்பந்தம் உண்டு என்பதை நாம் அறிவோம். அப்படியிருக்க இவர் புருஷகாரமாக அமைவதற்குக் காரணம் ஒன்று உண்டு. சேதநன் எம்பெருமானுக்குச் சேஷபூதன்-அதாவது அடிமையாக இருப்பவன்-என்பதையும், எம்பெருமான் சேதநனுக்கு சேஷி—அதாவது தலைவன்—என்பதையும் நாம் அறிதல் வேண்டும். ஆயினும், பிராட்டி தாயாம் தன்மையால் வந்த வாத்சல்யதை மிகுதியாக உடையவர்; தந்தையாகிய எம்பெருமானைப்போல் வன்மையும் மென்மையும் கலந்திராமல் மென்மையே வடிவு கொண்டவர். பிறர் கண் குழிவு காணமாட்டாத தன்மையர்; தீய மனமுடையவர்களையும் மருவித்தொழும் மனமுடையவர்களாவதற்குத் தக்சு செயல் புரிபவர். குற்றமுடையவர்களும் கூசாமல் காலில் விழலாம்படி இருப்பவர். ஆண்மையால் வந்த வன்மையோடே தந்தையால் வந்த நலம் செய்யும் நன்மையுடையவனாயும் குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டுக் கொடிய தண்டனைகளை விதிக்கும் செய்கையாலே, குற்றமுடையவர்கள் முன்செல்லக் குடல் கரிக்கும்படி இருக்கும் சர்வேசுவரனைத் தக்க வழிகளாலே குற்றங்கள் அனைத்தையும் மறைப்பித்துச் சேர்ப்பிக்கும் தன்மையுடையவர். இத்தகையவர் பாவமே செய்து பாவிகளான மக்கள் சர்வேசுவரனைப் பற்றுங்கால் புருஷகாரமாக வேண்டும் என்பது மணவாளமாமுனிகளின் கருத்தாகும்.

இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

> "நீரிலே நெருப்புக் கிளருமாப்போல குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக" (முமுட்சு-127)

என்று சூத்திரமிட்டுக் காட்டுவர். பகவான் மிக்க அருள் நிறைந்த திருவுள்ளத்தனாக இருப்பினும் சேதநன் செய்த அளவு கடந்த குற்றங்கள், குளிர்ந்த நீரில் நெருப்பு பிறத்தல் போன்று, அவனுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. அச்சீற்றத்தை மாற்றிக் கொண்டு இவனுடைய குற்றங்களைப் பொறுப்பது பிராட்டியாருக்காகவே என்பது உளங் கொள்ளத் தக்கது.

பிராட்டியார் உலக உயிர்கட்குத் தாயாக இருப்பதால் இவர்களுடைய துக்கத்தைப் பொறாதவராயும், பகவானுக்குப் பத்தினியாக இருப்பதால் அம்முறையில் அவனுக்கு இனிய பொருளாகவும் இருக்கின்றார். இக்காரணத்தால் இவரே அருள் நிறைந்த புருஷகாரமாக அமைந்து விடுகின்றார். இதனால் இருவரையும் உபதேசத்தால் திருத்துகின்றார். ஸ்ரீவசனபூஷணமும் இதனை,

> "இருவரையும் திருத்துவது
> உபதேசத்தாலே (12)

என்று பகர்கின்றது. இதனை விளக்குவேன்.

இறைவனைத் திருத்துவது எவ்வாறு? இறைவனை நோக்கி இவ்வாறு பேசுவார்; "பிரானே, இவனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு இப்படிக் கதவு அடைத்தால் அவனுக்கு வேறு புகல் எங்கு உள்ளது? உமக்கும் இவனுக்கும் உண்டான உறவுமுறை 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' (திருப். 28) என்று ஆண்டாள் கூறுவதுபோல குடநீர் வழிந்தாலும் போகாதது ஒன்றன்றோ? உடைமையாக இருக்கும் இவனை அடைவதால் சுவாமியாக இருக்கும் உம்முடைய பேறாக அன்றோ இருப்பது? உமக்கு நான் இதை எடுத்துச் சொல்வது மிகை அன்றோ? காப்பாற்ற

வேண்டும் என்று விருப்பத்தோடு வந்த இவனைக் காப்பற்றாமல் விட்டால் 'எல்லாப் பொருள்களையும் காப்பவர்' என்ற உம்முடைய தன்மை குலைந்து போகுமல்லவா? அனாதி காலமாக நம்முடைய ஆணையை மீறி தன் இச்சைப்படி ஒழுகிப் போந்த இவனைக் குற்றங்களுக்கேற்பத் தண்டிக்காமல் நாம் ஏற்றுக் கொண்டால் நாம் ஏற்படுத்திய சாத்திர மரியாதை குலையாதோ? என்றல்லவோ நும்திருவுள்ளத்தில் ஓடுகின்றது? அங்ஙனமாயின் நும்மை நாடி வந்த இவனைக் காவாமல் இவனுடைய குற்றங்களை நோக்கித் தண்டித்தால் உம்முடைய அருட்குணம் நிலைப்பது எவ்வாறு? இவனைக் காப்பாற்றிய பொழுதன்றோ உம்முடைய அருட்குணம் ஒளி பெறும்? 'இவனைத் தண்டிக்கா விட்டால் சாத்திரம் நிலையாது; இவனைக் காக்கவில்லையேல் அருள் முதலிய திருக்குணங்கள் ஒளிபெறா' என்று நீர் அஞ்ச வேண்டா. உம்மைச் சிறிதும் நோக்கிப் பாராது தன் இச்சையில் செல்பவனிடம் சாத்திரத்தைப் பயன்படுத்துவீர்; உம்மை அன்புடன் நாடி வந்த இவனைப் பாவங்களினின்றும் நோக்கிக் காப்பாற்றுவீர். இப்படிச் செய்தால் சாத்திரமும் பழுதுபடாது; உம்முடைய அருட்குணமும் உயிர் பெற்றுத் துலங்கும்.' இவ்வாறு எம்பெருமானுக்கு ஏற்ற பற்பல இனியசொற்களைப் பகர்ந்து அவன் சினத்தை மாற்றி, அவனுக்குச் சேதநனிடம் அருள் பிறக்குமாறு செய்வர். இவ்வினிய சொற்களாலும் ஈசுவரனது நெஞ்சம் இளகவில்லையேல், பிராட்டியார் தம் அழகைக் காட்டி அவனைத் தம் வசப்படுத்திச் சேதநனை அங்கீகரிக்குமாறு செய்வார்.

சேதநனைத் திருத்துவது எவ்வாறு? அவனை நோக்கி இவ்வாறு பகர்வார்; "அப்பா, நின் குற்றங்களின் மிகுதியைப் பார்த்தால், உனக்கு ஓரிடத்திலும் காலூன்ற இடம் இல்லை. ஈசுவரன் யாதொன்றாலும் தடை செய்யப் பெறாத சுவாதந்திரியத்தை உடையவனாதலால், குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டு அறுத்து அறுத்து

நுகர்விப்பான். இதற்குத் தப்ப வேண்டுமானால் அவன் இணைத் தாமரை அடிகளில் தலை சாய்த்தலைத் தவிர வேறு வழி இல்லை. குற்றங்கள் நிறைந்த உன்னை ஏற்றுக் கொள்வானோ? என்ற ஐயம் வேண்டா. ருசி பிறந்த அளவில் உன்னுடைய குற்றங்கள் அனைத்தையும் பொறுப்பான். இனியனவாகவும் கொள்ளுவதற்கு ஈடானவுமான குணங்களால் நிறைந்தவன் என்ற புகழ் பெற்றவன் அப்பெருமான். ஆகவே, நீ உய்யவேண்டுமானால் அவனை அடைந்து அவன் திருவடிகளில் வீழ்க'' என்று நல்லுபதேசம் செய்வர். (முத்திநெறி. பக். 250-251). இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

> ''உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை அருளாலே திருத்தும்; ஈசுவரனை அழகாலே திருத்தும்'' (ஸ்ரீவச. பூஷ. 14)

என்று அழகாக விளக்குவர்.

இதனால்தான் பெரிய பிராட்டியாரை முன்னிட்டுக் கொண்டு திருமங்கையாழ்வார்,

> **தேன்உடைக் கமலத்**
> **திருவினுக்கு அரசே**
> ... ... ... ... ... ... ...
> **நானுடைத் தவத்தால்**
> **திருவடி அடைந்தேன்**
> **நைமிசா ரணியத்துள்**
> **எந்தாய் !** (1.6:9)

என்று நைமிசாரணியத்து எம்பெருமானிடம் சரணம் அடைகின்றார். திருமலை எம்பெருமானிடமும் பிராட்டியாரை முன்னிலைப்படுத்திக் கொண்டு,

> **மாயனே எங்கள் மாதவனே!**
> ... ... ... ... ... ... ...
> **அற்றேன் வந்தடைந்தேன்**
> **அடியேனை ஆட்கொண்டருளே** (1,9:9)

என்று சரண் புகுகின்றார்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்னும் இறைவனுடைய ஐந்து நிலைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று நன்கு கண்டவர்கள்; இந்த ஐந்து நிலைகளிலும் எல்லாத் திருக்குணங்களும் நிறைந்த இடம் அர்ச்சாவதாரமே என்று தெளிந்தவர்கள். இந்த் அவதாரமே பிரபத்தி செய்வதற்கு ஏற்ற இடம் என்று முடிவுகட்டியவர்கள்.

> "ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே"
>
> (ஸ்ரீவச. பூஷ. 38)

என்பது ஸ்ரீவசனபூஷண வாக்கியம். முமுட்சுப்படியிலும் 'சௌலப்பியத்திற்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்' (முமுட்சு-139) என்று கூறுவார். மேலும்,

> "இதுதான் (அர்ச்சாவதாரம்) பர வியூக விபவங்கள் போலன்றிக்கே கண்ணால் காணலாம் படி இருக்கும்" (முமுட்சு-140)

என்று இவ்வவதாரத்தின் எளிமையை விளக்குகின்றார் பிள்ளை உலக ஆசிரியர். இன்னும் "இக்குணங்கள் எல்லாம் நம்பெருமாள் பக்கலில் காணலாம்" (முமுட்சு-141) என்று விவரிப்பர். 'நம்பெருமாள்' என்பது திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாளைக் காட்டும் எனப் பொருள் படுத்தாமல் 'நம்முடைய பெருமாள்' என்று காரணக் குறியாய்ப் பொருள் படுத்தியுள்ளார். இங்ஙனம் பொருள் படுத்தியதற்குக் காரணம், வெவ்வேறு தேயங்களிலும், இல்லங்களிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சையில் ஈடுபட்டிருப்பவரும், முற்கூறிய குணங்களை அவரவர் விரும்பிய அந்தந்த அர்ச்சையில் காணலாம் என்பதைத் தெரிவித்தற்காகவே ஆகும்.

பெருமாளிடம் இக்குணங்கள் பிரகாசிக்கும் முறையையும் அவற்றுடன் நிற்கும் நிலையே நமக்குத் தஞ்சம் என்பதையும் மேலும் விளக்குவர்.

> "திருக்கையிலே பிடித்த திவ்வியாயுதங்களும், வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆசன பதுமத்தில் அழுந்தின திருவடிகளுமாய் நிற்கின்ற நிலையே நமக்குத் தஞ்சம்" (முமுட்சு-142)

இதனை விளக்குவது இன்றியமையாதது ஆகும்.

அர்ச்சையில் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையனாயிருத்தலை நாம் காண்கின்றோம். இங்ஙனம் ஆயுதங்களை தாங்கிக் கொண்டிருத்தல் வன்மை வாய்ந்த வீரனுடைய செயலாகும். தன்னை வந்தடைந்த அடியார்களின் விரோதிகளைப் போக்குவதற்கு இப்படைகள் பயன்படுகின்றன. இவ்வாயுதங்களைத் தாங்கும் வன்மை மட்டும் போதியதன்று. விரோதிகளையும், அவற்றைப் போக்கும் முறைகளையும் அறிபவனாய் இருத்தல் வேண்டும்; இங்ஙனம் இவ்விஷயத்தை நோக்குங்கால் தன்னைப் பற்றிய சேதநனுடைய காரியத்தைச் செய்யும்போது பயன்படுவவையான ஞான சக்திகளுக்குப் பிரகாசங்கள் திவ்விய ஆயுதங்கள் என்பது தெரிகின்றது.

சேதநர் தாம் செய்த குற்றங்களை நினைந்து, "அந்தோ! இத்தனைப் பிழைகளை இழைத்த நாம் எங்ஙனம் அத்துணை உயரிய சுவாமியைச் சென்றடைவது?" என அஞ்சி அகலாதிருத்தற் பொருட்டே, அவருடைய திருக்கரம் அபய முத்திரையுடன் சேவை அளிக்கின்றது. இஃது, "உங்கள் குற்றங்களை நினைத்து நீங்கள் அஞ்ச வேண்டா; என்னை வந்தடையுங்கள். யான் உங்களை அங்கீகரித்துக் கொள்வேன்" என்னும் அன்பைக் காட்டும் வாத்சல்யத்தின் அறிகுறியாகும். எம்பெருமான் சிரசில் கவித்திருக்கும் இரத்தினமுடி, அவன் எல்லா உலகங்

களுக்கும் சுவாமியாயிருத்தலை அறிவிப்பதாகும். அன்பர்களைக் காணுங்கால் எம்பெருமானுக்கு உண்டாகும் முகமலர்ச்சியும் புன்சிரிப்பும் அவர்களோடு புரையறக் கலக்கும் சீலகுணத்தையும் தெரிவிக்கும். ஆசனபதுமத்தில் அழுந்தி நிற்கும் எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளும் அனைவரும் பற்றுவதற்கு இடந்தந்து நிற்கின்றன. இத்தன்மையானது சௌலப்பியத்தை வெளிப்படுத்து கின்றது. இங்ஙனம் நிற்கின்ற நிலையே, எம்பெருமானைத் தவிர, வேறு புகலிடமற்றிருக்கும் நமக்கு இரட்சகம் எனக் கொள்ளல் வேண்டும்.

பிரபந்நன் விரும்பும் இரட்சகத் தன்மையும், கைங்கரியபரன் விரும்பும் போக்கியத் தன்மையும் அர்ச்சையாகின்ற திவ்வியமங்கள் விக்கிரகத்தில் காணப்படும்.

முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?

—திருவாய் 3.1:1

என்று நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வினவுவதை ஈண்டு நினைவு கூர்ந்து மகிழ்கின்றோம்.

புருஷகார பலத்தாலே எம்பெருமானின் சுவாதந்திரியம் தலை சாய்ந்தால் தலையெடுக்கும் குணங்கள் வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம் என்ற திருக்குணங்களாகும். இவை "இருட்டறையில் விளக்கும் போலே பிரகாசிப்பது இங்கே" (அர்ச்சாவதாரத்திலே) (140) என்று ஸ்ரீவசனபூஷணம் குறிப்பிடுகின்றது. இதனால் தான் பிரபந்நர்களின் தலைவரான நம்மாழ்வார் பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு திருவேங்கடமுடையானிடம் சரண்புகுகின்றார்.

'அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா?
நிகரில் புகழாய்! உலகம்மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே (6.10:10)

என்ற திருவாய் மொழிப் பாசுரம் இவன் சரண்புகுந்ததைக் காட்டுகின்றனது.

முன்னர்க் குறிப்பிட்ட நான்கு திருக்குணங்களும் இறைவனைப் பற்றுகைக்குத் துணை செய்த விளக்கத்தைப் பாசுரங்களில் கண்டு மகிழலாம். 'நிகரில் புகழாய்!' என்றதனால் வாத்சல்யம் என்ற திருக்குணமும், 'உலகம் மூன்று உடையாய்' என்பதனால் சுவாமித்துவம் என்ற பெருங் குணமும், 'என்னை ஆள்வானே' என்றதனால் சௌசீல்யம் என்ற மேன்மைக் குணமும், 'திருவேங்கடத்தானே' என்பதனால் சேதநன் தன் கண்களால் கண்டு பற்றுகைக்கு எளியனாக இருக்கும் சௌலப்பியம் என்ற உயர்ந்த குணமும் விளக்கம் பெறுவனவாக ஆன்றோர்கள் அருளிச் செய்துள்ளனர். பிரபத்தி நெறிக்கு இதுவே முக்கிய பாசுரமாக எடுத்துக்காட்டப் பெறுகின்றது.

இங்ஙனம் பிரபத்தி நெறியினைத் தெளிவாக எடுத்துக் காட்டுவன ஆழ்வார்களின் ஈரத்தமிழ்ப் பாசுரங்கள். அறிய முடியாத சில வேதப் பொருள்களையும் ஆழ்வார்களின் பாசுரங்கள் தெளிவிக்கின்றன என்பதை வேதாந்த தேசிகன்,

செய்யதமிழ் மாலைகளும்
தெளிய ஓதி
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின்றோமே (தே.பி-40)

என்ற பாசுரத்தால் புகழ்ந்து பேசுவர்.[1]

அருளாசிரியர்கள் தம் பாசுரங்களில் காட்டும் சரணாகதி பற்றிய குறிப்புகளைக் கொண்டு ஆசாரியப் பெருமக்கள் 'சரணாகதி நெறியை' வகைப்படுத்திக் காட்டியுள்ளனர் என்பதை முன்னர்க் குறிப்பிட்டேன். வேதாந்த தேசிகர் பிரபத்தியின் அங்கங்களாக ஐந்தினைக் கூறுவர் (தே.பி. 241-உரை).

1. **ஆநுகூல்ய சங்கல்பம்** எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்வதாக உறுதி கொள்ளலே இது.

2. **பிராதிகூல்ய வர்ஜனம்** என்பது, எம்பெருமான் திருவுள்ளத்திற்கு விபரீதமானவற்றைச் செய்யாதிருக்க உறுதி கொள்ளலாகும். அவற்றைச் செய்ய எண்ணம் கொள்ளாமையும் அவற்றைச் செய்யாது விடுதலும் இதில் அடங்கும்.

3. **மகாவிசுவாசம்** என்பது, எம்பெருமான் நம்மை இரட்சிக்கவல்லவன் என்று தேறி, தவறாது நம்மை இரட்சிப்பான் என்று நம்புதலாகும்.

4. **கோப்த்ருத்வ வரணம்** என்பது, பக்தி யோகம் முதலிய உபாயங்களை அநுட்டிக்கச் சக்தியற்ற தம் விஷயத்தில் அருள் புரிந்து அவ்வுபாயத்தின் இடத்தில் நின்று பலன் கொடுக்குமாறு அவனை வேண்டுதலாகும்.

5. **கார்ப்பண்யம்** என்பது, பக்தி யோகம் முதலிய உபாயங்களில் நமக்கு அதிகாரம் இல்லாமையையும், எம்பெருமானைத் தவிர வேறு தெய்வத்தினிடமோ வீடு பேற்றைத் தவிர வேறு பலனிலோ பற்றில்லாமையையும் அநுசந்தித்தலாகும்; அல்லது இவ்வநுசந்தானத்தால் முன்னிருந்த கர்வம் ஒழியப்பெறுதலாகும்; அல்லது எம்பெருமானது கருணை தம்மீது வளர்ந்தோங்கும்படித் தாழ்ந்து நின்று அஞ்சலி (கை கூப்புதல்), வணக்கம் முதலியவற்றைச் செய்தலாகும்.

இந்த ஆசாரியப் பெருமகனார் பிரபத்தியை—சரணாகதியை—நான்கு வகையாகப் பிரித்தும் விளக்குவர்,

1. **ஸ்வநிஷ்டை :** பிரபத்தியாகிய அங்கியையும்அதன் அங்கங்களையும் தெளிவாய் அறிந்து தாமே எம்பெருமானைச் சரண் அடைதலாகும் இது.

2. **உக்திநிஷ்டை** என்பது, ஆநுகூல்ய சங்கல்பம் முதலிய அங்கங்களில் சிறப்பான ஞானம் இல்லாத அதிகாரிகள், எம்பெருமானைத் தவிர, வேறு பற்று இல்லாதவராய், நாம் பிரார்த்தித்தால், அவன் காப்பான் என்ற நம்பிக்கையுடன் நின்று, முழுமையான பிரபத்தியை வெளியிடுவதும், ஆசாரியனால் உபதேசிகப்பட்டதுமான வாக்கியத்தாலே தம்மைக் காப்பதை அவன் பொறுப்பாகக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

3. **ஆசாரியநிஷ்டை** என்பது, இரகசியார்த்தங்களை உபதேசித்த ஆசாரியன் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தலாகும்.

4. **பாகவதநிஷ்டை** என்பது, பூர்ண அதிகாரியான ஒரு பாகவதர் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தலாகும்.

சரணாகதிநெறி எந்தவித நியமமும் இல்லாத நெறியாகும். பக்தி நெறிக்குச் சிலவரையறைகள் (நியமங்கள்) இருப்பது போல சரணாகதிநெறிக்கு எந்தவிதமான நியமும் இல்லை. இத்த நெறியைக் கண்ணன் காண்டீபனுக்குத் தேர்த் தட்டிலிருந்து உபதேசித்தான் என்பதை நாம் அறிவோம். உபதேசித்த இடம் போர்க்களமாதலால் தேச நியமம் காலநியமம் முதலான வரையறை இல்லை.

> "பிரபத்தி நெறிக்கு தேசநியமமும், கால நியமமும் பிரகார நியமமும், அதிகாரி நியமமும் இல்லை" (ஸ்ரீவச. பூஷ. 24).

என்ற ஸ்ரீவசன பூஷண வாக்கியம் இக்கொள்கைக்கு அரணாக அமைகின்றது.

தேச நியமமாவது, தூய இடத்தில்தான் (புண்ணிய தலங்களில்தான்) செய்ய வேண்டும், ஏனைய இடங்களில் செய்தலாகாது என்பது. காலநியமமாவது, வேனிற்காலம் முதலான காலங்களில்தான் செய்தல் வேண்டும், மற்றைய காலங்களில் செய்தலாகாது என்பதாகும். பிரகார நியமமாவது, நீராடல் கால் கழுவுதல் என்பன போன்ற வற்றை முன்னாகக் கொண்டு செய்ய வேண்டும், வேறு வகைகளில் செய்ய வொண்ணாது என்பது. அதிகாரி நியமமாவது, முதல் மூன்று வருணத்தார்கள் அல்லாதவர் களாக இருக்கலாகாது என்பது. பல நியமமாவது, இம்மை மறுமைப் பலன்களில் இன்ன பலத்திற்கு இது சாதனம், மற்றைய பலன்கட்கு இது சாதனமன்று என்பதாகும்.

தேசகால நியமங்கட்கு இராமாயணத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு தருகின்றார் பிள்ளை உலக ஆசிரியர். (ஸ்ரீராமா.யுத்த 17:46). இராமாயணத்தில் வீடணன் சரணாகதி செய்த காலத்தில் சுக்கிரீவனும் சாம்பவானும் ''வன்பகையுடையவர்களாயும் மகா பாவிகளாயும் இருக்கின்ற இராவணனிடமிருந்து இடமல்லாத இடத்தி லும், காலமல்லாத காலத்திலும் வந்தான் (வீடணன்); ஆதலால் முற்றிலும் ஐயப்படத் தக்கவனாக உள்ளான்'' (ஷ 12:57) என்கின்றனர். இதனை மறுக்கும் மாருதி ''இதுவே தேசமும் இதுவே காலமும்'' (கம்பரா. வீடணன் அடைக்கலம் 85-105) என்கின்றான். தக்க காரணங்களைச் சொல்லி இராமனும் வானரமுதலிகள் சொன்னவற்றை யெல்லாம் சீர்தூக்கி ஆய்ந்து,

**மற்றினி உரைப்ப தென்னோ?**
**மாருதி வகுத்துச் சொன்ன**
**பெற்றியே பெற்றி யன்ன**
**தன்றெனிப் பிறிதொன் றானும்**

வெற்றியே பெறுக தோற்க
வீக வீயாது வாழ்க
பற்றுத லின்றி உண்டோ
அடைக்கலம் பகர்கின்றானை (வீடி-108)

என்று கூறி வீடணனை ஏற்றுக் கொள்ளுகின்றான்.

இந்நெறிக்குப் பிரகார நியமும் இல்லை, இதனை திரௌபதி, அருச்சுனன் வாழ்க்கையில் காணலாம். திரௌபதி மாத விலக்காக இருக்கும் போதே சரணம் அடைகின்றாள்; அதுவும் நீசர் நடுவே சரணம் அடைகின்றாள். பார்த்தனுக்குப் பிரபத்தி நெறி போர்க்களத்தில் உபதேசிக்கப் பெற்றது, இதனால் பிரபத்தியைப் புண்ணிய தேசத்தில்தான் செய்ய வேண்டும் என்ற நியமனம் இல்லாது போயிற்று; வேனிற் காலத்தில்தான் செய்ய வேண்டும் என்ற காலநியமமும் இல்லாது போயிற்று. நீராடிய பின் தான் செய்ய வேண்டும் என்ற பிரகார நியமமும் இல்லாது போயிற்று. நீசர் நடுவே இவ்வர்த்தம் கேட்டதால் தூய்மையின்மையும் விலக்கில்லை என்பது தெளிவாயிற்று. மேலும் இதனால் பிரபத்தியைச் செய்யத் தொடங்குங்கால் தூய்மை இல்லாதிருப்பவனுக்குத் தூய்மை சம்பாதிக்க வேண்டா; தூய்மையாயிருப்பவனுக்குத் தூய்மையின்மையைச் சம்பாதிக்க வேண்டா என்பது பிள்ளை உலக ஆசிரியரின் அறவுரை (ஸ்ரீவச. பூஷ. 31). பாஞ்சாலியும் பார்த்தனும் பிரபத்தியைச் செய்யும் நிலையிலும் அதனைக் கேட்கும் நிலையிலும் அதற்கு உறுப்பாகத் தூய்மையைத் தேடாத நிலையிலும் இருப்பதைக் காண்கின்றோம்; அவரவர்கள் இருந்தபடியே பிரபத்திக்கு அதிகாரிகள் ஆனார்கள். நம்பிள்ளையின் மாணாக்கராகிய வேல்வெட்டிப்பிள்ளைக்கு இதனையே சொன்னார் பிள்ளை அவர்கள்.

பிரபத்திக்கு அதிகாரி நியமும் இல்லை என்பது விதி. இதற்குப் பல சான்றுகள் உள்ளன. (ஸ்ரீவச. பூஷ. 23,24.)

தருமன் முதலிய குந்தியின் மக்கள் மூவரும், மாத்ரியின் புதல்வர்களான நகுல சகாதேவர்களும் திரௌபதியோடு சேர்ந்து கண்ணனைச் சரண் அடைந்தனர். இவர்கள் க்ஷத்திரியர்கள். திரௌபதி பெண்; இவளும் கண்ணனைச் சரண் அடைந்தாள். காகம் ஒரு பறவை; அதுவும் இராகவனைச் சரண் அடைந்தது. காளியன் ஒரு கொடிய நாகம்; அதுவும் கண்ணனிடம் அடைக்கலம் புகுந்தது. கசேந்திரன் என்ற யானை ஒரு விலங்கு; அவனும் நாராயணனைச் சரண் அடைந்தான். வீடணன் அரக்கர் குலத்தவன்; அவனும் காகுத்தனைச் சரண் அடைந்தான். பெருமாள் க்ஷத்திரியப் பிறப்பை உடையவர்; அவரும் வருணனைச் சரண்புக்கார்; இளைய பெருமாள் க்ஷத்திரியர்; அவரும் அண்ணனுக்கு அடிமை செய்தார். இங்ஙனமே முசுகுந்தன் (மனிதன்) கத்திரபந்து (சண்டாளன்) காளியனின் மனைவிமார்கள், இந்திரன் முதலிய தேவர்கள், இராக்கதர்களால் அடிபட்ட குரங்குகள் ஆகியோர் சரண் புகுந்த செயல்களையும் அறியலாம். இதனால் பிரபத்திக்கு 'ருசி'புடையார் அனைவரும் அதிகாரிகளாகின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

இதற்குத்தான் பிரபத்தி செய்ய வேண்டும் என்ற பல நியமும் பிரபத்திக்கு இல்லை. இதற்கும் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. (ஸ்ரீவச. பூஷ. 35,36), தருமபுத்திரர் முதலாயினோருக்கு அரசு அடைதல் பலம்; திரௌபதிக்குப் பலம் ஆடை; காகத்திற்கும் காளியனுக்கும் பலம் ஆருயிர்; கசேந்திரனுக்குப் பலம் கைங்கரியம்: வீடணனுக்கும் பலம் இராமனையடைதல்; பெருமாளுக்குப் பலன் கடலைத் தாண்டுதல்; இளைய பெருமாளுக்குப் பலன் பெருமாளைப் பின்தொடர்ந்து அடிமை செய்தல்-இவற்றால் பிரபத்திக்குப் பல நியமும் இல்லை என்பது தெளிவாகின்றது.

பிரபத்திக்கு விஷய நியமமே உள்ளது, அஃது அர்ச்சாவதாரத்தில் சரண் அடைதல். இதனை முன்னரே

விளக்கினோம். இந்தப் பிரபத்தியை-சரணாகதிநெறியை-குறித்த காலத்தில் பெறலாம். ஒரே பலனுக்காக இதனை இருமுறை அநுட்டித்தல் கூடாது. இந்த உடல் நீடிக்கும் வரையில் வினைப் பயன்களைத் துய்த்து உடல் முடிவில் முக்தியைப் பெற விரும்பிப் பிரபத்தியை அநுட்டித்தால் அங்ஙனமே பெறலாம்.

சரணம் ஆகும் தனதாள்
அடைந்தார்க்கு எல்லாம்;
மரணம் ஆனால் வைகுந்தம்
கொடுக்கும் பிரான் (9.10:5)

என்பது பிரபத்தி நெறியை நமக்கு வழங்கிய நம்மாழ்வாரின் அமுதவாக்கு. *

'ஆழ்வார் திருவடிகளே சரணம்'

---

† சரணாகதி நெறி—ஒரு தத்துவமாக வைணவத்தில் சேர்ந்துள்ளது. சைவத்திலும் 'அடைக்கலம்' என்ற கருத்து உண்டு. எ-டு. மணிவாசகப் பெருமானின் 'அடைக்கலப் பத்து' காண்க. முருகப்பெருமான்மீதும் சரணம் பற்றிய பாடல்கள் ஏராளம். கிறித்தவ சமயத்திலும் 'அடைக்கலம்' என்ற கருத்து உண்டு. 'அடைக்கலம்', 'அடைக்கலசாமி' என்று குழந்தைகட்குப் பெயரிடும் முறையைக் காண்க. அண்மைக் காலத்தில் புகழோங்கி நிற்கும் ஐயப்பசாமியைச் சார்ந்த பக்தர்கள் 'சாமியே சரணம் ஐயப்பா' என்ற குரலைக் கூட்டமாக எழுப்புவதையும் காணலாம்.

# 9. தமிழ் முருகன்*

'குன்றே மகிழ்ந்த குணக்குன்றே!
        கோவே! தணிகைக் குருபரனே!
நன்றே தெய்வ நாயகமே!
        நவிலற் கினிய நல்உறவே!
என்றே வருவாய் அருள்தருவாய்
        என்றே புலம்பி ஏங்குற்றேன்;
இன்றே காணப்பெறில் எந்தாய்!
        இறவேன் பிறவேன் இருப்பேனே![1]

—அருட்பிரகாச வள்ளலார்

முருகப் பெருமான் தமிழர்தம் தனிப்பெருங் கடவுள். இயற்கை நிலையையொட்டி நிலத்தைப் பாகுபாடு செய்த பண்டைத் தமிழர்கள் மலை சார்ந்த பகுதியைக் 'குறிஞ்சி' என்று பெயரிட்டனர். அந் நிலத்திற்குரிய கடவுளாக—குறிஞ்சிக் கிழவனாக—முருகனைக் கொண்டனர்.

சேயோன் மேய
        மைவரை உலகம்[2]

என்பது தொல்காப்பியம். சங்ககாலத்தில் பெருவழக்காக இருந்த இந்திரன், பலதேவன் ஆகியோரின் வழிபாடு வழக்கொழிந்தது. ஆனால் சங்க காலம் தொட்டு இன்று

---

* சென்னை கந்தகோட்டம் 65-வது கந்தர் சஷ்டி விழாவையொட்டி (1992) வெளியிட்டது (இலவசம்)

1. திருவருட்பா - முதல்திருமுறை - மருண்மாலை விண்ணப்பம் - 7.

2. தொல். பொருள். அகத்திணை - 5

வரை முருக வழிபாடு நின்று நிலவுகின்றது. ஆயினும் நாளடைவில் தமிழகம் நீங்கலாக இந்திய நாட்டின் இந்த வழிபாடு குன்றித் தன் சிறப்பை இழந்து விட்டது.

குறு முனியாகிய அகத்தியனுக்குத் தமிழுணர்த்திய ஆசானாக முருகன் கருதப்பெறுகின்றான். ஆகவே, தமிழ் 'என்றுமுள தென்தமிழ்[3] ஆகின்றது. இதற்கு முதன் முதலாக இலக்கணம் வகுத்த குறுமுனி 'தமிழ்முனி' ஆகின்றார். கண்ணுதற் பெருங் கடவுள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பங்கு கொண்டவர். 'இறையனார்' என்ற பெயர் கொண்டவர். அவர் தருமிக்காக நக்கீரருடன் சொற்போர் நிகழ்த்தியதும் அதே சங்கத்தில் முருகப் பெருமான் 'இறையனார் அகப்பொருள்' என்ற நூலுக்குச் சங்கப் புலவர்களின் உரைகளைக் கேட்டுச் சிறந்த உரை எது என அறுதியிட்டுக் கூறியதும் தமிழ் வரலாற்றின் மைல்கற்கள். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் குமரனின் திருஅவதாரமாகப் போற்றப் பெறும் வரலாறும் உண்டு. இறைவன்மீதுள்ள திருப்பாடல் களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதினால்தான் அவனது அருளைப் பெறலாம் என்பது அருளாசிரியர்கள் கண்ட உண்மை. ஆனால் முருகப் பெருமான் தன்னைத் தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன்.

'முத்தமிழால் வைதாரையும்
அங்கு வாழவைப்போன்'[4]

என்பது அருணகிரியாரின் அமுத வாக்கு. இவற்றால் தமிழர்கள் முருகப் பெருமான்மீது கொண்ட 'ஆரா அன்பை' அறிய முடிகின்றது.

தமிழ் நெடுங்கணக்கின் அமைப்பும் முருகத் தத்துவத் தின் அடிப்படையில் அமைந்திருப்பது நமக்கு மட்டற்ற

3. கம்ப. ஆரணிய. அகத்திய - 47
4. கந்தரலங். 22

மகிழ்ச்சியைத் தருகின்றது. முருகப்பெருமானின் பன்னிரண்டு திருக்கைகளும் பன்னிரண்டு உயிரெழுத்துகள்; அவனுடைய பதினெட்டுக் கண்களும் (?) பதினெட்டு மெய்யெழுத்துகள்; அவனது ஆறு தலைகளும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று பிரிவுகளாகவுள்ள ஆறு எழுத்துகள். அவனுடைய வேற்படை ஆயுத எழுத்து. 'முருகு' என்ற சொல்லிலுள்ள எழுத்துகளில் 'மு' - மெல்லினம்; 'ரு' - இடையினம்; 'கு' - வல்லினம். இங்ஙனமே 'தமிழ்' என்ற சொல்லிலும் 'த' - வல்லினம்; 'மி' - மெல்லினம்; 'ழ்' - இடையினம் என்று மூன்று இனங்களும் அமைந்துள்ளன. இதனால் முருகன் தமிழ்க் கடவுளாகின்றான் என்று சொல்லி மகிழ்வர் தமிழ் ஆர்வலர்கள். இக் கூற்றுகளும் கந்தவேளைத் தமிழ்ப் பெருங் கடவுளாக அறுதியிட அரணாக அமைகின்றன.

கண்ணிகர் மெய்யும் சென்னிக்
　　கணம்உறழ் இனத்தின் கூறும்
திண்ணிய தோள்க ளேபோல்
　　திகழ்தரு உயிரும் வேறொன்(று)
எண்ணுதற் கரிய தாகும்
　　எஃகமும் இயலிற் காட்டும்;
புண்ணிய முனிக்கோன் செவ்வேள்
　　பொற்பதத் தடிமை தானே.

என்ற திருப்பாடலினால் மேற்காட்டிய உண்மைகள் தெளிவாகின்றன.

மேலும், சில உண்மைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. 'ஓம்' என்னும் பிரணவத்தில் அ — படைத்தலையும், உ — காத்தலையும், ம — ஒடுக்குதலையும் உணர்த்துவனவாகக் கருத இடம் தருகின்றது. 'முருகு' என்ற சொல்லிலும் மு = ம் + உ; ரு = ர் + உ; கு = க் + உ என்று

மூன்று எழுத்துகளிலும் உகரங்கள் வருகின்றன. இவற்றுள் அமைந்திருக்கும் காக்கும் எழுத்தாகிய உகரமே சிறந்தது என்று சொல்வர் பெரியோர். பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான்,

'உலகெலாம் உணர்ந்து
ஓதற் கரியவன்'

என்ற 'உ'கரத்தை முதல் எழுத்தாகக் கொண்டு தொடங்குகின்றார். கம்பரும்,

'உலகம் யாவையும்
தாம்உள வாக்கலும்'

என்று 'உ'கரத்தை ஆதியாகக் கொண்ட தன் இராம காதையைத் தொடங்குகின்றார். நக்கீரரும்,

உலகம் உவப்ப
வலனேர்பு திரிதரு

என்று 'உ'கரத்தை முதலாகக் கொண்டே திருமுருகாற்றுப் படையைத் தொடங்குகின்றார். இவற்றால் உகரத்தின் பெருமை உயர்ந்து நிற்பது தெரிய வருகின்றது. நம்மைக் காக்கும் கடவுளாகிய முருகன் மன இருள், அறியாமை, துன்பம் ஆகியவற்றிலிருந்து நம்மைக் காக்கின்றான் என்பதைச் சூசகமாக அறிய முடிகின்றது. வினைகளைப் போக்கும் வேலுடனும், அச்சத்தைப் போக்கும் மயிலுடன் சேவற்கொடி பறக்கும் தம் அருளாட்சியை நடத்துகின்றான் செவ்வேள்.

முருகவேளின் திருமேனியின் அழகும் சொல்லுந் தரமன்று. அழகிற்குக் குழந்தை முருகனையும், குழந்தைக் கண்ணனையும் உவமைகளாகக் கையாளும் மரபும் உண்டு. 'முருகு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இளமை, மணம், அழகு, கடவுட்டன்மை என்று பொருளுரைப்பர் தமிழ் முனிவர் திரு.வி.க. முருகப் பெருமான் 'இளையோன்' என்பதற்கு

ஏற்ப இலக்கியங்கள் அவனைச் '**சேய்**' என்று குறிப்பிடு கின்றன. இவனது திருவுருவப் பொலிவினைக் கண்டு மகிழ்வதற்கு,

> **சேலார் வயல்பொழில் செங்கோ**
> **டனைச் சென்று கண்டுதொழ**
> **நாலா யிரங்கண் படைத்தில**
> **னேஅந்த நான்முகனே (90)**

என்று தம் அங்கலாய்ப்பினைப் புலப்படுத்துவர் வாக்கு நலம் படைத்த அருணகிரிநாதர்.

'**கலியுகவரதன்**' எனப் போற்றப்பெறும் கந்தவேளின் ஒப்பற்ற கண்கவர் வனப்பினைக் கச்சியப்ப சிவாச்சாரி யாரும் சூரபன்மன் வாய்மொழியாக,

> **ஆயிரங் கோடி காமர்**
> **அழகெலாம் திரண்டொன் றாகி**
> **மேயின எனினும் செவ்வேள்**
> **விமலமாஞ் சரணம் தன்னில்**
> **தூயநல் எழிலுக்கு ஆற்றாது**
> **என்றிடில் இனைய தொல்லோன்**
> **மாயிரு வடிவிற் கெல்லாம்**
> **உவமையார் வகுக்க வல்லார்?**
>
> **அண்ணலார் குமரன் மேனி**
> **அடிமுதல் முடியின் காறும்**
> **எண்ணிலா ஊழி காலம்**
> **எத்திறம் நோக்கி னாலும்**
> **கண்ணினால் அடங்காது உன்னில்**
> **கருத்தினால் அடங்காது**[5]

என்று எடுத்துக் காட்டித் தம்மையே மறந்த நிலையை எய்துவர்.

---

5. கந்த புரா. 4. 12 : 430, 441

வள்ளிநாயகன் தெய்விக மணங்கொண்டவன் என்பதை நக்கீரர் பெருமான்,

"மணங்கமழ் தெய்வத்து
இளநலம். (முருகு — அடி 290)

என்று போற்றி மகிழ்வர். அவனது ஆறு முகங்களையும் பகுத்தறிவு உள்ளிட்ட ஆறு அறிவுகளாகக் கொண்டு மகிழலாம். இப்படிக் கொண்டால் அறிவுமயமான அப் பெருமான் 'ஞானத்தின் திருவுரு' ஆகின்றான். அதாவது யாவற்றையும் உணர்ந்தவன் (Omniscient) என்றாகின்றான். ஆறு முகங்களில் ஐந்து முகங்களை மண், காற்று, நீர், தீ, விசும்பு என்ற ஐம்பெரு பூதங்களாகவும் ஆறாவது முகத்தை அவற்றை இயக்கும் பகுத்தறிவாகவும் கொண்டு சிந்திக்கலாம். ஐம்பெரும் பூதங்களின்றி இவ்வுலகில் எப்பொருளும் இல்லையாதலால், அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் (Omnipresent) என்ற கருத்துடன் இயைகின்றான். கந்தவேளின் ஆறாவது முகம் பகுத்தறிவு எனக் கொள்ளப்படுவதால் அவனை உலகினை இயக்கும் மாபெரும் ஆற்றலாகக் (Omnipotent) கருதி மகிழலாம். இங்ஙனம் முருகப் பெருமானின் திருவுரு அவனது முத்திறப் பண்புகளையும் உணர்த்துவதாகக் கருத இடம் அளிக்கின்றது.

முருகப் பெருமான் வானவரின் தானைத் தலைவன்; தேவசேனாபதி. எனவே, பேராற்றல் மிக்குத் திகழ்பவன். இதனை விளக்கும் அவனது பன்னிரு கைகள் குறியீடுகளாக அமைகின்றன. கந்தவேளுக்கு உகந்தது கடம்பம் பூ. இதனால் அவன் 'கடம்பன்' என்ற பெயர் பெறுகின்றான். கார் காலத்தில் மலரும் கடம்ப மலரை மாலையாக அணிந்து கடம்ப மரத்தில் உறைவது அவனது அருள் திறத்திற்குக் குறியீடாக அமைகின்றது. அவனது சேவல் கொடி நாத (ஒலி) தத்துவத்திற்கும், மயில் விந்து (ஒளி)

தத்துவத்திற்கும் குறியீடுகளாகும். குன்றம் எறிந்தானின் வேற்படையை 'எப்படைக்கும் தாயகமாவது" என்பர் கந்தபுராண ஆசிரியர். மயில், வேல் இவற்றின் ஆற்றலைக் கந்தரலங்காரப் பாடல்கள் விளக்குகின்றன. மயிலின் தோகை அசைவால் உண்டாகும் காற்று பட்டதால் மேரு மலையே அசைந்தது; மயில் அடியிட்டு நடக்க மலைகள் தூளாயின; கடல் அத் தூள் நிறைந்து மேவிட்டது (11). சேவல் சிறகடிக்கக் கடல் கிழிந்தது. அண்டகோள ஓடு உடைந்தது; நட்சத்திரங்கள் உதிர்ந்தன. மலைகள் பொடியாயின (12). வேல் பட்டதனால் கிரௌஞ்சம் குலைந்தது; சூரன் சேனை அழிந்தது; இந்திரன் உலகம் பிழைத்தது (13). இன்னும் அது கடலையும் கலக்கி அழித்தது (40). முருகவேளின் மூன்று சக்திகளில் வேல் ஞான சக்தியாகவும், வள்ளியம்மை இச்சா சக்தியாகவும், தெய்வ யானை கிரியா சக்தியாகவும் சொல்லப் படுகின்றனர்.

இங்ஙனம் முருகனது பெருமையை விவரித்தால் கட்டுரை நீளும்; முடிவில்லாமல் போகும்.

**நடவுந் தனிமா மயிலோய் சரணம**  
**நல்லார் புகழும் வல்லோய் சரணம்**  
**திடமும் திருவும் தருவோய் சரணம்**  
**தேவர்க் கரியாய் சரணம் சரணம்**  
**தடவண் புயனே சரணம் சரணம்**  
**தனிமா முதலே சரணம் சரணம்**  
**கடவுள் மணியே சரணம் சரணம்**  
**கந்தா சரணம் சரணம் சரணம்**[6]

என்று அருட்பிரகாச வள்ளலார் வாக்கைக் கொண்டு கந்தவேளின் திருவடிகளில் சரணம் அடைவோம்.

---

6. திருவருட்பா - முதல் திருமுறை - கந்தர் சரணப் பத்து - 5

# 10. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*

'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறும் சிறந்த பக்திப் பனுவல் என்பதும், அது மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் பன்னிரு வரால் அருளிச் செய்யப்பெற்ற பாசுரங்கள் அடங்கியது என்பதும், பக்திப் பாடல்கள் என்ற நூல்வகையில் இவை போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிக மிக சிலவற்றைத்தான் கருதுதல் கூடும் என்பதும் யாவரும் அறிந்த செய்திகளாகும். இந்த நூலில் அடங்கியுள்ள பிரபந்தங்களின் தொகைபற்றியும், பாசுரங்களின் தொகை பற்றியும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன.

காலவெள்ளத்தாலும் போற்றுவாரின்மையாலும் எப்படியோ மறைந்து போன இப்பாசுரங்களை நாதமுனி கள் என்ற வைணவப் பெரியார் அரும்பாடு பட்டுத் திரட்டி வேத வியாசர் வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தது போல நாதமுனிகளும் இப் பாசுரங்களை நான்கு தொகுதிகளாக்கி ஒவ்வொரு தொகுதியிலும் கிட்டத்தட்ட ஆயிரம் பாசுரங்கள் அடங்கியிருக்குமாறு அடைவு படுத்தினார். பாசுரங்களை அவர் 'இசைப்பா', 'இயற்பா' எனப்பிரித்து இசைப்பாக்களை மூன்று தொகுதி களாகவும், இயற்பாக்களை ஒரு தொகுதியாகவும் அடைவு படுத்தி வெளியிட்டார். அங்ஙனம் அடைவு படுத்திய தொகுதிகள் வருமாறு:

---

* திருச்சி டாக்டர் மதுரம் அவர்களின் மணிவிழா மலரில் (1965) வெளிவந்தது.

## (அ) இசைப்பாத் தொகுதிகள்

(1) முதலாயிரம் : இதிலடங்கிய பிரபந்தங்களும் அவற்றிலடங்கிய பாசுரங்களின் தொகையும்:

| | பிரபந்தம் | பாசுரத்தொகை |
|---|---|---|
| 1. | பெரியாழ்வார் திருமொழி | 473 |
| 2. | திருப்பாவை | 30 |
| 3. | நாச்சியார் திருமொழி | 143 |
| 4. | பெருமாள் திருமொழி | 105 |
| 5. | திருச்சந்த விருத்தம் | 120 |
| 6. | திருமாலை | 45 |
| 7. | திருப்பள்ளி எழுச்சி | 10 |
| 8. | அமலனாதிபிரான் | 10 |
| 9. | கண்ணிநுண் சிறுத்தாம்பு | 11 |
| | ஆக, பிரபந்தங்கள் 9 க்குப் பாசுரங்கள் | 947 |

இவற்றுள் 1 எண்ணுள்ளது பெரியாழ்வாராலும்; 2, 3 எண்களுள்ளவை ஆண்டாளாலும்; 4 எண்ணுள்ளது குலசேகராழ்வாராலும்; 5 எண்ணுள்ளது திருமழிசை பிரானாலும் 6, 7 எண்ணுள்ளவை தொண்டரடிப் பொடிகளாலும்; 8 எண்ணுள்ளது திருப்பாணாழ்வாரா லும்; 9 எண்ணுள்ளது. மதுரகவிகளாலும் அருளிச் செய்யப் பெற்றவையாகும்.

(2) பெரிய திருமொழி : இதிலடங்கிய பிரபந்தங் களும் பாசுரங்களின் தொகையும்:

| | பிரபந்தம் | பாசுரத் தொகை |
|---|---|---|
| 10. | பெரிய திருமொழி | 1084 |
| 11. | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| 12. | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | ஆக, பிரபந்தம் 3 க்குப் பாசுரங்கள் | 1134 |

இம்மூன்று பிரபந்தங்களும் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றவை.

(3) திருவாய்மொழி : இதிலடங்கிய பிரபந்தமும் பாசுரங்களின் தொகையும்:

| | பிரபந்தம் | பாசுரத் தொகை |
|---|---|---|
| 13. | திருவாய் மொழி | 1102 |
| | ஆக, பிரபந்தம் 1 க்குப் பாசுரங்கள் | 1102 |

இப்பிரபந்தம் நம்மாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றவை.

## (ஆ) இயற்பாத் தொகுதி

(4) இயற்பா : இதிலடங்கிய பிரபந்தங்களும் பாசுரங்களின் தொகையும்:

| | பிரபந்தம் | பாசுரத் தொகை |
|---|---|---|
| 14. | முதல் திருவந்தாதி | 100 |
| 15. | இரண்டாம் திருவந்தாதி | 100 |
| 16. | மூன்றாம் திருவந்தாதி | 100 |
| 17. | நான்முகன் திருவந்தாதி | 96 |
| 18. | திருவிருத்தம் | 100 |
| 19. | திருவாசிரியம் | 7 |
| 20. | பெரிய திருவந்தாதி | 87 |
| 21. | திருவெழுக் கூற்றிருக்கை | 1 |
| 22. | சிறிய திருமடல் | 1 |
| 23. | பெரிய திருமடல் | 1 |
| | ஆக, பிரபந்தங்கள் 10 க்குப் பாசுரங்கள் | 593 |

இவற்றுள் 14, 15, 16 எண்ணுள்ளவை முறையே முதலாழ்வார்களான பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகியோராலும்; 17 எண்ணுள்ளது திருமழிசைபிரானாலும்; 18, 19, 20 எண்ணுள்ளவை நம்மாழ்வாராலும்; 21, 22, 23 எண்ணுள்ளவை திருமங்கையாழ்வாராலும் அருளிச் செய்யப் பெற்றவை.

**தொகுதி பற்றிய குறிப்புகள் ;** இத் தொகுதிபற்றிய சில குறிப்புகள் கவனிக்கத் தக்கவை.

(1) முதலாயிரம், பெரியதிருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற பாகுபாடும், பிரபந்தங்களின் அமைப்பு முறையும், நாதமுனிகள் காலத்தில் ஏற்பட்டவை. பிரபந்தங்களின் எண்ணிக்கை இத்தனை என்பது நாதமுனிகள் காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரியவில்லை.

(2) திருவரங்கத்தமுதனார் இராமாநுசர்மீது அருளியுள்ள 'இராமாநுச நூற்றந்தாதி' இராமாநுசர் காலத்தில் இயற்பாத் தொகுதியுடன் 24-வது பிரபந்தமாகச் சேர்க்கப் பெற்றது என்பதைக் 'கோயிலொழுகு' என்ற நூலின் வாயிலாக அறிகின்றோம். அக் காலத்திலிருந்து முதலாயிரத்தில் 'கண்ணிநுண் சிறுத்தாம்பை'ப்போல் இயற்பா இறுதியில் 'இராமாநுச நூற்றந்தாதி' எங்கணும் பெரு வழக்காக ஓதப்படுவதாயிற்று. இன்றும் அவ்வழக்கு நடைமுறையில் உள்ளது. திருக்கோயில்களில் இயற்பாவின் இறுதியில் இப்பிரபந்தத்தை அநுசந்தித்து வருகின்றனர். இதனால் இந்நூற்றந்தாதி இயற்பாப் பிரபந்தங்களுள் ஒன்றாக அமைந்து விட்டமை புலனாகும்.

(3) திவ்வியப் பிரபந்தங்களின் எண்ணிக்கையும் பாசுரங்களின் எண்ணிக்கையும் வேதாந்த தேசிகர் காலத்தில் வரையறுக்கப் பெற்றுவிட்டன (பிரபந்த சாரம்). தேசிகர் திருப்பல்லாண்டைத் தனிப்பிரபந்தமாகக் கொள்ளவில்லை. அது பெரியாழ்வாரின் திருமொழியுடன் சேர்ந்தது என்ற சம்பிரதாயத்தை அப்படியே கொண்டவர்.

(4) தென்கலையார் திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொண்டு இராமாநுச நூற்றந்தாதியைத் தவிர்த்து நாலாயிரம் 24 பிரபந்தங்கள் அடங்கியது என்ற கொள்கையினர்; வடகலையார் திருப்பல்லாண்டைத் தனிப்பிரபந்தமாகக் கொள்ளாமல் இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்து 24 பிரபந்தமாகக் கணக்கிட்டுக் கொள்பவர்.

**பாசுரத் தொகை :** வடகலையாரும் தென்கலையாரும் வெவ்வேறு முறையில் கணக்கிட்டு பாசுரத் தொகையை 4000 என்பதாக வரையறுப்பர்.

(அ) **தென்கலையார் :** இராமாநுச நூற்றந்தாதியை கணக்கிடாமல் இரண்டு மடல்களையும் கண்ணிகளாகக் கணக்கிட்டு $947+1134+1102+593=3776$ ஆகின்றன. இருமடல்களையும் நீக்கினால் 3774 ஆகின்றது. பெரிய திருமடலை $148\frac{1}{2}$ கண்ணிகளாகவும், சிறிய திருமடலை $77\frac{1}{2}$ கண்ணிகளாகவம் கணக்கிட்டு 226 பாசுரங்களாகக் காட்டுவர். இவர்கள் $3774+226=4000$ என்று கணக்கிடுவர்.

(ஆ) **வடகலையார் :** இராமாநுச நூற்றந்தாதியைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டு சிறிய திருமடலை 38 துண்டுகளாகவும் (நிறுத்துமிடங்களை அடிப்படையாகக் கொண்டு) பெரிய திருமடலை 80 துண்டுகளாகவும் கணக்கிட்டு 118 பாசுரங்களாகக் கணக்கிடுவர். இவர்கள் $3774+108+118=4000$ என்று கணக்கிடுவர்.

**முடிவு :** இருவர் கருத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. இரு மடல்களும் கலிவெண்பாவாலான தனித்தனியாக இரு பாடல்களே. பாடல்களைச் சிதைத்து விருப்பப்படித் துண்டுகளாக்கி துண்டுகளைப் பாடல்களாகக் கொள்வது இலக்கணமரபன்று. 4000க்குச் சில பாடல்கள் குறைவாக இருப்பினும் 4000 என்று கொள்வது தவறாகாது. எ-டு 1102 பாடல்களைக் கொண்ட திருவாய்

மொழி ஆயிரம் என்றும், 1084 பாடல்களைக் கொண்ட பெரிய திருமொழியை ஆயிரம் என்றும், 108 பாடல்களை கொண்ட பிரபந்தத்தை இராமாநுசநூற்றந்தாதி என்றும் சொல்லுவதைப் போல.

**இன்னொரு கருத்து :** திருமங்கையாழ்வார் அருளியுள்ள இருமடல்களை வடகலையார் சரமப் பிரபந்தங்கள் என்பர். தென்கலையார் அந்த ஆழ்வார் அருளியுள்ள திருநெடுந் தாண்டகத்தைச் சரமப் பிரபந்தம் என்று கூறுவர். பக்தியுடன் சேவித்தால் இரண்டு தரப்பினரும் கூறுவது பொருத்தமாகத் தோன்றும்.

**சமயக் கருத்துகள் :** நாலாயிரத்தைப் பக்தியுடன் சேவித்தால் திருமந்திரம், துவயம் சரமசுலோகம், அர்த்த பஞ்சகம் சித்து, அசித்து, ஈசுவரன் போன்ற தத்துவ ஒளியைக்கண்டு அநுபவிக்கலாம். இராமாநுச நூற்றந் தாதியைப் 'பிரபந்த காயத்திரி' என்று சொல்லும் உண்மையையும் உணரலாம். இந்தச் செய்யதமிழ்மாலை களைத் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்களையும் கண்டு தெளியலாம்.

# பின்னிணைப்பு


*அண்ணங்கராசாரிய சுவாமிகள் பி.ப:* **தீவவியார்த்த தீபிகை** *(கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்)*

*அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்:* **ஆசாரிய ஹிருதயம்-மணவாள மாமுனிகள் வியாக்கியானம்-தமிழாக்கம்** *(சென்னைப் பல்கலைக்கழகம்-1965)*

*ஆழ்வார்கள்:* **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**-கி. வேங்கட *சாமி ரெட்டியார் பதிப்பு (திருவேங்கடத்தான் திரு மன்றம், 19-B பெருமாள் முதலித் தெரு, இராயப் பேட்டை, சென்னை—600014)*

*ஆழ்வார்கள்:* **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** *(மர்ரே கம்பெனி, இராஜம் பதிப்பு)*

*கிருஷ்ணவேணி அம்மையார், எஸ்:* **செம்பொருள்** *(திருமலை திருப்பதி-தேவஸ்தானம், திருப்பதி 517501,*

*கோபால கிருஷ்ணமாச்சரியார் வை.மு:* **கம்பராமாயணம்-உரை** *(தெளிசிங்கப் பெருமாள் தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-600 005)*

*சஞ்சீவி. ந (பதிப்பு):* **தெய்வத் தமிழ்** *(சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005)*

சுந்தர ராமாநுச சுவாமிகள் : **தத்துவத் திரயம் - விளக்க உரை** (வேலூர் வைணவ சித்தாந்த மகாசபை;வேலூர் (1951)

சுப்புரெட்டியார், ந : **முத்திநெறி** (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை சென்னை-600 108.

சுப்புரெட்டியார், ந : **சிலநோக்கில் நாலாயிரம்** (பாரி நிலையம்)

சுப்புரெட்டியார், ந : **ஆன்மிகமும் அறிவியலும்** (பாரி நிலையம்)

சேக்கிழார் சுவாமிகள் : **பெரிய புராணம்.**

திரிகூடராசப்ப கவிராயர் : **குற்றாலக் குறவஞ்சி**

தொல்காப்பியர் : **தொல்காப்பியம் — பொருளதிகாரம்** (இளம்பூரணம்)

பரஞ்சோதி முனிவர் : **திருவிளையாடல் புராணம்**

பாரதியார் : **பாரதியார் கவிதைகள்** (S. R. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு)

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : **அஷ்டப் பிரபந்தம்** (வை. மு. கோ. உரை)

மாணிக்கவாசகர் : **திருவாசகம்** (தருமையாதீன வெளியீடு)

**(ஆ) ஆங்கில நூல்கள் :**

Subbu Reddiar, N : Collected Papers (Paari Nilayam Madras-108)

Subbu Reddiar, N : Religion and Philosophy of Nalayiram with Ipecial Ceference to Nammalvar (S. V. Universidy, Tirupati-517 502)

## (இ) இதழ்கள், மலர்கள் :

1. மணிவிழா மலர் : அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் M.A.M. இராமசாமி (1991)

2. சப்தகிரி-திருமலை திருப்பதி தேவஸ்தானமாத இதழ். மார்ச்சு-1992

3. நூற்றாண்டு விழா மலர் : கா. சு. பிள்ளை நூற்றாண்டுவிழா மலர் (குழித்தலை-1987).

4. மணிவிழா மலர் : மதுரை-காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இராம-பெரிய கருப்பன் (தமிழண்ணல்)-1988

## பேராசிரியர்
## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்-அறம், நீதி, முறைமை
18. புதுவை (மை) க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் —ஒரு கண்ணோட்டம்
19. பாவேந்தர் பாரதிதாசன்—ஒரு கண்ணோட்டம்.

20. திருக்குறள் தெளிவு
21. வாய்மொழியும் வாசகமும்
22. பல்சுவை விருந்து

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

23. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
24. சிலநோக்கில் நாலாயிரம்
25. வைணவமும் தமிழும்
26. சைவசமய விளக்கு
27. நவவித சம்பந்தம்
28. அர்த்த பஞ்சகம்
29. ஆன்மிகமும் அறிவியலும்
30. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
31. கலியன் குரல்
32. கீதைக் குறள் (பதிப்பு)
33. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
34. கண்ணன் துதி
35. இராமர் தோத்திரம்
36. கீதைப் பொழிவுகள்
37. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
38. முருகன் துதியமுது
39. திருமங்கையாழ்வார் பாசுரங்கள்—ஓர் ஆய்வு (பதிப்பு)

## (ஆ) திருத்தலப் பயண நூல்கள்

40. மலைநாட்டுத் திருப்பதிகள்
41. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
42. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
43. வடநாட்டுத் திருப்பதிகள்
44. சோழநாட்டுத் திருப்பதிகள்—முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
45. சோழநாட்டுத் திருப்பதிகள்— (ஷ) இரண்டாம் பகுதி
46. தம்பிரான் தோழர்
47. நாவுக்கரசர்
48. ஞானசம்பந்தர்
49. மாணிக்கவாசகர்

திறனாய்வு :

50. கவிதை யநுபவம்
51. பாட்டுத் திறன்
52. கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்
53. அகத்திணைக் கொள்கைகள்
54. புதுக்கவிதை—போக்கும் நோக்கும்
55. கண்ணன்பாட்டுத் திறன்
56. பாஞ்சாலி சபதம்—ஒரு நோக்கு
57. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
58. குயில்பாட்டு—ஒரு மதிப்பீடு
59. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
60. ஆழ்வார்கள் ஆரா அமுது
61. விட்டு சித்தன் விரித்த தமிழ்
62. சடகோபன் செந்தமிழ்
63. பரகாலன் பைந்தமிழ்

64. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
65. பாவேந்தரின் பாட்டுத் திறன்
66. பாண்டியன் பரிசு—ஒரு மதிப்பீடு

**வரலாறு, தன் — வரலாறு :**

67. நினைவுக் குமிழிகள்—முதற்பகுதி
68. நினைவுக் குமிழிகள்—இரண்டாம் பகுதி
69. நினைவுக் குமிழிகள்—மூன்றாம் பகுதி
70. நினைவுக் குமிழிகள்—நான்காம் பகுதி
71. நினைவுக் குமிழிகள்—ஐந்தாம் பகுதி
72. மலரும் நினைவுகள்
73. நீங்காத நினைவுகள்
74. வேமனர்
75. குரஜாட
76. சி. ஆர். ரெட்டி
77. தாயுமான அடிகள்
78. பட்டினத்தடிகள்
79. வடலூர் வள்ளல்
80. பிரதிவாதி பயங்கரம்

**அறிவியல் :**


81. மானிட உடல்
82. அணுவின் ஆக்கம்
83. இளைஞர் வானொலி
84. இளைஞர் தொலைக்காட்சி
85. அதிசய மின்னணு
86. தமது உடல் (த. அ. ப. பெற்றது)

87. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
88. அம்புலிப் பயணம்
89. தொலை உலகச் செலவு
90. அணுக்கரு பௌதிகம்
(செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
91. இல்லற நெறி
92. வாழையடி வாழை
93. அறிவியல் விருந்து
(தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
94. தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும்
95. வானமண்டலக் காட்சி
96. விண்வெளிப் பயணம்

**ஆராய்ச்சி :**

97. வடவேங்கடமும் திருவேங்கடமும்
98. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
99. வைணவச் செல்வம்
(தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
100. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
101. Studies In Arts and Science: (61st Birth Day Commemoration Volume)
102. Collected Papers.

# இந்நூலாசிரியரைப் பற்றி...



பிறப்பு : 27 - 8 - 1916

78-அகவையை எட்டிய இந்த நூலாசிரியர் பி. எஸ்சி., எல்.டி., வித்வான், பி.ஏ.,எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். **ஒன்பதாண்டுகள்** துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் (1941 - 1950), **பத்து ஆண்டுகள்** காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950 - 60), **பதினேழு ஆண்டுகள்** திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும்(1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி **பதினைந்து மாதங்கள்** (1978 பிப்ரவரி - 1979 ஜூன்) கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (18), சமயம் (27), திறனாய்வு (16), அறிவியல் (17), ஆராய்ச்சி (6), வாழ்க்கை வரலாறு (13)—என்று 102 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும் சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக் கோன்' என்ற விருதையும், பண்ணுருட்டி வைணவசபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழக அரசு திரு. வி. க. விருதையும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.